# உன்னைத் தொட்ட காற்று

யுவராஜ்
வாடகை நூல் நிலையம்
[illegible] கௌடா சாலை
[illegible]ற்கு மாம்பலம்
சென்னை-600 033

## 1



இரயில் ஓடத் துவங்கி விட்டது!

வாழ்க்கைப் பயணமும் தானோ?

பிளாட்ஃபாரத்திலிருந்து கிளம்பும்வரை அவளுக்குப் பயமாகத்தான் இருந்தது. அவளுக்கு மட்டுமல்ல அவள் தம்பி தியாகுவுக்கும் கூட.

'பைரவியக்கா நீ பயப்படாதே! நான் பாத்துக்கறேன். தைரியமாப் போயிட்டு வா!' என்றான்.

'உனக்கு தினமும் என்னால திட்டு கிடைக்கும்' என்றாள் பைரவி வருத்தத்துடன்.

'அக்கா.. நீயென்ன இப்ப ஓடியாப் போறே? நல்ல விஷயமாத்தானே போறே போதுங்க்கா. நீ பட்ட அவமானமும், கஷ்டமும் இனிமேலாவது உனக்கு லைஃப் நல்லபடியா அமையட்டும்,' என்றான் தியாகு ஆத்மார்த்த மாக.

'தாங்க்ஸ்டா.. தம்பி! அப்புறம்.. அம்மாவை நல்லாப் பாத்துக்க.. அந்தக் கோபத்துக்குப் பின்னால பாசமும்... இருக்குடா.. புரிஞ்சுக்க..' என்றாள் வாஞ்சையாக.

'ஆமா.. நீதான் எப்பப் பாரு இப்படிச் சொல்றே! எனக்கு என்னமோ அப்படித் தோணலே..' என்றான் ஒருவிதமான எரிச்சலான குரலில். அவள் பேச்சை மாற்றினாள்.

'டேய்.. தியாகு! இங்க.. உள்ள வந்து பாரேன். எவ்வளவு வசதியா இருக்கு. ஏ.சி. கம்பார்ட்மென்டுடா.. ஃபர்ஸ்ட் கிளாஸ் வேற குடுத்துருக்காங்க.. கம்பெனி.. நல்லாத்தான் இருக்கும்போல இருக்கு' என்றாள்.

'அதுசரி. வேலை கிடைக்குதோ இல்லையோ! டிரிப்பையாவது என்ஜாய் பண்ணிட்டு வா..' என்றான். சைரன் சத்தம் கேட்டது.

இரயில் பிளாட்ஃபாரம் விட்டு நகரும் வரை அந்தக் கோடி வரை தியாகு கூடவே ஓடி வந்தான். கையசைத்துக் கொண்டிருந்தான்.

இரயில் மதுரை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது.

அவள் சற்று நேரம் தன் கையிலிருந்த 'இண்டியா டுடே'வின் ஆங்கிலப் பதிப்பைப் படித்துக் கொண்டிருந்தாள். ரொம்பவும் யோசித்து ரயில்வே ஸ்டேஷனில் காசு கொடுத்து வாங்கியிருந்தாள்.

அது ஒரு 'கூபே.'

கீழே இவளது படுக்கை.

நேர் எதிரே.. ஒரு நடுத்தர வயது மாது வந்து அமர்ந்தார். அவரோடு கூட அவளது கணவரும் வந்து உடனமர்ந்தார்.

அந்த அம்மா அவளைப் பார்த்துப் புன்னகைத்தார்.

'எந்த ஊருக்குப் போறேம்மா?' என்றார்.

'மதுரைக்கு!'



'ஓ! நாங்களும்.. மதுரைதான்!' என்ற அம்மையார் திரும்பித் தன் கணவரைப் பார்த்தாள்.

'ஏன்னா! இந்தப் பொண்ணைக் கேக்கலாமா? சின்னப் பொண்ணாத்தானே.. இருக்கா..?' என்றார்..

'வேண்டாம். விடு!' என்று சிடுசிடுத்தார் மனிதர்.

பைரவி புன்னகைத்தாள்.

'என்ன.. வேணும்.. சொல்லுங்க?' என்றாள்.

'இல்லம்மா.. இவருக்கு மேல் பெர்த்ல. ஏறிப் படுக்க முடியாது..' என்றார்.

'நோ... பிராப்ளம்.. ஆன்ட்டி.' என்றாள்.

பைரவியும் அதிகமாக இரயிலில் போனதில்லை. அப்பா இருக்கும்போது.. முதன் முதலாகப் போனது. இரண்டாவது கல்லூரியில் எஜுகேஷனல் டூர் போன போது போனது.

தனியாக இதுதான் முதன் முறை. லேசான பயத்தில் இருந்தாள். இரண்டு பெரியவர்கள். அதுவும் தம்பதிகளாக வரவே பயம் தெளிந்தது. இப்போது இந்த உதவி செய்வது அவளுக்கொன்றும் கடினமாகத் தெரியவில்லை. ஒத்துக் கொண்டாள்.

சற்று நேரம் 'அந்த அம்மையார் துளைத்து துளைத்துக் கேள்விகள் கேட்டார்.

'நான்.. ஒரு.. இன்டர்வ்யூவுக்குப் போறேன்!' என்றாள்.

அவளிடமிருந்து சுருக்கமான பதில்களாக வரவே அம்மையார் தனது முயற்சியைக் கைவிட்டு விட்டுத் தன் வேலையைப் பார்க்க ஆரம்பித்தார்.

இத்தனைக்கும் வண்டி ஓடத் துவங்கி பத்துப் பதினைந்து நிமிடங்கள்தான் ஆகியிருக்கும்.

'என்னது! மேல் பெர்த்துக்கு யாரும் வர்லே போலிருக்கே!' என்று அம்மையார் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஒரு இளைஞன் உள்ளே நுழைந்தான்.

நல்ல வசதியானவன் என்று பார்த்தாலே தெரிந்தது. எப்போதும் ஏ.சி.யிலே இருக்கிற பளபளப்பு முகத்தில் தெரிந்தது.

உள்ளே நுழைந்தவன் தனது ஃப்ரீப் கேஸை எடுத்துப் பெர்த்தின் மேல் வைத்தான். கையைத் தூக்கினால் ஃபேனைக் கழட்டி வைத்து விடுவான் போல் இருக்கிறதே என்று நினைத்தவுடன் பைரவிக்கு சிரிப்பு வந்தது.

கஷ்டப்பட்டு சிரிப்பை அடக்கினாள்.

அவன் அதைக் கவனித்துவிட்டான் போலும். கண்களில் விசித்திரமான ஒரு பார்வை தோன்றி மறைந்தது.

சட்டென்று வெளியே போய்த் திரும்பி வரும்போது லுங்கியில் வந்தான். மிக எளிதாகப் பெர்த்தில் ஏறி அமர்ந்தான். ஏர் பில்லோவை எடுத்துக் காற்றை ஊதி அடைத்தான். மிக வசதியாகக் கால்களை நீட்டினாற் போல் அமர்ந்தான். ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தான்.

அவளும் நேர் எதிர் பெர்த்தில் ஏறினாள். தனது சின்னப் பெட்டியையே தலையணையாக்கிக் கொள்ள வேண்டியது தான் என்று நினைத்தாள். அவளும் இருக்கையில் மூலையில் சாய்ந்து கொண்டு 'இண்டியா டுடேவை' ஆர்வமாகப் படிக்க ஆரம்பித்தாள்.

மேல்நிலைப் பள்ளியில் படிக்கும்போதே ஆங்கிலப் புத்தகங்களை வாசிக்க ஆரம்பித்து விட்டாள். வேகமாகப் படிப்பாள். ஆழ்ந்து படிக்க ஆரம்பித்தால் உலகம் மறந்து விடுவாள்.



விருப்பமான பகுதிகளைப் பார்த்துவிட்டு முடித்து விட்டுத் திரும்பிப் பார்த்தாள். அவன் இன்னமும் படித்துக் கொண்டிருந்தான்.

ஏதோ ஸ்விட்ச் போட்டாற்போல் இவளை நோக்கித் திரும்பினான்

'டிஸ்டர்பன்ஸா இருக்குங்களா?' என்றான்.

'இல்லல்லே.. படிங்க.' என்றாள். தயங்கினாள்.

'இல்லே..! உங்ககிட்டே.. ஏதாவது புக்ஸ்.. இருந்தா!'

அவன் சீரியஸாய் அவளைப் பார்த்தான். 'நாவல் படிப்பீங்களா? இங்கிலீஷ்.. நாவல்ஸ்..' என்றான்.

'ம்..!' என்றாள் உற்சாகமாக.

அவன் 'அல்கெமிஸ்ட்' என்ற நாவலை எடுத்து நீட்டினான்.

'படிச்சிருக்கேன்.. ஆனா.. இதை எத்தனை தரம் வேண்ணாலும்.. படிக்கலாமே?' என்றாள். வாங்கிக் கொண்டாள்.

சற்று நேரம் கழித்து உறக்கம் கண்ணை அழுத்தவே புத்தகத்தை மூடிவிட்டு ஒருக்களித்துப் படுத்தாள்.

இரயிலின் ஆட்டம் தாலாட்டியது போல் சுகமாக இருந்தது!

அம்மா மட்டும் இருந்திருந்தால்!

முகத்தில் சொல்லவொண்ணாத வேதனை தோன்றி மறைந்தது.

அதே நேரம்!

அந்த இளைஞன் கண்களை மூடிக் கொண்டிருந்த அவள் முகத்தை உற்று நோக்கியதை அவள் அறியவில்லை.

இமைகள் மூடியிருந்த போதும் மின்னலைப் போல உணர்வுகள் அவள் முகத்தில் மாறி மாறி மின்னி மறைந்தது அவனுக்குப் புது அனுபவம் போலும்.

சற்று நேரம் லயித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு விளக்கை அணைத்தான். அதே நேரம்! அவன் செல்போன் ஒலித்தது.

'விஜய் ஸ்பீக்கிங்.'

'சார்! வசதியா இருக்கீங்களா? பத்திரமா இருக்கீங்களா?' என்று அக்கறையும், மரியாதையுமாய் விசாரித்தது ஒரு குரல்.

அவன் கடுப்பானான்!

'ஏம்ப்பா.. தொல்லை பண்றீங்க! பத்திரமா இல்லாம எங்க போயிடுவேன். காத்து, கருப்பு, பூதம்.. பேய்ன்னு ஏதாவது தூக்கிட்டுப் போயிடுமா.. என்ன? எல்லாம் பத்திரமா.. வந்துடுவேன்..' என்றான்.

'இல்ல சார்! அம்மா ரொம்பக் கோபிச்சுக்கிட்டாங்க!'

'அம்மா அவங்க வேற! ஒரு மூடு பல்லக்கு ஒண்ணு. தயார் பண்ணி வைங்க. பொன்னியின் செல்வன்ல லேடீஸ் போவாங்களே! அது மாதிரி ஊர்வலம் போறேன்.'

'சார்! நீங்க கோபமா இருக்கீங்க!' என்று அந்தப் பக்கம் ஆஃப் செய்தார்கள்.

சிரித்துக் கொண்டான்.

மெல்லிய அந்த மஞ்சள் விளக்கின் ஒளியில் திரும்பி மீண்டும் பைரவியின் முகம் பார்த்துக் கொண்டு படுத்திருந்தான்.

சற்றுக் கழித்துத் திடுக்கிட்டுப் போய் தன்னை மீட்டுக் கொண்டான்.

'சே! என்ன இது! ஒரு அந்நியப் பெண்ணை இப்படி ஆழ்ந்து பாத்துகிட்டு' என்று தன்னைத்தானே கடிந்து கொண்டான்.



தான் வழக்கமாகப் பார்க்கிற லிப்ஸ்டிக் தீட்டிய முகங்களுக்கு நடுவே இந்த முகம் சற்று வித்தியாசமாய் இருந்தது தான் காரணம் என்று எண்ணிக் கொண்டான்.

மஞ்சள் மினு மினுத்தது. அதைக் காட்டிலும் ஒரு எளிமை!

செல்வத்தின் தளதளப்போடு நடமாடும் தனது உறவுக்காரப் பெண்கள் எத்தனை பேரைப் பார்த்திருக்கிறான்?

இந்தப் பெண்ணிடம் அப்படியெல்லாம் எதையும் காணோம்! ஆனால், தன்னைக் கண்டு கொள்ளவேயில்லை.

புத்தகத்தில் ஆழ்ந்து போனாள்.

முகத்திலே ஒரு கள்ளமிலாத் தனம் தெரிந்தது!

சிரித்துக் கொண்டான்!

எதிர் பெர்த் பயணியைப் பற்றி இவ்வளவு அலசித் தனக்கு என்ன ஆகப் போகிறது?

காதில் மாட்டிக் கொண்டால் 'இயர் ரிங்' அளவுக்கே இருக்கிற அந்த வாக்மேனை எடுத்து மாட்டிக் கொண்டான்.

இரண்டு கைகளையும் தலைக்கு அணையாகக் கொடுத்து ரயிலின் கூரையைப் பார்த்துக் கொண்டு அதன் தாலாட்டில் கண் மூடிப் படுத்துக் கொண்டான்.

இதமாக இருந்தது!

'ஆபீஸ்! வியாபாரம்!' எல்லாவற்றையும் மறந்து விட்டு இப்படி நிற்சிந்தையாகப் போவதுதான் எவ்வளவு சுகமாக இருக்கிறது!

முகத்தில் புன்னகை உறைந்தது!

மெதுவாக உறக்கம் கண்களைத் தழுவியது. சுகமான உறக்கம்!

★ ★ ★

இரயில் ஒரு குலுக்கல் குலுங்கி நின்றது.

பைரவி திடுக்கிட்டு விழித்தாள். மதுரை வந்து விட்டது. எதிர் பெர்த்தைப் பார்த்தாள் காலியாக இருந்தது.

அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்து முகத்தைத் துடைத்துக் கொண்டு இறங்கினாள்..

மளமளவென்று வாஷ்பேசினில் முகம் கழுவிக் கொண்டு வந்தாள்.

நாவல் அவளது படுக்கையில் இருந்தது.

'அடடா! கொடுக்க மறந்து விட்டோமே' என்று எண்ணிக் கொண்டாள்.

இரயில்வே ஸ்டேஷனை விட்டு வெளியே வரும்போது வேக நடையில் அந்த இளைஞன் போவதைப் பார்த்தாள்.

'சார்!' என்று அழைத்துக் கொண்டு அவள் ஓடி நெருங்குகிற வேளையில் அவன் வெளியே போய் நின்ற நேரத்தில் ஒரு ஆள் வந்து அவனுடைய ஃப்ரீப்கேஸை வாங்கிக் கொள்ள ஒரு டொயோட்டா கார் சர்ரென்று வந்து நின்றது.

அவன் தலையைக் கோதிக் கொண்டே அந்த உதவி யாளரிடம் ஏதோ கேட்டுக் கொண்டு காரில் ஏறி அமர்ந்து விட்டான்.

இதையெல்லாம் ஒரு திகைப்புடன் பார்த்துக் கொண்டே அவள் நின்றாள்.

மற்றொரு கார் வந்து நின்றது.

'மேடம்! நீங்க. மிஸ். பைரவிங்களா?' என்றார்கள்.

'ஆமாங்க!' என்றாள்.

'கார் வந்திருக்கு!' என்றார்கள்.

அவள் ஏறி அமர்ந்தாள்.



'மேடம்! உங்களுக்குக் கெஸ்ட் ஹவுஸில் தங்கறதுக்கு ஏற்பாடு செய்திருக்காக. குளிச்சுப்புட்டு எட்டரை மணியில ரெடியாக வரணும்' என்றான் டிரைவர்.

அதற்குப் பிறகு பதினைந்து நிமிடங்களுக்கு மேல் மௌனமாகவே நடந்தது பயணம்.

அந்த அதிர்ச்சிகரமான அனுபவம் ஏற்படும் நிமிடம் வரை.



## 2

**கா**ர் மிதமான வேகத்தில் போய்க் கொண்டிருந்தது.

பைரவி அமைதியாக அமர்ந்து கொண்டிருந்தாள்.

ஊருக்கு வெளியே மூன்று நான்கு கிலோ மீட்டர் களுக்கு மேல் போயிருக்கும்.

'ஓ! இவ்வளவு தொலைவா?' என்றாள் பைரவி.

'ஆமாங்கம்மா.. எப்பவுமே நம்ம முதலாளி சிட்டியி லிருந்து நாலைஞ்சு கிலோ மீட்டர் தள்ளிக் குறைஞ்ச விலையிலே இடத்தை வாங்குவாக. தொழிற்சாலை வேலைன்னு ஆரம்பிப்பாக. அப்புறம் பாத்தீகன்னா ஏரியா நல்லா இம்ப்ருவ் ஆயிடும். இங்க ஏதோ ஏற்றுமதி சம்பந்தமா ஒரு தொழில் ஆரம்பிக்கறாக' என்றார்.

வி.ஜே. குரூப் ஆஃப் இன்டஸ்ட்ரீஸ் என்ற அந்தக் குழுமத்தின் அலுவலகத்தில் அவளுக்கு இன்டர்வ்யூ.

தோழிகள் எல்லாம் 'அந்தக் கன்சர்ன்ல வேலை கிடைக் கறதே பெரிய விஷயமாச்சு எந்த ஊரா இருந்தா என்ன ஏத்துக்கடி' என்றார்கள்.

பைரவிக்குத் தாயில்லை. சித்தி காமாட்சி பொறுப்பில் இருந்தாள்.

அப்பா கண்ணப்பன் மிருதங்க வித்வானாக இருந்தார். பைரவியின் தாய் சிறு வயதிலேயே இறந்து போனாள். ஏதோ பெரிய அளவில் வைத்தியம் செய்திருந்தால் பிழைக்க வைத்திருக்கலாம் என்றார்கள்.

கச்சேரிகள் பெரிய அளவுக்கு இல்லாமல், கலையைத் தவிர வேறு எதுவும் தெரியாத அப்பா கண்ணப்பனால் மனைவியின் வைத்தியத்துக்கு செலவு செய்ய முடிய வில்லை. அப்போது பைரவிக்குப் பத்து வயது. ஒரு வருடம் தனியாக இருந்தான்.

காமாட்சியின் அம்மாவுக்கு காமாட்சி ஐந்தாவது பெண் குழந்தை. வறுமையான குடும்பம். அவரே வந்து பேசி கண்ணப்பனை வற்புறுத்தி மகளைத் திருமணம் செய்து வைத்தார். அப்போது காமாட்சிக்கு இருபத்து மூன்று அல்லது நான்கு வயது இருக்கும்.

வறுமை என்றபோதும் அதற்குப் பிறகு ஏழெட்டு ஆண்டுகள் நன்றாகத்தான் இருந்தார்கள். கண்ணப்பனுக்கும் காமாட்சிக்கும் ஒரு மகன் பிறந்தான்.

சங்கீதத்திலே மிகுந்த ஆர்வம் கொண்ட கண்ணப்பன் மகனுக்கு தியாகராஜன் என்று பெயர் வைத்தான். கல்யாணமான மறு வருடமே அவனும் பிறந்தான்.

காமாட்சி எப்போதும் கண்டிப்பாக இருப்பாள். கொடுமைக்காரி அல்ல என்றாலும் அன்பை இதமாகக் காட்டத் தெரியாது.

'தின்னுத் தொலையேண்டி' என்பாள். ஆனால், வயிற் றுக்கு நிறையக் கொடுப்பாள். குடும்பத்தின் வறுமை காரண மாக அவளும் ஒரு பிஸ்கட் கம்பெனிக்கு வேலைக்குப் போய் வந்தாள்.



பைரவி சிறு வயதிலேயே புத்தகங்கள் நிறையப் படிப்பாள். வயதுக்கு மீறிய பக்குவம்.

இரண்டே அறைகள் இருந்த அந்த ஒண்டுக் குடித் தனத்தில் சித்தியின் வேலைகள் பலவற்றை அவள் செய்து விடுவாள்.

காமாட்சி வேலைக்குப் போயிருக்கும்போது தம்பியைப் பாசமாகக் கவனித்துக் கொண்டாள். பள்ளியிலும் நல்ல மார்க் எடுத்து விடுவாள். பாட்டுக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆசை. ஆனால் காமாட்சிக்குக் கடுப்பு.

'போதும்.. உங்கப்பா.. சங்கீத வித்வானாயிருந்து நாம கொழிச்சது போதும். நீ ஏதாவது பாட்டு கீட்டுன்னு ஆரம்பிச்சே கொன்னே போடுவேன்' என்று மிரட்டுவாள்.

'நம்மால் எதற்குப் பெற்றோர்களுக்குள் பிரச்சினை என்று பைரவி அந்த ஆசையையே விட்டு விட்டாள்.' ஆனாலும், காமாட்சி இல்லாதபோது தகப்பனிடம் பாடல் கற்றுக் கொள்வாள். முறையான சங்கீதம் முழுமையாகக் கற்றுக் கொள்ள அவளுக்கு வாய்க்கவில்லை.

நல்லவர்களையே சோதிக்கிற கடவுள் கண்ணப்பனை மறுபடியும் சோதித்தான். உள்ளார்ந்த கவலை அவனை உருக்கிவிட்டது.

நாற்பது வயதில் அவனுக்கும் உடல் நலமில்லாமல் போனது. காமாட்சி தன்னால் இயன்ற வரைக்கும் வைத் தியம் பார்த்தாள். ஆனால் காப்பாற்ற முடியவில்லை.

சிறு வயதிலேயே கணவனை இழக்க நேர்ந்த வருத்தம். ஒரு வயதுப் பெண்ணைக் காப்பாற்றிக் கரை சேர்க்க வேண்டியிருந்த அச்சம் எல்லாமாகச் சேர்ந்து காமாட்சி எப்போதும் டென்ஷனிலேயே இருப்பாள்.

கண் கொத்திப் பாம்பு போல மகளைக் கவனித்துக் கொண்டே இருப்பாள். அடுத்தவர்களுக்கு விட்டுக்

கொடுக்க மாட்டாள். ஆனால் அன்பாகவோ கனிவாகவோ பேச மாட்டாள். அவளிடம் மட்டுமல்ல மகன் தியாக ராஜனிடமும் கண்டிப்பாகத்தான் இருப்பாள்.

எப்படியோ கெஞ்சிக் கூத்தாடி பைரவி டிகிரி முடித்தாள்.

'நீ வேலைக்கெல்லாம் போக வேண்டாம்' என்ற அன்னையிடம்,

'சித்தி நான் நீ வளர்த்த பொண்ணு. எதுவும் தப்புத் தண்டா செய்ய மாட்டேன்' என்று கெஞ்சி ஒரு தனியார் பள்ளியில் கிளார்க்காகச் சேர்ந்தாள். ஆனால் சம்பளம் வெறும் ஆயிரத்தைந்நூறு கொடுத்தார்கள்.

காமாட்சிக்கு உதவிகரமாகத்தான் இருந்தது. ஆனால், பைரவிக்கு இன்னும் சித்தியை நன்றாக வைத்துக் கொள்ள வேண்டும். தியாகராஜனை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாக இருந்தது. அதனால் தோழிகள் வீட்டில் பத்திரிகை படித்து அப்ளிகேஷன் போட்டுக் கொண்டு இருப்பாள்.

அவள் பழகுகிற தன்மைக்காக வகுப்புத் தோழிகள் எல்லாரும் நன்றாகப் பழகுவார்கள். பள்ளியில் வேலை செய்வதால் ஆங்கிலம் போதிக்கிற ஆசிரியை ஒருவரிடம் நேரம் கிடைக்கும்போது பேசிப் பேசி ஆங்கிலம் பேசுகிற தன்னுடைய அறிவை வளர்த்துக் கொண்டாள்.

அவள் வி.ஜே. குரூப் இண்டஸ்ட்ரீஸ்க்கு விண்ணப்பம் செய்தபோது அந்த அலுவலகத்திலிருந்து முதலில் போனில் ஒரு இன்டர்வ்யூ என்றார்கள்.

தோழி ஒருத்தியுடைய டெலிபோன் நம்பரைக் கொடுத்து இன்டர்வ்யூ டேட் பிக்ஸ் செய்து கொண்டாள்.

தியாகுவிடம் மெதுவாகச் சொன்னாள். 'டேய்.. தியாகு..! இன்னைக்கு நைட் எட்டு மணிக்கு இன்டர்வ்யூவாம்டா. நான் மாலாவோட நம்பரைக் கொடுத்திருக்கேன்.'



'அதுசரி... செலக்ட் ஆனா... போஸ்டிங்.. எங்கயாம்?'

'மதுரையிலயோ சென்னையிலோதான் இருக்குமாம்.'

'அக்கா.. அம்மா.. ஒத்துக்க மாட்டாங்க' என்றான்.

'தம்பி.. நல்லா யோசிச்சுப் பாரு. நமக்கு இங்கே எங்க சொந்த வீடா இருக்கு? இந்தக் கம்பெனியில வேலை கிடைச்சா ஸ்டார்டிங்கே மினிமம் ஏழாயிரம், எட்டாயிரம் கிடைக்கும்.'

'அக்கா.. நீ என்ன சொன்னாலும் சரி.. அம்மா இந்த ஊரை விட்டு வரமாட்டாங்க. காசு இல்லேன்னாலும் நாலு பேர் சொந்தக்காரங்க.. ஒரு ஆதரவு அப்படீன்னாவது இருக்கு.. அப்படீம்பாங்க' என்றான் பெரிய மனிதத் தோரணையில்.

பதினான்கு வயதில் பத்தாம் வகுப்பில் இருந்தான்.

'சரிடா.. அப்ப.. நான் ஏதாவது லேடீஸ் ஹாஸ்டலில் தங்கிட்டு மாசம் நாலாயிரம் அஞ்சாயிரம் அனுப்புவே னில்லை.' என்றாள்.

'அக்கா.. எல்லாம் சரிக்கா..! அம்மா.. ஒத்துக்கணுமே..' என்றான்.

'சரிடா.. போன்ல முதல்ல இன்டர்வ்யூ முடிக்கறன்டா. அடுத்த கட்டத்துக்கு செலக்ட் ஆனா அம்மாகிட்டே பேசலாம்' என்றாள்.

'இது சொன்னியே.. இது பேச்சு..' என்றான் தியாகராஜன்.

தோழியின் வீட்டில் வைத்து இருபது நிமிடத்துக்கு மேல் போனிலேயே பதில் சொன்னாள்.

வரும்போது 'எப்படிக்கா செஞ்சே?' என்றான்.

'என்னமோ.. எனக்கு நல்லா செஞ்ச மாதிரித்தான் இருக்கு. எத்தனை பேர் இந்த மாதிரி அட்டெண்ட் பண்ணியிருக்காங்களோ' என்றாள் பைரவி.

ஒரே வாரத்தில் கடிதம் வந்தது.

'நீங்கள் நேர்முகத் தேர்வுக்கு வர வேண்டும். போக்கு வரத்து செலவு, தங்கும் வசதி எல்லாவற்றிற்கும் கம்பெனியே பொறுப்பேற்றுக் கொள்ளும்' என்று.

தியாகு மெதுவாக அம்மாவிடம் ஆழம் பார்த்தான்.

'அம்மா.. அக்காவுக்கு மதுரை, திருச்சி சென்னைன்னு எங்காவது வேலை கிடைச்சா.. அனுப்பிடுவமா..' என்று.

'ஊரு விட்டு வெளியே கிளியே போறேன்னு ஆரம்பிச்சா.. கையைக் காலை முறிச்சுப் போடுவேன்' என்று பாய்ந்தாள் காமாட்சி.

'ஏம்மா.. இப்படிப் பேசறே. இப்பவெல்லாம் பொண்ணுங்க. உலகம் சுத்தறாங்க. தெரியுமா?'

'அவங்க நிலைமையெல்லாம் வேறயா இருக்கும்? உங்கக்கா.. எங்கயாவது சிக்கி ஏதோ பிரச்சினையாச்சுன்னு வச்சுக்க.. இதுவே இவ பெத்த புள்ளையா இருந்தா.. இப்படி ஊரு ஊரா அனுப்பிச்சிருப்பாங்களான்னு பேசுவாங்க.. வேண்டாம்ப்பா.. குடிக்கறது கூழோ.. கஞ்சியோ நிம்மதியா இருந்தா.. போதும்' என்று பிடித்த பிடியிலேயே நின்றாள் காமாட்சி.

தியாகுவும், பைரவியும் வெறுத்துப் போனார்கள். இந்த முறை போன் இன்டர்வியூவில் அக்கா ஆங்கிலத்தில் பதில் சொன்ன விதத்தைப் பார்த்த தியாகராஜன் கொஞ்சம் தெளிவாகி விட்டான். நண்பர்களின் பெற்றோர்களிடம் கம்பெனியைப் பற்றி விசாரித்தான்.

'ஐயோ.. அது நல்ல கம்பெனியாச்சே! அங்க இன்டர்வ்யூ வந்தாலே கிட்டத்தட்ட செலக்ட் ஆன மாதிரித்தான்' என்றார்கள்.

ஒரே மனதாக முடிவு செய்தான்.



'அக்கா.. அந்த நாள்ல டிராமா பண்ணி வெளியே கிளம்பிடு. செலக்ட் ஆனதுக்கப்புறம்.. அம்மாவைக் கன்வின்ஸ் பண்ணிக்கலாம்' என்றான்.

இரகசியமாகவே எல்லா ஏற்பாடுகளும் செய்தார்கள்.

நடந்ததெல்லாம் நினைவில் ஓட்டிக் கொண்டே இருக்க அந்தப் பதினைந்து நிமிடப் பயணத்தைக் கடந்திருப்பார்கள்.

கார் ஒரு குலுக்கலுடன் நின்றது.

★ ★ ★

'அம்மா... கொஞ்சம் பொறுங்க.. ஏதோ பிராப்ளம் போல இருக்கு.' என்று டிரைவர் வண்டியை விட்டு இறங்கினான்.

பைரவி கடிகாரத்தில் நேரம் பார்த்தாள். இன்டர்வ்யூவுக்கு நேரம் இருந்தது.

டிரைவர் ஏதோ பரபரப்பாகக் காரைச் சுற்றிச் சுற்றி வந்தான்.

பைரவி காரில் இருந்து இறங்கிப் பார்த்தாள். வெட்டாரவெளியாய் இருந்தது. மரங்கள் இருந்தன. ஆனால், கண்ணுக்கெட்டிய தூரம் வரை எந்த ஊரும் தென்படவில்லை. எங்கேயோ நடுவில் மாட்டிக் கொண்டோம் என்று தெரிந்தது. ஆனால், கிட்டத்தட்ட கால்மணி நேரம் ஓடி விட்டது.

டிரைவர் கையைப் பிசைந்து கொண்டு அவளைப் பார்த்தான்.

'அம்மா.. பெட்ரோல் ஆயிருச்சு. நான் வர்றப்ப சரியாக் கவனிக்காம விட்டுட்டேன்' என்றான்.

'ஓ!' என்றாள் திகைத்துப் போனவளாய்.

'அம்மா பத்து நிமிஷம் இங்கே காருகிட்டயே இருங்க.. பக்கத்துல ஒரு பெட்ரோல் பங்க் இருக்கு. நான் வாங்கிட்டு வந்துர்றேன்' என்றான்.

ஓட்டமும் நடையுமாய் அவன் போவதை அவள் பார்த்துக் கொண்டிருந்தாள்.

டிரைவரும் போனதற்குப் பிறகுதான் புரிந்தது. தான் தனியாய் நிற்கிறோம். அக்கம் பக்கத்தில் ஆள் நடமாட்டம் இல்லாமல் இருக்கிற ஏரியாவில் மாட்டிக் கொண்டோம் என்று.

டிரைவர் போன திசையையே பார்த்துக் கொண்டிருந் தாள். சற்றுக் கழித்து எதேச்சையாகத் திரும்பினாள். அப்போதுதான் கவனித்தாள்.

சற்றுத் தொலைவில் இரண்டு மூன்று இளைஞர்கள் வந்து கொண்டிருந்தார்கள்.

அவள் பாட்டுக்குக் கவனிக்காதவள் போல் திரும்பி நின்று கொண்டாள்.

அவர்கள் கடந்து போகக் கூடுமென்று நினைத்துக் கொண்டு நின்றதற்கு மாறாக அவர்கள் காருக்கருகில் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

'என்ன மேடம்.. ஆச்சு!' என்றான் ஒருவன்.

'ஒண்ணுமில்லே! ஒரு சின்ன பிராப்ளம். டிரைவர் அந்தப் பக்கம் போயிருக்கார். வந்துடுவார்' என்றாள்.

'ஏதாவது ஹெல்ப் வேணுமா?' என்றான் ஒருவன்.

'நோ.. தாங்க்ஸ்' என்றாள்.

'நோ.. தாங்க்ஸ்டாம்பா. ஏன்?' என்று மதுரை பாணியில் இழுத்தான் ஒருவன்.

'ஏன்.. என்னா.. ஹெல்ப் பண்ணப் போறே?' என்றான் மற்றொருவன்.

அப்போதுதான் அவர்களின் முகங்களை ஆழ்ந்து கவனித்தாள்.



நாகரீகமானவர்களாகத் தெரியவில்லை. அவள் வயிற்றில் பந்து போல் பீதி கிளம்பியது. சுற்று முற்றும் பார்த்தாள்.

'அதெப்படி மேடம்? நீங்க ஹெல்ப் வேணான்னு சொன்னாலும் நாங்க விட முடியாதில்லே..' என்றான் மற்றொருவன்.

'ஏன்? என்னா செய்யப் போறே?'

'என்னாடா.. செய்வேன்? ஹெல்ப்தான் செய்வேன்' என்று வம்பளந்து கொண்டே அவர்கள் நிற்கையில் அவள் மெதுவாகச் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே நகர்ந்தவள் அங்கே விழுந்து கிடந்த ஒரு மரக்குச்சியை எடுத்துக் கொண்டாள்.

குச்சியென்றாலும் பெரிய சைஸ் தடி போல் இருந்தது. எதற்கும் பாதுகாப்பாக இருக்கட்டும் என்று தயாராய் நின்று கொண்டாள்.

அவர்கள் மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். மெதுவாக அவளை நோக்கி வந்தார்கள்.

'பாருங்க! நான் உங்ககிட்டே எந்த உதவியும் கேக்கலே. எதுக்காக நின்னு கேள்வி கேட்டுகிட்டிருக்கீங்க?' என்று அவள் பதில் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே அந்தக் கார் வந்து கிறீச்சிட்டபடி நின்றது.

உள்ளேயிருந்து டிரைவரும், இன்னொருவரும் இறங்கி 'என்ன மேடம்?' என்றார்கள்.

உடனே இளைஞர்கள் 'ஒண்ணும் இல்லே! இந்தம்மா.. தனியாய் நின்னுகிட்டு இருந்தாக அதான்.. ஏதாவது ஹெல்ப் கில்ப் பண்ணலாம்னு' என்று இழுத்தான் ஒருவன்.

பைரவி சட்டென்று வந்திருக்கிற உதவியைப் பற்றிக் கொள்ள முடிவு செய்து,

'சார்! நான் தனியா நின்னது நிஜந்தான். இந்தக் கார் டிரைவர் பெட்ரோலுக்காகப் போயிருக்காரு. நான்

இவங்ககிட்டே எந்த ஹெல்ப்பும் கேக்கலே. இவங்கதான் இங்கே நின்னுகிட்டு அனாவசியமாப் பேச்சுக் குடுக்கறாங்க.' என்றாள்.

'ஓ!..' என்று அந்த ஆள் திரும்பிப் பார்க்கு முன்னாலேயே 'அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லே.. சார்!' என்று உளறிக் கொண்டு நகர்ந்தார்கள்.

அப்போது காரின் பின் கதவு திறக்க அந்த இளைஞன் வெளியே வந்தான்.

'என்ன மேடம்? என்னைப் பின் தொடர்றதுன்னு முடிவு பண்ணிட்டாங்களா?' என்றான் எதிர் பெர்த் இளைஞன்.

அவள் வியப்படைந்தாள். புன்னகைத்தாள்.

'சார்.. நீங்கதான்.. என்னைப் பின் தொடர்ந்திருக்கீங்க..' என்றாள்.

'போச்சுரா..!' என்று சிரித்தவன் 'கையில என்ன தடி?' என்றான்.

அவள் முகம் சிவந்தது.

'இல்லைங்க.. சார்! அவங்க மூணு பேரும் ஆளுங்க பேச்சே சரியில்லை.. அதான்' என்றாள்.

'ஓ! வீராங்கனைதான்!' என்று கலகலவென்று சிரித்தான்.

அவள் காரில் பெட்ரோல் தீர்ந்ததையும் நடந்ததையும் சொன்னாள். தான் போக வேண்டிய இடத்தையும் சொன்னாள்.

'மேடம்! நீங்க அந்த வண்டியில போங்க. நான் டிரைவர் வந்தவுடனே இந்த வண்டியில வரேன்' என்றான்.

உதவியாளரையும், டிரைவரையும் அருகில் அழைத்து ஏதோ மெதுவான குரலில் சொன்னான்.

அவள் சற்றும் தயங்காமல் தன்னுடைய பெட்டியை எடுத்துக் கொண்டு ஏறிக்கொண்டாள்.



டொயோட்டா கார் போவதையும், சற்றுக் கழித்து டிரைவர் பெட்ரோலுடன் வருவதையும் அந்த இளைஞன் ஒரு விசித்திரப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டு நின்றான்.



## 3

சின்னதாக ஒரு அறை தங்குவதற்குக் கொடுத்தார்கள்.

இன்டர்வ்யூ நடக்கும் அலுவலகம் சிறியதாகத்தான் இருந்தது. ஆனால், எல்லா நவீன வசதிகளுடனும் இருந்தது.

காரில் வரும்போது அதிர்ச்சியிலிருந்ததாலோ என்னவோ அவளுக்கு அந்த முதலாளி யார் என்றே விசாரிக்கத் தோன்றவில்லை.

கார் கெஸ்ட் ஹவுஸ்க்கு வந்தவுடனே டிரைவர் இறங்கி உள்ளே போய் விசாரித்து விட்டு வந்து,

'இங்கதான்ம்மா' என்று உள்ளே விட்டு விட்டுப் போனான்.

பெண்களும் அங்கே வேலைக்கு இருப்பதைப் பார்த்தவுடனேதான் அவளுக்கு நிம்மதியானது. குளித்து முடித்துப் பெட்டியைத் திறந்தாள்.

பெட்டியினுள்ளே இருந்து ஒரு காட்டன் சேலையை எடுத்தாள். மதுரை, கோவையைக் காட்டிலும் சற்று வெப்பமாக இருந்தது.

'நல்லவேளை, காட்டன் சாரி கொண்டு வந்தோம்' என்று எண்ணிக் கொண்டாள். கூடவே சிரிப்பும் வந்தது.

'என்னமோ.. புடவைகள் நிறைய இருக்கிற மாதிரியும் அதிலிருந்து செலக்ட் செய்து கொண்டு வந்த மாதிரியும்

நினைத்துக் கொள்கிறோமே! என்று எண்ணிக் கொண்டாள். இருப்பதே நான்கைந்து காட்டன் புடவைகள், நான்கைந்து ஸிந்தடிக் புடவைகள்தான் அதுவும் புடவைகளையெல் லாம் வெகு நாட்களுக்குப் பத்திரப் படுத்தி வைத்துக் கொள்வாள். பெரும்பாலான நேரங்களில் சுடிதார்தான்.

கையிலே செயற்கை முத்துப் பதித்த வளையல்கள் அவள் தோழிகள் சொல்வார்கள்.

'பைரவி, நீ எதை சிம்பிளாப் போட்டுட்டு வந்தாலும் நல்ல ரிச் லுக் வந்துருதுடி' என்பார்கள்.

சுருள் முடி அலையலையாப் படிந்திருக்கும். இடுப்பு வரை தொங்கும் பின்னலின் முடிவில் முடி இயற்கையாக சுருள் பந்து போல் இருக்கும் அந்தப் பந்து லேசாக அசைய நடப்பாள்.

தனக்கு வசதிக் குறைவு என்பதை மறைக்காமல் போலித் தனமில்லாமல் தோழிகளிடம் பழகுவாள். ஆனால் வகுப்பில் துடியாய்ப் பதில்கள் சொல்வதால் அனைத்துப் பேராசிரியர்களுக்கும் அவளைப் பிடிக்கும். படித்தது காமர்ஸ் பி.காம். அதற்கேற்றாற் போல் வேலை அமைந் தால் தேவலை என்று எண்ணிக் கொண்டாள்.

இன்டர்வியூவில் நடுத்தர வயது மானேஜர் ஒருவர் மட்டுமே கேள்வி கேட்டார். அநாவசியமான டென்ஷன் இல்லாமல் போலித்தனமாக நடந்து கொள்ளாமல் இயல்பாக அமர்ந்து கொண்டு கேள்விகளுக்கு பதில் சொன் னாள்.

ஒரு நேரத்தில் அந்த இன்டர்வ்யூவை வேறொரு இடத்தில் அமர்ந்தபடி டி.வி. ஸ்கிரீனில் இரண்டு மூன்று பேர் 'வாட்ச்' செய்ததை அவள் அறியவில்லை.

★ ★ ★



'என்ன தைரியம் இருந்தா.. சொல்லாமக் கொள்ளாமப் போயிருப்பே' என்று காமாட்சி ருத்ர தாண்டவம் ஆடியதை அமைதியாக வாங்கிக் கொண்டாள்.

இன்றைக்கென்னவோ தியாகராஜன் கோபமாக அம்மாவைக் கண்டித்திருந்தான்.

'இத பாரும்மா! நீ கோபமா இருக்கே! அக்காவைக் கண்டிக்கணும். அதுக்காகக் கத்தாதே! நம்ம வீட்டு விஷயம் ஏழு வீட்டுக்குக் கேக்கணும்கறது இல்லே!' என்றான்.

காமாட்சி சத்தத்தைக் குறைத்துக் கொண்டாள். ஆனால் வெகுவாகக் கண்டித்தாள்.

பைரவி பதில் எதுவும் பேசாமல் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தாள். அவள் படபடவென்று பேசி முடித்ததற்குப் பிறகுதான் தியாகு வாயைத் திறந்தான்.

'அம்மா.. நாந்தான் அக்காவை வழியனுப்பிச்சேன்னு சொன்னேன் இல்ல.'

'டேய்.. நீ சின்னப் பையன்.'

'இருக்கலாம்மா.. ஆனா, நல்லா நாலு பேருகிட்டே கேட்டு விசாரிச்சுட்டுத்தான் அக்காவை அனுப்பிச்சேன்.'

காமாட்சி கையாலாகாத கோபத்துடன் அமர்ந்து கொண்டாள்.

'பாரும்மா! அவங்க செலவில மதுரை போயிட்டு வந்தா.. மீனாட்சியம்மன் கோவிலப் பாத்துட்டு வந்திருக்கா. வேலை கிடைச்சாப் போகட்டும். அது ஒண்ணும் தப்பில்லே!' என்றான்.

'எல்லாம் கைமீறிப் போயிட்டீங்கடா!' என்றாள் காமாட்சி முணுமுணுப்பாக.

'இல்லம்மா... அக்கா உன்னை நல்லா வச்சுக்கப் பிரியப்படறா. நானும் நல்லாப் படிச்சு வெளியே வந்தா குடும்பத்தை உருப்படி பண்ணிடலாம். இல்லே!' என்றான்.

'என்னவோ.. பண்ணுங்க!' என்றான் குப்புறப் படுத்துக் கொண்டாள்.

பைரவியும், தியாகுவும் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டார்கள்.

'சித்தி.. மேற்கொண்டு பதில் வந்தாத்தானே... சித்தி.. அதைப் பத்தி யோசிக்கணும்' என்றாள்.

அமைதியானார்கள்! ஆனால் நான்கே நாட்களில் பதில் வந்தது. அது அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டராக இருக்குமோ வென்று ஆசையாய்ப் பிரித்துப் பார்த்தார்கள்.

மறுபடியும் ஒரு இன்டர்வ்யூ. சென்னையில் ஃபைனல் இன்டர்வ்யூ என்றார்கள்.

இந்த முறை சித்தியும், தியாகுவும் ஸ்டேஷனுக்கு வந்து வழியனுப்பினார்கள்.

மன நிறைவுடன் புறப்பட்டாள். மறுநாள் ஏற்படப் போகும் பயங்கரமான அனுபவம் பற்றி ஏதும் அறியாதவளாக.

★ ★ ★

**அ**ன்றைக்குப் போலவே இன்றைக்கும் கூபேதான். கீழே பெர்த்திலும், எதிர் பெர்த்திலுமாக மூவர் ஒரே குடும்பத்திலிருந்து வந்திருந்தார்கள்.

கீழிரண்டு பர்த்திலும் வயதான தம்பதிகள். படுத்துக் கொள்ளவும். மகள் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி படுத்துக் கொள்ளவுமாகத் திட்டமிட்டுக் கொண்டார்கள்.

இன்றைக்கும் அதே எதிர் பெர்த் இளைஞர் வரக் கூடுமோவென்ற எண்ணம் தோன்றி மறையவும் சிரித்துக் கொண்டாள். அதெல்லாம் சினிமாவில்தான் நடக்கும் என்று எண்ணிக் கொண்டாள்.

அவளுடன் பயணம் செய்த குடும்பம் பிராமணக் குடும்பம்.



'என்ன ஷொல்லுங்கோ! கோயம்புத்தூரோட கூல்னஸ் எங்கயும் வராது தெரியுமோ?' என்று பேசிக் கொண் டார்கள்.

இரயில் கிளம்பியதற்குப் பிறகும் சற்று நேரம் அரட்டை அடித்த பின்னர்,

'ஏம்மா.. கொழந்தே! எங்கே பயணம்?' என்று வயதில் மூத்த பெண்மணி விசாரிக்க.

'இன்டர்வ்யூ போறேன். ஆன்ட்டி!' என்று விவரம் சொன்னாள். ஜெனரேஷன் வந்ததுக்கப்புறம் நன்னா எக்ஸ்பான்ட் செய்யறதா பேசிக்கறா. தெரியுமோ?' என்றார் பெரியவர்.

அவர் அமைதியாகக் கேட்டுக் கொண்டாள்.

சற்று நேரம் கழிந்ததும் 'சரி.. தூங்கலாமே?' என்று அவரவர் படுக்கையில் படுத்தார்கள். அவளும் ஏறிப் படுத்துக் கொண்டாள்.

★ ★ ★

**ஐ**ந்து மணிக்கெல்லாம் பெரம்பூர் தாண்டி விட்டது ட்ரெயின்.

அதற்குப் பிறகு நின்றது.

ஒரு மணி நேரம் போயிருக்கும், லேசான வெளிச்சம் தோன்ற ஆரம்பித்திருந்தது. ஜன்னல் கதவுகளைத் திறந்து எட்டிப் பார்த்தார்கள்.

மழை சோவென்று கொட்டிக் கொண்டிருந்தது.

பிரயாணிகள் எழுந்து போவதும் வருவதும். விசாரிப்பதுமாய் இருந்தார்கள்.

'பெரியவர் எழுந்து போனார். பிறகு 'ட.. கோகி! என்னமோ பிராப்ளம் டிரெயின் மூவ் ஆக நேரமாகும் கறாளே!' என்றார்.

வெளியே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தபோது திடீரென்று அந்த நடுத்தர வயது பெண்மணி சொன்னார்.

'அப்பா மழை ஜாஸ்தியாயிண்டே போறது. மீன்பாடி வண்டி ஏதோ ஒண்ணு ரெண்டு போனது கூட இப்போ போகல்லே. பாத்தேளா?' என்றான்.

நேரம் அதற்குள் எட்டாகியிருந்தது.

வழக்கமாக வருகிற டீ, காபிக்காரர்கள் கூட வரவில்லை என்பதைக் கவனித்தார்கள்.

சக பயணி ஒருவர் வந்து 'இன்னும் ஒன் அவர் ஆயிடுமாம் ட்ரெயின் கிளம்ப' என்றார்கள்.

ஒன்றிரண்டு பேர் எழுந்து டி.டி. ஆரிடம் போனார்கள்.

'என்னதான் நடக்குது சார்?' என்றார்.

'வி.. ஆர்.. ஈக்வலி இக்னரண்ட்.. சார்' என்றார்.

அதற்குள் அந்தக் குடும்பத்தவர்கள் சாப்பாட்டுக் கடை விரித்தார்கள்.

'இத பாருங்கோ! நீங்க ஷுகர் பேஷன்ட். ரொம்ப நேரத்துக்குப் பசியோட இருக்கப்படாது' என்றார் அந்த அம்மா.

'சரி.. குடு..' என்று அமர்ந்தார்கள். நிறைய சப்பாத்திகள் கொண்டு வந்திருந்தார்கள்.

'குழந்தே நீயும் சாப்பிடும்மா..!' என்றார்கள்.

'பரவால்லே!' என்றாள் தயக்கத்துடன்.

'சாப்பிடும்மா..!' என்று வற்புறுத்தி இரண்டு சப்பாத்திகள் வைத்துக் கொடுத்தார்கள். சாப்பிடத் துவங்கிய பின் தயக்கம் போனது. வயிறார உண்டவுடன் மேலும் சற்று நேரம் பொதுப்படையாகப் பேசினார்கள்.

அதற்குள் மணி ஒன்பது ஆனது. மழை சற்றே குறைந்தாற் போல் தோன்றியது.



அப்போது சகபயணி ஒருவர் பரபரப்பாக வந்தார்.

'எல்லா ட்ரெயினும் இன்டெஃபனட்டா ஸ்டாப்டாம். வண்டி இப்போதைக்குக் கிளம்பாது' என்றார்கள்.

ஒரே குழப்பம் நிலவியது.

கும்பல், கும்பலாக இறங்கி நடக்க ஆரம்பித்தார்கள்.

பெரியவர் தயங்கினார். பைரவியும், நடுத்தர வயதுப் பெண்மணியும்

'நாமளும் இறங்கிப் போய்விடலாம்' என்றார்கள்..

பெரியவர் உறவினர் வீட்டுக்குத் தொடர்பு கொண்டு பேசினார் அவர்கள்.

'எப்படியாவது சென்ட்ரல் ஸ்டேஷன் வந்துடுங்கோ. அங்கேயிருந்து ஏதானும் ஏற்பாடு செய்யலாம்' என்றார்கள்.

பெரியவர் சொல்லவும் 'சரி நாமும் எப்படியாவது சென்ட்ரல் போயிடலாம்' என்று எண்ணிக் கொண்டான்.

முதலில் அவளும், அவர்களுடைய மகள் கோகிலமும் இறங்கினார்கள்.

எங்கும் வெள்ளமாகத் தண்ணீர் ஓடியது. 'எங்கயானும் குழி இருக்கப் போகுது. பாத்து வாங்கோ..' என்றார்கள்.

சற்றுத் தொலைவு கொட்டுகிற மழையிலே நடந்தார்கள்.

மீன்பாடி வண்டிக்காரன் ஒருவன் வந்து பெட்டி படுக்கையெல்லாம் குடுங்கோ. பக்கத்துலதான் பேஸின் பிரிட்ஜ். அங்க போய் பஸ் பிடிச்சுக்கலாம்' என்றார்கள்.

'சரி' என்று எல்லாவற்றையும் வைத்தார்கள். வயதான அந்த அம்மாவை வண்டியில் ஏற்றி விட்டு மற்ற மூவரும் வெக்கு வெக்கென்று நடந்தார்கள்.

நேரம் ஓடிக் கொண்டே இருந்தது. ஒரு வழியாக பேஸின் பிரிட்ஜ் தாண்டி இருந்த பெட்ரோல் பங்க் அருகில் நின்றார்கள்.

அவள் தயக்கத்துடன் பெரியவரிடம் செல்போன் கடன் கேட்டு அலுவலகத்துக்கு போன் செய்தாள்.

'நிலைமை மோசமாத்தான் இருக்கு. எங்கயாவது தங்க வசதியிருக்கா பாருங்க. இல்லேன்னா சென்ட்ரல் ஸ்டேஷன் வந்துடுங்க. அங்கயிருந்து நாங்க ஏதாவது ஏற்பாடு செய்யறோம்' என்றார்கள்.

'எப்படியாவது சென்ட்ரல் ஸ்டேஷன் வரச் சொல்றாங்க.' என்றாள்.

'சரி.. எங்களோடவே வந்துடு." என்றார்கள் பெரியவர்கள்.

அவர்கள் ஆட்டோவுக்கும் டாக்ஸிக்கும் முயற்சி செய்து கொண்டிருக்கையில் நடுத்தர வயதுப் பெண்மணி ஒருவர் அங்கே யாரிடமோ,

'இங்க ஏதாவது நல்ல ஹோட்டல் இருக்கா?' என்று கேட்க அவர்கள் அந்தப் பெண்மணியை விசித்திரமாகப் பார்த்தார்கள்.

'அம்மா.. அப்படியெல்லாம் ஹோட்டல் கீட்டல்னு போயிடாதீங்க' என்று ஒருவர் அறிவுரை செய்தார்.

அப்போதுதான் தனக்கு இந்தக் குடும்பம் துணையாக அமைந்தது எவ்வளவு நல்லது என்று அவளுக்குப் புரிந்தது.

'இன்னாம்மே! நீ லச்ச ரூபா குட்த்தின்னாலும் வண்டி வராதும்மே' என்று மறுத்தார்கள் பலர்.

அரைமணி நேரம் மேலும் தொப்பரையாக நனைந்ததற்குப் பிறகு ஒரே ஒரு ஆட்டோ டிரைவர்,

'வயசான கெழமா இருக்கீங்க..' வாங்க. டிராப் பண்றேன்' என்று ஏற்றிக் கொண்டான்.

'பெரிம்மா! கெட்டியாப் புடிச்சுக்கோ. மழை பெருசாக் கீது.. இந்தா.. இந்தால தண்ணீ வருது.. கெட்டியாப் புடிச்சுக்கம்மே' என்றே ஆறேழு இடங்களை முழங்கால் அளவு தண்ணீரில் கடந்தார்கள்.



வழியில் ஓரமாக நின்றிருந்த ஆட்டோக்காரர்கள்.

'இன்னாடா மதனு! ஆட்டோ போனாத் தாவலைன்னு முடிவு கிடிவு பண்ணிகிட்டியா!' என்று குரல் கொடுத்தார்கள்.

அந்தப் பையன் அதைக் கண்டு கொள்ளவில்லை.

'வாத்யாரே! சென்ட்ரலாண்டை விடறேன்னு சொல்லீட்டேனாக் கண்டி ஒட்றேன். பாத்துக் கூடப் போட்டுக் குடு' என்றான்.

போட்டுக் கொடுத்தார்கள்.

ஒரு வழியாக உள்ளே போனால் சென்ட்ரல் ஸ்டேஷனில் கூட்டம் நிரம்பி வழிந்தது.

ஒரு மணி நேரத்தில் அவர்களுக்குக் கார் வந்தது.

'பாத்தும்மா.. பொண்ணே! நிலைமை சரியாகற வரைக்கும் ஸ்டேஷன்லயே இரு. அதான் சேஃப்!' என்றார்கள்.

சரியென்று தலையாட்டினாள்.

அவர்கள் போனதற்குப் பிறகுதான் அவளை பயம் பிடித்துக் கொண்டது.

மீண்டும் அலுவலகத்திற்கே போன் செய்தாள்.

'மேடம்! உங்ககிட்டே செல்போன் இருக்கா?' என்றார்கள்.

'இல்லே!' என்றாள்.

'ஓ.கே.! எவ்ரி ஹாஃப் அன் அவர் இப்படி போன் பண்ணுங்க. நாங்க ஏதாவது ஏற்பாடு பண்றோம். அங்கயே ஹோட்டல் இருக்கு. சாப்பிட்டுக்குங்க' என்றார்கள்.

'அப்பாடா! இப்படித் தொடர்பு கொள்றதுக்கு ஒரு அலுவலகமாவது இருக்கிறதே' என்று எண்ணிக் கொண்டாள்.

'சரி, அதற்குள் உடையையாவது மாற்றிக் கொள்ளலாம்' என்று லேடீஸ் வெயிட்டிங் ரூம் தேடிக் கொண்டு போனாள்.

சென்ட்ரல் ஸ்டேஷன் முழுக்க ஈரமாகத்தான் இருந்தது.

லேடீஸ் வெய்ட்டிங் ரூமை அடைந்து பெட்டியைத் திறந்தாள்.

அதிர்ந்து போய் நின்றாள்!

அத்தனை உடைகளும் நனைந்து போய் இருந்தது.

கிளறிப் பார்த்தாள்.

'நல்லவேளையாக..' டிக்கெட் முக்கியமான அந்த ஆர்டர், பணம் இவற்றையெல்லாம் பிளாஸ்டிக் கவரில் போட்டுப் பத்திரப்படுத்தியிருந்தாள்..

சுற்று முற்றும் பார்த்தாள்.

ஒரு தெரிந்த முகம் இல்லை!

முதல் முதலாக மனதில் அச்சமும், பய உணர்வும் தோன்ற வெளியே சோவென்று பெய்கிற மழையையும், ஸ்தம்பித்துக் கிடக்கிற டிராஃபிக்கையும் பார்த்துக் கொண்டு நின்றாள்.

உட்காருவதற்குக் கூட இடம் கிடைக்கவில்லை.

குளித்துக் கிளித்துச் சுத்தம் செய்து கொள்ளலாம் என்றால் பெட்டியை யாரிடம் கொடுத்து விட்டுப் போவது?

சித்தி.. சொன்னது சரிதானோ? பழக்கமில்லாத ஊர்!

சின்ன வயது! இதே நிலைமை ரெண்டு நாளைக்கெல்லாம் நீடித்தால்.. என்ன செய்ய!

இத்தனைக் கிடையிலும் பசித்தது. மணியைப் பார்த்தாள்.

ஒன்றாகியிருந்தது. மழையில் நனைந்தும், நடந்தும் அலைந்த அலைச்சலின் களைப்புத் தெரிந்தது.



ஒரு சேர் காலியாகவே அவசரமாகவே ஓடிப்போய் 'தொப்'பென்று அந்தச் சேரில் அமர்ந்தாள்.

மேற்கொண்டு என்ன செய்வதென்று தெரியவில்லை.

அழுகை பொத்துக் கொண்டு வந்தது. அழுதால்.. எவ்வளவு கேவலமாகி விடும் என்று அடக்கிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.



## 4

இரயில்வே ஸ்டேஷனுக்குள்ளேயே இருந்த ஹோட்டலில் மாடியில் இருந்தது.

ஏறிப் போனாள். ஒரு சாப்பாடு 45 ரூபாய் என்றார்கள். கம்பெனியில் பில்லைக் கொடுத்து விடலாம் என்று சொல்லியிருந்தார்களள். ஆனாலும் மனது வரவில்லை. 45 ரூபாய் இருந்தால் வீட்டுக்கு இரண்டு நாட்களுக்குக் காய் கறிகள் வாங்கி விடலாம் என்ற எண்ணம் தோன்றியது.

விலையை விவரம் கேட்டுக் கொண்டு இட்லி ஆர்டர் செய்தாள். ஊரை விட்டு வேலைக்கென்று வந்த இரண்டாம் நாள் அனுபவமே இப்படி இருக்கிறதே என்ற கவலை தோன்றியது.

'இருக்கட்டும், அதற்காக ஓடி விடக்கூடாது. முதலில் கஷ்டங்களை அனுபவித்து விட்டால் எல்லாமே பழகிவிடும். தைரியமாய் இரு. பைரவி' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

மீண்டும் வெளியே வந்து போன் செய்தாள்.

'மேடம் கவலைப்படாதீங்க. எங்க வண்டி ஒன்று அந்த ஏரியாவுல இருக்கு. உங்களை பிக் அப் செஞ்சுக்குவாங்க..' என்றார்கள்.

'அப்பாடா..!' என்றாள்.

கார் வந்தது! ஏற்கனவே காரின் நம்பர், டிரைவர் பெயர், எந்த இடத்தில் நிற்கும் என்றெல்லாம் சொல்லியிருந்தார்கள். அதனால் எளிதாகக் கண்டு பிடித்து விட்டாள்.

கம்பெனிக்கும் போய்ச் சேர்ந்ததும் 'மேடம்! உங்க வீட்ல இருந்து கான்டாக்ட் பண்ணினாங்க. நீங்க சேஃபா இருக்கீங்கன்னு தகவல் குடுத்துட்டோம்' என்றார்கள்.

அவளுக்கு ஆச்சரியம் என்னவென்றால் இன்டர்வ்யூ நடத்தியவர் இளைஞர். பெரிதாக ஒன்றும் கேட்கவில்லை மாறாக,

'மேடம்! ஏற்கனவே ஒரு இன்டர்வ்யூ. மறுபடியும் இதென்ன இன்டர்வ்யூன்னு சலிப்பாத் தோணலியா?' என்றார் சிரித்துக் கொண்டே.

'இல்லை சார்!' என்றாள்.

'நம்ப முடியலியே!'

'நிஜம்தான் சார்! ஒரு காய்கறி வாங்கறதுன்னாக் கூட ரெண்டு தரம் திருப்பித் திருப்பிப் பார்த்துத்தானே வாங்கறாம். அப்படியிருக்க ரெண்டு தரம் இன்டர்வ்யூங் கறது ஒண்ணும் எனக்குத் தப்பாத் தெரியலை சார்!'

மேனேஜர் சிரித்தார்.

'நிஜமாச் சொல்லுங்க..!' இன்னைக்கு மழையில மாட்டிக்கிட்டப்ப வெறுத்துப் போகலையா என்ன?'

'சார், புது அனுபவம் கஷ்டமாத்தான் இருந்துச்சு. ஆனா, இவ்வளவு தூரம் ஏற்பாடு செய்யற கம்பெனி கண்டிப்பா ஏதாவது ஏற்பாடு செய்வீங்கன்னு நம்பிக்கை.'

'சப்போஸ் நாங்க இன்டர்வ்யூவுக்கு வராதது உங்க தப்புன்னு 'டர்ன் டவுன்' செஞ்சிருந்தோம்னா.'



'சார்! இது இயற்கையால ஏற்பட்ட பிரச்சினை! கண்டிப்பா எங்கயுமே மனிதாபிமான அடிப்படையிலே கன்சிடர் பண்ணுவாங்கன்னு எனக்குத் தெரியும் அப்படி யில்லேன்னாக்கூடத் திரும்பிப் போக டிக்கட் கையில இருந்தது. சரி.. இது ஒரு அனுபவம்ன்னு.. எடுத்துக்க வேண்டியது' என்றாள். மறுபடியும் புன்னகைத்தாள்.

'மேடம்! மறுபடியும் பெங்களூர்ல இன்டர்வ்யூன்னா வருவீங்களா?' என்றார் மேனேஜர் சிரித்துக் கொண்டே.

'கண்டிப்பா.. சார்! கம்பெனியோட புண்ணியத்துல மூன்று ஊர் பார்த்திடலாமில்லே. அது மட்டுமில்ல. சார்! ஒரு வேளை இந்த வேலை வேணும்கற முனைப்பு, பர்ஸிவியரன்ஸ் என்கிட்ட இருக்கான்னு கூட கம்பெனி பார்க்கலாம். ஸ்ட்ரெஸ் மேனேஜ்மெண்ட்ன்னு ஒரு கான்செப்ட் இப்ப வந்துகிட்டிருக்கில்ல. நம்மளை நம்மளே புடம் போட்டுக்கலாம் இல்லே' என்றாள்.

'குட்.. வெரி குட்!' என்றார் மேனேஜர்.

அவள் 'தாங்க்யூ.. சார்!' என்றாள்.

'மேடம்! யு ஸ்பீக் வெரிகுட் இங்கிலீஷ். யுவர் ஆர்ட்டிட்யூட் சூட்ஸ் அஸ். யு ஆர் அப்பாயின்டட்' என்றார்.

அவள் மகிழ்ச்சியின் எல்லைக்கே போனாள்.

★ ★ ★

'தியாகு! ஓரளவுக்கு பிராப்ளம் சால்வ்ட்டுடா.. ஏழாயிரம் ரூபா சம்பளம்டா!' என்றாள் போனில் உற்சாகமாக.

'சரிக்கா! வரும்போது பத்திரமா வாக்கா' என்றான்.

'சரிடா! தியாகு.. இங்க அதிசயம் பாருடா! நேத்து மழை கொட்டோ கொட்டுன்னு கொட்டுச்சு. ஆனா, இன்னைக்கு மகாபலிபுரம் ரோடு காய்ஞ்சு கிடக்குது!' என்றாள்.

'அக்கா.. ஆபீஸ் எங்கே?'

'கொட்டிவாக்கம் பக்கத்திலேடா.'

'என்ன வாக்கமோ? எனக்கு என்ன தெரியும்? பத்திரமா.. வா..' என்றான்.

'சரிடா.. இங்க பக்கத்திலே திருவான்மியூர்ல ஒரு நல்ல பழைய காலத்துக் கோயில் இருக்குடா போயிட்டு வர்றேன்' என்றாள்.

'ஆரம்பிச்சுட்டியா?' என்று சிரித்தான் தியாகு.

'வேற எங்க போப்போறே?'

'முடிஞ்சா மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயிலுக்குப் போயிட்டு வரலாம்னு இருக்கேன்.'

'ஐயோ.. அக்கா!' சாமியார் ரேஞ்சுக்கு ஆரம்பிச்சுட்டே' என்று சிரித்தான்.

மேலும் சற்று நேரம் பேசிவிட்டு வைத்தாள்.

அன்று கம்பெனி காரே அவளை டிராப் செய்தது. டிரைவர் ஒருவர் கூட இருந்து டிரெய்னில் ஏற்றிய போது பத்திரமாகப் போய் சேர்ந்து விடுவோம் என்றுதான் நினைத்தாள். ஆனால் காலம் வேறு விதமாக எண்ணியிருந்தது அவளுக்குத் தெரியவில்லை.

இந்த முறையும் கூபே!

கீழ் பெர்த்தில் ஒரு பெண்மணியும் அவள் கணவரும் போலும்.

எதிர் பெர்த் காலியாக இருந்தது!

பைரவி சிரித்துக் கொண்டாள்.

ஒருவேளை அந்த இளைஞன் வரக்கூடுமோ என்று தோன்றியது.

பெட்டியைத் திறந்து பார்த்தாள்.



அந்த ஆங்கில நாவல் பத்திரமாக இருந்தது. அடுத்த முறை பார்க்கும்போது பத்திரமாகக் கொடுத்து விட வேண்டும்.

சிரிப்பு வந்தது! ஆஹா! இது என்ன என்னவோ ரொம்பத் தெரிந்தவர் போலவும் அடிக்கடி சந்திக்கிறாப் போலவும் நினைத்துக் கொள்கிறோம் என்று எண்ணிக் கொண்டாள்.

வழக்கம் போல் கீழ் பெர்த்தில் சற்று நேரம் கொண்டு வந்திருந்த புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள்.

ரயில் கிளம்பிவிட்டது.

எதிர் பெர்த் இப்போதும் காலியாக இருந்தது.

ஸ்டேஷனை விட்டு வெளியே வந்ததும் எதிர் பெர்த் ஆள் உள்ளே வந்தான்.

இப்போது நிஜமாகவே பைரவி திகைத்துப் போனாள்.

அதே இளைஞன்தான்!

அவன் அவளைக் கவனிக்கவில்லை. வழக்கம் போல் பெட்டியைத் திறந்து வெளியே போய் லுங்கிக்கு மாறி வந்தான்.

பெர்த்தில் ஏறி அமர்ந்து கொண்டான்.

ஏதோ பேப்பரை விரித்துப் படிக்க ஆரம்பித்தான்.

பைரவி சற்று நேரம் திருதிருவென்று விழித்தாள். பிறகு பெர்த்தில் ஏறி அமர்ந்தாள்.

'குட் ஈவ்னிங் சார்!' என்றாள்.

அப்போதுதான் அவன் திரும்பிப் பார்த்தான். புன்னகைத்தான்.

'குட் ஈவ்னிங்.. மேடம்!' என்றான்.

'என்ன மேடம்! என்னை ஃபாலோ பண்றதுன்னே முடிவு பண்ணிட்டீங்களா?' என்றான்.

'சார்! இட்ஸ் நாட் ஃபேர் ஆன் யுவர் பார்ட். நீங்கதான் சார் என்னை ஃபாலோ பண்ணிகிட்டிருக்கீங்க.' என்றாள்.

'ஓ! அப்படி வர்றீங்களா நீங்க?' என்று சிரித்தான்.

'சார்! அன்னைக்கு ஒரு இக்கட்டான நிலைமையி லிருந்து என்னைக் காப்பாத்தினீங்க. ஐ ஷுட் தாங்க் யூ' என்றாள்.

'நான் காப்பாத்தறதா? நீங்கதான் தடிகிடியெல்லாம் தேடித் தயாராய் வச்சிருந்தீங்களே! எனி ஹௌ ஐ லைக்ட் இட்' என்றான்.

அவள் முகம் சிவந்தது.

'தாங்க்யூ.. சார்!' என்றாள். பிறகு.

'சார்.. நீங்க யாருன்னு தெரிஞ்சுக்கலாமா?'

'மேடம்.. ஐ ஆம் விஜய். இண்டஸ்ட்ரியலிஸ்ட். மத்தபடி சொல்லிக்கறபடி பெரிய அரசியல்வாதியோ சினிமா நடிகரோ இல்லை. நோபெல் பிரைஸுக்கு நம்ம பேர் போயிருக் குன்னு சொல்லிக்கற மாதிரியும் இல்லை..' என்றான்.

அவள் மறுபடியும் விழித்து விட்டுச் சிரித்தாள்.

'சார்.. நம்ம கடமையை நாம செஞ்சாப் போதும். அப்படிச் செய்ற ஒவ்வொருத்தரும் ஹீரோதான் சார்' என்றாள்.

'ரியலி?' என்று சிரித்தான்.

'ஆமாங்க சார்! உண்மை என்ன தெரியுங்களா ஒரு அரசியல் தலைவரோ, சினிமா நடிகரோ நம்ம பிரச்சினை களைத் தீர்ப்பாங்கன்னு அவங்க பின்னாலே கூட்டமாப் போறாங்க.. ஆனா, அரசியல் தலைவருக்கோ, சினிமா நடிகருக்கோ அவங்க பிரச்சினையைத் தீர்க்கறதுக்கு அவங்க பின்னாடி ஒரு கூட்டம் தேவையிருக்குன்னு நாம புரிஞ் சுக்கறதில்லை' என்றாள்.



அவள் பேப்பரை மூடி வைத்து விட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள். அவள் முகத்தை ஆழ்ந்து பார்த்தான். 'வெல் ஸெட்' என்றான். அவன் கண்களில் பாராட்டுத் தெரிந்தது.

அவள் முகம் சிவந்தது.

'தாங்க்யூ.. சார்!' என்றாள். அவசரமாக் குனிந்து பெட்டியைத் திறந்து அல்கெமிஸ்ட்' என்ற அந்த நாவலை எடுத்தாள்.

'ரிட்டர்ன்ட் வித் தேங்க்ஸ்' என்று நீட்டினாள்.

'பரவால்லே! இருக்கட்டும் வச்சுக்கங்க..' என்கிட்டே ரெண்டு மூணு காப்பி இருக்கு' என்றான்.

அவள் தயங்கினாள்.

'வச்சுக்கங்க. மேடம்! நம்ம ரயில் சந்திப்போட ஞாபகார்த்தமா இருக்கட்டும்' என்றான்.

அவள் தயக்கத்துடன் வைத்துக் கொண்டாள்.

'அல்கெமிஸ்ட்' திரும்பத் திரும்பப் படிக்க வேண்டிய புத்தகம்ன்னு சொன்னீங்களே!' என்று எடுத்துக் கொடுத் தான். அவள் உற்சாகமாகப் பேச ஆரம்பித்தாள்.

'ஆமா.. சார்! இந்தப் புத்தகம் பயங்கரமா வித்துச்சாமே.. ஆனா, நம்ம கீழை நாட்டுத் தத்துவங்கள்தான் இதுல சொல்லியிருக்காங்க தெரியுமா?'

'ம்ஹூம்?'

'ஆமா.. சார்! இறைமையைத் தேடிப் போறது வெற்றியைத் தேடிப் போறது எதை வேண்ணா நாம புதையல்ன்னு வச்சுக்கலாம். ஒரு குரு வழியில கிடைக்கணும். அப்புறம் கடைசியில தேடின புதையல் அது ஆன்மீகமா இருந்தாலும் சரி.. வேறெதுவுமா இருந்தாலும்.. சரி.. நம்ம கிட்டயே இருக்கறதுன்னு கண்டு பிடிக்கறது' இதெல்லாம் நம்ம தத்துவங்கள் சார்!' என்றாள்.

அவன் சுவாரசியமாகக் கேட்க ஆரம்பித்தான்.

'மேடம்! உங்க ஏஜுக்கு ஜுவல்லரி, புடவை மேக் அப்ன்னு இல்ல பேசணும். நீங்க தத்துவம் இல்லே பேசறீங்க.' என்றான்.

'சார்! அதெல்லாம் பணத்தை வச்சுட்டு என்ன பண்ற துன்னு தெரியாதவங்களுக்கு சார். பணத்துக்கே என்ன பண்றதுன்னு தெரியாதவங்களுக்குக் கட்டுப்படியாகாது.. சார்' என்றாள்.

அவன் முகத்தில் ஒரு புன்னகை மலர்ந்தது. கண்களில் அனுதாபம் மலர்ந்தது.

அவள் சட்டென்று சொன்னாள்.

'வேண்டாம்.. சார்! அனுதாபம் எனக்குப் பிடிக்காத விஷயம். வசதிக் குறைவு ஒண்ணும் வெட்கப்பட வேண்டிய விஷயம் இல்லே சார்!' என்றாள்.

அவன் சட்டென்று முகபாவத்தை மாற்றிக் கொண் டான். சிரித்தான்.

'அழகாப் பேசறீங்க மேடம். அறிவு ஜீவி!' என்றான்.

'ஐயய்யோ.. அப்படியெல்லாம்.. இல்லே!' ஏதோ ஜீவிக்கற அளவுக்கு அறிவு இருக்கு சார்!' என்றாள்.

அவன் பகபகவென்று சிரித்தான்.

'அப்புறம்.. நீங்க யாருன்னு சொல்லலியே?' என்றான்.

'சார்.. ஐம் பைரவி இன்டர்வ்யூவுக்காக வந்தேன். வி.ஜே. இன்டஸ்ட்ரீஸ்' என்றாள்.

'ஓ! செலக்ட் ஆயிட்டீங்களா?'

'ஆமா.. சார்' என்றாள் உற்சாகமாக. ஊருக்குப் போய் வீட்ல சொல்லிட்டு திரும்பவும் சென்னை ஒரு வாரத்துல வரணும்.'

'ஓ..!'



'எனி ஹெவ்.. தாங்க்ஸ் சார். நா உங்க தூக்கத்தைக் கெடுக்கக் கூடாதில்லே! குட் நைட்!

'ஆமா.. நான் நிஜமாவே டயர்ட் நைஸ் மீட்டிங் யூ. மேடம். குட் நைட் என்றான். காலை நீட்டிப் படுத்துக் கொண்டான். கண்களை மூடிக் கொண்டான். அவளும் படுத்துக் கொண்டாள். உறக்கத்தில் நடுவே அவன் திரும் பிப் படுத்தபோது அன்றைக்குப் போலவே அவன் அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தபடி சற்று நேரம் உறக்கம் வரும் வரை பார்த்துக் கொண்டிருந்ததை அவள் அறியவில்லை.

வழியிலே குறுக்காட்டி வம்புக்காரர்கள் பேசியபோது அவள் பயப்படவில்லை என்பதையும் மாறாகத் தடி யொன்றை எடுத்துக் கொண்டு தற்காத்துக் கொள்ளத் தயாராக இருந்ததையும் நினைத்துக் கொண்டான்.

புன்சிரிப்பு மலர்ந்தது.

பொதுவாகப் பெண்கள் வசதிக் குறைவு என்றால் அதைக் காட்டிக் கொள்ளாமல் இருக்கவும் பகட்டாகக் காட்டிக் கொள்ளவே விரும்புவார்கள் என்பதும் அவன் எண்ணம். ஆனால், இந்தப் பெண் தன்னுடைய வசதிக் குறைவு ஒன்றும் வெட்கப்பட வேண்டிய விஷயம் இல்லை என்பதில் தெளிவாக இருக்கிறாளே என்று எண்ணிக் கொண்டான்.

மீண்டும் அவளுடைய முகம் பார்த்தான்.

ஏதோ கனவு கண்டிருப்பாள் போலும். முகத்தில் புன் னகை மலர்ந்தது.

சற்றே உள்ளே தள்ளி படுத்தாற்போல் சாய்ந்தபடி அவளுடைய முக பாவங்களைக் கவனித்துக் கொண்டிருந்த அவனுக்கும் புன்னகை மலர்ந்தது.

தெளிவான சிந்தனையுடன், கம்பீரமாக நடமாடுகின்ற இந்த மாதிரிப் பெண்கள்தான் இப்போது நாட்டுக்குத் தேவை என்று எண்ணிக் கொண்டான்.

'பார்க்கலாம்! எதிர்காலம் என்ன வைத்திருக்கிறதோ' என்று எண்ணிக் கொண்டான்.

மெல்லக் கண்ணயர்ந்தான்.

★ ★ ★

நள்ளிரவு தாண்டியிருக்கும்!

வண்டி ஆடிக் கொண்டு போன விதத்தில் எல்லாரும் கண்ணயர்ந்திருந்தார்கள்.

ஒரு குலுக்கலுடன் வண்டி நின்றது.

கண் விழித்த அவள் 'ஏதோ சிக்னல் போட்டிருப்பார்கள்' என்று நினைத்துக் கொண்டாள்.

ஆனால் ஒரு மணி நேரமாயிற்று. இரண்டு மணி நேரமாயிற்று. வண்டி நகரவில்லை.

பயணிகள் எல்லாரும் விழித்து விட்டார்கள். அவனும் விழித்தான். பைரவியும் விழித்தாள்.

'என்னவோ பிராப்ளம்' என்ன பேசிக் கொண்டார்கள்.

அவன் சட்டென்று இறங்கி அந்தப்புறம் சென்று செல்போனில் பேசிவிட்டு வந்தான்.

வரும்போது முகத்தில் சிந்தனை படர்ந்திருந்தது. பைரவியை அருகில் வருமாறு அழைத்தான்.

'மிஸ் பைரவி! ஒரு பெரிய அரசியல் தலைவரை சுட்டுக் கொன்னுட்டாங்க. இரண்டு மூன்று நாட்களுக்கு போக்குவரத்து எல்லாமே ஸ்தம்பிச்சுப் போகப் போகுது. அதிக பட்சம் இந்த வண்டி சேலம் வரைக்கும் போனதுக் கப்புறம் நிறுத்திடப் போறாங்க. உங்களுக்கு சேலத்துல யாராவது இருக்காங்களா?' என்றான்.

அவள் விழித்தாள். இல்லையென்று தலையசைத்தாள்.



'அப்ப.. என்கூட வர்றீங்களா? நான் பக்கத்துல ஒரு கிரா மத்துல ஒரு ஃபிரண்டோட ஃபேமிலியோட தங்கலாம்னு இருக்கேன். உங்களுக்கும் பாதுகாப்பா இருக்கும்' என்றான்.

அவள் சற்று யோசித்தாள்.

'அவசரமில்லே! இன்னும் இருபது நிமிஷத்துல எனக்குக் கார் வருது. நீங்க முடிவு பண்ணிச் சொல்லுங்க' என்றான்.

அவள் சரியென்று இடத்துக்குப் போனாள். குழப்பமாக இருந்தது. தெரிந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று தேடினாள்.

யாரும் யாரையும் கண்டு கொள்ளவில்லை எல்லாரும் அவரவர்கள் பிரச்சினையைப் பற்றி யோசிப்பதிலேயே இருந்தார்கள்.

துணிந்து முடிவெடுத்தாள். அவனிடம் போனாள்.

'சார்.. பஸ் ஏதாவது ஓட ஆரம்பிச்சா.. என்னை அனுப்பி வச்சர்றீங்களா?' எனறாள்.

'ஓ... ஷ்யூர்!' என்றான்.

பயணிகள் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கி அலை பாய்ந்து கொண்டிருந்தார்கள்.

அவர்கள் இறங்கி ரோட்டுப் பக்கமாக வந்தார்கள்.

அங்கே அவனுக்காக ஒரு கார் தயாராக இருந்தது.

காரில் ஏறி அமர்ந்தார்கள்.

டிரைவர் பரபரப்பாக இருப்பதைப் பார்த்தான் விஜய்.

'என்னப்பா..!' என்றான்.

'சார்! என் வைஃப் குழந்தைங்க எல்லாம் சேலத்துல இருக்காங்க. தனியா இருக்காங்க' என்றான்.

விஜய் ஒரு நிமிடம் சிந்தனையிலாழ்ந்தான்.

'சரி.. ரூட் கரெக்டாச் சொல்லிட்டு நீ கிளம்பு' என்றான்.

தானே சென்று டிரைவிங் சீட்டில் அமர்ந்தான்.

டிரைவர் ரூட் சொன்னான். ஐந்து கிலோ மீட்டர் உள்ளே போய்த் திரும்ப வேண்டும் என்று விவரம் சொன்னான்.

'நீ எப்படிப்பா போவே?' என்றான்.

'சார் கொஞ்சம் லாரிங்க மட்டும் போயிட்டிருக்கு. போயிடுவேன்' என்றான்.

கொஞ்சம் பணம் கொடுத்து அனுப்பி வைத்தான்.

வழியெல்லாம் விவரமாகக் கேட்டுக் கொண்ட விஜய் ஒரு முக்கியமான விஷயத்தைக் கேட்டுக் கொள்ள மறந்து விட்டான்.

இதற்கு நடுவே தான் எடுத்த முடிவு சரிதானா என்ற கலக்கத்திலேயே இருந்தாள் பைரவி. கூடவே இன்னொரு எண்ணம் தோன்றியது.

'அதிக பட்சம் என்ன ஆகிவிடும்? ஆள் ஏதாவது தப்பாகத் தெரிந்தால் கழன்று கொண்டு வந்து விட வேண்டியதுதான்' என்று முடிவு செய்து கொண்டாள்.

அதற்குப் பிறகு தான் நிம்மதியானது.



## 5

இரண்டு பக்கமும் பாறைகளாக இருந்தது.

நடுவிலே மிகச் சிறிய மண்பாதை. கார் ஐந்து கிலோ மீட்டர் தூரம் போனதும் பாதை இரண்டாகப் பிரிந்தது.

அதிகமாகப் பசுமை கண்களில் படவில்லை.

வறட்சிப் பகுதியாக இருந்தது.



'மிஸ். பைரவி நம்ம நாட்டுல ஒரு ஐரனி என்னன்னா, ஒரு பெரிய டவுன்லருந்து பத்து அல்லது இருபது மைலுக் குள்ளாவே குக்கிராமங்கள் பாக்கலாம்' என்றான்.

அவள் மௌனமாகவே போவதைத் தவிர்ப்பதற்காகப் பேச்சுக் கொடுக்கிறான் என்பதை உணர்ந்த அவளும்,

'சரிங்க.. சார்!' என்றாள்.

'ஆனா, வடநாட்டுல எல்லாம் சில இடங்கள்ல நூறு மைல், இருநூறு மைலுக்குக் கூட டவுன்களைப் பாக்க முடியறதில்லேங்கறாங்க. அந்த அளவுக்குப் பாக்கும்போது தமிழ்நாடு பரவால்லே தெரியுங்களா?' என்றான்.

'நீங்க சொன்ன மாதிரி இங்க கூட சின்னச் சின்ன கிராமங்களாத்தான் இருக்கு' என்றாள் பைரவி.

'ஏங்க.. மிஸ் பைரவி டிரைவர் இந்தப் பிரிவு ரோட்லருந்து வலது பக்கம் போகணும்னாரா, இடது பக்கம் போகணும்னாரா?' என்றான்.

'உங்களுக்கு என்ன தோணுது சார்?'

'வலது பக்கம்னு சொன்ன மாதிரித்தான் ஞாபகம்.'

அவளும் யோசித்தாள்.

'ஆமா.. சார்.. வலது பக்கம்தான்' என்றாள். காரைத் திருப்பினாள்.

மேலும் பத்துப் பதினைந்து கிலோ மீட்டர்கள் போனார்கள்.

இரண்டு பக்கமும் வறட்சி தெரிந்தது.

'என்ன மேடம்? ஃப்ரெண்டு சொன்ன அடையாளங்களே.. எவுமே இல்லையே?' என்றான் சிந்தனையுடன்.

அவளுக்கும் எதுவும் சொல்லத் தோன்றவில்லை. அப்போதுதான்!

அது நிகழ்ந்தது.

கார் தடக்கென்று ஆடிக்கொண்டு நின்றது.

'மை காட்! என்றான்.

'சார்?' என்றாள் பைரவி.

'பெட்ரோல் டிரை ஆயிடுச்சு!' என்றான்.

'மடப்பய மகன் டிரைவர், ரூட்டையும் தப்பாச் சொல்லிட்டு, பெட்ரோல் இருக்கான்னு பாக்காம வேற வண்டியைக் குடுத்திருக்கான்' என்றான் பல்லைக் கடித்துக் கொண்டு,

'சார்..! இது நியாயமேயில்லை!' என்று பைரவி சிரித்தாள்.

'எது?'

'மடப்பய மகன்னு சொன்னீங்களே அது. டிரைவரைத் திட்டினா.. நியாயம். அவங்கப்பாவைத் திட்டறீங்களே' என்றாள்.

கார்க் கதவைத் திறந்து கொண்டு இறங்கியவன் குனிந்து அவளைப் பார்த்தான்.

அவள் புன்னகைத்தாள்.

'இடுக்கண் வருங்கால் நகுக' என்றாள். அவன் புன்னகைத் தான்.

அவளும் இறங்கினாள்.

'ஆமா... என் ஃபிரண்ட் ஒருத்தன் அவன் வைஃப் எதுக் கால வரும்போதெல்லாம் சிரிப்பான். ஏண்டான்னு கேட்டா.. இடுக்கண் வருங்கால் நகுக அப்படீம்பான்' என்றான்.

அவள் சிரித்தாள்.

இரண்டு பேரும் சுற்று முற்றும் பார்த்தபடி நின்றார்கள்.

பைரவி 'சார்! செமையா மாட்டிகிட்டோம் போல இருக்கே!' என்றாள். ஆனால் அதற்காக டென்ஷனாகி விடாமல் காரில் சாய்ந்து கொண்டு நின்றாள்.



'ம்..!' என்று இழுத்தான் விஜய்.

அவள் அமைதியாகப் பார்த்துக் கொண்டு நின்றாள். அவளுடைய மனநிலை அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது.

இப்படித் தனியாக ஒரு இளைஞனுடன் வந்து மாட்டிக் கொண்டோமே என்ற அச்சமே அவளுக்குத் தோன்றவில்லை.

'ம்! சொல்லுங்க... என்ன செய்யலாம்?' என்றான்.

அவளும் யோசித்தாள். 'சார் திரும்பிப் பிரிவுக்குப் போகணும்னா பதினைந்து கிலோ மீட்டருக்கு மேல போகணும் போல இருக்கு. இந்தப் பக்கமாவே போயி ஏதாவது குக்கிராமம் மாதிரி இருந்தா.. முதல்லே கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிகிட்டு என்ன செய்யறதுன்னு பார்ப் போமா?' என்றாள்.

அவன் சற்று நேரம் யோசனையிலாழ்ந்தான். சட் டென்று அவன் கண்களில் மின்னல் தோன்றியது. 'அதுவும் நல்ல 'யோசனைதான்' என்றான்.

சட்டைப் பாக்கெட்டிலிருந்து செல்போனை எடுத்தான்.

'பைரவி.. சார்ஜ் கம்மியாயிருக்கும் போலருக்கு. நீங்க உங்க 'வீட்டுக்கு ஏதாவது தகவல் குடுக்கறதுன்னாக் குடுத்துடுங்க..' என்று நீட்டினான்.

பைரவி உடனே மாலாவுக்கு போன் செய்து,

'மாலா! நான் சேலத்துப் பக்கம் சிக்கிகிட்டிருக்கேன். ஆனா, பாதுகாப்பா இருக்கேன். கம்பெனியே தங்க இடம் ஏற்பாடு செஞ்சு குடுத்திருக்காங்க. நிலைமை சரியான வுடனே புறப்பட்டு வர்றேன்னு சொல்லிடு' என்றாள்.

அவன் ஆழமாகப் பார்த்தான்.

'மேடம், இப்படித் தனியாச் சிக்கிட்டிருக்கீங்க. பாதுகாப்பா இருக்கேன்னு சொல்றீங்க' என்று சிரித்தான்.

அவள் செல்போனை நீட்டியபடி சிரித்தாள்.

'சார்! ஒவ்வொருத்தரோட பார்வையும் பேச்சுவயுமே தெரிஞ்சுக்கலாம். உங்க காலிபருக்கெல்லாம உங்களாலே

இன்டீசன்டா நடந்துக்க முடியாதுன்னு என் மனசுக்குப் பட்டுச்சு சார்!' என்று ஒரு போடு போட்டாள்.

அவன் சிரித்துக் கொண்டான். 'தாங்க்ஸ் ஃபார் தி காம்ப்ளி மென்ட்' என்றான். மறுபடியும் சுற்றும் முற்றும் பார்த்தான்.

'சரி.. இப்ப என்ன செய்யலாம்னு சொல்லுங்க' என்றான்.

அவள் யோசித்தாள்.

'சார்.. வேற வழியில்லே. காரைத் தள்ளிக்கிட்டுப் போக வேண்டியதுதான். எப்படியும் இன்னும் ஒரு ரெண்டு மூணு கிலோ மீட்டருக்குள்ளே அந்த மலையடிவாரத்துல ஏதாவது குக்கிராமமாவது இல்லாம இருக்காது' என்றாள்.

'லெட்ஸ் ஹோப்.. ஸோ' என்றான்.

இரண்டு ஃபர்லாங் கூடப் போயிருக்க மாட்டார்கள். களைப்பாகிப் போனது.

'பைரவி! வீட்லன்னா அம்மா இந்நேரம் சூடா காபியோட எந்திரிடா தம்பின்னு' கெஞ்சிகிட்டு நிப்பாங்க. இங்க பாத்திங்களா. காரைத் தள்ளிகிட்டு காஞ்சு போய் நிக்கறோம்' என்றான்.

பைரவி ஒன்றும் பேசவில்லை.

'என் காரா இருந்தா இங்கயே கடாசிட்டு நடந்துடுவேன். ஊரான் காராப் போச்சு. வேற வழியில்லே. பத்திரமாத் திருப்பிக் குடுக்கணும்' என்றான் சற்றே எரிச்சலுடன்.

அவள் மௌனமாக வந்தாள். அவன் திருப்பிப் பார்த்தான்.

'ஏதாவது சொல்லுங்க..' என்றான்.

'சார்! வாட் கென்னாட் பி கியூர்ட் ஹேஸ் டு பி என்ட்யூர்ட்' என்றாள்.

அவன் விசித்திரமாகப் பார்த்தான்.

'ஃபிலாஸஃபியா?' என்றான்.

அவள் மௌனமாகப் புன்னகைத்தாள்.



'பாக்கலாம். பாக்கலாம். சாயங்காலம் வரைக்கும் எதுவும் சாப்பிடக் கூடக் கிடைக்கலேன்னா அப்புறம் ஃபிலாஸஃபி பேசறீங்களான்னு' என்றான் சற்றே எரிச்சலுடன்.

'பசி எனக்குப் பழக்கம் சார். உங்களுக்குத்தான் தாங்க முடியாது. சார்! என்று எண்ணிக் கொண்டாள். சொல்லவில்லை.

'சே! போரடிக்குது!' என்றான் விஜய்.

'வேண்ணா பாட்டுப் பாடிகிட்டே தள்ளலாம். ஏலேலோ பாடிகிட்டு..' என்று பைரவி கலகலவென்று சிரித்தாள்.

இரண்டு வரி பாடிக் காட்டினாள்..

'மண்ணை நம்பி மரமிருக்குது
    ஏலேலோ ஐலஸா.
மரத்தை நம்பிக் கிளையிருக்குது
    ஏலேலோ ஐலஸா.

என்றாள்.

அவன் காரைத் தள்ளுவதை நிறுத்திவிட்டு இடுப்பில் இரண்டு கைகளையும் ஊன்றிக் கொண்டு நின்றான்.

'ஹலோ! நல்லாயிருக்கு. முழுசும் பாடுங்க!' என்றான். அவளும் நின்றாள். பாடினாள்.

கிளையை நம்பி இலையிருக்குது
    ஏலேலோ ஐலஸா.
இலையை நம்பிப் பூவிருக்குது
    ஏலேலோ ஐலஸா.
இலையை நம்பிப் பூவிருக்குது
    ஏலேலோ ஐலஸா.
பூவை நம்பிக் காயிருக்குது
    ஏலேலோ ஐலஸா.

பூவை நம்பிக் காயிருக்குது
        ஏலேலோ ஐலஸா.
காயை நம்பிக் கனியிருக்குது
        ஏலேலோ ஐலஸா.
கனியை நம்பி நீயிருக்க
        ஏலேலோ ஐலஸா.
கனியை நம்பி நீயிருக்க
        ஏலேலோ ஐலஸா.
உன்னை நம்பி நானிருக்கேன்
        ஏலேலோ ஐலஸா.

என்று பாடி பின் இடிஇடியென்று சிரித்தாள்.

அவனும் சேர்ந்து கொண்டான்.

'நாட்டுப் பாடல்.. சார்!' என்றாள். மறுபடியும் 'சார்.. இதை இப்படி எடுத்துக்கங்களேன். உங்க ஊர்ல உங்க பி.ஏ.வோ. டிரைவரோ இருந்தா உங்களைக் கார் தள்ள விடுவாங்களா? இப்படி வெட்டார வெளியில் மலைப் பாங்கான இடத்துல காரைத் தள்ளிக்கிட்டுப் போறது கூட ஒரு அனுபவம்தானே!' என்றாள்.

'அதுவும் நல்லாப் பாட்டுப் பாடற அழகான பொண்ணு கூட' என்றான்.

அவள் முகம் சிவந்தது.

அவன் அதைக் கண்டு கொள்ளாதவன் போல்' தோரா யமா.. இன்னும் எவ்வளவு தூரம் போக வேண்டியிருக் குன்னு நினைக்கறீங்க!' என்றான்.

அவள் முன்னால் பார்த்தாள்.

'சார்! அந்த மேடு ஏறினா கண்டிப்பா ஏதாவது சின்ன ஊர் கண்ணுக்குத் தெரியும்னு என மனசுக்குப் படுது' என்றாள்.

நிஜமாகவே ஏதோ தெரிந்தது.



காரை நிறுத்திவிட்டு வந்து பார்த்தார்கள்.

'ஊர் என்று சொல்ல முடியாது. ஒரு ஐம்பது, அறுபது குடிசைகளுக்கு மேல் இருந்தது.

'அப்பாடா! ஏதோ மனித இனம் இருக்காப் போலேத் தெரியுது!' என்றான்.

விஜய் பேசாம வீட்டுக்கு செல்போன்ல தகவல் குடுத்தா எதுவும் வழி செய்வார்களோ?' என்றான் பிறகு.

'ஆமா, அவங்க மட்டும் எப்படி வர முடியும்? எப்படியும் ரெண்டு நாளைக்கு ஹெல்ட் அப்தான்' என்றான்.

இப்போது பைரவி நல்ல உற்சாக மூடில் இருந்தாள்.

'இது நிஜமாவே நல்ல அனுபவமா இருக்கப் போகுது. சார்! கண்டிப்பாக சித்தி இந்த மாதிரியெல்லாம் அனுப்பவே மாட் டாங்க. ஐ ம் ஜோயிங் டு என்ஜாய் தி ஸ்டே' என்றாள். சிரித்தாள்.

அவனும் சேர்ந்து கொண்டான்.

'ஆமா! நானும் அப்படித்தான் நினைக்கறேன். சொகு சாவே இருந்து பழகிட்டோம். இப்படியும் ரெண்டு நாள் இருப்போமே?' என்றான்.

மறுபடியும் காரைத் தள்ளினார்கள்.

'பைரவி! ஃபாரின்லயெல்லாம் இந்த மாதிரிக் கொஞ்சம் ஹாலிடேஸை அனுபவிக்கறதுங்கறதைப் பழக்கமா வச்சிருக் காங்க. எனக்கும் கூட இந்த மாதிரி அனுபவங்கள்னா ஆசைதான்' என்றான்.

'அப்புறம் என்ன சார்? என்ஜாய் செய்வோம். நான் காலேஜ்ல படிக்கும்போது என்.சி.சி.யில இந்த மாதிரியெல் லாம் போயிருக்கேன். கவலைப்படாதீங்க. வி வில் மேக் தி மோஸ்ட் ஆஃப் இட்' என்றாள்.

'தட்ஸ் ரைட்!' என்றான் தன் செல்போனை எடுத்துத் தன் வீட்டுக்கும், தன் பி.ஏ.வுக்கும் ஃபிரண்டுக்கும் தான் நலமாக இருப்பதாக மெசேஜ் அனுப்பினான். பிறகு பைரவியிடம் விவரம் சொன்னான்.

நண்பனுக்கு 'உன் கார் என்னிடம் பத்திரமாக இருக்கிறது. நான் வேறொரு இடத்தில் தங்கியிருக்கேன். இரண்டு நாட்களில் உன்னைத் தொடர்பு கொள்கிறேன்' என்று மெசேஜ் அனுப்பினான்.

பிறகு மீண்டும் காரைத் தள்ள ஆரம்பித்தார்கள்.

அந்த கிராமத்திற்கு அருகில் போனவுடனேயே பத்துப் பதினைந்து குழந்தைகள் வந்து,

'ஓ!'வென்று கூச்சலிட்டுக் கொண்டு வந்து சுற்றிலும் சூழ்ந்து கொண்டார்கள்.

'வானரங்களா! அந்தப் பக்கம் போங்க!' என்று சத்தம் போட்டுக் கொண்டே கடைசியாக இருந்த குடிசையி லிருந்து ஒரு வயதான பெண்மணி வந்தாள்.

பைரவி அவரிடம் போய் 'அம்மா! நாங்க வழி தவறி விட்டோம். பெட்ரோல் வேற இல்லே! இவங்க எங்க முத லாளி. நான் அவர்கிட்டே வேலை செய்யறேன். நிலைமை சரி யாகற வரைக்கும் ஒரு ரெண்டு நாள் தங்கணும்..' என்றாள்.

அந்தப் பாட்டி மற்றொருவரிடம் அவளுடைய கணவன் போலும். ஆலோசித்தார் பிறகு 'ஓ.. தங்கலாம். வாங்க' என்று அழைத்துப் போனார்கள்.

அந்தக் குடிசைக்குள் நுழையவே குனிந்து போக வேண்டி யிருந்தது.

'உட்காருங்க. உட்காருங்க!' என்று ஒரு கயிற்றுக் கட்டிலை எடுத்துப் போட்டார்கள்.

'நான் வெளியே உட்காந்துக்கறேன்' என்றான்.

கயிற்றுக் கட்டிலில் வெளியே அமர்ந்து கொண்டான்.

சுற்றிலும் பார்த்தான்.

மலையடிவாரம். மலை பிரம்மாண்டமாகத் தெரிந்தது. ரொம்பவும் வறண்டிருக்கவில்லை. அங்கங்கே மரங்களும் இருந்தன.



அமைதியாக அமர்ந்து சுற்றுப்புறத்தை ரசிக்க ஆரம்பித் தான்.

குழந்தைகள் போய் விட்டார்கள்.

'புள்ளே! பாரு லோட்டாவிலே காபி போட்டிருக்கான் கொண்டு போய்க் குடு' என்று பாட்டி குரல் கொடுக்க பைரவி எடுத்துக் கொண்டு வந்தாள்.

'வரக்காபி' என்பார்களே அப்படிப் பாலில்லாத காபி.

அவன் அந்த டம்ளரை வாங்கிப் பார்த்தான். பெரிய சைஸாக இருந்தது.

வீட்டிலே டிரேயில் வைத்துக் காலையில் தனக்கு வருகிற பெட் காபியை நினைத்தான்.

குபீரென்று சிரித்தான்.

பைரவி குறும்பு செய்கிற குழந்தையைக் கண்டிக்கிற டீச்சர் போலே அவனைப் பார்த்தாள்.

'சிரிக்காதீங்க.. சார்!' என்றாள்.

அவள் திரும்பி அவனைப் பார்த்தாள். அவன் சிரிப்பை நிறுத்திக் கொண்டான்.

'சரி.. சிரிக்கலே' என்றான்.

'பல் தேய்ங்க.. சார்!' என்றாள்.

'ஓ.. அது வேறயா?' என்றான். பெரியவர் வேப்பங் குச்சியை நீட்டினார்.

பைரவி விவரம் சொல்ல பல் தேய்த்து விட்டு வந்தான்.

வரக்காபி அமிர்தமாய்த் தொண்டையில் இறங்கியது. கட்டிலில் அமர்ந்து குடித்துக் கொண்டிருந்தவன் திரும்பிப் பார்க்க பைரவி ஒரு சிறிய பாறை மேல் அமர்ந்து வரக் காபியை அனுபவித்துக் குடித்துக் கொண்டு இருந்ததைப் பார்த்தான்.

எழுந்து போய் அருகில் நாகரீகமான இடைவெளி விட்டு அமர்ந்தான்.

வீட்டு சோபாவிலே உட்கார்ந்துகிட்டு வராண்டாவைப் பார்த்துகிட்டு ஃபில்டர் காபி சாப்பிட்டிருப்பீங்க. இப்படி வெட்ட வெளியிலே உட்கார்ந்துகிட்டு பெரிய மலையை எதிர்ல பாத்துகிட்டு வரக்காபி குடிச்சிருக்கீங்களா?' என்றாள் பைரவி.

'யா, இட்ஸ் நைஸ்!' என்றான். 'ரொம்ப அருமையா யிருக்கு. இந்த அனுபவம்' என்றான்.

'அடுத்ததென்ன?' என்றான்.

'ஜஸ்ட் என்ஜாய். சும்மாயிருப்பதே சுகம்' என்றாள்.

பெரியவர் வெளியே வர அவருடன் சற்று நேரம் உரையாடிக் கொண்டிருக்க பைரவி உள்ளே போய் சாப்பிடுவதற்கு என்ன வழி என்று பார்க்கலானாள்.

அரிசிப் பானையில் அரிசி இருந்தது. காய்கறிகள் என்று எதுவும் இருக்கவில்லை.



## 6

ஓலைத் தடுப்புகளால் மறைப்பு செய்யப்பட்டு இருந்தது அந்த பாத்ரூம்.

குளித்து விட்டு வெளியே வந்தான்.

சிரிப்பாக வந்தது. 'என்ன இப்படி வந்து மாட்டிக் கொண்டோம் என்று ஆனாலும் பைரவி சொன்னது போல் இந்த நாட்களை ரிலாக்ஸ்டாக ஓய்வெடுத்துக் கொள்ளப் பயன்படுத்திக் கொள்வோம் என்று முடிவு செய்து கொண்டான்.



லுங்கிக்கு மாறிக் கொண்டான். மெதுவாக வெளியே வந்தான்.

ஐந்து ஐந்தரை சென்ட்டுக்குச் சுற்றிலும் ஓலைத் தடுப் புக்களால் மறைத்திருந்தார்கள். காம்பவுண்ட் போல. அதனால் பிரைவஸி இருந்தது.

ஆனால் செய்வதற்குத்தான் வேலை இல்லை என்பது போல் இருந்தது.

பசிக்க வேறு செய்தது.

அவன் பசியை உணர்ந்தாற்போல் பைரவி 'சாப்பிட வாங்க' என்று அழைத்தாள்.

போய் அமர்ந்தான்.

ரசம் வைத்துத் தேங்காய்ச் சட்னி அரைத்து சாதம் வடித்திருந்தாள்.

மண்ணால் செய்த அடுப்புத்தான் இருந்தது. அதிலே சமைத்திருக்கிறாள்.

'பாவம்.. உனக்கு சிரமம்!' என்றான். இயல்பாக நிலைமைக்குத் தாவியிருந்தாள்.

'இல்ல.. சார்! எங்க வீட்லயே கொஞ்ச நாள் முன்னாடி வரை அடுப்புத்தான் சார். அதனால எனக்குப் பழக்கம்' என்றாள்.

தொடர்ந்து ஆங்கிலத்தில் அதுவுமில்லாம நாம திடீர்ன்னு வந்து அவங்க மேல வந்து பாரமா விழுந்ததுமில்லாம, பெரியவர்களுக்குத் தொல்லை குடுக்கக் கூடாதில்லே.. சார் அதுதான் நானே சமைச்சேன்' என்றாள்.

'அது சரி! காலையில சாப்பாடா?' என்று லேசாக முகத்தைச் சுளித்தான் விஜய்.

'சார்! டோன்ட் கம்ப்ளெயின். இன்னைக்குக் கடவுள் நமக்கு இவ்வளவு படியளந்ததே பெரிய விஷயம்' என்றாள் மெல்லிய குரலில்.

'சரிங்க.. ஒளவைப் பாட்டியாரே!' என்று மெல்லிய குரலில் சொல்லிவிட்டு அவனும் சிரித்தான். அதேபோல் மெல்லிய குரலில். ஆனால், சாப்பிட ஆரம்பித்ததும் முகம் மலர்ந்தது.

'சுப்பர்ப்... சுப்பர்ப்' என்றான்.

'தேங்காய்ச் சட்னி.. எப்படியிருக்கு?' என்றாள் மகிழ்ச்சியாக.

'நான்தான் சொன்னேனே. ரொம்ப அருமை' என்று ரசித்துச் சாப்பிட்டான்.

'ஏ, கிழவி. அந்தப் பொண்ணு பாரு. எவ்வளவு நல்லா சமைச்சிருக்கு' என்று மாரப்பன் கேலி செய்தார்.

அவர் பெயர் மாரப்பனாம். அந்த அம்மாவின் பெயர் பேச்சியாம். ஆனால், ஊரில் எல்லாரும் அவர்களை அம்மாச்சி. அப்பாச்சி என்றுதான் அழைப்பார்களாம்.

'சார்.. சாப்பிட்டதுக்கப்புறம் ஊரைச் சுத்திப் பாத்துட்டு வர்லாம்' என்றான் விஜய்.

'இங்க.. பெருசா.. என்ன தம்பி.. இருக்கு? சின்ன ஊர்தான்..' என்றார்.

'அதனாலதான்.. சொல்றேன்.. ஒரு சுத்து சுத்திட்டு வர்லாம்' என்றான்.

அவர்கள் போனதற்குப் பின் பைரவி வீட்டுக்குப் பின்னாலே இருந்த தோட்டத்தில் பார்த்தாள்.

தக்காளி இருந்தது. பறித்தாள். வீட்டில் இருந்த பூண்டு, தக்காளி, மிளகாய் என்று அம்மிக்கல்லில் வைத்து அரைத்துத் தாளித்துப் பூண்டுச் சட்னி செய்தாள்.

அதற்குள் அம்மாச்சி போய் பக்கத்து வீடுகளில் இருந்த தண்டுக் கீரையைப் பறித்து வந்து கொடுத்தார்.

தக்காளி, பூண்டு என்று இருந்த விஷயங்களையே பயன்படுத்தி ஒரு புளிக்குழம்பு வைத்தாள்.



அதற்குள்ளாக விஜய் ஊரை ஒரு ரௌண்ட் பார்த்து விட்டு வந்தான்.

மொத்தமே எழுபது, எழுபத்தைந்து வீடுகள்தான் இருந்தன.

ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் பெரும்பாலும் இளைஞர்கள் யாரும் இருக்கவில்லை. எல்லாரும் வெளி யூருக்கு வேலைக்குச் சென்றிருப்பதாகச் சொன்னார்கள்.

மாரப்பன் வருத்தத்துடன் சொன்னார்.

'வயசுப் பொண்ணுக பாவம்ப்பா.. பசங்க பூராவும் வேலைக்குப் போயிடறாங்க. ஆனா, அப்படிக் கடுமையா உழைச்சுச் சம்பாதிக்கறதைப் பாதிக் குடிச்சே தீத்துப் போடுவானுங்க கேட்டா.. நாள் முழுவதும் உழைக்கற மில்லே. அசதியா ஆயிருதுங்கறானுங்க..' என்றார்.

விஜய் ஆழ்ந்து கேட்டுக் கொண்டான். அவன் கண் டறிந்த விஷயங்களைப் போலவே பைரவியும் நிறைய கண்டு பிடித்து வைத்திருந்தாள்.

விஜய்யும், மாரப்பனும் வெளியே போயிருந்த நிறையப் பெண்கள் அவளைப் பார்க்க வந்திருந்தார்கள். அவர்கள் சும்மா வரவில்லை.

'அம்மாச்சி, விருந்தாளிக வந்திருக்காங்க... இல்லே! அதான் கொஞ்சம் காய் கொண்டு வந்தேன்' என்று அவர்களிடத்தில் இருந்ததைக் கொண்டு வந்திருந்தார்கள்..

அவளிடமும் பேசினார்கள்.

'படிச்சிருக்கீகளா?' என்றார்கள்.

'ம்.. பி.காம்?' என்றாள்.

பெண்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு சிரித்தார்கள்.

'அதெல்லாம் எங்களுக்குப் புரியாது. நல்லா சமைச்சீ களாம். அந்தால அம்மாச்சி சொல்லுச்சு..' என்றார்கள்.

அவர்கள் நகரவும் குழந்தைகள் வந்தார்கள். எளிமையான உடைகள் என்றாலும் சுத்தமாக இருந்தார்கள்.

'அதான்.. தம்பீ! சோத்துக்கு இல்லேன்னாலும் பரவால்லே.. சுத்தமா.. இருங்கன்னு சொல்லுவேன்' என்று அதையே பெரியவரும் சொல்லிக் கொண்டு வந்தார்.

பிற்பகல் உணவுக்குப் பின் சற்று நேரம் கயிற்றுக் கட்டிலை செடி கொடிகளுக்கு நடுவே போட்டுக் கொண்டு உறங்கினான் விஜய்.

பைரவியும் கூட உள்ளே ஒரு பாயை விரித்துக் கொண்டு உறங்கினாள். அதுவும் பெரியவர்கள் இருவரும் 'சித்த நேரம்' தூங்குங்க. ரயில்ல வேற தூங்காம இருந்திருப் பீங்க..' என்று வற்புறுத்தவும் உறங்கினார்கள்.

நான்கு மணி வாக்கில் திரும்பவும் வரக்காபி.

சற்றுக் கழித்துப் பார்த்தாள். அந்த ஊர்க் குழந்தைகளையெல்லாம் சுற்றிலும் அமர வைத்துக் கொண்டு பைரவி 'ரைம்ஸ்' சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

விஜய் எழுந்து வந்தான்.

'என்ன பண்ணிகிட்டிருக்கே?'

அவள் திரும்பிப் பார்த்துச் சொன்னாள் 'பாதிப்பேருக்கு மேலே டிராப் அவுட்ஸ் ரெண்டு மூணு நாள்ல நாம பெருசா என்னத்தைச் சொல்லிக் குடுத்தர முடியும்? அதனால ரெண்டு பாட்டு ரைம்ஸ்ன்னு சொல்லிக் குடுத்துகிட்டிருக்கேன்' என்றாள்.

அவன் அவர்களுக்குத் தொல்லை செய்யாமல் போய்க் காரைக் கழுவினான். ஆனா, காதுகள் இரண்டும் பைரவி குழந்தைகளுக்குச் சொல்கிற கதைகளையும், பாட்டையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தன.

புன்னகையுடன் ரசித்துக் கொண்டான். இரண்டு மணி நேரம் வரை குழந்தைகளுடன் பொழுது போக்கிய பைரவி அவனை நோக்கி வந்தாள்.



'சார்.. நான் ஹெல்ப் பண்ணட்டுமா?' என்றாள்.

'இல்லல்லே.. முடிஞ்சுது!' என்றான். முக்கியமான விஷயம் என்னவென்றால் அந்த ஊரில் மின்சார வசதி இருக்கவில்லை. நல்ல வேளையாக நிலவொளி வீசிக் கொண்டிருந்ததால் சமாளித்தார்கள்.

'சார்! உங்களோட வழக்கமான டின்னர் டைம் என்ன?' என்றாள்.

'நார்மலா.. ஈவ்னிங் லைட் டிபன் சாப்பிடுவேன். ஒன்பது மணிவாக்கில் சப்பர்' என்றான்.

'சரி.. இப்ப ஏழரை மணியாச்சு.. ஒரு ஹாஃப் அன் அவர் டைமில உங்களுக்கு சப்பர் ஓகேவா?' என்றாள்.

'வெரி.. நைஸ்' என்றான்.

அவள் வேகமாகப் போக முன்பட்டபோது

'பைரவி..!' என்று அழைத்தான்.

'மறுபடியும்.. சாப்பாடா?' என்றான்.

'இல்லல்லே.. வேற அரேஞ்ஜ் பண்ணியிருக்கேன்' என்றாள்.

'என்ன ஐட்டம் சொல்லேன்?'

'சஸ்பென்ஸ்' என்றாள். நகர்ந்து விட்டாள் சிரித்துக் கொண்டாள்.

★ ★ ★

'எத்தனை நாளாயிற்று இப்படிக் காரைத் துடைத்துக் கழுவி? கல்லூரியில் படிக்கும்போது முறையாகத் தன்னுடைய பொருள்களைப் பராமரிப்பான். தானே தன்னுடைய வேலைகளைச் செய்வான். ஆனால், எப்போது தொழில்களைப் பார்க்கவென்று நுழைந்தானோ அப்போது மற்றதற்கெல்லாம் நேரமில்லாமல் போய் விட்டது.

இருபத்து மூன்றாம் வயதிலேயே தொழில்களைப் பார்க்க அப்பாவுடன் நுழைந்தான். அவனுக்கு இருபத்

தைந்து ஆன போது அப்பா முக்கியமான நிறுவனங்களை அவன் பொறுப்பில் ஒப்படைத்து விட்டுத் தான் ஒன்றிரண்டு கம்பெனிகளைப் பார்த்துக் கொள்ள ஆரம்பித்து விட்டார்.

கோவை, மதுரை, சென்னை, திருச்சி என்று அவர்களுடைய கம்பெனிகளில் கிளைகள் இருந்தன.

கிரைண்டர், ஆட்டோமொபைல் பார்ட்ஸ் என்று நிறைய மோட்டார் தொடர்பான பொருட்களை உற்பத்தி செய்தார்கள்..

பெரிய ஃபேக்டரி கோவையில் இருந்தது. விற்பனை மையங்கள் மதுரையிலும் சென்னையிலும், திருச்சியிலும், சேலத்திலும் கூட இருந்தது.

அடிக்கடி அவன் மேற்பார்வை செய்ய வேண்டியிருக்கும். நேரம் கிடைப்பதே அரிதாக இருக்கும் என்றாலும் நல்ல நட்பு வட்டம் வைத்திருந்தார்கள். அவ்வப்போது கொஞ்சம் சுற்றிக் கொள்வார்கள்.

இப்போது இருபத்தெட்டு வயது துவங்கி இருந்தது. இன்னும் நிறைய சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது.

இன்று இந்த மாதிரி ஒரு சூழலில் விச்ராந்தியாக நேரம் கிடைப்பதும் நன்றாகத்தான் இருந்தது.

யோசித்துக் கொண்டே கை கால்களைக் கழுவிக் கொள்ளலாம் என்று வீட்டுப் பகுதிக்குள் நுழைந்தான். அந்தக் காட்சியைக் கண்டான்.

பைரவி ஒரு சின்ன முக்காலியில் அமர்ந்தபடி ஆட்டாங்கல்லில் எதையோ ஆட்டிக் கொண்டிருந்தாள்.

'ஹலோ! வாட்ஸ் யூ கோயிங் ஆன்' என்றான்.

'ஒன்னுமில்லே! உங்களுக்கு அவுட்டோர்ல மூன் லைட் டின்னர் ரெடியாகுது' என்றாள்.



'ரியலி?' என்று பின்பக்கம் போய்க் கை கால்களைச் சுத்தம் செய்து கொண்டு வந்து எதிரில் இருந்த சின்னத் திட்டுப் போன்ற பாறையில் அமர்ந்து கொண்டான்.

'மேனுவலா செய்யறது கஷ்டமா இல்லையா?'

'நீங்க வேற. அதுதான் நல்லா இருக்கு. பழக்கம்தான். எங்க வீட்ல எல்லாம் இன்னும் கிரைண்டர். மிக்ஸின்னு வாங்கலை' என்றாள்.

'ஓ!' என்றான்.

'அப்புறம் உங்களைப் பத்திச் சொல்லுங்களேன். பைரவி!' என்றான்.

'சார்! எனக்கு ஒரு தம்பி. தியாகுன்னு பேரு. எனக்கு ரொம்ப பெட்! அப்பா எனக்கு சின்ன வயசா இருக்கும் போதே.. இறந்துட்டாங்க.. அம்மா நான் பொறந்தப்பவே இறந்துட்டாங்க. சித்திதான்.. ஆனா, சினிமாவில காட்டுற மாதிரிக் கொடுமைக்காரங்க இல்லே! ஆனா, அன்பையும், அக்கறையும் வெளிப்படையாகக் காட்டத் தெரியாது..' என்றாள்.

அவன் ஆழ்ந்து கேட்டுக் கொண்டான். 'இப்ப போஸ்டர்ல எம்.காம். படிக்கறேன்' என்றாள்.

'தட்ஸ் குட்' என்றான். ஆனால் அவன் தன்னைப் பற்றி அதிகமாகச் சொல்லவில்லை. ஒரு ஆண் பிள்ளையைப் பற்றி துருவிக் கேட்க வேண்டாம் என்று நினைத்தாலோ என்னவோ அவளும் கேட்கவில்லை.

மாவை ஆட்டி எடுத்து குடிசைக்கு வெளியிலேயே மூன்று கற்களை அடுப்பாக வைத்து தோசைக் கல்லில் அவர் சுட்டுக் கொடுத்த பாசிப்பயறு தோசை மிகவும் சுவையாக இருந்தது.

பூண்டுச் சட்னி, புளிக்குழம்பு என்று சைட் டிஷ் வேறு.

ஆறேழு தோசைகளை சாப்பிட்டு விட்டான் விஜய்.

'சின்ன வயசுல அம்மா பக்கத்துல உட்கார்ந்து இப்படி சாப்பிட்டது பைரவி' என்று கீழே அமர்ந்தபடி அவன் நிலவொளியில் சாப்பிட அற்புத அனுபவமாக அமைந்தது.

சாப்பிட்டவுடன் பைரவி, விஜய், மாரப்பன் ஆகிய மூவரும் சற்று நேரம் உலாவி விட்டு வந்தார்கள்.

கயிற்றுக் கட்டிலைத் தட்டி 'நான் வெளியிலேயே படுத்துக்கறேன்' என்றான் விஜய்.

'தம்பி! மலையோரம்கறதுனால வெயிலும் அதிகமா இருக்கும். குளிரும் அதிகமா இருக்கும்' என்றான் மாரப்பன்.

'அப்படிப் பிராப்ளம்னா உள்ளே வந்தர்றேன்' என்று புன்னகைத்தான்.

நள்ளிரவில் விழிப்பு வந்தது.

விழித்துப் பார்த்தான். சூழ்நிலை புரியவே சற்று நேரமாகிப் போனது.

நிலா உச்சியில் இருந்தது. மலையின் பிரம்மாண்டமும், சுற்றுப்புறச் சூழலும் அற்புதமாக இருந்தது. சற்றே அச்சம் தருவதாகவும் இருந்தது.

மளமளவென்று முதல்நாள் அனுபவங்கள் எல்லாம் நெஞ்சுக்குள் வந்து போனது. ஆனால், குளிர் அதிகமாக உறைக்க ஆரம்பித்தது.

பற்கள் கிட்டித்துக் கொள்ளும் போல் இருந்தது.

வீராப்பாக வெளியேயே படுத்துக் கொள்கிறேன் என்று சொல்லியாகி விட்டது.

விழித்துக் கொண்டு உள்ளே பார்த்தான் ஆழ்ந்த அமைதியில் எல்லாரும் உறங்கியிருந்தார்கள்.

மீண்டும் காலைக் குறுக்கிக் கொண்டு படுத்துக் கொண்டான். குளிரோ அதிகமாகிக் கொண்டே போனது.





# 7

யாரோ உலுக்குவது உணர்ந்து திடுக்கிட்டு விழித்தான் விஜய்.

எதிரே மாரப்பன் நின்று கொண்டிருந்தார் பக்கத்தில் பைரவி.

'தம்பி! உள்ளே வந்து படுங்க. குளிர் தாங்காது' என்றார்.

எழுந்து நின்றான்.

மாரப்பனும், பைரவியும் கயிற்றுக் கட்டிலைக் கொண்டு போய் உள்ளே போட்டார்கள்..

கெட்டியான போர்வை ஒன்றைக் கொடுத்தார் மாரப்பன். படுத்துக் கொண்டான்.

மாரப்பன் மற்றொரு கயிற்றுக் கட்டிலில் எதிரில் படுத்துக் கொள்ள, பெண்கள் இருவரும் சற்றுத் தள்ளிக் கீழே பாயில் படுத்துக் கொள்வதாகச் சொன்னார்கள்.

ஐந்து நிமிடம் போயிருக்கும்.

'சார்! சூடா இதைக் கொஞ்சம் குடியுங்க' என்று வரக்காபியை நீட்டினாள்.

குளிரில் நடுங்கிப் போயிருந்த உடம்புக்கும், தொண்டைக்கும் இதமாக இருந்தது.

சிம்னி விளக்கின் ஒளியில் ஒரு விதமாக இருந்தது சூழ்நிலை.

பைரவி ஏதோ தேவதை போல் தோற்றமளித்தாள். தூக்கக் கலக்கத்தில் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

'தேங்க்யூ.. மை டியர்.. ஏன்ஜல்' என்றான் குழறலாக. தொப்பென்று படுத்துக் கொண்டான்.

பைரவிக்குத் தியாகுவின் நினைவு வந்தது. புன்னகைத்துக் கொண்டு படுக்கைக்குப் போனாள்.

அதிகாலை மூன்று மணிக்கெல்லாம் விழிப்பு வந்து விட்டது விஜய்க்கு.

குப்புறப் படுத்துக் கொண்டு சுற்றிலும் பார்த்தான்.

மாரப்பனும், அம்மாச்சியும் ஆழ்ந்த உறக்கத்தில் குறட்டை விட்டுக் கொண்டிருந்தார்கள்.

பைரவி தன்னுடைய வேசான விரிப்பைப் போர்த்துக் கொண்டு சன்னமாக மூச்சு விட்டபடி நிம்மதியான உறக்கத்தில் இருந்தாள்.

அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

வேறொரு பெண்ணாயிருந்தால் எக்கச் சக்கமாக மாட்டிக் கொண்ட இந்தச் சூழ்நிலையில் எவ்வளவு ஃபஸ் பண்ணியிருப்பார்கள். ஆனால் இந்தப் பெண் சூழ் நிலைக்கு இயல்பாகப் பொறுத்துக் கொள்வதோடு 'சியர்ஃபுல்லாக' என்பார்களே.. அது மாதிரி எல்லாத்தையும் மகிழ்ச்சியாக ஏத்துக்கறாளே' என்ற எண்ணம் தோன்றியது.

தன்னை மறந்து அவளுடைய முகத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டு படுத்திருந்தான். எப்போது தூங்கினா னென்றே தெரியாத வண்ணம் மறுபடியும் உறங்கிப் போயிருந்தான்.

★ ★ ★

**பை**ரவி விடியற் காலையில் குளித்துவிட்டு வந்தாள்.

அடுப்பைப் பற்ற வைத்தாள். வரக்காபி போட்டாள்.

அம்மாச்சிக்கு ஒரே மகிழ்ச்சி. புள்ளைங்கன்னா இப்படித்தான் இருக்கோணும் என்று பாராட்டினார். விஜய்



பைரவியிடம் வந்து 'பைரவி, அட்மாஸ்பியர் ரொம்ப நல்லாருக்கு.. ஜாகிங் போயிட்டு வர்றேன்' என்று போய் விட்டான்.

அவன் திரும்பி வரும்போது அவள் அடை வார்க்கிறேன் என்று மாவாட்டி எடுத்துக் கொண்டிருந்தாள்.

'அடடா! ஃப்ரிஜ் இருந்தா மாவை உள்ளே வச்சுக்கலாம் இல்லே.' என்றான் நேற்றும் போலவே அவன் அருகில் அமர்ந்தபடி.

'சார்! ஃபிரிட்ஜ் எல்லாம் கீழ் மட்டக் குடும்பத்துக்குக் கட்டுப் படியாகாது. அது மட்டுமல்ல. இவங்களுக் கெல்லாம் இட்லி தோசையே லக்ஸுரிதான் அதான். அப்பப்ப அளவா மாவு ஆட்டிக்கறேன்' என்றாள் ஆங்கிலத்தில்.

'ஓ!' என்றான். வேறு ஏதும் சொல்லத் தோன்றவில்லை.

அன்றைக்குப் பிற்பகல்!

போகும் வழியில் யாருக்கோ போன் செய்து விவரம் கேட்டான்.

'பைரவி! எலெக்ட்ரிசிட்டி கூட இல்லாத இடத்துல மாட்டிகிட்டோம் போனைச் சார்ஜ் பண்ண முடியாது. அதனாலதான் அளவா யூஸ் பண்ணிட்டு சேமிக்கப் பாக்கறேன்' என்றான்.

பிறகு பைரவி 'நிலைமை அப்படியேதான் இருக்காம். எங்கயும் பஸ் ரயில் கார் ஏன் டூ வீலர் கூட ஓடலையாம். நாளைக்குக் கினைக்கு ஏதாவது நிலைமை மாறலாம் போலருக்கு' என்றான்.

'ஓ!' என்றாள் பைரவி.

'சரி.. நீ சொன்ன மாதிரி இதை ஒரு நல்ல சேன்ஜா எடுத்துக்க வேண்டியதுதான்' என்றான்.

'ஆமா சார்! எங்க ஊர் பக்கத்தில்ல எல்லாத் தெருக்காரங் களும் சேந்து தொகை வசூல் செஞ்சு வெள்ளியங்கிரி

மலைக்குப் பக்கத்திலே ஒரு ரெண்டு மூணு நாள் தங்கு வாங்க. அன்னதானமெல்லாம் நடக்கும். அதனாலே சாப்பாட்டுக் கவலையில்லாம ரெண்டு மூணு நாளைக்கு ஏழ பாளைங்கள்ளாம் அவுட்டோர் எக்ஸ்பீரியன்ஸ் என்ஜாய் பண்ணுவாங்க' என்றாள்.

அவன் ஆழமாகக் கேட்டுக் கொண்டான்.

'சார்! இந்த ஊர்ல பாருங்களேன். அதிகமா சின்ன வயசு ஆண்களே இல்லை. சம்பாதிச்சுட்டு வர்றதுலயும் பாதிக்கு மேல வேற மாதிரி செலவு பண்ணிடுவாங்க போலருக்கு. 'நாமதான் ரொம்பக் கஷ்டம்னு படறோம்னு... முந்தியெல் லாம் நினைச்சுக்குவேன். ஆனா, இந்தப் பெண்களை யெல்லாம் பார்த்தா.. அவங்க ஏழ்மையைப் பார்த்தா எனக்கென்னமோ நான் ராஜகுமாரி மாதிரித் தோணுது' என்றாள்.

'அது எப்படியோ.. பைரவி.. எங்க எளிமையும் ஒரு கம்பீரமாத்தான் இருக்கிங்க. ராஜகுமாரிதான். அதிலென்ன சந்தேகம்' என்று பார்த்தான்.

முகம் சிவந்தது. அது ஒரு இயல்பான பாராட்டு என்பதைப் புரிந்து கொண்டாள்.

'தாங்க்யூ... யூ!' என்றாள். ஆனால் மீண்டும் விட்ட இடத்தைப் பிடித்தாள்.

'அப்புறம்.. இன்னொண்ணும் கவனிச்சேன். பனிரெண்டு வயசுக்கு மேலே உள்ள பசங்களே இல்லை. பொண்ணுக தான் இருக்காங்க. விசாரிச்சா அந்த வயப் பசங்களை யெல்லாம் வேலைக்குக் கூட்டிட்டுப் போயிடுவாங்களாம். பாவம் இல்லே!' என்றாள்.

'ம்!'

'குழந்தைங்கள்ளாம் பள்ளிக் கூடத்துக்குப் போற மாதிரியும் தெரியலை. என்ன மாதிரி வாழ்க்கை சார் இது!' மியர் எக்ஸ்டென்ஸ்' என்றாள் ஆவேசமாக.



அவன் மௌனமாய்க் கேட்டுக் கொண்டான். பிறகு சொன்னான்.

'இதுக்கெல்லாம் என்ன செய்ய முடியும்?'

'முடியும் சார். உங்களை மாதிரி இன்டஸ்ட்ரிய லிஸ்ட்ங்க ஒவ்வொரு ஏரியாவைத் தத்தெடுத்துகிட்டா முடியாதா?'

அவன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

'பைரவி! இதெல்லாம் உடனடியா முடியக் கூடிய விஷயம் இல்லே. ஒரு இன்டஸ்ட்ரிக்காரன் செய்ய வந்தா அது வரவேற்கறவங்க யாரும் இல்லே. அரசாங்கத்துக் கிட்டே அனுமதி வாங்கணும். நிறைய ப்ரொசீஜரல் டிலே. இது மாதிரி பிராப்ளம்ஸ் எல்லாம் இருக்கு. அதனால, நமக்கு எதுக்கு வம்புன்னு தொழிலதிபர்கள் ஒதுங்கிக் கறாங்க' என்றான்.

பிறகு அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

'பரவாயில்லை! ரெண்டு நாளைக்குள்ளே மொத்த ஊரையும் பத்தி ஒரு ஸ்டடி பண்ணிட்டீங்க' என்றான்.

'சின்ன ஊர்தானே சார்! மொத்தமே எழுபது எழுபத் தைந்து வீடுங்கதான் போலருக்கு அது மட்டுமல்ல ஏதோ புதுசா ஒரு பொண்ணு வந்திருக்கேன்னு பாக்கறதுக்கு எல்லா வீட்லருந்தும் லேடீஸ் வந்துட்டாங்க.' என்றாள்.

'நேரம்தான்!' என்று அவன் கிண்டல் செய்ததை அவளும் சிரித்துக் கொண்டே ரசித்துக் கொண்டாள்.

'அது மட்டுமில்ல சார்! இத்தனை வறுமையிலயும் அவங்கவங்க வீட்ல என்ன இருக்குதோ அதைக் கொண்டு வந்து 'விருந்தாளிங்க வந்திருக்காங்களேன்னு' கொண்டு வந்தோம்னு குடுக்கறாங்க நம்ம தமிழ்நாட்டோட விருந்தோம்பல் பண்பு', என்றாள்.

கலகலவென்று சிரித்தான்.

அவனும் மௌனமாக ரசித்துக் கொண்டான். பிறகு சொன்னான்.

'நீங்க சொன்னது நிஜம்தான் பைரவி. இது ஒரு வித்தியாசமான அனுபவம் மட்டுமில்லே. நிறைய சிந்திக்கறதுக்கான விஷயங்களும் கிடைச்சிருக்கு' என்றான்.

அதற்குப் பிறகு திரும்ப வரும்போது கனமான மௌனத்தில் வீடு வரும்வரை வந்தார்கள்.

எட்டு மணிவாக்கில் வெளியே கயிற்றுக் கட்டிலில் அமர்ந்திருந்தவன் 'பைரவி.. இங்க வா!' என்றான் எதிரில் அமர்ந்தாள்.

'இப்ப என்ன டிபன்?'

'சார்! அடைக்கு ஆட்டி வச்சிருக்கிறேன். இப்ப சூடா வார்த்துத் தரேன்' என்றாள்.

'சாப்பிடறேன். ஆனா ஒரு கண்டிஷன்' அவள் வியப்பாகப் பார்த்தாள்.

'நீயும் சாப்பிட்டு வந்து உட்கார்ந்து எனக்கு ஒரு மணி நேரமாவது பாட்டுப் பாடிக் காட்டணும்.'

அவள் தயங்கினாள். 'சார் சங்கீதம் எல்லாம் கத்துக்கலே. ஏதோ கொஞ்சம் தேவாரம், திருவாசகம், திருப்புகழ், நாடோடிப் பாட்டுன்னு' பாடுவேன் உங்களுக்குப் பிடிக்குமோ.. என்னவோ.

'என்ன வேணா பாடுங்க. கேப்போம்' என்றான்.

'சரிங்க சார்' என்று எழுந்தாள். இரண்டு எட்டு எடுத்து வைத்தவள் திரும்ப வந்து.

'பாவம் சார்! நீங்க! ஏண்டா கேட்டோம்னு நொந்து போயிரப் போறீங்க!' என்று சிரித்து விட்டு நகர்ந்தாள். ஆனால் பாடினாள்.

அவன் கயிற்றுக் கட்டில் மேல் கால்மேல் கால் போட்டு அமர்ந்து கொள்ள மாரப்பனும், அம்மாச்சியும் இரண்டு



பக்கமும் அமர்ந்து கொள்ள ஒரு மணி நேரத்துக்கு மேல் பாடினாள்.

'ரொம்ப நல்லாப் பாடறீங்க!' என்று பாராட்டினான். பிறகு.

அப்பா.. மிருதங்க வித்வான்கறீங்க.. அப்புறம் ஏன் பாட்டுக் கத்துக்கலை!' என்றான் வியப்புடன்.

'உள்நாட்டுக் கலவரம் சார்!' என்று சிரித்தாள். சித்திக்கு அப்பாவோட வித்வத் மேல் கோபம். சோறு போடாத சமாச்சாரத்துனால யாருக்கு என்ன பிரயோஜனம்பாங்க' என்றாள்.

'ஓ!'

'ஆமா! அவங்களுக்குப் பசியைப் பத்தித் தெரிஞ்ச அளவுக்கு சங்கீதம் பத்தித் தெரியலே.

......!

'அதனால எப்பவாவது இப்படி சித்தி வெளியே போயிருக்கும் போது வீட்ல பாட்டுக் கச்சேரி நடக்கும். சித்தி வந்தவுடனே நல்லாக் கிடைக்கும்' என்றாள்.

'பாராட்டோ?'

'இல்லே! அர்ச்சனை. அப்பாவுக்கும்.. எனக்கும் ரெண்டு பேருக்கும் இன்னைக்கு எனக்கு அப்பாவோட ஞாபகம் வந்துடுச்சு' என்றாள் மெல்லிய குரலில்.

அவன் சட்டென்று நகைச்சுவைக்குத் தாவினான்.

'ஆரிராரோ.. கண்ணே! அழாதே பாப்பா.. ன்னு' தாலாட்டு பாடித் தூங்க வக்கச் சொல்லட்டா.. அம்மாச்சி கிட்டே..' என்றான்.

'சார்.. சொல்ல முடியாது. கிராமத்து லேடீஸ் நல்லாப் பாடுவாங்க. சார்' என்றாள்.

'டிரை பண்ணிடுவமா?' என்றான்.

அம்மாச்சி நன்றாகவே பாடினார். நிஜமாகவே பைரவி தூங்கிப் போனாள்.

விஜய் உள்ளுக்குள் யோசனையில் ஆழ்ந்தான். 'இந்தப் பெண்கள் உள்ளத்து உணர்வுகளைத் தாலாட்டிலும், ஒப்பாரியிலும் கூட வெளிப்படுத்தி விடுகிறார்களே' என்று.

அதே சமயம் அன்பை வேறொரு விதமாக அவனுக்கு நெருக்கமான ஒருவர் வெளிப்படுத்திக் கொண்டிருந்ததை அவன் அப்போது அறியவில்லை.

★ ★ ★

'ரவி.. என்ன விளையாடறீங்களா?' என்றார் சௌந்தரவல்லி விஜயின் அம்மா.

'அம்மா..!' என்று சிரித்துச் சமாளித்தான் ரவிக்குமார். விஜயின் தனிப்பட்ட உதவியாளர் அதாவது பர்சனல் பி.ஏ.

'எங்கயோ மலைப்பகுதியில் இருக்காராம். லைஃபை என்ஜாய் பண்ணிகிட்டிருக்கேன் ரவி. டோன்ட் டிஸ்டர்ப் மி. எப்படியும் டிராஃபிக் சரியானா வந்தர்றேங்கறாரு' என்ன சொல்லா?' என்றான்.

'இரண்டு பேரும் உலகமகா திருடனுங்களாக்கும்' முதலாளிக்கு இந்தத் தொழிலாளி கள்ளக்கூட்டு இல்லே?' என்றார் மேலும் கோபித்துக் கொண்டு.

'விஜயின் அப்பா ராஜலிங்கம் மெதுவாகப் புன்னகைத்த படியே சோபாவில் அமர்ந்து கொண்டிருந்தார்.

'அம்மா.. இப்பல்லாம் ரொம்பக் கோபிச்சுக்கறார். திடீர் திடீர்ன்னு கிளம்பிடறார். அக்கறைங்கற பேர்ல நாம அவரை ரொம்பக் கட்டிப் போட்டர்றோம்ங்கறார்' என்றான் ரவி.

ராஜலிங்கம் உதவிக்கு வந்தார்.

'ஆமா.. சௌந்தரம். அவன் ஒன்னும் சின்னப் பையன் இல்லே. பெரிய பெரிய தொழில்களை எல்லாம் நிர்வகிக் கிறான். நீயென்ன நீ?' என்றார்.



ரவிக்குமார் அதுதான் சாக்கென்று தொடர்ந்தான்.

'ஆமங்கம்மா.. பாருங்க.. போன மாசம் திடீர்ன்னு ரயில்ல கிளம்பிட்டாரு. போன் பண்ணி சார் சேஃபா இருக்கீங்களான்னு கடிக்கறாரு. பொன்னியின் செல்வன்ல கேட்டா பொம்பளைங்க மூடு பல்லக்கில போற மாதிரி ஒரு பல்லக்குல ஏற்பாடுபண்ணுங்க. ஃப்ரீயா இருக்க விட மாட்டீங்கன்னு கோபப் படறாரு' என்றான்.

ராஜலிங்கம் சிரித்தார்.

'சிரிக்காதீங்க!' என்று கடிந்து கொண்டார் சௌந்தர வல்லி. அவர் குரல் தழுதழுத்தது.

'ரெண்டு நாளா என்ன சாப்பிட்டானோ எப்படியிருக் கானோன்னு என் மனசு கிடந்து தவிக்கற தவிப்பு எனக் குத்தானே தெரியும்?' என்றார்.

ஆண்கள் இருவரும் தங்கள் சிரிப்பை நிறுத்திவிட்டு, சட்டென்று அமைதியானார்கள்.

'ஐயோ! அம்மா.. நல்லாத்தான் இருக்காரு. நீங்க கவலைப்படற அளவுக்கு ஒன்னும் இல்லை. சேலத்துக்குப் பக்கத்துல ஒரு குக்கிராமத்துல இருக்காரு. ரொம்ப நல்லாக் கவனிச்சுக்கறாங்களாம். அனுபவம் ரொம்ப நல்லா இருக்குன்னு போன் பண்ணினாரு. குரலைக் கேட்டாலே ஒரு சந்தோஷம் தெரியுது' என்றான் ரவிக்குமார் பதட்டமாக.

'சரி.. ரவி.. நீ போ. நான் சொல்லிக்கறேன்' என்றார் ராஜலிங்கம்.

அவனும் குறிப்பறிந்து விலகிப் போனான்.

ராஜலிங்கம் எழுந்து வந்தார். மனைவியின் தோள் மேல் கை போட்டுக் கொண்டார்.

'என்ன இது சௌந்தரம்? அவன் நல்லாத்தான் இருக்கான். எனக்கும் மெசேஜ் அனுப்பியிருந்தான்.

ரொம்ப டிஃபரன்டான அனுபவம்ன்னு சந்தோஷமா அனுப்பியிருந்தான். பாரு அன்புங்கற பேர்ல குழந்தைகளை மூச்சு முட்டற வரைக்கும் கஷ்டப்படுத்தக் கூடாது. அவர்களுக்கு குடுக்கணும். சரி.. நீ கவலைப்படற மாதிரி ரெண்டு நாள் சாப்பாடு கிடைக்கலேன்னு வை. அது கூட ஒரு அனுபவம்ன்னுதான் வச்சுக்கணும்' என்றார்.

'ஐயோ.. ரெண்டு நாள் சாப்பிடாமயா?' என்றார் சௌந்தரம் பதட்டமாக.

மறுபடியும் ராஜலிங்கம் சிரித்தார்.

'அட! ஒரு பேச்சுக்குச் சொன்னேன். ஹி இஸ் பர்ஃபெக்ட்லி ஆல் ரைட்.' என்றார்.

சௌந்தரவல்லி சமாதானமாக சற்று நேரம் ஆனது.

'மேக்ஸிமம் இன்னும் ஒரு நாள் அநேகமா நாளைக்கு வந்துடுவான்' என்றார்.

பிறகுதான் சௌந்தரவல்லி சமாதானம் ஆனார். ரவிக்குமார் அன்று மாலை பேசும்போது,

'சார்! அம்மா ரொம்ப அப்செட்!' என்றான்.

'சரி.. சரி.. சமாளி! நாளைக்கு வந்தர்றேன்' என்று மேலும் சில இன்ஸ்ட்ரக்ஷன்கள் கொடுத்தான்.



# 8

பிற்பகல் உணவு முடிந்தவுடன் கடந்த இரண்டு நாட்களைப் போலவே கட்டிலில் ஒரு சுகமான தூக்கம் போட்டான் விஜய்.



மாலையில் எழுந்து வரக்காபியைக் குடித்து விட்டு சோம்பல் முறித்துக் கொண்டு அம்மாச்சியின் வீட்டு வேலியைத் தாண்டி வெளியே வந்தான்.

சர் சர்ரென்று இரண்டு மூன்று கார்கள் வந்து நின்றன.

ரவிக்குமார் இறங்கி வர பின்னாலேயே சேலத்து நண்பனும் வந்தான்.

'போச்சு! சுதந்திரம் போயாச்சு!' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

'சார்! சௌக்கியமா இருக்கீங்களா?' என்று ஒருவிதப் பதைப்புடன் ரவிக்குமார் வேக வேகமாக வருவதை ஒருவித அமைதியுடன் எதிர்கொண்டான் விஜய்.

ஒரே மணி நேரத்தில் மீண்டும் வழக்கமான பரபரப்பான உலகத்திற்கேத் திரும்பினான்.

★ ★ ★

'அக்கா.. இப்படி ஊரெல்லாம் இருக்கா? நிஜமாவா?' என்று பத்தாம் முறையாகக் கேட்டுக் கொண்டிருந்தான் தியாகு.

'ஆமடா.. பன்னிரண்டு பதிமூணு வயசான ஆம்பளைப் பசங்களை வேலைக்குன்னு கூட்டிட்டுப் போயிர்றாங்க. பெண் குழந்தைங்களுக்கு சுத்தமா படிப்பையே காணோம்' என்றாள் பைரவி வருத்தத்துடன்.

வழக்கம் போல காமாட்சி பிஸ்கட் கம்பெனிக்கு வேலைக்குப் போயிருந்தார்.

தியாகுவிடம் தன் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டாள் பைரவி.

'அக்கா.. நீ சொல்றதெல்லாம் கேட்டா அந்த இன்டஸ்ட்ரியலிஸ்ட் ரொம்ப நல்லவரா இருப்பாரு போலருக்கே.. யாருன்னு விசாரிச்சிருக்கலாமில்லே..' என்றான் ஆவலாக.

'நான் ஜாடை மாடையாக் கேட்டேன்டா. அவரு மழுப் பிட்டாரு. அதுக்கு மேலே வற்புறுத்திக் கேட்கக் கூடாதில்லே என்றாள்.

'ஆமா அதுவும் சரிதான். அவரு யாரா இருந்து நமக்கு என்ன ஆகப் போகுது? இதெல்லாம் ரயில் சிநேகம் மாதிரி.. ஒரு இனிய அனுபவம்ன்னு வச்சுக்க வேண்டியதுதான்' என்றான் தியாகு.

இரண்டு பேரும் காமாட்சியிடம் அவள் ஆபீஸ் ஏற்பாடு செய்து கொடுத்திருந்த இடத்திலே தங்கிய மாதிரியே சொல்லி விட்டார்கள். அதனால் காமாட்சி பெரிதாக ஒன்றும் கேள்விகள் கேட்கவில்லை.

அன்றைக்கு ரவிக்குமார் வந்தவுடனே விஷயங்கள் மளமளவென்று நடந்தேறின.

ஒரே மணி நேரத்தில் அங்கிருந்து விடைபெற்றுக் கொண்டார்கள்.

அவளை ஒரு சொகுசு பஸ்ஸில் ஏற்றிக் கோவைக்கு அனுப்பி விட்டு அவர்கள் சென்னைக்குப் போனார்கள்.

அவளுக்கு ஆச்சரியம் என்னவென்றால் ரவிக்குமாரும் அலுவலக ஆட்களும் வந்தவுடன் விஜயின் தோரணையே மாறிப் போனது.

கம்பீரமாகவும், ஆளுமையுடனும் அவன் நடந்து கொண்ட விதம் பார்த்து அவளுக்கு சற்றே பயம் கூட ஏற்பட்டது. ஆனாலும் அம்மாச்சியிடமும், மாரப்பனிடமும் அன்பாகப் புன்னகைத்து 'கண்டிப்பா... நான் உங்களைப் பார்க்க மறுபடி வர்றேன்' என்றான். பிறகு ரவியைப் பார்த்துக் கண்ணசைக்க அரிசி மூட்டை, பருப்பு மளிகை மற்ற சாமான்கள் என்று கிட்டத்தட்ட அந்த இரண்டு பேருக்கும் ஆறு மாதத் தேவைகளைப் பூர்த்தி செய்கிற அளவுக்குப் பொருட்கள் வந்து இறங்கின.



அவர்கள் மலைத்துப் போனார்கள். அவர்கள் மேற் கொண்டு பேசுவதற்குள்ளாக அவன் லாவகமாக விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

இதெல்லாம் நினைவு வர பைரவி புன்னகைத்துக் கொண்டாள்.

இப்போது நினைத்தால் 'எல்லாம் கனவு போல் இருந்தது' ஆனால் இன்னொன்றும் தோன்றியது.

'சென்னைக்கு வேலைக்குப் போனால் வாழ்க்கை சுவாரசியமாக இருக்குமென்று. ஆனால், அப்போது தெரியவில்லை. இனிமேல்தான் தன் வாழ்க்கையில் நிறைய சந்தோஷங்களும், சோதனைகளும் கலந்த ஒரு பெரிய புயல் வீசப் போகிறது என்று.

* * *

சென்னை அலுவலகத்தில் எம்.டி.யின் நேரடிப் பார்வை யின் கீழ் இருந்த அலுவலகத்தில் அவளுக்கு அக்கவுண்டண்ட் போஸ்ட் கொடுத்திருந்தார்கள்.

அவளுக்கும் மேலே நேரடியாக எம்.டி.யின். பி.ஏ.

பத்து நாட்கள் ஓடிவிட்டது. உடன் வேலை செய்கிறவர்களின் ஒரு இளம் பெண்ணிடம் நட்பு ஏற்பட்டது. கலா என்று பெயர். மெது மெதுவாக அலுவலகம் பற்றித் தெரிந்து கொண்டாள்.

'ஏன்.. கலா எம்.டி.யைப் பார்க்கவே முடியறதில்லை' என்றாள்.

'எம்.டி. எப்பவும் டூர்ல இருப்பார். பெரும்பாலும் ஆபீஸுக்கு அந்த வழியில வந்துட்டுப் போயிடுவாரு. நிறைய விஷயங்களை மேனேஜ் பண்ண வேண்டியிருக்குல்ல' என்றாள்.

அதற்கு மேல் அதைப்பற்றி யோசிக்கவில்லை.

குவார்ட்டர்ஸ் கொடுத்திருந்தார்கள். முக்கியமானவர்களுக்கெல்லாம் அங்கேயே அபார்ட்மென்ட்ஸ் வேறு இருந்தது. அவளுக்கு இரண்டே இரண்டு அறைகள் உள்ள அபார்ட்மென்ட் அவளுக்கு அதுவே சொர்க்கமாக இருந்தது. ஒரு கட்டில் இருந்தது. சமையலறை சின்னதாக அழகாக இருந்தது. இப்போதைக்கு அவள் கேண்டீனிலேயே சாப்பிட்டாள்.

இரண்டு அபார்ட்மென்ட்கள் தள்ளி கலா இருந்தாள்.

'கொஞ்ச நாளைக்கு வேண்ணா எங்க வீட்ல சாப்பிடேன்' என்றாள்..

கலாவுக்கு சற்றே வயது முதிர்ந்த பெற்றோர்கள். அதிலே தானும் நுழைவது நாகரீகமல்ல என்று மறுத்து விட்டாள்.. ஆனாலும், இரவு நேரங்களில் டிபன் கொடுத்தாள்.

பைரவியும் கொஞ்சம் பழகிய பின் கூட மாட உதவி செய்ய ஆரம்பித்தாள்.

பத்து நாட்களுக்குப் பிறகு 'இரண்டாயிரத்தைந்நூறு ரூபாய் அட்வான்ஸ் கொடுத்தார்கள். அவளுக்கு ஒரே மகிழ்ச்சி.

தியாகுவுக்குப் போன் செய்து விவரம் சொல்லிவிட்டு ஆயிரத்தைந்நூறு ரூபாயை வீட்டுக்கு அனுப்பி விட்டாள்.

மறுநாள் அலுவலகம் போனவுடன் அவளுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது.

ரவிக்குமார் அங்கே இருந்தான். ஆனால், அவனுக்கு அவளை அடையாளம் தெரியவில்லை. அவளும் வலியப் போய்ப் பேச விரும்பாதவளாய் இருந்து கொண்டாள்.

எம்.டி.யின் பி.ஏ. மிஸஸ் 'மீனாதான் அவளுக்கு மேலே என்பதில் மற்றவர்களை அவள் அவ்வளவாகக் கண்டு கொள்ள மாட்டாள். அமைதியாகப் போய்விட்டு அமைதியாக வந்து விடுவாள்.



இன்றைக்கு மீனாவும் பரபரப்பாக இருந்தார்.

'பைரவி! எப்பவும் எம்.டி. ஒரு ஹாஃப் அன் அவர் வந்துட்டுப் போயிடுவாரு. ஆனா, இன்னைக்கு என்னமோ ஃபுல் டே இங்கிருக்கப் போறாராம்' என்றாள்.

பைரவிக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை.

'ஓ!' என்றாள்.

அரைமணி நேரம் போயிருக்கும்.

மறுபடி மீனா அவளை அழைத்தாள்.

'பைரவி, புதுசா அப்பாயின்ட் ஆயிருக்கிற ஸ்டாஃபையெல்லாம் எம்.டி.. பாக்கணுமாம் உன்னைக் கூப்பிடறார்.' என்றாள்.

லேசான நடுக்கத்துடன் தள்ளு கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனாள்.

'மே ஐ கம் இன் சார்!' என்றபடி.

'எஸ்.. கமின்' என்றபடி திரும்பியவன் 'விஜய்.'

திகைத்துப் போய் நின்றாள். பிறகு மெதுவாக சுதாரித்துக் கொண்டு மேஜையை நோக்கிப் போனாள்..

அவன் எதையும் காட்டிக் கொள்ளவில்லை.

'ஓ! நீங்கதானா அந்தப் புதுசா அப்பாயின்ட் ஆகியிருக்கிற அக்கவுண்டன்ட்' என்றான்.

'குட் மார்னிங் சார்! ஆமாங்க.. சார்' என்று தடுமாறினாள்.

'ஓ.கே.! ஓ.கே. ரிலாக்ஸ்' என்றான்.

'பரவால்லை. மீனா மேடம் உங்களைப் பத்தி நல்லாத்தான் சொல்றாங்க. கீப் இட் அப்' என்றான்.

அலுவலகம் தொடர்பான தனது எதிர்பார்ப்புகளைச் சொன்னான். அவள் பொறுமையாகக் கேட்டுக் கொண்டாள்.

'போகலாம்' என்பது போல் தலையாட்ட அவள் 'விட்டால் போதும்' என்று நகர்ந்தாள்.

அவள் தள்ளு கதவுக்கருகில் நெருங்குகிற நேரம், 'மிஸ் பைரவி' என்று அழைத்தான்.

திரும்பவும் ஓடினாள்.

அவன் முகத்தை சீரியஸாக வைத்துக் கொண்டு 'அப்புறம் அந்த பச்சப்பயிறு தோசை. பூண்டுச் சட்னி, புளிக்குழம்பு எல்லாம் அடிக்கடி பண்றீங்களா?' என்றான் மெல்லிய குரலில்.

அவள் மறுபடியும் விழித்தாள். பதில் சொல்லாமல் நின்றாள்.

'ஹலோ.. பதில் சொல்லுங்க! என்னை அடையாளம் தெரியலியா? ஐம் விஜயானந்த்' என்றான்.

அவள் மறுபடியும் பேசாமல் நின்றாள்.

அவன் கேள்விக் குறியாகப் பார்க்க அவள் சீரியஸான குரலில்.

'இல்ல.. சார்.. இன்னும் அதெல்லாம்.. சமைக்க ஆரம்பிக்கலை. அதுக்கான பாத்திர பண்டங்கள்னாம் இனிமேல்தான் ஏற்பாடு பண்ணனும்' என்றாள்.

'ஓ!' என்று கைகளால் மேஜைமேல் தாளமிட்டான்.

'இது வழக்கமான பைரவி பதிலா இல்லையே?' என்றான் அவன் சிரிக்காமல்.

'சார்! எம்.டி. கிட்டயெல்லாம் ஏறுக்கு மாறா பதில் சொல்லக் கூடாது' என்றாள்.

அவன் கண்கள் மின்னின.

'அப்ப.. அந்த சக பயணிகிட்டே வேற மாதிரி பதில் சொல்வீங்களோ?' என்றான்.

மறுபடியும் மௌனமாக நின்றாள்.



'எங்கே.. அந்த பதிலைச் சொல்லுங்க பார்ப்போம்' என்றான்.

சொன்னாள்.

அவன் வெடிச் சிரிப்புச் சிரிக்க அவள் பதவிசாக அறைக் கதவைத் திறந்து கொண்டு வந்து விட்டாள்.

அந்த சிரிப்புச் சத்தத்தைக் கேட்டு ரவிக்குமாரும், மீனாவும் எட்டிப் பார்த்ததை அவள் கவனிக்கவில்லை. ஆனால், அன்று அபார்ட்மெண்டுக்குப் போனதற்குப் பிறகு அதிகப்பிரசங்கித்தனமாக பதில் சொல்லி விட்டோமோ?' என்று பயம் பிடித்துக் கொண்டது.

* * *

**அ**ன்றிரவு!

பிரட்டில் ஜாமைத் தடவிக் கொண்டு பைரவி அமர்ந் திருக்கையில் காலிங் பெல் ஒலிக்கும் சத்தம் கேட்டது.

திறந்தாள்!

எம்.டி.யின் பி.ஏ. ரவிக்குமார் நின்று கொண்டிருந்தான்.

'சார்! வாங்க..!' என்று அவசரமாக வரவேற்றாள்.

உள்ளே வந்தான்.

'மேடம்! உங்களுக்கு மட்டும்னு சில ஸ்பெஷல் சலுகைகளை எம்.டி. குடுத்திருக்காரு. அபார்ட்மெண்ட் ஃப்ரீயாம். ஆனா, மத்தவங்களுக்கு அது தெரிய வேண்டாமாம். அப்புறம் இதைக் குடுத்துட்டு வரச் சொன்னாரு' என்று ஒரு செக்கை நீட்டினான். பத்தாயிரம் ரூபாய்க்கு ஒரு செக்.

'மேடம். காஸ் ஸ்டவ் வாங்கிக்கறதாம். கனெக்ஷன் நாங்களே ஏற்பாடு பண்ணிடறோம். வேறொரு அபார்ட் மெண்ட்ல இருந்து சின்னதா ஒரு டைனிங் டேபிள் வருது. யூஸ் பண்ணிக்கலாம். இந்த மாத மளிகை வாங்கிக்குங்க.'

'சார்!' என்று தயங்கினாள்.

'மேடம்! பசிச்சுக் கிடந்த நேரத்துல வயிறாரவும், டேஸ்டாவும் சமைச்சு அவரை ரொம்பக் கவனிச்சுட்டீங் களாம். அதுக்கு நன்றியாம்' என்றான்.

அவள் நெகிழ்ச்சியுடன் நின்றாள்.

'இன்னும் ஏதாவது வேணும்னாலும் இன்னொரு அட்வான்ஸ் பத்தாயிரம் ரூபாய் மாசம் ஐந்நூறு ரூபாயா பிடிச்சுக்கற மாதிரி ஏற்பாடு பண்றேன்' என்றான்.

அவள் தயங்கினாள்.

'இந்தப் பணத்தையே அட்வான்ஸாக வச்சுக்கட்டுமா?' என்றாள்.

அவன் புன்னகைத்தான்.

'எம்.டி. சொன்ன மாதிரித்தான் பேசறீங்க!' என்றாள்.

அவள் முகம் சிவந்தது.

ரவிக்குமார் ரசனையுடன் பார்த்தான். பிறகு

'மேடம்! எம்.டி. அவ்வளவு சீக்கிரம் முடிவுகளை மாத்திக்கறது இல்லை' என்றான்.

அவன் சுற்றும் முற்றும் பார்த்தான்.

'சார் கூல் டிரிங்ஸ் ஏதாவது வாங்கிட்டு வரட்டுமா?' என்றாள்.

'நோ.. தாங்க்ஸ்..' என்றான்.

விடைபெற்றுக் கொண்டான்.

★ ★ ★

அன்று மாலை!

தியாகுவுக்கு போன் செய்தாள்.

தியாகு முழுவதும் கேட்டுக் கொண்டு தோரணையாகப் பதில் சொன்னான்.



'அக்கா, பணக்காரங்க.. அதுவும் உங்க எம்.டி. மாதிரி பெரிய ஆளுங்ககிட்டேயெல்லாம் கொஞ்சம் விலகி இருக்கிறது நல்லது' என்றான்.

பைரவி மௌனமானாள்.

'அக்கா! அவர்களுக்குப் பணம்தான் முக்கியம். நமக்கு மானாபிமானம்தான் முக்கியம்' என்றான்.

பைரவி ஒன்றும் பேசவில்லை.

'அக்கா! நான் சொல்றதைத் தப்பா புரிஞ்சுக்காதே!' என்றான்.

'இல்லல்ல!' என்றாள். சற்று நேரம் அம்மாவைப் பற்றித் தோழிகளைப் பற்றியெல்லாம் விசாரித்தாள். மீண்டும் 'வைக்கட்டுமா?' என்றபோது தியாகு நெகிழ்ந்த குரலில் அழைத்தான்.

'அக்கா! நான் சொன்னதைக் கரெக்டா புரிஞ்சுகிட்டதானே. கோபம் ஒண்ணுமில்லயே' என்றான்.

'இல்லடா.. தம்பி! இன்ஃபாக்ட் எனக்கு ரொம்பப் பெருமையா இருக்கு' என்றாள்.

'தாங்க்ஸ்க்கா' என்றான் உற்சாகமாக.

மறுநாள் காலை.

எம்.டி.யைப் பார்க்க வேண்டும் என்று அவளே அனுமதி கேட்டாள்.

அனுமதித்தார்கள்.

அவன் யாரிடமோ போனில் பேசிக் கொண்டிருந்தவன் வைத்துவிட்டு அவளைப் பார்த்தான்.

'சார்! அந்தப் பத்தாயிரம் அதை அட்வான்ஸாவே ட்ரீட் பண்ணக் கூடாதா?' என்றாள்.

'ஏன்!' என்றான் கண்கள் சுருங்க. மறுபடியும் தயக்கத் துடன்,

'சார்! தப்பா நினைக்காதீங்க.. தியாகு அதை லைக் பண்ணலே பயப்படறான்' என்றாள்.

அவன் கைகள் நேற்றுப் போலவே இன்றும் மேஜை மேல் தாளமிட்டன. பிறகு ரவிக்குமாரை அழைத்தான்.

'ரவி! அந்த டென் தவுஸன்டை அட்வான்ஸா என்னோட பர்ஸனல் அக்கவுன்ட்ல எழுதிரு. தனியா அதை அவங்ககிட்டே மாசா மாசம் வசூல் செஞ்சுடு' என்றான்.

ரவிக்குமார் 'சரிங்க சார்!' என்று போய்விட்டான்.

விஜயின் முகம் இறுகினாற்போல் ஆகிவிட்டது. அதைப் பார்த்து அவள் தவித்துப் போனாள்.

'சார்! என்னைத் தப்பா நினைக்காதீங்க. அபார்ட்மென்ட் ஃப்ரியாக் குடுத்திருக்கீங்களே. அதுவே போதும்' என்றாள்.

அவன் முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டாமல்,

'வேற ஏதாவது விஷயம் இருக்கா!' என்றான்.

அவள் முகம் வாடிவிட்டது.

'இல்லைங்க சார்!' என்று நகர்ந்தாள். அவனும் கண்டு கொள்ளாமல் போனில் யாரிடமோ பேச ஆரம்பித்தான்.

அவன் பார்வை தன் முதுகைத் துளைப்பது போல் உணர்ந்த பைரவி. தான் எம்.டி.யை புண்படுத்தி விட்டோமோ என்று மனதுக்குள் தவித்துப் போனாள்.

அதற்குப் பிறகு கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு அவளை நேரடியாக சந்திக்கவே அவளுக்கு அனுமதி கிடைக்கவில்லை.

என்ன காரணத்தைச் சொல்லிக் கொண்டு அவனைச் சந்திப்பது என்றும் புரியவில்லை.

'வேண்டாம். தியாகு சொன்ன மாதிரி விலகி இருப்பதுதான் நல்லது' என்று தெளிவாகிக் கொண்டாள்.





# 9

சில நாட்களில் வேறு வழியாக இல்லாமல் பைரவி முதலானோர் வேலை செய்கிற ஹாலின் வழியாகவும் இப்போதெல்லாம் போக ஆரம்பித்தான்.

எல்லாரும் வணக்கம் தெரிவிப்பது போல் அவளும் தெரிவிப்பாள். பிரிஸ்க்கான ஒரு மறு தலையசைப்பு மட்டும் வரும். வேறெந்தப் பிரதிபலிப்பும் இருக்காது.

பைரவிக்குத் தனது இடம் என்ன என்று புரிந்து போன ஒரு தொழிலதிபர் ஏதோ சூழ்நிலையின் காரணமாகத் தன்னோடு இரண்டு நாள் செலவழிக்க நேர்ந்தது. அவ்வளவு இலகுவாகப் பழகியதே பெரிய விஷயம். அதிலும் அவர் செய்த உதவியை வேறு தான் ஏற்றுக் கொள்ளவில்லை.

'ஆணவம் நிறைந்த பெண்' என்று நினைத்துக் கொண்டாரோ என்னவோ என்று அச்சமாகவும் இருந்தது. ஏதோ உருப்படியாக நல்ல வேலை கிடைத்திருக்கிறது. அதைக் காப்பாற்றிக் கொள்வதுதான் மரியாதை' என்று எண்ணிக் கொண்டாள். திட்டவட்டமாக முடிவு செய்து கொண்டாள். அதன் பிறகு மனம் லேசாகி விட்டது.

கலாவின் நட்பு வேறு உதவியாக இருந்தது. இரண்டு பெண்களும் நேரம் கிடைக்கும் போது பல்லாங்குழி, கார்ட்ஸ் என்று சற்று நேரம் விளையாடிக் கொண்டார்கள். நேரம் கிடைத்தால் கோவிலுக்குப் போவார்கள்.

வாழ்க்கை லகுவாகத்தான் போய்க் கொண்டிருந்தது. தினமும் ஒரு மணி நேரம் நல்ல புத்தகங்கள் படிப்பாள். அஞ்சல் வழிக் கல்வியில் படிப்பதற்கான பாடங்கள் ஒரு மணி நேரம் படிப்பாள்.

அன்றைக்கு, 'கலா இன்னைக்கு ஏதாவது உனக்கு வெளியே போற வேலையிருக்கா!' என்றாள் பைரவி.

'பைரவி, கொஞ்சம் மளிகை வாங்கணும். மயிலாப்பூர் போலாமான்னு பாக்கறேன்' என்றாள் கலா.

'நானும் வரட்டுமா?' என்றாள் பைரவி.

'வா.. ஆனா நீ கோயிலுக்குப் போகணும்பே. எனக்கு ஷாப்பிங்குக்கே டைம் சரியாயிருக்கும்' என்றாள் கலா.

'அப்ப ஒண்ணு செய்வோம். நீ மளிகை வாங்கற கடைக்குப் பக்கத்திலேதானே இராமகிருஷ்ணர் கோயில். நான் கொஞ்ச நேரம் அங்கே இருக்கேன். நீ வந்ததும் ரெண்டு பேரும் திரும்ப ஆட்டோவிலே வந்தர்லாமா?' என்றாள்.

கலா ஒத்துக் கொண்டாள். மீனா மேடம் ஒரு நாள்.

'பைரவி! நீ படிக்கற புத்தகங்களைப் பாத்தா உனக்குள்ள ஒரு தேடல் இருக்குன்னு எனக்குப் படுது. நேரம் கிடைக்கும்போது இராமகிருஷ்ணர் மடத்துக்குப் போ. அதுவும் ஈவ்னிங் அவர்ஸ்ல போனா பஜன் இருக்கும். நல்ல மங்கலான வெளிச்சத்துல தியானம் கூடி வர்றதுங்கறது ஒரு அற்புதமான அனுபவம்' என்றார்.

போக வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

திருவான்மியூர் போய் பஸ் மாறிக்கலாமா? அடையாறு போலாமா?' என்று ஆலோசித்தார்கள்.

'திருவான்மியூர் போயிரலாம்' என்று முடிவெடுத்தார்கள்.

உட்கார இடம் கிடைத்தது. அரட்டை அடித்துக் கொண்டே போனார்கள்.

'ஏன்.. கலா..! மீனா மேடம் ரொம்ப ஷார்ப் இல்லே..' என்றாள்.

'ஆமா.. இல்லேன்னா நம்ம முதலாளி விஜயானந்த் அப்படி அப்ரிஷியேட் பண்ணுவாரா?' என்றாள் கலா.



'மீனா மேடத்துக்கு எவ்வளவு சம்பளம் தெரியுமா? இருபதாயிரம்' என்றாள் பைரவி.

'ஆமா..! எனக்குத் தோணும். நீ உன்னோட எம்.காமை முடிச்சுட்டேன்னா மீனா மேடம் ரிட்டையராகும்போது நீ அந்த இடத்துக்குப் போயிரலாம் தெரியுமா?' என்றாள்.

பைரவி ஒன்றும் சொல்லவில்லை.

'நிஜமாத்தான் பைரவி. உன்னைப் பத்தியும் எம்.டி.க்கு ரொம்ப நல்ல ஒபீனியன் இருக்கு. அன்னைக்கு அந்த அரட்டை அலமேலு வாணி இருக்கில்லே அதுக்கு நல்லா மண்டகப்படி. பாருங்க மேடம்! நம்ம ஆபீசுல புதுசா ஒருத்தர் பைரவின்னு வந்திருக்காங்களே. அவங்களைப் பாத்து வேலை கத்துக்கங்க. சின்னப் பொண்ணுதானே ஆனா, யாருகிட்டயும் ஹஸ்டாக், காசிப்னு வச்சுக்கறதில்லே. கவனிங்க அப்படீன்னார்' என்றாள் கலா.

'பரவாயில்லை. எம்.டி.க்கு நம்மளைப் பத்திக் கோபம் ஒண்ணும் இல்லை. போலருக்கு' என்று நினைத்துக் கொண்டாள்.

'மீனா மேடம் எப்ப ரிடையராவாங்களாம்?' என்றாள்.

'அவங்க அன்னைக்கு பி.ஏ.ரவிக்குமார் கிட்டே சொல்லிகிட்டிருந்தாங்க. அதிகபட்சம் இன்னும் ஒரு நாலைஞ்சு வருஷம் வொர்க் பண்ணுவேன்னு.'

'ஓ!' என்றாள்.

அன்றைக்கு மனதில் தோன்றியது. கலா கூறியது சரிதான். தான் ஒரு வேளை முயன்றால் மீனா மேடத்தின் இடத்தைப் பிடிக்க முடியும் என்று.

இருபதாயிரம் வேண்டாம். பதினைந்தாயிரம் கிடைத்தால் கூட போதும். தம்பியை நன்றாகக் கொண்டு வந்து விடலாம். சித்தியை சந்தோஷமாக வைத்துக் கொள்ளலாம் என்று கனவு காண ஆரம்பித்தாள்.

அவர்கள் இராமகிருஷ்ண மடத்தின் வாயிலுக்கு வந்து நின்றார்கள்.

'பைரவி.. இந்தக் கட்டிடத்தை ஒரு சுத்து சுத்திப் பாரு. எல்லா நாட்டுக் கட்டடக் கலையோட அம்சமும் இதுல இருக்கு பாரு. ஒன் அவர்ல வந்தர்றேன் இங்கயே வெயிட் செய். எங்கயும் போயிடாதே!' என்றாள் திரும்பத் திரும்ப.

'அடடா! இங்கேயே வெயிட் பண்றேன்ப்பா. ஒன்னும் இவாப்பரேட் ஆயிப் போயிட மாட்டேன். மிஸ் கலா' என்று சிரித்து விட்டுப் போனாள்.

குமிழ் விளக்குகளின் ஒளியில் அந்தக் கட்டிடம் கொள்ளை அழகாக இருந்தது. அமைதியாகச் சுற்றி வந்தாள். மனதுக்கு நிறைவாக இருந்தது. தனியாக வந்திருக்கிறோம் என்ற உணர்வே இல்லை.

'அப்பா மட்டும் இருந்திருந்தால் இதையெல்லாம் எப்படி ரசித்திருப்பார்' என்று நினைத்துக் கொண்டாள்.

அழகுணர்ச்சியில் அவள் அப்பாவைக் கொண்டிருந் தாள்.

'ஆமா, மரத்தைப் பாரு அழகு. மட்டையைப் பாரு எவ்வளவு அழகு. அந்த ராகம் கேளு.. இந்த ராகம் பாருன்னு உங்கப்பன் தாளம் போட்டுப் போட்டு என்ன ஆச்சு? நம்மளைத் தாளம் போட விட்டுப் போட்டுப் போயிட்டாரு' என்று சித்தி தாக்கும்போதெல்லாம் மௌனமாக நகர்ந்து விடுவாள்.

'அக்கா.. அது கிடக்குது!' என்று தியாகுதான் வந்து சமாதானம் செய்வான். தியாகு எவ்வளவு அருமையான சகோதரன் என்றெண்ணிக் கொண்டே தியானத்தில் அமர்ந்தாள்.

மனம் உள்ளே உள்ளே போகப் போக நினைவலைகள் எல்லாம் மோதிக் கொண்டு வெளியே வந்தன.



தியானத்துக்கு என்று அமர்ந்து பல நாட்களாகி விட்டன. அதனால்தான் இவ்வளவு எண்ண அலைகள் என்று எண்ணங்களை அதன் போக்கில் போக விட்டாள்.

சற்று நேரத்தில் மனம் அமைதியடைந்தன. மூச்சு சீராக வந்தது. லயித்துப் போய் அந்த மெல்லிய பஜன் இசையில் முழுகிப் போய் அமர்ந்திருந்தாள்.

அரை மணி நேரம் ஓடியதே தெரியவில்லை. பஜனை முடிந்து யாரோ சுவாமிஜி ஆன்மிகச் சொற்பொழிவு ஆற்றத் துவங்கியவுடனே அமைதியாக எழுந்தாள்.

மெல்லக் கண்களை ஒரு முறை சுழலவிட்டாள். ஆச்சரியமானாள்.

எம்.டி. விஜயானந்த் பத்மாசனத்தில் அமர்ந்து ஆழ்ந்த தியானத்தில் இருந்தான். அவனுக்கும் சற்றுப் பின்னால் கண்களைக் குறுகுறுவெனச் சுழல விட்டுக் கொண்டு தியானமா வீசை என்ன விலை என்று கேட்பது போல் ரவிக்குமார் அமர்ந்திருந்தான்.

பைரவி சிரிப்பை அடக்கிக் கொண்டு வெளியே வந்தாள்.

'எம்.டி. தியானம் செய்கிறாரா?' என்று அவளுக்கு ஆச்சரியம்.

'ஆமாம்... அந்த மாதிரிப் பொறுப்புகளில் இருக்கிற வர்கள் எல்லாம் இப்போதெல்லாம் தியானம், யோகா என்று ஆர்வம் காட்டுகிறார்கள்' என்று அறிந்திருந்தாள்.

மீண்டும் வெளியே வந்து கோயிலை ஒரு முறை சுற்றி வந்தாள். பிரசாதம் கொடுத்தார்கள். சரியாக அந்த நேரத்துக்குக் கலா வந்தாள்.

கலா பிரசாதம் வாங்கிக் கொள்ள இரண்டு பேரும் புல்வெளியில் அமர்ந்து உண்டார்கள். அந்தப்புறம் இருந்த லைப்ரரி ஹாலுக்கு ஒரு முறை போய் வந்தார்கள்.

மங்கிய அந்த ஒளியில் பின்னல் அசைய எளிமையான தோற்றத்தில் தான் நடப்பதை அக்கம் பக்கம் பல கண்கள் ஆவலோடு கவனிக்கின்றன என்று அவள் அறியவில்லை.

'எப்படி போகப் போறோம்.. கலா?' என்றாள் பைரவி.

'நம்ம மளிகைக் கடைக்காரரே ஆட்டோவிலே ஒரு ஓரமா நம்மளைத் திணிச்சுகிட்டு வீட்டாண்டை கடாசிடு றேன்னு சொல்லியிருக்காரு' என்று சிரித்தாள் கலா.

பைரவியும் சிரித்தாள். அவர்கள் பேசிக் கொண்டு வரும்போது குமிழ் விளக்கின் அருகில் வருகிற நேரம் அவள் சிரிப்பதைப் பார்க்க ஒரு தேவதை போல் இருந்தது என்பதை அவள் அறியவில்லை. ஆனால், விஜயானந்தும் அவனுக்கும் சற்றுப் பின்னே நின்றபடி ரவிக்குமாரும் அதை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கலாதான் விஜயானந்த் நிற்பதை முதலில் கவனித்தாள்.

'பைரவி.. நம்ப எம்.டி. நிற்கறார்' என்று பரபரப் பானாள். அதற்குள்ளாக காருக்கருகில் அவன் நிற்கிற இடத்துக்கு வந்தார்கள்.

'குட் ஈவ்னிங் சார்!' என்றாள் பைரவி.

'குட் ஈவ்னிங்!' என்று புன்னகைத்தான்.

'என்ன தியானமெல்லாம் பண்றாப்லே இருக்கு' என்றான்.

'சும்மாதான்!' என்று கலா அசடு வழிய 'சரி, போயிட்டு வாங்க' என்பதுபோல் தலையசைத்தான்.

அவர்கள் வேகமாக நடக்க 'பைரவி ஒரு நிமிஷம்!' என்று அழைத்தான்.

பைரவி மட்டும் திரும்பிப் போனாள்.

கலா மேலும் நடந்து சற்றுத் தள்ளி நிற்கிற ரவிக் குமாரிடம் போய் நின்று கொண்டாள்.



'என்ன பைரவி! எப்படியிருக்கீங்க?' என்றான் விஜயானந்த் லேசான புன்னகையுடன்.

'சார், ரொம்ப நல்லாருக்கேன். நிம்மதியா இருக்கேன். எம்.காம். எழுத ரொம்ப உற்சாகமாகத் தயாராயிட்டிருக் கேன்' என்றாள் நிஜ உற்சாகத்துடன்.

'குட்!' என்றான். 'பைரவி, நானும் அந்தப் பூங்குடி கிராமத்துக்குப் போயி மாரப்பனையும் அம்மாச்சியையும் பாத்துட்டு வரணும்னு நினைக்கிறேன். டைமே கிடைக்க மாட்டேங்குது ஒரு தடவை போவோமா? வர்றீங்களா?'

'கண்டிப்பா.. வர்றேன் சார்!' என்றாள்.

'அப்புறம்... உங்க அபிமானத் தம்பி தியாகு எப்படி இருக்காரு,' என்றான்.

'நல்லா இருக்கான்... சார்!' என்றாள்.

'கோயமுத்தூர் போனீங்களா?'

'இல்லைங்க.. சார்! நான் சித்திகிட்டயும், தம்பிகிட்டயும் சொல்லிட்டேன். மாசா மாசம் வர முடியாது. ரெண்டு மூணு மாசத்துக்கொரு தரம் வர்றேன்னு.'

'சிக்கன நடவடிக்கையோ?'

'ஆமா.. சார்! தியாகு இப்ப டென்த்ல இருக்கான். நல்ல மார்க் எடுக்கணும்னு முயற்சி செஞ்சுகிட்டிருக்கான். இன்னும் ரெண்டு வருஷத்துல காலேஜ் போகணும். ஒருவேளை புரொஃபஷனல் கோர்ஸ் போறதுன்னா.. பணம் வேணுமில்ல.. அதுக்காகத்தான்' என்றாள் இயல்பாய்ப் புன்னகைத்தாள்.

அவனும் வாஞ்சையாகப் புன்னகைத்தான்.

'ஆனா.. உங்களாலே உங்க அன்புத் தம்பியைப் பாக்காம இருக்க முடியாதே?' என்றான்.

அவள் முகம் வாடியது. 'ஆமா, கஷ்டமாத்தான் இருக்கு. ஆனா, என்ன செய்யறது?' என்றாள்.

'பைரவி.. உங்களைப் பத்தி யோசிக்கறதில்லயா?'

'எனக்கென்ன சார் கவலை நல்ல இடத்துல வேலை. உங்களை மாதிரி நல்லவங்களோட சப்போர்ட். அதுக்கு மேலே என்ன வேணும்?'

'பைரவி.. இது போதும்னு நினைக்க ஆரம்பிச்சிட்டா.. ஸ்டாக்னேட் ஆயிடுவோம். நியாயமான முன்னேற்றத்துல எப்பவும் தப்பில்லே' என்றான்.

'ஞாபகம் வச்சுக்கறேன்.. சார்!' என்றாள் புன்னகையுடன்.

பிறகு அவளே தொடர்ந்து,

'சார்! உங்களுக்கு தியானத்துல இவ்வளவு இன்ட்ரஸ்ட் இருக்குன்னு தெரியவே இல்லை.. சார்' என்றாள்.

'அதுசரி! என்னைப் பத்தி உங்களுக்கு முழுசா என்ன தெரியும்?' என்றான். கண்களில் குறும்பு மின்னியது.

அவள் திகைத்தாள். ஆழ்ந்த சிந்தனையுடன் 'ஆமா.. சார்! ஒண்ணு ரெண்டு சந்திப்புல யாரையும் முழுசாத் தெரிஞ்சுக்க முடியாதில்லே' என்றாள்.

அவன் பகபகவென்று சிரித்தான். 'ஹலோ! நான் சும்மா ஜோக்கடிச்சேன். ரொம்ப சீரியஸா எடுத்துக்காதீங்க..' என்றான். பிறகு தொடர்ந்து,

'அப்புறம், சமைக்கவெல்லாம் ஆரம்பிச்சாச்சா?'

'ஆமா.. சார்! ஒருத்தித்தானே.. சிம்பிளா.. சமைச்சுப்பேன்' என்றாள்.

'பைரவி! சாப்பாட்டுல மட்டும் சிக்கனம் பாக்கக் கூடாது. ஹெல்த் போயிடும்' என்றான்.

'இல்ல.. சார்! அதுலயெல்லாம் கணக்குப் பாக்க மாட்டேன்' என்றாள்.

அவன் மெல்ல இழுத்தான். 'சார்! என்னைப் பத்தி என்ன தெரியும்னு கேட்டீங்களே? உங்களைப் பத்தி ஒண்ணு தெரியும்.'

'என்ன அது?' என்றான்.

'அன்புக்குக் கட்டுப்படுவீங்கன்னு தெரியும். அம்மாச்சி தலை குளிக்க வக்கறேன்னு படுத்தின பாட்டுக்குத் தலையைக் குடுத்துட்டு உட்கார்ந்திருந்தீங்களே அதுல தெரியும்' என்றாள்.



இருவரும் சிரித்தார்கள்.

'சரி..! பைரவி மறுபடியும் சந்திக்கறேன்' என்றான்.

அதே நேரம் கலா ரவிக்குமாரிடம் கேட்டுக் கொண்டிருந்தாள்.

'ரவி சார்! பைரவிகிட்டே எம்.டி. இவ்வளவு நின்னு பேசறாரு.'

'அது.. பைரவி அவரோட ஃபேமிலி பிரண்டு. அவங் கப்பா இவங்கப்பாவுக்கு தெரிஞ்சவங்க. அதனால தான் வேலையே போட்டுக் குடுத்திருக்காரு' என்று ஒரு லேசாக போடு போட்டான் ரவிக்குமார்.

திரும்பக் காரில் வரும்போது காரை ரவிக்குமார் டிரைவ் செய்தவன் திடீரென்று சிரித்தான்.

'என்ன ரவி!' என்றான்.

'சார்! பெண்களின் மறுபெயர் கியூரியாசிட்டியோ? கலாவுக்கு ஒரே சந்தேகம். என்ன எம்.டி. பைரவிகிட்டே இவ்வளவு நேரம் நின்னு பேசறாருன்னு.'

'ம்... நீ என்ன சொன்னே?'

'நான் என்ன சொன்னேன் தெரியுமா? பைரவி அவங்க ஃபேமிலி ஃபிரண்டு. இவங்கப்பாவும், அவங்கப்பாவும் பழக்கமானவங்க. அதனாலதான் வேலையே குடுத்திருக் காரு. கிட்டத்தட்டக் கார்டியன் மாதிரி அப்படீன்னேன்.'

விஜயானந்த் சிரித்தான்.

'ஹேய்! தட்ஸ் பிரில்லியன்ட். இது நல்ல அலிபியா யிருக்கே!' என்றான்.

'அலிபியா?' என்று ரவிக்குமார் விழிக்க விஜயானந்த் சிரித்தான்.

'ஆமாப்பா! பைரவி டேஸ்ட்டா சமைப்பாங்க. அப்பப்ப விசிட் பண்ணிறலாம் இல்லே' என்றான்.

'முதலாளி, தொழிலாளி என்ற போதும் இருவரும் இளைஞர்கள் என்பதால் பெற்றோர்களுக்குத் தெரியாமல் செய்கிற சில சுவாரசியமான சின்னத் தவறுகளுக்கு ரவிக்குமாரும் ஒத்துழைப்பான். அதனால் அவ்வப்போது இருவரும் சிரித்துக் கொள்வதும் உண்டு. அது மாதிரி இப்போதும் சிரித்தார்கள்.

அதே நேரம்!

கலா பைரவியிடம் கேட்டுக் கொண்டிருந்தாள்.

'ஹேய்! பைரவி எம்.டி. உங்க ஃபேமலி ஃபிரண்டாம். நீ சொல்லவே இல்லை' என்று கேட்டுக் கொண்டிருந்தாள்.

பைரவி உஷாராகி 'யார் சொன்னா?' என்றாள்.

'ரவி சார்தான் சொன்னாரு.'

'ஓ!' என்றாள். ஒருவேளை அப்படிச் சொல்லச் சொல்லி எம்.டி.தான் சொல்லியிருப்பார் போலும் என்று எண்ணிக் கொண்டாள்.

'ஆமா.. கலா! ஆனா, அவங்க லெவல் வேற. சும்மா எல்லாத்துகிட்டயும் அப்படிச் சொல்லி அவங்களுக்கு தர்ம சங்கடம் பண்ணக் கூடாதில்லே' என்றாள்.

'ஆமா.. பைரவி அதுவும் கரெக்டுதான்' என்றாள் கலா.

அன்றைக்கு வீட்டுக்குப் போனவுடன் பைரவிக்கு அந்தப் பூங்குடி கிராமத்தில் தங்கியிருந்த நினைவுகளெல்லாம் திரண்டு வந்தன. அதிலும் விஜயைத் தலைகுளிக்கச் செய்கிறேனென்று அம்மாச்சி படுத்திய பாட்டை நினைத்து இப்போதும் அவளுக்கு சிரிப்புத்தான். சிரித்துக் கொண்டாள்.

அதே நேரத்தில் விஜயானந்தும் அதையே நினைத்துக் கொண்டான்.

'என்ன தம்பி.. சிரிப்பு?' என்றார் சௌந்தரம்.

'இல்லம்மா.. தலை குளிக்க வக்கறேன்னு அம்மாச்சி படுத்தின பாட்டை நினைத்துச் சிரித்தேன்' என்றான்.



சௌந்தரம் 'அப்பா.. கிராமத்துல பெண்கள்லாம். அன்பு வடிவமா இருப்பாங்க!' என்றார்.

'அங்க மட்டுமல்ல எல்லா இடத்துலயும் பெண்கள் அன்பு வடிவம்தான். எனக்காக மங்கு மங்குன்னு ஆட்டாங்கல்ல ஆட்டி தோசை சுட்டுக் குடுக்கணும்னு அந்த பைரவிக்கு என்ன அவசியம்' என்றான்.

'அது உன் ஸ்டாஃபாச்சே?' என்றார் அம்மா.

'ஆனால், அவள் அப்போது தன் ஸ்டாஃப் என்பது தனக்கு மட்டும்தான் தெரியும். அவளுக்குத் தெரியாது' என்று அவன் அம்மாவிடம் சொல்லவில்லை.

பொதுவாக அவன் அம்மாவிடம் எதையும் மறைப்ப தில்லை. ஆனால், இதை ஏன் மறைத்தோம் என்பது இப்போது வரை அவனுக்குப் புதிர்தான்.



## 10

இன்றைக்கு மனத்தில் மகிழ்ச்சியாக உணர்ந்தாள் பைரவி. ஒரு வேளை எம்.டி.க்குக் கோபமோ என்ற பயம் உள்ளூர இருந்தது. மாறாக ஃபேமிலி ஃபிரண்ட் என்று சொல்லியிருக்கிறார் என்று தெரிய மனம் இலேசாக உணர்ந்தது.

அன்றைக்கு ஒருநாள் தான் அதிகப்பிரசங்கித் தனமா பதில் சொல்லிவிட்டோமோ என்ற எண்ணம் வேறு.

அப்புறம், பச்சைப் பயிறு தோசையெல்லாம் சுடற தில்லையா' என்று விஜயானந்த் கேட்டபோது,

'அதெல்லாம் கார்ல பெட்ரோல் டிரையாகிப்போய், எங்காவது எக்குத் தப்பாக வழிமாறிப் போய் மலையடி

வாரத்தில் சிக்கிக்கிற ஹீரோக்களுக்கு மட்டும்தான் சுட்டுத் தர்றது' என்று பதில் சொன்னோமே..' என்ற பயம் இருந்தது.

அந்த மாதிரிக் கேலிகளை அவன் இயல்பாக எடுத்துக் கொள்வது அவளுக்கு மகிழ்ச்சியாய் இருந்தது. எங்கேயோ படித்திருந்தாள். தன்னைத்தானே கேலி பேசிக் கொண்டு சிரிக்கிறவர்கள் ஆரோக்கியமான மனப்பான்மை உடைய வர்களாக இருப்பார்கள். உண்மைதான் என்று எண்ணிக் கொண்டாள்.

பூங்குடி கிராமத்தில் இரண்டாம் நாள் காலையில் அம்மாச்சி.

'தம்பி.. உட்காரு.. நான் எண்ணெய் தேச்சுக் குளிக்க வக்கிறேன்' என்றவுடனே அவன் திகைத்தான்.

'என்ன தம்பி.. முழிக்கறே. நம்ம ஊர்ப் பயலுகளுக் கெல்லாம்.. நான்தான் குளிக்க வக்கிறது' என்றார்.

அவன் மறுக்காமல் தயக்கத்துடன் அமர்ந்தான்.

இடுப்புக்கு ஒரு துண்டைக் கொடுத்து ஒரு முக்காலியில் அமர வைத்தவுடன் அவன் சற்றே சங்கடத்துடன் பைரவியைப் பார்த்தான்.

பைரவி சிரிப்பை அடக்கிக் கொண்டு வெளியே வந்தாள்.

'அம்மாச்சி.. பைரவி சிரிக்கறாப்பல' என்று புகார் சொன்னான்.

'அது கிடக்குது. அது சரி.. நீயுந்தான் எதுக்கு இப்படி வெக்கப்படறே' என்று அவனையும் வாரினார்.

கொஞ்சம் மிளகைப் போட்டு அது வெடிக்கும்வரை நல்லெண்ணெயைக் காய்ச்சி ஆற வைத்துத் தயாராய் வைத்திருந்தார்.

விஜயானந்தின் தலையில் நிறைய ஊற்றித் தேய்த்து ஊற வைத்ததோடு கை, கால் எல்லாமும் தேய்த்து விட்டார்.



'இதுக்குப் பேரு.. உருவி விடுறது' என்று நீவி விடவும் அவனுக்கும் சுகமாக இருந்தது.

'டவுனுப் பக்கம் இதுக்கெல்லாம் எங்க உங்களுக்கு நேரம் இருக்கும்' என்று சிரித்தார்.

அரப்பைக் குழைத்துத் தலைக்குத் தேய்த்து விட்டார். பாசிப்பயறை ஊற வைத்து அரைத்து உடம்புக்குத் தேய்த்து விட்டார்.

அந்தக் கிராமத்து உள்ளத்தின் அன்புக்கு அவன் பணிந்து கொடுத்தான்.

சுகமாகக் குளித்து விட்டுத் தலையைத் துவட்டிக் கொண்டு வெளியே வந்தான்.

பைரவி அவன் துணிமணிகளைத் துவைத்துக் காயப் போட்டுக் கொண்டிருந்தாள்.

'பைரவி.. நீங்க ஏன் சிரமப்படறீங்க!' என்றான் தயக்கத்துடன்.

'பரவால்லே.. சார் இதுல என்ன இருக்கு? வீட்டுக்கு வர்ற விருந்தாளிங்க துணிமணிகளை நாம வாஷ் பண்ற தில்லையா என்ன?' என்று லகுவாக அவள் அதைப் புறந்தள்ளிவிட்டாள்.

அன்றிரவு பைரவியிடம் 'பைரவி.. நிஜமாவே உடம்புக்கு ரொம்ப நல்லாருக்கு... அந்தக் காலத்துலயே நம்ம ஆளுங்க ரொம்ப சொகுசாத்தான் இருந்திருக்காங்க... இப்ப சிட்டியில எல்லாம் இதுக்கு ஆயில் மசாஜ், க்ரீம் மசாஜ்ன்னு காசைக் கொட்டிப் போய் செய்ய வேண்டி யிருக்கு. பேசாம அம்மாச்சி ஒரு பார்லர் ஆரம்பிச்சுரலாம்' என்று சிரித்தான்.

'அம்மாச்சியெல்லாம் டவுன் பக்கம் வரமாட்டாங்க.' என்றாள் பைரவி.

இன்று அது ஞாபகம் வந்தது. இரண்டு மூன்று நாட்களும் ஏதோ புதியதாய்ப் பழகியவர்கள் போல் இல்லாமல் இயல்பாய் இருந்து விட்டு வந்தார்கள். அதையெல்லாம் எம்.டி. மறந்துவிட்டார் போலும் என்று நினைத்துக் கொண்டிருந்தாள். ஆனால் மறக்கவில்லை என்று அன்றைக்குத் தெரிந்ததும் மனதுக்கு இதமாக இருந்தது. ஆனால் மறுநாள் முதல் அவளுக்கு வேறு விதமான தலைவலி ஆரம்பித்தது.

★ ★ ★

குமிழ் விளக்கொளியில் பைரவி நடந்து வந்த அழகே விஜயானந்த் மனதில் ஓடிக் கொண்டிருந்தது என்றால் அதே மாதிரி பாதிப்பு வேறொரு உள்ளத்திலும் இருந்தது.

'மீனா.. மேடம்.. பாருங்களேன். இவங்க எம்.டி.க்கு ஃபேமிலி ஃப்ரெண்டுன்னு உங்ககிட்டே சொன்னாங்களா?' என்றாள் கலா.

'அதானே! கேளு...!' என்று ரவிக்குமார் வந்து விட்டார்.

ரவிக்குமாரின் கண்கள் பைரவியின் மீது பாய்ந்தது. மீள்வதை பைரவி கவனிக்கவில்லை என்றாலும் கலா கண்டு பிடித்து விட்டாள்.

'ஏங்க.. பைரவி.. அதென்ன! இதென்ன? என்று கேட்டுக் கொண்டு ஒரு நாளைக்கு இரண்டு முறையாவது அவன் பைரவியிடம் பேசுவதைத் தொடர்ந்து கவனித்தாள். பிறகு மெதுவாக பைரவியிடம் சொன்னாள்.

'பைரவி' என்ன இந்த ரவிக்குமார் எப்பப் பாரு.. உன் பின்னாடியே நிக்கறாப்ல' என்றாள்.

பைரவி ஆச்சரியமானாள்.

'அப்படியா.. என்ன? அந்த மாதிரி எந்தச் சலனத்துக்கும் இடம் குடுக்கறதுக்கெல்லாம் எனக்கு நேரம் இல்லே! சித்தி என்னை ரெண்டா வெட்டிப் போடுவாங்க' என்றாள் பைரவி கவலையுடன்.



'சரி.. இப்ப எதுக்குக் கவலைப்படறே. அவசியம் வந்தா விவரமா. விரிவாச் சொல்லிரலாம்' என்றாள் கலா.

'ஆமா.. கலா.. இந்த மாதிரிப் பிரச்சினையெல்லாம் வரும்ன்னுதான் சித்தி என்னை வெளியே அனுப்பவே யோசிச்சாங்க. நான் நல்லபடியா நடந்துகிட்டு அவங்க மரியாதையைக் காப்பாத்தணும்' என்றாள்.

அவர்கள் பேசிக் கொண்டிருந்த அறையில் தடுப்புக்கு அந்தப்புறம் அதைக் கேட்டுக் கொண்டிருந்த உருவம் மெல்ல நகர்ந்து போனதை அவர்கள் அறியவில்லை.

★ ★ ★

ஒரு வாரம் போயிருக்கும்!

ஒரு நாள் ரவிக்குமார் வந்து அருகில் நின்றான்.

அவள் செய்த வேலையை விட்டுவிட்டு நிமிர விரும்பவில்லை என்ற போதும் எம்.டி.யின் பி.ஏ.வாயிற்றே என்று எழுந்தாள்.

'என்னங்க.. சார்!' என்றாள்.

சுற்றிப் பார்த்தான். எல்லாரும் சாப்பிடப் போயிருந்தார்கள். கலா அன்று வரவில்லை. வந்திருந்தாள்.

'சாப்பாட்டு நேரத்துல கூட என்ன கணக்கு வழக்கு? எழுந்து வா' என்று அழைத்துப் போயிருப்பாள்.

பைரவி நேரத்தைக் கவனிக்கவேயில்லை.

'மேடம் சாப்பிடப் போகலையா?'

அவள் புன்னகைத்தாள்.

'போகணும் சார்!' என்றாள். கம்ப்யூட்டரை 'ஷட் டவுன்' செய்து விட்டுப் புறப்பட்டாள். 'நானும் உங்களோட சாப்பிடலாமா?' என்றான் ரவிக்குமார்.

'இதேதடா.. வம்பு..' என்று நினைத்தவள்.

'வாங்களேன்..!' என்றாள் மென்று விழுங்கியபடி.

மீனா மேடத்தைத் திரும்பிப் பார்த்தாள். அவள் பார்வையில் இருந்த கெஞ்சல் புரிந்ததும் அவர் உதவிக்கு வந்தார்.

'என்ன ரவி!' என்றார்.

'இல்லைங்க மேடம்! பைரவி மேடம் இன்னும் சாப் பிடப் போகலையே!' அதான் சாப்பிடக் கூப்பிட்டேன்' என்றான்.

மீனா மேடம் சிரித்தார்.

'அவ ரொம்ப ரிசர்வ்ட் டைப். நீ போய்ச் சாப்பிடு போ. நானும் அவளும் சாப்பிட்டுக்கறோம்' என்றார்.

சுரத்தேயில்லாமல் 'சரிக்கா!' என்று போனான். மீனா மேடம் சிரித்தார். பிறகு திரும்பி.

'பைரவி! ரவி ரொம்ப டீசன்டான பையன்தான் அப்படியெல்லாம் லேடீஸ்கிட்டே வழியற டைப்பெல் லாம் கிடையாது. ஆனா, நீ ரொம்ப இன்டலிஜென்ட் டுன்னு நினைக்கிறான். அதுதான் பழக ஆசைப்படறான்' என்றார்.

அவள் மௌனமாக நின்றாள்.

'ஒண்ணும் தப்பாப் பேசிடலையே?' என்றார்.

'ஐய்யோ... அதெல்லாம் இல்லை' என்றாள் அவசரமாக.

'சரி.. வா' இன்னைக்கு என்னோட சாப்பிடு' என்று தன்னறைக்கு அழைத்துப் போனார். பிறகு சாப்பிடும போது சொன்னார்.

'பைரவி! நீயும் ஒண்ணும் சின்னப் பொண்ணில்லே. ரவியும் ஒண்ணும் சின்னப் பையனில்லே. அனாவசியமா எந்த ஆண் கிட்டேயும் விலகி நிக்காதே. அதுக்காக அளவுக்கு மேலயும் நெருங்கிப் பழகாதே. சப்போஸ் யாரா வது கல்யாணம் பண்ணிக்கறேன்னு கேட்டா உனக்குப் பிடிச்சிருந்தா சம்மதிக்கலாம். இல்லையா நாகரீகமா 'ஐ ம்



சாரி'ன்னு ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி விலகிக்க. அனாவசியமா சீன் கிரியேட் செய்யாதே என்ன?' என்றார்.

பைரவி 'சரிங்க மேடம்!' என்று தலையாட்டினாள். மனதில் தைரியம் ஏற்பட்டது. மீனா மேடம் சொல்வது தான் சரி. வேறு விதமாகப் பேசினால் அலட்டிக் கொள் ளாமல் பதில் சொல்லிவிட வேண்டியதுதான் என்று.

உண்மையில் ரவிக்குமாருக்கு ஏனோ பைரவியைப் பிடித்தது. அவளது அமைதியான சுபாவம். தானுண்டு தன் வேலையுண்டு என்று இருப்பது அறிவைப் பெருக்கிக் கொள்வதற்காகப் புத்தகங்களைப் படிப்பது என்று நிறைய விஷயங்கள் அவளிடம் நல்லதாக இருந்தது. எல்லா வற்றைக் காட்டிலும் பிற பெண்களிடம் அமர்ந்து கொண்டு வம்பு பேசாத குணம். கலாவுக்கும் அந்த நல்ல குணம் உண்டு. அதனால்தான் இரண்டு பேரும் தோழிகளாக முடிந்தது போலும். ஆனால் அதற்காகப் பழகிய கொஞ்ச நாட்களுக்குள்ளாகக் கல்யாணம் செய்துகொள்கிறேன் என்று கேட்கிற அளவுக்குப் பிடிக்கிறதா என்றால் இல்லை. யோசிக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

அன்றைக்குப் பிற்பகல் மூன்று மணியிருக்கும். ரவிக் குமார் திடீரென்று அவளது இடத்துக்கு வந்தான். பைரவிக்கு சற்றே சலிப்பாக இருந்தது. ஆனாலும் காட்டிக் கொள்ளவில்லை.

'பைரவி மேடம்!' என்றான் கிசுகிசுப்பான குரலில்.

'இன்னைக்கு எம்.டி. உங்க வீட்டுக்கு வருவார் போலருக்கு. திடீர்ன்னு வருவார். யாருக்கும் சொல்ல வேண்டாம்' என்றான்.

பைரவி இதை எதிர்பார்க்கவில்லை.

ஐந்து மணிக்கு அலுவலகம் முடிந்தவுடன் அவசர அவசரமாகப் போனாள்.

திடீரென்று வருகிற மாதிரி வருவேன் என்று எதற்கு முன் கூட்டியே அறிவிக்க வேண்டும். பிடித்த டிபனாக செய்து வை என்று பொருளா? எதற்கும் செய்து வைப்போம் என்று வழியிலே ஒரு கடையிலே கொஞ்சம் ஸ்வீட் வாங்கிக் கொண்டாள்.

கோதுமை மாவைப் பிசைந்து பூரி உருண்டை தயார் செய்தாள். கிழங்கு வேக வைத்து மசால் தயாரித்தாள்.

ஆறரை மணி வாக்கில் அபார்ட்மெண்ட் ரவுண்ட்ஸ் பார்க்க எம்.டி. வந்திருக்கிறார் என்று பேச்சு அடிபட்டது.

ஒருவித பரபரப்போடு காத்திருந்தாள். அவள் அபார்ட்மெண்ட் ஃபர்ஸ்ட் ஃப்ளோரில் இருந்தது.

மேலே போய் ஏதோ பாங்க் சம்பந்தமாகப் பேசி விட்டு மளமளவென்று கீழே இறங்கி வந்தாள்.

எதேச்சையாக வருபவன் போல் 'என்ன பைரவி.. உள்ளே வரலாமா?' என்று வந்தான்.

கிராமத்தில் வெகு இயல்பாகப் பழகிய பைரவி இப்போது சற்றே பரபரப்பாக இருந்தாள்.

'எப்படி இருக்கீங்க?' என்று சுற்றிலும் பார்த்தான்.

பைரவி தனது அறையை அழகாக வைத்திருந்தாள். சிறியதாக ஒரு ரேடியோ மேஜையின் இரண்டு பக்கமும் புத்தகங்கள்.

'இப்போதைக்கு என்ன புத்தகம் படிக்கறீங்க?' என்று எடுத்துப் பார்த்தான்.

'மனம் ஒரு கணினி என்ற கனகசுப்புரத்தினத்தின் புத்தகம்.

ரவிக்குமார் ஒதுங்கினாற்போல் நின்றான்.

'சார்! பூரி போடறேன். சாப்பிட்டுட்டுத்தான் போகணும்' என்றபடி மடமடவென்று தேய்க்க ஆரம்பித்தாள்.



'சார் இந்தக் கனக சுப்புரத்தினம்கறவர் நம்ம மூளைக்கு அபரிமிதமான சக்தியிருக்கு. அதை சரியாப் பழக்கினா, ஞாபக சக்தியை அதிகரிக்கலாம்னு நிறைய விஷயங்கள் சொல்றாரு சார்!' என்றார்.

பக்கத்தில் இருந்த அறையில் தனது பொருட்களை அழகாக வைத்திருந்தாள். அந்த அறையில்தான் கட்டில் இருந்தது.

முன்னறையில் இருந்து சமையலறை சென்றது. அங்கே நின்று கொண்டு பேசிக் கொண்டே மடமடவென்று நான்கைந்து பூரிகளைப் போட்டு எடுத்து விட்டாள்.

ரவிக்குமாரும் தட்டில் வைத்துக் கொடுத்தாள். பத்துப் பதினைந்து நிமிடங்களில் சாப்பிட்டு முடித்தார்கள்.

மறுபடியும் ரவி ஏனோ ஒதுங்கி நின்று கொண்டான். சுவற்றில் ஒரு படம் தொங்கிக் கொண்டிருந்தது.

ரவிவர்மாவின் ஓவியம். ஒரு பெண் கையில் விளக்கேந்திக் கொண்டு வருவது போன்ற ஓவியம்.

'ஒரு காலண்டர்ல கிடைச்சது சார் ஃபிரேம் போட்டு மாட்டிட்டேன்' என்றாள்.

'இந்த ஓவியத்தைப் பத்தித் தெரியுமா?' என்றான் விஜயானந்த்.

'தெரியும் சார்! மைசூர் ஆர்ட் காலரியில இருக்குன்னு கேள்விப் பட்டிருக்கேன். ஒரு நாள் பாக்கணும்' என்றாள்.

'ம்..' என்றவன் குரலைத் தாழ்த்தி 'பைரவி.. அன்னைக்கு நீங்க அந்த ராமகிருஷ்ண மடத்தில் குமிழ் விளக்கு வெளிச்சத்துல நடந்து வந்தப்ப.. நீங்களும் இப்படித்தான் ஒரு அழகான ஓவியம் மாதிரி இருந்தீங்க' என்றான்.

இப்படியொரு விஷயத்தை எதிர்பார்க்காத பைரவியின் முகம் சிவந்தது. அவள் அதற்குப் புன்னகைத்தாள் மெல்லிய குரலில்.

'அதெப்படி? வெட்கப்படும்போது பெண்கள் இவ்வளவு அழகாய் ஆயிடறீங்க' என்றான்.

'சார்! என்று அவள் மேலும் வெட்கப்பட அவன் கலகலவென்று சிரித்தான்.

இரண்டு பேரும் நிற்கிற விதத்தைப் பார்த்த ரவிக்குமாரின் மனம் லேசாக வாடியது. ஆனால் காட்டிக் கொள்ளவில்லை.

'பைரவி! அடிக்கடி வந்து பாக்கணும்னு நினைச்சேன் ஆனா, அனாவசியமான உங்களைப் பத்தித் தப்பாப் பேசுவாங்க. அதான்' என்றான்.

'ஓ!' என்றாள்.

அதற்குள் கடிகாரத்தைப் பார்த்தான். 'கிளம்பலாமா?' என்றான்.

புறப்பட்டாள்.

'தாங்க்யூ சார்!' என்றாள் வெகுவாக நன்றி சொன்னாள்.

அவன் வெளியே வரவும் மீனா மேடம் வருவதற்கும் சரியாக இருந்தது.

'எம்.டி. சார் எங்க வீட்டுக்கும் வரக் கூடாதா? பைரவிதான் ஸ்பெஷலா' என்றார் செல்லமாக.

'அப்படியெல்லாம் இல்லே. பைரவி எங்க ஃபேமிலி ஃபிரண்ட். அவங்க மதர் என்னை நம்பி அனுப்பி வச்சிருக்காங்க. கவனிக்கணுமில்லே' என்றான்.

மீனா மேடத்தின் வீடு கீழ்த்தளத்தில் இருந்தது. அங்கேயும் எட்டிப் பார்த்து விட்டுக் கிளம்பினான்.

மற்றவர்கள் வந்து அழைப்பதற்குள்ளாக சிட்டாகப் பறந்து விட்டாள்.





## 11

'ஹலோ! குட்மார்னிங் மை டியர் சன்' என்ற குரல் கேட்கவும் விஜயானந்த் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான்.

சிறு பையனாக இருக்கும்போது எப்போது வேண்டுமானாலும் அவனது அறைக்குள் நுழைகிற அப்பா அவன் இளைஞனானதும் அவ்வளவு சீக்கிரம் அவன் அறைக்குள் நுழைகிற வழக்கமில்லை.

இன்றைக்கென்ன அதிசயமாய்! என்று எண்ணிக் கொண்டே எழுந்தான்.

'குட்மார்னிங்கப்பா..!' என்றான்.

அப்பா சாவதானமாய் அவனது அறையில் இருந்த சோபாவில் அமர்ந்தார். கையில் நியூஸ் பேப்பர்.

'போ.. பிரெஷ் பண்ணிட்டு வா.. உன்கிட்டே பேசணும்' என்றார்.

'சரிப்பா..' என்று அவசரமாய் போய் பல் தேய்த்தான்.

அப்பாவுக்கும் அவனுக்கும் ஒரு தோழமை உண்டு. பரஸ்பரம் மதிப்பு உண்டு. சிறு வயதிலிருந்தே அவனது கருத்துக்களுக்கு மதிப்பு கொடுப்பார். அவன் செய்கிற காரியம் தனக்குப் பிடிக்கவில்லையென்றால்.

'ஐ டோன்ட் லைக் இட்' உனக்குப் பிடிச்சிருக்கு. செஞ்சுதான் ஆகணும்னா யு மே ப்ரொசீட்' என்பார்.

பெரும்பாலும் அந்த மாதிரிக் காரியங்களை அவன் செய்ய நேர்ந்ததில்லை. இரண்டாவது முறை யோசிக்கும்

போது அப்பா சொன்னதன் நியாயம் புரியும். அல்லது அவனுக்குச் சரியென்று பட்டாலும்,

'அப்பா... எனக்கு அது சரின்னுதான் படுது. ஆனா, உங்களை மீறிட்டு நான் செய்ய விரும்பலே' என்பான். ஆனால் தொழில் என்று வரும்போது தன்னுடைய முடிவுலே உறுதியாக நிற்பான்.

சமையற்காரன் காபியைக் கொண்டு வந்து கொடுக்கக் குடித்துக் கொண்டே வந்து எதிரில் சோபாவில் அமர்ந்தான்.

'அப்பா?' என்றான் கேள்விக் குறியாக. அவன் அப்பாவுக்குப் பிடிக்காத இன்னொரு விஷயம்' டாடி, மம்மி' என்று அழைப்பது.

'யு மே டாக் டு மி இன் இங்கிலீஷ் ஆனா அதுக்காக எங்களை மம்மி டாடின்னு கூப்பிடாதே!' என்பார்.

அதனால் அவன் பேச்சு வழக்கில் ஆங்கிலம் பேசும்போது கூட அப்பா, அம்மா என்றுதான் பேசுவான்.

நண்பர்கள் கேலி செய்தால்கூட அவனும் சொல்வான்.

'அப்படியில்லடா. எங்கப்பா சொல்றதுதான் சரி. ஆங்கிலம் நமக்கு ரொம்ப உதவியா இருக்குதுதான். அந்த மொழி தெரிஞ்சுக்க வேண்டியது அவசியம்தான். ஆனா, அதுக்காக அம்மா அப்பாங்கற அழகான சொற்களையே அந்த மொழிக்கு வித்தரணுமா என்ன? அவசியமேயில்லை' என்பான்.

'டேய்.. நீ சில விஷயங்கள்லே கன்சர்வேடிவ்தான்' என்று சிரிப்பார்கள்.

'ஆமடா.. நம்ம கல்ச்சர்ன்னு வரும்போது நான் கன்சர்வேடிவ்தான்.' என்பான்.

முதல் முறையாக கல்லூரியில் படிக்கும்போது நண்பர்கள் வற்புறுத்தலுக்காக மதுவருந்தி விட்டு வந்து விட்டான். அவன் அப்பா அவனைக் கண்டிக்கவும் இல்லை. ஏன் செய்தாய் என்று கேட்கவும் இல்லை.



மறுநாள் காலையில் அப்பாவிடம் போய் நின்றான்.

'சாரிப்பா! ஃபிரண்ட்ஸோட வற்புறுத்தலுக்காக..' என்று இழுத்தான்.

முதலும் கடைசியுமாக அப்பா அவன் கன்னத்தில் அன்றுதான் அறைந்தார்.

'ஹிப்பாகிரட்! எனக்குப் பிடிச்சிருந்தது குடிச்சேன்னு சொல்றா. ஒத்துக்கறேன்.. ஆனா ஃப்ரண்ட்ஸ் வற்புறுத்தினாங்கன்னு சொன்னே.. பாரு.. அதைத்தான் என்னால டைஜஸ்ட் பண்ண முடியலே. அப்புறம் நாளைக்கு இன்னொண்ணைச் சொல்லுவாங்க.. செய்வியாடா' என்றார்.

அவன் முகம் சிவந்து நின்றான்.

அப்பா முகம் மென்மையாக மாறியது இழுத்து அணைத்துக் கொண்டார்.

'தம்பி! நட்புங்கறது நம்மளை உருப்படியாக்கற நட்பா இருக்கணும். பலவீனப்படுத்தற நட்பெல்லாம் நட்பு இல்லைடா?' என்றார்.

அவன் புரிந்து கொண்டான்.

'போதை தண்ணியடிக்கறதுலதான் இருக்குன்னு நெனைச்சுக்காதடா.. தம்பி! வாழ்க்கையில நெறைய விஷயங்கள்ல இருக்குடா.. வாழ்க்கையில, தொழில்ல ஜெயிக்கறதுல இருக்குடா.. போதை! நான் புத்தர் மாதிரி பேசறேன்னு நினைக்காதே. நானும் சின்ன வயசுல என்னைக்காவது தண்ணி போட்டது உண்டுதான். ஆனா அந்த நாள்ல நான் வீட்டுக்கு வந்ததில்லே. ஏன்னா அப்படிப் போதையில உங்கம்மாவைத் தொடறதை நான் விரும்புனதில்லை. அவ்வளவு உங்கம்மாவை மதிச்சேன். குடும்பத்தை மதிச்சேன். இந்த சின்னச் சின்ன போதையெல்லாம் விட்டுட்டு வெளிய வாடா.. சாமி!' என்றார்.

அவன் மறுபடியும் மௌனமாக இருந்தான்.

'தம்பி! எதை வேண்ணா செய்யலாம். எந்த பாயிண்ட்ல வேண்ணா நிறுத்திட்டு வெளிய வர முடியும்னு தைரியம் இருந்தா செய்யலாம்பா.. தம்பி..' என்றார்.

'சரிங்கப்பா..!' என்றான்.

அதற்குப் பிறகு எந்தப் போதையும் தன்னை அண்டுவதற்கு அவன் அனுமதித்ததில்லை. 'ஒரே ஒருமுறை தன்னுடைய அறையில் சிகரெட் ஊதிக் கொண்டிருந்தான். அப்பா திடீரென்று உள்ளே நுழைந்தார்.

உதறியபடி டப்பாய் அங்கே இங்கே என்று அவன் கொட்ட அப்பா கண்டு கொள்ளவில்லை. அப்பா அதைக் கண்டு கொள்ளாமல் அவனிடம் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் போனார்.

சற்று நேரத்தில் வேலைக்காரன் டேபிள் மீது ஒரு ஆஷ் டிரேயைக் கொண்டு வந்து வைத்து விட்டுப் போனார்.

சற்று நேரத்தில் வேலைக்காரன் டேபிள் மீது ஒரு ஆஷ் டிரேயைக் கொண்டு வந்து வைத்து விட்டுப் போனான். விஜயானந்துக்கு மானக் கேடாகப் போய் விட்டது.

அவனே அதை எடுத்து டேபிள் டிராயரில் போட்டு வைத்து விட்டான்.

'இன்றைக்கென்ன அப்பா உள்ளே வந்திருக்கிறார்' என்று கொஞ்சம் உதறல்தான்.

'ஒரு ஐடியா.. இருக்குப்பா.. அது இன்னும் ஃபுல் ஷேப்புக்கு வர்ல. வந்ததுக்கப்புறம் உங்ககிட்டே பேசலாம்னு' என்று இழுத்தான். ஆனாலும் கோடி காட்டினான்.

'ம்.. சரி யோசிக்கலாம்..' என்றார் அப்பா மேலும் சற்று நேரம் தொழில்களைப் பற்றியெல்லாம் பேசினார்கள்.

பேசிக் கொண்டிருக்கையிலேயே அப்பா என்ன கேட்க வந்திருக்கிறார் என்பது அவனுக்குப் புரிந்து போயிற்று. அதனால் அவனே பைரவியைப் பற்றிச் சொன்னான்.



அவளது நல்ல பண்புகளைப் புகழ்ந்து சொன்னான். 'கொஞ்சம் தனிப்பட்ட முறையில் கேர் குடுத்தா நல்லா வருவாப்லன்னு தோணிச்சுப்பா.. ஆனா, வயசுப் பொண்ணை திடீர் திடீர்னு போய்ப் பார்த்தா.. தப்பாய் பேசுவாங்களே அதனால ஃபேமிலி ஃப்ரெண்டுன்னு சொல்லியிருக்கேன்' என்றான்.

'ம்.. தப்பில்லே!' என்று இழுத்துக் கொண்டார் பிறகு.

'ஏம்ப்பா.. அந்தப் பொண்ணோட அப்பா பேரு என்ன சொன்னே? கண்ணப்பனா. அவரை எனக்கு நிஜமாவே தெரியும்ப்பா... பொழைக்கத் தெரியாத மனுஷன் தானாப் போய் கச்சேரிக்கு வாய்ப்புக் கேட்க மாட்டாரு. நல்ல திறமையிருந்தும் இவ்வளவு குடு அவ்வளவு குடுன்னு கறாராய்க் கேட்க மாட்டாரு. ஆனா, நம்ம சென்னைக்கு வந்ததுக்கப்புறம் தொடர்பு விட்டுப் போச்சு. அங்கயும் ஒன்றும் நெருங்கின தொடர்பு இல்லே. ஆனா தெரியும்' என்றார்.

அவன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான். ஆனால் அந்தத் தந்தை கொஞ்ச நேரம் பேசுவதற்குள்ளாக மகனை ஆழம் பார்த்து விட்டார் என்பது அவனுக்குத் தெரியவில்லை.

கொஞ்ச நேரத்திற்குள்ளாகவே அம்மா அப்பாவிடம் கேட்டுக் கொண்டிருந்தார்.

'ஏங்க.. அதுக்குள்ளே போய் அவன்கிட்டே விசாரிக்க வேண்ணா என்ன?' என்று.

'சௌந்தரம்.. வேற விஷயமாயிருந்தா பரவாயில்லே. பொண்ணு சம்பந்தப்பட்ட விஷயம் அதுதான்' என்றார்.

'நானும் விசாரிச்சேங்க. பொண்ணும் நல்ல பொண்ணுன்னு சொல்றாங்க.' என்றார்.

'அதனாலதான் யோசிக்க வேண்டியிருக்கு.' என்றார்.

அம்மா திகைத்தார்.

'ஆமா.. சௌந்தரம்.. இதுவரைக்கும் அவன் பெண்களைப் பற்றிப் பேசும்போது சாதாரணமாகத்தான்

பேசுவான். ஆனா, இந்தப் பொண்ணைப் பற்றிப் பேசும் போது அனுதாபத்தை மீறி ஒரு பெருமை தெரியுது' என்றார் அப்பா.

'அப்ப.. என்னங்க செய்யறது?' என்றார் சௌந்தரம் கவலையாக.

'ஒண்ணும் செய்யறதுக்கில்லே. அவன் வாழ்க்கை. அவன் தீர்மானிக்கறதுக்கு அவனுக்கு உரிமையிருக்கு. அவன் சந்தோஷம்னு நாம விட்டுக் குடுக்க வேண்டியது தான் என்றார்.

'ஓ! அந்த அளவுக்குப் போயிருச்சுங்கறீங்களா' என்றார் சௌந்தரம்.

'தெரியலே. எந்த அளவுக்குப் போயிருக்குன்னு அவனுக் கேத் தெரியலேன்னுதான் நான் நினைக்கறேன்' என்றார். ஆனால், அப்பா அன்றைக்கு வெறும் பேச்சுப் பேசியதோடு நிற்கவில்லை. மகன் மேல் ஒரு கண் வைத்துக் கொண்டு தான் இருந்தார்.

யார் எதைக் கவனித்தால் என்ன என்று எதைப் பற்றியும் கவலைப்படாத நிலையை மகன் அடையும் வரை.

★ ★ ★

'அப்பா! இப்பல்லாம் கொஞ்சம் நிம்மதியாயிருக்கு' என்றாள் பைரவி.

அலுவலகத்திலிருந்து நடந்து வந்து கொண்டிருந்தார்கள்.

'ஏன்?' என்றாள் கலா.

'இல்லே! இப்பல்லாம்.. ரவி சார் வந்து தொல்லை பண்றதில்லே!' என்றாள்.

கலா அவளை சிந்தனையுடன் பார்த்தாள்.

'பைரவி! ரவி சார் ரொம்ப நல்லவரு. நல்ல குடும்பம் நடுத் தரக் குடும்பம். நீ நினைக்கிற அளவுக்கு மோசமில்லே' என்றாள்.



'ஐயய்யோ! நான் அவரை மோசம்னா சொன்னேன். இந்த மாதிரி விஷயங்களையெல்லாம் யோசிக்கிற அளவுக்கு எனக்கு நேரமில்லேன்னு சொல்றேன்.'

கலா ஆழ்ந்த சிந்தனையில் வந்தாள்.

'பைரவி.. ரவி சார் ஒதுங்கறார்ன்னா காரணம் இருக் குமோ, இதைவிடப் பெரிய தொல்லை வேற எங்கயாவது இருந்து வருமோ?' என்றாள்.

பைரவி விழித்தாள்.

'என்ன சொல்றே?'

கலா அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். பிறகு,

'ஒண்ணுமில்லே.. விடு!' என்றாள்.

'ஹல்லோ! அத்தை!' என்றது குரல் உற்சாகமாக.

'யாரு!' என்றார் சௌந்தரம்.

'அத்தை என்னைத் தெரியலையா? ராகினி.. ராகினி.. பேசறேன்' என்றாள்.

'ராகினி என்ன.. நல்லாயிருக்கியாடி! எப்படி வர்றே?' என்றார் சௌந்தரம் உற்சாகமாக.

'அத்தை, படிப்பு முடிஞ்சுது. அனேகமாக ரெண்டு மாசத்துக்குள்ளே வந்துடுவேன்' என்றாள் ராகினி.

'டேய்.. தம்பி.. ராகினி பேசறாடா?' என்று மகனுக்குத் தகவல் சொன்னார்.

அவன் படுக்கையில் இருந்தபடியே ரிசீவரை எடுத்தான்.

'ஹேய்! மங்கி.. என்ன காலங்காத்தாலே தொல்லை பண்றே?' என்றான் விஜயானந்த்.

'சோம்பேறி அத்தான்! இன்னும் விடியலையாக்கும். கெட் அப் மேன்.' என்றாள் ராகினி கலகலவெனச் சிரித்துக் கொண்டு.

'சரி.. அதை விடு' உன் பி.எச்.டி. என்ன ஆச்சு?'

'முடிச்சுட்டேன்.. அத்தான்' என்றாள்.

'ஹேய்! தட்ஸ் ரியலி குட்.. எப்ப இண்டியா வர்றே!'

'அநேகமா.. ரெண்டு மாசத்திலே..!' என்றாள்.

'தட்ஸ் ரியலி குட்!' வந்ததுக்கப்புறமாவது செட்டிலாகித் தொலை' என்றான்.

'யா.. தட்ஸ் வாட் ஐ ம் திங்கிங்' என்றாள்.

'பாவம்.. என் தலையெழுத்து மோசமா இருக்கோ..' என்றான் விஜயானந்த் வெடிச்சிரிப்பு சிரித்தான்.

'அத்தான்.. ஊருக்கு வந்து பேசிக்கறேன் என்று மிரட்டினாள்.

'வா.. வா.. நீ பேசினா நான் பேசாம விட்ருவேனா.. எனக்கும் பேசறதுக்கு நிறைய இருக்கு..' என்றான்.

இருவரும் சிரித்தார்கள்.

அவன் சிரிப்புச் சத்தத்தைக் கேட்டு அப்பாவும் அம்மாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

★ ★ ★

'மேடம் பைரவி!' என்று ரவிக்குமார் வந்து நின்றான்.

'சார்!' என்றாள் பைரவி தயக்கத்துடன்.

'மேடம். நம்ம கோயமுத்தூர் விற்பனைப் பிரிவில முக்கியமான கான்பிடென்ஷியல் ஃபைல்ஸ் அப்பப் போகும். அப்படிப் போகும் போதெல்லாம் பைரவிகிட்டே குடுத்தனுப்புங்க. பைரவிக்கும் ஊருக்குப் போனாப் போல ஆச்சு..ங்கறார் எம்.டி. இந்த வாரம் போறீங்களா?' என்றான்.

'ஓ.. தாராளமா?' என்று முகமலர்ந்தாள் பைரவி.

ஆசை ஆசையாய்ப் புறப்பட்டாள்.

'மேடம்! வியாழக்கிழமை சாயங்காலம் போயிட்டு வெள்ளிக்கிழமை ஆபீஸ் மேட்டர் முடிச்சுட்டு ஞாயிற்றுக்



கிழமை நைட் புறப்பட்டு வந்தாப் போதுமாம். டியர்னஸ் அலவன்ஸும் உண்டு. என்றான்.

ஓ..! தாங்க்ஸ்.. தாங்க்ஸ்!' என்றாள் மறுபடியும் ஏனோ ரவிக்குமாரின் கண்களில் குறும்பு கூத்தாடுகிறாற்போல் தோன்றியது.

'அப்புறம்.. ஆபீஸ் கார் வந்து டிராப் செய்யும். பிக் அப் பண்ணிக்கும்' என்றான் மறுபடியும்.

பைரவி தியாகுவைப் பார்க்கப் போகிற மகிழ்ச்சி மனதில் நிரம்ப அவனைக் கண்டு கொள்ளாமல் சிரித்தாள்.

போக்குவரத்துக்கான டிக்கெட், பணம் என்று எல்லாவற்றையும் கொடுத்த ரவிக்குமார் இன்னொன்றும் கேட்டான்.

'ஏங்க மேடம்! உங்க வீட்டில ரவிவர்மா ஓவியம் மாட்டி வச்சிருந்தீங்களே? பிகாஸோ. வான்கோன்னு வெளிநாட்டு ஓவியர்களோட படம் எதுவும் கிடைக்கலையா? என்றான்.

'ஏன்.. எதுக்குக் கேட்கறீங்க?' என்று பைரவி விழித்தாள்.

'இல்லே.. சும்மாதான் கேட்டேன்' என்றான்.

ஸ்டேஷனுக்கு வழியனுப்ப வேறு வந்தான். 'மேடம்! மழையில மாட்டிக்காம எந்த அடிதடிக்கும் போகாம எக்குத் தப்பா எந்த மலங்காட்டுலயும் மாட்டிக்காம பத்திரமா வந்து சேரச் சொன்னார் எம்.டி.' என்றான்.

பைரவியின் முகம் சிவந்தது.

ரவிக்குமார் சட்டென்று செல்போனை ஆன் செய்து கால் போட்டு 'சார்.. நீங்க சொன்னதெல்லாம் சொன்னேன் சார். ரொம்ப அழகா வெட்கப்படறாங்க.. பேசறீங்களா?' என்று நீட்டவும் அவள் திணறிப் போனாள்.

ரவிக்குமார் சற்றுத் தள்ளி நின்று கொண்டான்.

'பைரவி.. கோனியம்மனை, மருதமலை முருகனையெல்லாம் கேட்டதாகச் சொல்லுங்க' என்று உல்லாசமாக

அவன் சிரிப்பதைக் கேட்டவுடன் அவளுக்கும் சிரிப்பு வந்தது.

'சார்! இன்னைக்கும் எதிர் பெர்த் ரிசர்வேஷன்.. உண்டா?' என்றாள்.

அவன் மறுபடியும் சிரித்தான்.

'திங்கட்கிழமை வந்து சேருங்க.. நேர்ல சொல்றேன்..' என்றான்.

பைரவியும் கலகலவென்று சிரிப்பதைப் பார்த்து ரவிக் குமார் ஒரு பெருமூச்சு விடுவதை அவள் அறிந்து கொள்ள வில்லை.

'ரவிக்குமார் எதற்காக அப்படிக் கேட்டான் என்று யோசித்து யோசித்துப் பார்த்தாள் ஒன்றும் புரியவில்லை.

'எதற்கோ கேட்டதாக இருந்துட்டுப் போகட்டும்' என்று எண்ணிக் கொண்டாள். ஆனால், அடுத்த வாரத்தில் அவளுக்கு விஷயம் புரிந்தபோது கலக்கமாக ஆகி விட்டது.



## 12

'ஐயோ.. நேர்ல பாக்கும்போது இத்தனை அழகா இருக்கும்னு நினைக்கவே இல்லை' என்றாள் பைரவி.

திரும்பித் தங்கள் எம்.டி.யைப் பார்த்தாள். அவன் மௌனமாகத் தன்னிரு கைகளையும் பாண்ட் பாக் கெட்டுகளில் விட்டுக் கொண்டு நின்று கொண்டு தன்னை ஆழமாகப் பார்ப்பதையும் அவள் கண்டு கொள்ளவில்லை.

அவள் மனத்தை ரவிவர்மாவின் ஓவியங்கள் கொள்ளை கொண்டு விட்டன. பார்க்கப் பார்க்க அலுப்புத் தீரவில்லை. எவ்வளவு ரியலிஸ்ட்டிக்கா இருக்கு! என்று திரும்பத் திரும்பச் சொல்லி அதிசயித்தாள்.



அவள் வாய்விட்டுத் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத் துவதை விஜயானந்த் ஒரு மௌனப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டு வருவதை அவள் புரிந்து கொள்ள வில்லை.

சென்ற வாரத்தில் அவள் கோவைக்கு ரெயிலில் சென்ற போது நடுவில் விழித்துப் பார்க்க எதிர் பெர்த்தில் ஒரு குண்டான பெண்மணி படுத்து உறங்கிக் கொண்டிருந்தார்.

அவளுக்குச் சூழ்நிலை புரியச் சற்று நேரமானது. ஆனால் புரிந்ததும் சிரிப்பு வந்துவிட்டது. எல்லா சமயமுமா எம்.டி. எதிர் பெர்த்தில் வந்து கொண்டிருப்பார் என்று சிரிப்பு.

அடுத்த நாள் அலுவலகம் போய் சேர்க்க வேண்டிய ஃபைலைச் சேர்த்து விட்டு எம்.டி.யின் செல்போனில் தொடர்பு கொண்டாள்.

'சார்... ஃபைலைச் சேர்த்துட்டேன் சார்' என்றாள்.

குட்.. வெல்.. டன்' என்றான்.

'சார்! நேத்து ராத்திரி சடனா முழிச்சுப் பார்த்தேன். ஒரு வேளை எதிர் பெர்த்ல எம்.டி. இருப்பாரோன்னு ஒரு எண்ணம் போலே. ஆனா, எதிர்ல குண்டா ஒரு அம்மா தூங்கிட்டிருந்தாங்களா.. கொஞ்சம் அதிர்ச்சியாய்ப் போயிடுச்சு' என்று சிரித்தாள்.

'ஹலோ.. லேண்ட் லைனிலிருந்து இதெல்லாம் பேசறீங்க!' என்றான் எச்சரிக்கையாக.'

'இல்லைங்க சார் இங்க யாரும் பக்கத்துல இல்லை' என்றாள்.

'சரி.. உங்க ஃபேமிலியோட ஹாப்பியா நேரம் செலவழிச் சுட்டு.. வாங்க.. முடிஞ்சா தினம் ஒரு தரம் போன் பண்ணுங்க.' என்றான் விஜயானந்த்.

'சரிங்க.. சார்!' என்றாள் உற்சாகமாக, விஜயானந்த் மெல்லிய குரலில்.

'பைரவி.. ஐ திங்க் ஐ மிஸ். யு' என்றான்.

'சவன் ஐ. ம். சார்!' என்றாள். மேலும் சற்று நேரம் பேசிவிட்டு வைத்தாள். ஆனால், வழக்கம் போல் இல்லாமல் விஜயானந்த் குரலில் ஏதோ புதிதாக இருந்த மாதிரி தோன்றியது. ஆனால் மேற்கொண்டு இந்த விஷயத்தை ஆராய அவளுக்குத் தோன்றவில்லை. ஒரு வேளை துணிவு வரவில்லையோ?

அதே சமயம்!

விஜயானந்தும் யோசனையில் ஆழ்ந்திருந்தான். இப்போ தெல்லாம் தினமும் பைரவி வேலை செய்த ஆபீஸுக்கு வந்து சென்றான்.

அன்றைக்கு வெள்ளிக்கிழமையையும் அதே போல் காலை பத்து மணிக்கு வந்தான்.

ஏதோ லெட்டர் தயாரிக்குமாறு மீனா மேடத்திடம் சொல்லி விட்டுத் தன் சுழல் நாற்காலியை இடது புறம் ஒரு சுற்றுச் சுற்றினான்.

எப்போதும் அந்தக் கோணத்தில் இருந்து பார்க்கும் போது பைரவி கண்ணில் படுவாள். அவள் அங்கேயிருந்து கொண்டிருப்பதைப் பற்றி இதுவரை அவன் யோசித்த தில்லை. ஆனால் இன்றைக்கு அவன் அங்கே இல்லாமல் இருப்பதைப் பார்த்தபோது மனதில் ஒரு வெறுமையை உணர்ந்தான்.

அதிர்ச்சியானான்.

'ஏன் இப்படி மனது உணர்கிறது?' என்று யோசிக்கத் துவங்கினான். நிறைய.. நிறைய கேள்விகள் மனதுக்குள் எழுந்தது. பாரபட்சமில்லாமல் வெளியாளாக நின்று விடைகள் தேடத் துவங்கினான்.

'சனிக்கிழமை பகல் பேசும்போது' ஃபைலைப் பத்தி ஏதோ டீடெய்ல்ஸ் கேட்கணும்னு நேத்து ஆபீஸ்ல



சொன்னாங்க. பி.ஏ. ரவி சாரைக் கோயம்புத்தூர் ஆபீஸைக் காண்டாக்ட் பண்ணச் சொல்லுங்க. சார்' என்றாள்.

'ம்.. சொல்றேன்.. அப்புறம் உங்க வீட்ல எல்லாரையும் கேட்டதாகச் சொல்லுங்க.'

'சரிங்க... சார்! ஆபீஸ்லயும் கலா, மீனா மேடம். ரவிக்குமார் சார் எல்லாரையும் கேட்டதாகச் சொல்லுங்க. சார்' என்றாள்.

'வேற வினையே வேண்டாம். எம்.டி.யும் பைரவியும் தினம் பேசிக்கறாங்க. என்ன அப்படின்னு கூடிக் கூடி கிசுகிசு பேசவா?' என்றான்.

அவள் திகைத்துப் போனாள்.

'ஓ.. அப்படியெல்லாம் பேசுவாங்களா.. என்ன?' என்றாள்.

'யாரு கண்டா? பேசலாம். இது நம்மளோட பர்சனல் மேட்டர். இதையெல்லாம் அவங்ககிட்டே சொல்லிகிட்டிருக்க வேண்டிய அவசியமே இல்லை புரியுதா?' என்றான்.

'சரிங்க சார்!' என்றாள்.

'பைரவி!' என்றான் குரல் குழைந்தது. 'ஆபீஸ்ல நீங்க இல்லாதது எனக்கு என்னமோ ஆபீஸே காலியா இருக்கற மாதிரி இருக்குது. ஐ மிஸ் யு வெரி மச்' என்றான்.

'ஓ..!'

'சார்! இங்க வந்ததுக்கப்புறம் இன்னும் ரெண்டு மூணு நாள் இருந்துட்டு வந்தாத் தேவலைன்னு இருக்கு.. சார்' என்றாள்.

'ஹலோ அப்படியெல்லாம் செஞ்சுடாதீங்க. சீக்கிரம் வந்து சேருங்க. வேணும்னா மாசா மாசம் போயிட்டு வர்ற மாதிரி ஒரு அரேன்ஜ்மெண்ட் செய்யறேன் என்றான்.

'தாங்க்ஸ் சார்' என்றாள்.

மனதில் மகிழ்ச்சியும், குழப்பமும் ஒரு சேர நிரம்பியது. உண்மையாகவே எம்.டி. தன்னை ஒரு பர்சனல்

ஃபிரண்டாக மதிக்கிறார் என்று மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

மாறாக விஜயானந்த் மறுபடியும் சுய அலசலில் ஆழ்ந் தான். சாதாரணமாகத் தொழில் பேச்சுக்களில் தன் மனதில் என்ன இருக்கிறது என்பதையே வெளியிடாமல் எதிராளி யின் வாயில் இருந்தே விஷயங்களைக் கோத்து வாங்குவதில் அவன் கெட்டிக்காரன். ஆனால் இப்போதென்ன பைரவி யிடம் இப்படிக் கெஞ்சுகிறோம் என்று அவனுக்கு ஆச்சரியம்.

★ ★ ★

'ஹேய்! பைரவி... இன்னைக்கென்ன ரொம்ப அழகா இருக்கே..!' என்று விஜயானந்தின் கைகள் அவளை வளைத்தன.

'எம்.டி... சார்.. இதென்ன.. எல்லை மீர்றீங்க' என்று அவள் கலகலவென்று சிரிக்க.

'இத்தனை நாள் எல்லை மீறாமே இருந்ததே பெரிய விஷயம். அன்னைக்கு அந்த மடத்துக்கு முன்னால இருக்கற புல்வெளியில நடைபாதையில குமிழ் விளக்கு வெளிச் சத்துல நடந்து வந்தியே. கலகலன்னு சிரிச்சுகிட்டு... அப்பவே நாம யாருகிட்டயாவது எல்லை மீறி நடந்துக்கலாம்னா அது இந்தப் பொண்ணுகிட்டதான்னு நான் முடிவு பண்ணி யாச்சு' என்றான்.

அவள் வெட்கமும், கலவரமுமாக நிற்பதைப் பார்த்து.

'தட்ஸ் பியூட்டிஃபுல்' என்று முணுமுணுத்தபடி முகம் நோக்கிக் குனிய அவள் வெட்கத்துடன் தள்ளி விட அவன் சட்டென்று விழித்தான்.

கனவு!

'சே.. கனவு!' என்று தன்னைத்தானே உலுக்கிக் கொண்டான்.

வெளிப்படையாக ஒத்துக் கொள்ளாமல் தன் மனத் துடன் தானே போராடிக் கொண்டிருப்பதை உணர்ந்து



ஆழ்மனம் தன்னைத் தானே கனவாக வெளிப்படுத்தி விட்டதை உணர்ந்தான்.

அதற்குப் பிறகு வெகு நேரம் உறக்கம் வரவில்லை. ஒரு விதமான மகிழ்ச்சியும் வேதனையும் நிறைந்தவனாகப் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தான்.

அதிகாலை நேரத்தில்தான் உறங்கினான்.

★ ★ ★

ரயிலை விட்டு இறங்கிய பைரவி இயல்பாகச் சுற்று முற்றும் பார்த்தவள் ஆச்சரியமானாள்.

எம்.டி. நின்று கொண்டிருந்தார்.

'சார் குட்மார்னிங்!' என்றாள் பரபரப்பாக.

விஜயானந்தின் முகம் லேசாகச் சிவந்தாற்போல் தெரிந்தது. ஆனால், குரலில் எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை.

'பைரவி! ரவிக்குமார் ஏதோ வேலையிருக்குன்னான். எனக்கும் இங்கே ஏதோ வேலையிருந்தது. அதான் நானே வந்தேன்' என்றான்.

'தாங்க்யூ.. சார்! தாங்க்யூ.. சார்!' என்றாள் பத்து முறை.

பேசிக் கொண்டே நடந்தார்கள். காரும் கூட வேறு ஏதோ காராக இருந்தது.

'காபி சாப்பிடறீங்களா?' என்று ஸ்டேஷனுக்கு உள் ளேயே சரவணபவன் ஹோட்டலில் காபி வாங்கிக் கொடுத்தான்.

ஏனோ அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த மாதிரி இருந்தது. பைரவி அதையெல்லாம் புரிந்து கொள்ளவே யில்லை. அவளைப் பொறுத்தவரை எம்.டி.யை ரொம்பப் பிடிக்கும். மரியாதைக்குரியவர். எளிமையாகப் பழகக் கூடியவர் அவ்வளவுதான்.

'பைரவி..!' என்றான் காபியைக் குடித்தபடி.

'சொல்லுங்க.. சார்!' என்றாள் உற்சாகமாக. ஏதோ சொல்ல வந்து பின் பேச்சை மாற்றிக் கொண்டாற்போல் தெரிந்தது. அவளும் மேற்கொண்டு விசாரிக்கவில்லை.

தெரு முனையிலேயே டிராப் செய்து விட்டுப் போனான்.

தன்னைக் குறித்தே சிரிப்பு வந்தது விஜயானந்துக்கு.

அலுவலகத்தில் வைத்து ரவிக்குமாரிடம் பைரவி,

'ரவி சார்! உங்களுக்கென்னவோ முக்கிய வேலைன்னு எம்.டி.யே பிக்கப் பண்ணினார்' என்றாள் ரகசியம் போல்.

'யாருகிட்டயும் சொல்லாதீங்க' என்று எச்சரித்தான் ரவிக்குமார்.

'சரிங்க.. சார்' என்றாள் பைரவி.

'ஆமா.. எம்.டி.. என்ன சொன்னாரு எனக்கு முக்கிய மான வேலைன்னா?' என்றவன் குபீரென்று சிரித்தான்.

'ஆமா.. அப்படியென்ன முக்கியமான வேலை!' என்றாள் பைரவி புன்னகையுடன்.

'ஆமா.. ரொம்ப முக்கியமான வேலை. குறட்டை விட்டுத் தூங்கறது' என்று சொல்லி விட்டு மேற்கொண்டு பேசாமல் நகர்ந்து விட்டான்.

அதற்குள் மீனா மேடமும் வரவே பைரவி தன் வேலையில் ஆழ்ந்தாள்.

★ ★ ★

ஒரு வாரம் போயிருக்கும்!

வழக்கமான குறும்புச் சிரிப்புடன் ரவி வந்தான்.

'மீனா.. மேடம்! இந்த தடவை அந்த பெங்களூர் பார்ட்டிகிட்டே பேச்சு வார்த்தை மைசூர்ல வச்சாம்' என்றான்.



'ஏன்... அந்தத் தடிப்பயங்கதான் இங்கயே வந்து நம்ம எம்.டி. செலவிலேயே ஊரைச் சுத்துவானுங்களே' என்றார் மீனா.

'இந்தத் தடவை நாம அங்க போலாங்கறார் எம்.டி.'

'ஐயோ.. உங்களோட யார் வருவா? நீங்க ரெண்டு பேரும் ஏதோ சிரிச்சுகிட்டே வருவீங்க.'

'மேடம்! இந்தத் தடவை நீங்களும் சிரிச்சுகிட்டே வர்றதுக்கு ஒரு ஆள் துணைக்குக் குடுக்கறோம். பைரவி..' என்றான்.

அப்போது பைரவி ஆச்சரியமாய்ப் பார்க்க அவன் குபீரென்று சிரித்தான்.

'மேடம்! பாருங்க.. ரவி சார் சும்மா சிரிச்சுகிட்டே இருக்காரு' என்று சிணுங்கினாள் பைரவி.

'அது கிடக்குது; பைரவி.. போயிறலாமா? எம்.டி. கூடப்பு போனா நல்லாக் கேர் எடுத்துக்குவாரு.' என்றாள் மீனா ஆர்வமாக.

'ஆமாமா.. ரொம்ப கேர் எடுத்துப் பாத்துக்குவாரு.'

'ம்.. போலாம்!' என்றாள் உற்சாகமாக.

புறப்பட்டார்கள்!

ரவியும், எம்.டி.யுமே மாற்றி மாற்றிக் காரை ஓட்டி னார்கள். எம்.டி. என்னமோ ரொம்ப உற்சாகமாக இருந்த மாதிரி உணர்ந்தாள் பைரவி.

சிரிப்பும், கலகலப்புமாய் இருந்தது பயணம்.

'ரவி! மீனா மேடத்தோட ஹஸ்பெண்ட் குமார் அங்கிள் என்கிட்டே என்ன சொன்னாரு தெரியுமா? நாலைஞ்சு நாளைக்கு வேலை குடுத்து அங்கயே வச்சுக்கங்க. எம்.டி. சார்.. நான் நிம்மதியாயிருக்கேன்கறாரு' என்று வம்பிழுத் தான் விஜயானந்த்.

'சொல்வாரு.. சொல்லுவாரு.. நான் இந்தப் பக்கம் வந்தவுடனே அந்த குரூப் சேர்ந்துடுவாங்க. வசதியா தண்ணி போடுவாரு' என்று மீனா கடுப்பானார்.

'ஐயய்யோ.. நம்ம அபார்ட்மென்ட்ல இதெல்லாம் வேற நடக்குதா?' என்றான் விஜயானந்த்.

'ம்ஹூம்.. அதுக்கு விடுவேனா? அவங்க ஃபிரண்ட்ஸ் வீட்டுக்குப் போயிடுவாரு.'

'உங்களைப் பிரிஞ்ச சோகமா இருக்கும்' என்று ரவி இழுக்க ரவி விஜய் இருவரும் இடி இடியென்று சிரித்தார்கள்.

'பாரு.. பைரவி! இவங்க ரெண்டு பேரும் சேர்ந்தா இந்த மாதிரி என்னைக் கிண்டல் பண்றதுன்னா ரொம்ப இஷ்டம்' என்றார் மீனா.

'நானும் விட்டர்றதுதான்.. ஏதோ ஒரு நாளைக்குத் தானே போகட்டும்..' என்று சிரித்தார் மீனா. 'அதனால என்ன? சந்தோஷமாத்தான் இருக்கட்டுமே?' என்றார்.

மறுபடியும் இளைஞர்கள் இருவரும் சிரித்தார்கள்.

'யாரைச் சொல்றீங்க? எங்களையா? உங்களவரையா?' என்றான் ரவிக்குமார்.

'இரண்டு பேரையும்தான்' என்றார் மீனா.

இரண்டு நாட்கள் மைசூரில் தங்கினார்கள். இடையிலே ஒரு அரை நாள் தனக்கு அனுமதி கேட்டு வாங்கிப் போனார் மீனா.

ரவிக்குமார் ஒதுங்கிக் கொண்டதால் தானே ஆர்ட் காலரிக்கு அழைத்து வந்திருந்தான் விஜய்.

திரும்பத் திரும்ப அமைதியாக வந்தார்கள். வழியில் ஒதுக்குப்புறமான இடம் ஆனால் ஆட்களின் போக்கு வரத்து இருக்கிற இடமாக ஒரு பார்க்கில் நிறுத்தினான்.

இறங்கி ஒரு சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தார்கள்.



'பைரவி.. உங்கிட்டப் பேசணும்' என்றான்.

'சொல்லுங்க.. சார்!' என்றாள் உற்சாகமாக.

'பைரவி இதைக் கேளுங்க. வர வர என் நிலைமை ரொம்ப மோசமாயிட்டு வருது' என்றான்.

'ஏன்.. சார்! உடம்பு சரியில்லையா?' என்றாள் கலவரமாக.

'இல்லல்லே! உடம்பெல்லாம் நல்லாத்தான்.. இருக்கு. மனசு.. மனசுதான்.. ஒரு மாதிரியாயிட்டு இருக்கு..' என்றான்.

அவள் புரியாமல் பார்த்தாள்.

'பைரவியைப் பார்க்காம இருக்க முடியாதுன்னு அடம் பிடிக்குது. மூணு நாள் பிரிவைத் தாங்காமே காலங் கார்த்தாலே ரயில்வே ஸ்டேஷன்ல வந்து நிக்கறேன். பைரவிக்குப் பிடிச்ச அந்த ஓவியத்தைக் காட்டியே தீரணும்னு.. பிடிவாதம் பிடிக்குது. என்னடா காரணம் சொல்லி மைசூருக்குக் கூட்டிட்டு வர்றதுன்னு குறுக்கு வழியெல்லாம் யோசிக்குது' என்றான் கிறக்கக் குரலில்.

அவள் திகைத்துப் போய் எழுந்து நின்றாள்.

'பைரவி... ப்ளீஸ்.. உட்காரு!' என்றான் அதே கிறக்கக் குரலில்.

அவள் மறுபடியும் சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தாள். முகம் சிவந்து போனது.

'பைரவி...' என்றான்.

அவள் தலையைக் குனிந்து கொண்டாள். தொண்டை யில் ஏதோ அடைக்கிறாற்போல் இருந்தது.

'நான்.. நான்.. இப்படியெல்லாம் யோசிச்சதில்லே..' என்றாள்.

'இனிமே.. யோசிச்சுப் பாரு.. பிடிக்குதான்னு பாரு..' என்றான்.

பைரவியின் உள்ளத்தில் தன் சகோதரன் தியாகு 'அக்கா.. பணக்காரங்ககிட்டே விலகி யிருக்கனும். நமக்கு மானாபிமானம்தான் பெருசு' என்று சொன்னது ஓங்கி ஒலித்தது.

'நாங்க.. ஏழைங்க.. சார் வசதியில்லாதவங்க.. எங்களுக்கு மானாபிமானம்தான் பெருசு..' என்றாள் தடுமாறியபடி.

அவன் புன்னகைத்தான் 'பைரவி.. எப்ப உன்னை நினைக்க ஆரம்பிச்சேனோ.. அன்னைக்கிருந்து உன்னுடைய மான அவமானங்கள் என்னோடதாவும் தான் ஆயிடுச்சு..' என்றான் கெஞ்சலாக.

அவள் அவனை நிமிர்ந்து பார்க்கவில்லை. மாறாக தரையைப் பார்த்தபடி.

'எனக்கு.. எனக்கு.. யோசிக்க டைம் வேணும்' என்றாள்.

'எடுத்துக்க.. எவ்வளவு டைம் வேணும்னாலும் எடுத்துக்க.. ஆனா, நெகடிவ்வா மட்டும் சொல்லிடாதே. அப்புறம் உள்ளுக்குள்ளேயே செத்துப் போயிடுவேன்' என்றான்.

அவள் பேசாமல் அமர்ந்திருந்தாள்.

கனத்த மௌனத்திற்குப் பிறகு எழுந்தார்கள்.

'பைரவி.. ஒண்ணு மட்டும் புரிஞ்சுக்க. இதுவரைக்கும் எந்தப் பொண்ணுகிட்டயும் நான் இப்படிக் கெஞ்சிகிட்டு நின்னதில்லே. என் மனசுக்கு ஏத்த லைஃப் பார்ட்னர் நீதான். இது வெறும் பேச்சு இல்லே. இப்ப நான் பிரபோஸ் பண்றேன்.. புரியுதா?' என்றான்.

அவள் வேறுபக்கம் பார்த்துக் கொண்டு தலையாட்டினாள்.

மறுபடியும் நால்வருமாகச் சென்னைக்கு அன்றே புறப்பட்டார்கள். திரும்பக் காரில் வரும்போது ரவியை ஓட்டச் சொல்லிவிட்டு அவன் கண்களை மூடிக் கொண்டு அமர்ந்து வந்தான் என்றால் பைரவி கலங்கிப் போய் அமர்ந்து வந்தாள்.



மீனா மேடமும், ரவியும்தான் கலகலப்பாகப் பேசிக் கொண்டு வந்தார்கள்.



## 13

பைரவிக்கு உறக்கம் வரவில்லை.

தான் என்ன பெரிய ராதிகா? ரொம்ப வசதியானவளா? இல்லையே! தங்கள் அலுவலகத்திலேயே எத்தனை பெண்கள் அழகழகாக, ஸ்மார்ட்டாக, டிரிம்மா வருகிறார்கள்.

வந்த புதிதில் அவளுடைய எளிமையான அலங்காரம் பார்த்துக் கொஞ்சம் இலேசாகத்தான் நினைத்தார்கள். ஆனால் அவள் பேசுகிற ஆங்கிலம் பார்த்து அசந்து போனார்கள். நன்றாகப் பழகினார்கள். ஆனால், அவளுக்கு அவர்கள் எல்லாரையும் பார்த்து ஆச்சரியம்தான். அதனாலேயே அமைதியாக இருந்து கொள்வாள். அப்படியிருக்கப் போயும் போயும் தன்னையா எம்.டி.க்குப் பிடிக்க வேண்டும்? என்று எண்ணிக் கொண்டாள்.

ஒரு மனது கேட்டது. 'ஏன் உனக்கு எம்.டி.யைப் பிடிக்கலையா?' என்று.

'பிடிக்காமலா.. ரொம்பவே பிடிக்குது. அதற்காக இவ்வளவு பெரிய விஷயத்தைப் பற்றி உடனடியாக யோசித்து விட முடியுமா? தியாகுவிடம் பேசலாமா? சின்னப் பையன். ஆனால், இதுவரையிலும் அவனிடம் எதையும் மறைத்ததுமில்லை.

முடிவாக அவனிடம் இது பற்றிப் பேச வேண்டாம் என்று முடிவு செய்தாள்.

தானே இரண்டு விதமாகவும் விவாதம் செய்து பார்த்தாள்.

'எம்.டி.க்கென்ன பணக்காரர், கொஞ்ச நாள் பழகிட்டு பிடிச்சுது பழகினேன். இப்பப் பிடிக்கலை'ன்னு சொன்னா என்ன செய்வே? இன்னொரு மனது சொன்னது.

'இல்லையே அப்படி நினைக்கறவரா இருந்தா.. பிரபோஸ் பண்றேன்னு சொல்ல மாட்டாரே..' என்றது.

மறுநாள் மெதுவாகக் கலாவிடம் விசாரித்தாள்.

'ஏன்.. கலா.. எம்.டி.யோட கேரக்டர்.. எப்படி?' என்றாள்.

கலா ஆச்சரியமாய்ப் பார்த்தாள்.

'இல்லை இந்தத் தடவை ஊருக்குப் போனப்ப அம்மா வுக்குத் தெரிஞ்சவங்க ஒரு அலயன்ஸ் சொன்னாங்க. நம்ம எம்.டி.சாருக்குப் பொருந்துமாம். கேட்டாங்க..' என்றாள்.

'நீ என்ன சொன்னே?'

'அம்மா.. எங்களோடவெல்லாம் நல்லாத்தான் பழகறார். அன்பானவர் மத்தபடி எதுவும் தெரியாதுன்னேன்' என்றாள்.

கலா புன்னகையுடன் சொன்னாள்.

'தங்கம்.. பைரவி.. தங்கமானவர். பெண்கள்கிட்டே ஏதோ ரொம்பப் பதவிசாப் பழகறவர் மாதிரி நடிப்பாங் களே சில பேர். அப்படியெல்லாம் இல்லே. இயல்பா இருப்பார். அவங்க வீட்டு விசேஷங்களுக்கெல்லாம் போயிருக்கோம். உறவுக்காரங்க நிறையப் பேர் வருவாங்க. அழகான பொண்ணுங்க நிறைய வருவாங்க. நின்று ஒரு வார்த்தை ரெண்டு வார்த்தை சமமா சிரிச்சுப் பேசுவாரு. விலகிடுவாரு எங்களையெல்லாம் நல்லா அன்பா நடத்து வாரு..' என்றாள்.

அன்றிரவு யோசித்தாள்.

'இப்படியெல்லாம் ஏன் விசாரிக்கிறோம். எல்லாம் தியாகு அன்றைக்குச் சொன்ன ஒரு வார்த்தையினால், தான் பார்த்த இந்த ஏழெட்டு மாதங்களில் வேலை வாங்குவதில் கடுமையாக இருப்பாரே தவிர மற்றபடி நாகரீகமானவர் என்றுதான் தோன்றியது.



'ஏன்.. இந்த அனாலிசிஸ்ஸையெல்லாம் விட்டுட்டு உனக்குப் பிடிக்குதா.. இல்லையா அதைச் சொல்லு..' என்றது உள்மனது.

மனது ஒரு வழியாக ஒரு முடிவுக்கு வந்தது.

விஜயானந்த்.

'டைம் எடுத்துக்க.. நல்லா யோசிச்சுச் சொல்லு..' என்று சொன்னதற்குப் பிறகு அவளைத் தொல்லைப் படுத்தவே யில்லை. அது பற்றி மறுபடியும் பேசவும் இல்லை.

அந்த விஷயம் நடந்தும் கூட இன்றைக்குப் பத்து நாட்களுக்கு மேல் இருக்கும். அவள்தான் அவன் முகத்தை நிமிர்ந்தே பார்க்கவில்லை.

அலுவலக விஷயங்கள் பேசினார்கள் ஓரிருமுறை. அதுவும் அவன் நேரடியாக அவளை அடிக்கடி பார்க்க வேண்டிய அவசியமும் இருக்கவில்லை.

இன்றைக்கு அவளுக்கு உறக்கம் பிடிக்கவில்லை. தெளி வான ஒரு முடிவுக்கு வந்தாள். இந்த இடைப்பட்ட நாட் களில் அவன் ஒரு வசதி அவளுக்கு செய்து கொடுத்தான்.

போன் வசதி.

ரவிக்குமார் வழக்கம்போல் குறும்பாகச் சிரித்தபடி ஏற்பாடு செய்தானே ஒழிய வேறொன்றும் பேசவில்லை.

அவள் தனியாக இருந்ததால் ஏதாவது உதவி தேவை யென்றால் அழைப்பதற்கு இந்த ஏற்பாடாம். அவள் கொடுத்த காபியை குடித்தபடி கனெக்‌ஷன் கொடுப்பதை நின்று பார்த்துக் கொண்டிருந்த ரவிக்குமார் சொன்னான்.

வேலை செய்பவர்கள் போனதற்குப் பிறகு பைரவி அவனிடம்

'ரவி.. சார்! எதுக்கு எப்பப் பார் சிரிக்கறீங்க?' என்றாள்.

அவன் உங்களுக்கு நிஜமாகவே புரியவில்லையா என்பது போல் பார்த்த பிறகு சொன்னான்.

'பைரவி.. மேடம்.. நீங்க எவ்வளவு பெரிய அதிர்ஷ்ட சாலின்னு உங்களுக்குப் புரியலே. எம்.டி. வசதியானவர் மட்டுமில்லே மேடம்.. அவருக்கு எவ்வளவோ பெரிய இடத்துத் தொடர்புகள் இருக்கு. அவங்க வீடுகள்ல எல்லாம் அவரு பொண்ணு கேட்க மாட்டாரான்னு எதிர்பார்த்து கிட்டு இருக்காங்க. ஆனா.. அவரு.. உங்க முகத்தைப் பாத்துக்கிட்டு எப்ப பதில் சொல்லப் போறீங்கன்னு காத்துகிட்டு இருக்காரு' என்றான்.

பைரவி முணுமுணுப்பாக 'உங்ககிட்டே சொல்லிட்டாரா?' என்றாள்.

'சொன்னாரு ரெண்டு நாளைக்கு முன்னாடிதான் சொன்னாரு.. என்றான் ரவிக்குமார்.

'ஓ!' என்றாள். மேலே ஒன்றும் பேசத் தோன்றாமல் நின்றாள்.

'என்ன முடிவு பண்ணியிருக்கீங்க?'

அவன் அவளை நிமிர்ந்து பார்த்தான். 'நீங்க சொன்ன மாதிரித்தான்.. சார்.. அவ்வளவு அதிர்ஷ்டம் எனக்கு இருக்கான்னு எனக்கே பயமாயிருக்கு.. அவருக்குப் பிடிக்கற அளவுக்கு என்கிட்டே என்ன இருக்குன்னு எனக்குப் புரியலே..' என்றாள் முகம் சிவக்க.

'முக்கியமான ஒண்ணு இருக்கு. நல்ல மனசு. எந்தச் சூழ்நிலையையும் எதிர்கொள்ற பக்குவம் இருக்காம்.'



அவள் வியப்பாய்ப் பார்த்தாள்.

'நான் சொல்லலப்பா. அவருதான் சொன்னாரு' என்று சிரித்தான்.

புறப்படும்போது 'இன்னைக்கு நைட் பேசறீங்களா?' என்றான்.

'எனக்கு பயமாயிருக்கு..' என்றாள் தடுமாற்றத்துடன்.

'சரிப்பா.. நீங்களாச்சு.. அவராச்சு..' என்று தோளைக் குலுக்கிவிட்டுப் போனான்.

ஒருவேளை எம்.டி. போன் செய்தால் தான் எப்படி பதில் சொல்லப் போகிறோம் என்பதே புரியவில்லை அவளுக்கு.

ஆனாலும் சொன்னாள்.

சொல்ல வைத்தான்.

* * *

**போ**னில் முதல் முதலாகத் தியாகுவிடம் பேசினாள்.

மாலா வீட்டுக்கு வரவழைத்துப் பேசினாள். அவன் பெரிய மனுஷனாக 'அதென்ன.. உனக்கு மட்டும் போன் வசதி செஞ்சு குடுத்திருக்காரு.. உங்க எம்.டி.' என்றான்.

'டேய்! எதையெடுத்தாலும் சந்தேகக் கண்ணோடவே பாக்காதே. திடீர் திடீர்ன்னு ஏதாவது கணக்குல சந்தேகம் வரும். கோயமுத்தூர் ஏதாவது திடீர்ன்னு போகச் சொல்வாங்களாயிருக்கும். ஆபீஸ் விஷயத்துக்காகத்தான்டா..' என்றாள்.

'சரிக்கா.. டேக் கேர்..!' என்றான்.

'சரிப்பா..!' என்றாள் பைரவி நல்ல பிள்ளையாக. ஆனால், போனை வைக்கும்போது முழுவதுமாகத் தான் உண்மை பேசவில்லையென்பதையும் உணர்ந்தபோதும், முதல் முதலாகத் தன் சகோதரனிடம் பொய் பேசியிருக் கிறோம் என்பதையும் உணர்ந்த போதும் அது குறித்துக்

தனக்கு எந்த வருத்தமும் தோன்றவில்லையென்பதையும் நினைத்தபோது அவளுக்குச் சிரிப்பாகவும் வந்தது. கவலையாகவும் இருந்தது.

இரவு பத்து மணி வரையிலும் கூடக் காத்திருந்தாள் விஜயானந்திடமிருந்து போன் வரவில்லை.

அதே வேளை அங்கே விஜயானந்த் பைரவியிடம் இருந்து போன் வரக் கூடும் என்ற எதிர்பார்ப்பில் காத்துக் கொண்டு படுத்துக் கொண்டிருந்தார். அதை அவள் அறியவில்லை.

பத்து மணிக்கு தயக்கத்தோடு பைரவி விஜயானந்தின் செல் நம்பருக்கு போன் அடித்தாள். பிறகு அச்சமாக இருக்கவே ஆப் செய்து விட்டாள்.

விஜயானந்த் அதையே வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டான்.

மறுபடியும் அழைத்தான்.

போன் அடிக்கவும் நடுக்கமும் எதிர்பார்ப்புமாக போனை எடுத்தாள்.

'ஹலோ!' என்ற விஜயானந்தின் குரல் ஒலிக்கவும் காலம் ஒரு கணம் தன் ஓட்டத்தை நிறுத்தி விட்டாற் போல் உணர்ந்தாள்.

'ஹலோ!' என்றாள் குரலே எழும்பாத ஒரு குரலில்.

'கூப்பிட்டிருந்தே போல இருக்கே?' என்றான்.

'ம்...!' என்றாள்.

'என்ன விஷயம்மா?' என்றான். குரல் குழைந்து போயிருந்தது.

'இல்லே! போன் பெஸிலிட்டி செஞ்சு குடுத்ததுக்குத் தாங்க்ஸ் சொல்லலாம்னு..' என்று இழுத்தாள்.

அவன் இறக்கக் குரலில் சிரித்தான்.

'லையர்!' என்றான் அடிக்குரலில்.



அவள் மௌனமாகிவிட்டாள். சற்று நேரம் மௌனத்தில் கழிந்தது. அவன் லேசாகப் பெருமூச்சு விடுவது இந்தப்புறம் தெளிவாகக் கேட்டது.

'ஹைட் அண்ட் சீக்னு முடிவு பண்ணிட்டே.. நடத்து..' என்றான்.

'எனக்கு.. எனக்கு பயமாயிருக்கு..' என்றாள்.

'என்ன பயம்?'

'உங்க வசதி பார்த்து.. பர்ஸனாலிட்டி பார்த்து.. உங்க லெவல் பார்த்து.. உங்க உயரம் பார்த்து' என்றாள் படபடப்பாக.

அவன் கலகலவென்று சிரித்தான்.

'இது ஒண்ணும் பிரச்சினையேயில்லை. தேவியாரே! என் உயரத்துக்கு நீங்க ஒரு ஸ்டூல் போட்டுக்கலாம். இல்லே.. நான் குனிஞ்சு..' என்று முடிக்கு முன்னே அவள் டக்கென்று போனை வைத்து விட்டாள்.

வெட்கமும் நாணமுமாய் முகத்தைத் தலையணையில் புதைத்துக் கொண்டாள்.

மறுபடியும் போன் ஒலித்தது. அவள் தயக்கத்துடன் எடுத்தாள்.

'என்ன பைரவி! டக்குன்னு வச்சுட்டே!' என்று குறைப்பட்டுக் கொண்டான்.

'பின்னே.. நீங்க.. அப்படி?' என்று முடிக்காமல் விட்டாள்.

'ஓ.. கே.. ஓ.. கே..? அடுத்து.. என்ன.. சொல்லு?'

'அடுத்து என்னன்னா? என்ன அர்த்தம்?' என்றான் தயக்கத்துடன்.

'இங்க.. பார்! இன்னும் முழுமையான ஸ்டேட்மெண்ட் அந்தப் பக்கம் இருந்து எனக்கு வர்லே. சே எஸ் ஆர் நோ..' என்றான்.

'நோ'ன்னா.. எதுக்கு இவ்வளவு தூரம்.. பேசறேன்..' என்றாள் சற்றுத் துணிச்சலாக.

'நோ.. டில்லி டாலியிங்.. மேடம்.. சே எஸ்..' என்றான்.

அவள் முகம் சிவக்க.. 'எஸ்!' என்றாள்.

'தட்ஸ் குட்!' என்று சீரியஸானான்.

'சரி.. நான் காலையில உன்னைப் பாக்கணுமே. 'எங்கயாவது போலாமா?' என்றான்.

'ம்.. மயிலாப்பூர் கற்பகாம்பாள் கோயிலுக்கு?' என்றாள்.

அவன் கடகடவென்று சிரித்தான்.

'கோயில்ல வச்சா பேசப்போறே?'

'இல்லே..! முதல் முதலா.. நாம சேர்ந்து போற இடம்.. கோயிலா இருக்கட்டுமேன்னு..

'ஓ.கே! கோயில் போறோம். நல்ல பிள்ளைகளா சாமி கும்பிட்டுட்டு வெளிய எங்கயாவது டிபன் சாப்பிடறோம். அப்பப் பேசுவோம்.' என்றான்.

'ம்!'

மறுபடியும் 'பைரவி' என்றான் கிறக்கக் குரலில்.

'ம்..!'

'ஹேய்! நாம அந்தப் பூங்குடி கிராமத்துல இருந்தப்ப ஒரு வாண்டுக் குழந்தை உன்னோட பின்னல் கடைசியில பந்தாச் சுருண்டு நிக்குமே அதைக் கையில எடுத்துட்டு விளையாடும். அது என் மனசுக்குள்ளயே நிக்குது. தெரியுமா?' என்றான்.

'...!'

'என்ன பேச்சைக் காணோம்?'

'இங்கே தலைக்கு வெளியேதான் விஷயம் இருக்கு. உள்ள ஒண்ணுமே இல்லேங்கறீங்க.' என்றாள் சிணுங்கலாக.



அவன் சிரித்தான். 'மை டியர் ஸ்வீட் ஹார்ட். உன்கிட்டே நான் தெரிஞ்சுகிட்ட பிளஸ் மைனஸ்ஸெல்லாம் நிறைய சொல்லத் தயார். இன்னும் தெரிஞ்சுக்க வேண்டியதைப் பத்தி.. நிறைய..'

'ப்ளீஸ்.. சார்!'

'ஹேய்.. சாரா? ஸ்டார்ப் காலிங் மீ லைக் தட்.. விஜய்ன்னு கூப்பிடு.. இல்லே ஆனந்த்ன்னு கூப்பிடு.. இல்லே.. உனக்குப் பிடிச்ச மாதிரி.. வேற எப்படியாவது கூப்பிடு..' என்றான்.

'ப்ளீஸ்!' என்றாள் மறுபடியும்.

அவன் சிரித்தான்.

'ஓ.கே. டேக் ரெஸ்ட். மார்னிங் பார்ப்போம். நேர்ல நீ சம்மதம் சொல்றதை நான் பக்கத்துல இருந்து பாக்கணும். கெட் ரெடி.... பார் தட் மேடம்' என்றான் சிரித்துக் கொண்டே போனை வைத்தான்.

படபடப்பாகவும் இருந்தது. பரவசமாகவும் இருந்தது. ஆனால், இன்னொரு மூலையிலிருந்து ஒரு குரல்.

'இதெல்லாம்.. அளவு மீறின அதிர்ஷ்டம்.. உனக்கு வாய்க்குமோ வாய்க்காதோ தெரியலே. அளவு மீறி ஆசைப்படறே!' என்று எச்சரித்துக் கொண்டே இருந்தது.

வாதப் பிரதிவாதம் நடந்து கொண்டே இருந்தது. எல்லாம் காலையில அவனைப் பார்க்கும் வரைதான்.

★ ★ ★

ஆழ்ந்த பச்சையில் நல்ல இடைவெளியில் கோடுகள் போட்ட டீ ஷர்ட் போட்டிருந்தான். எப்போதும் அலுவலகத்தில் டையுடன் ஃபார்மல் உடைகளிலேயே அவனைப் பார்த்திருந்தாள்.

பூங்குடி கிராமத்தில் கொஞ்சம் வித்தியாசமாக இருந்தான். அதற்குப் பிறகு இப்போதுதான் இப்படிப் பார்க்கிறாள்.

சுருண்ட தலைமுடிக்கும், முகத்தில் தெரிந்த மலர்ச்சிக்கு மாக மிக அழகாக இருந்தான் விஜயானந்த்.

ஷேர் ஆட்டோ பிடித்து திருவான்மியூர் கோயிலுக்கு எதிரில் இறங்கி நின்று காத்துக் கொண்டிருந்தவளைப் பிக்கப் செய்து கொண்டான்.

கோயிலில் இறங்கியதும் பிரகாரத்தில் நடந்தார்கள்.

அவள் வெட்கத்துடன் வலக்கையைப் பின்னே ஒதுக்கிக் கொள்வதைப் பார்த்தவன் சட்டென்று நின்றான்.

'இரு.. எதுக்கும் செக் பண்ணிக்கறேன்' என்று அவள் வலக்கையைப் பிடித்தான்.

'என்ன.. கையை மறைச்சுக்கறே? அன்னைக்கு அந்த ரௌடிங்களை அடிக்கறதுக்குக் குச்சி வச்சிருந்தியே.. அது மாதிரி.. ஏதாவது வச்சிருக்கியா?' என்றான்.

மணிக்கட்டை அழுத்திக் கொடுத்தான். பிறகு கையை எடுத்து விட்டான். சிரித்தான். அவள் படபடத்துப் போய் விட்டாள்.

'பயப்படாதே! முதல் முதலாக் கோயிலுக்கு வர்லாம்னு சொன்னயா, அதான் முதல் முதலாய் கோயில்ல வச்சுத் தொட்டுர்லாம்னு பார்த்தேன்' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை. முகம் சிவக்க நடந்து வந்தாள்.

அவனும் சிரித்துக் கொண்டான்.

வரும்போது கொட்டிவாக்கம் தாண்டி கார் ஓடியது. அவள் கேள்விக்குறியாய்ப் பார்த்தாள்.

'பைரவி இங்க நிறைய ரோடுகள் பீச்சில முடியும். அது மாதிரி ஒரு ரோட்டில டர்ன் எடுத்து பீச்சுக்குப் போவோமா?' என்றான்.

அவள் சரியென்றாள்.

அதிகாலையிலேயே புறப்பட்டு விட்டதால் இப்போது ஏழு மணிதான் ஆகியிருந்தது.



விஜயானந்தின் பங்களா நீலாங்கரையில் இருந்தது.

கொட்டிவாக்கத்தில் அபார்ட்மென்ட்ஸ் இருந்தது போலவே இரண்டு மூன்று இடங்களில் இருந்தது. அவை தவிர யுனிவர்சிட்டி காலனிக்கு அருகில் இடம் இருந்தது. அங்கே ஒரு கெஸ்ட் ஹவுஸ் இருந்தது.

அழைத்துப் போனான்.

கடலைப் பார்த்த மாதிரி இருந்த சிட் அவுட்டில் அமர்ந்து கொண்டார்கள்.

சற்று நேரம் அமைதியாக இருந்தார்கள். பிறகு,

'பைரவி!' என்றான்.

'ம்..!'

'நேத்து நைட் ரொம்ப சந்தோஷமா இருந்தேன். ஆனா, தூக்கம் வர்லை. ஹாப்பியா இருந்தாலும் தூக்கம் வராதோ?' என்றான்.

'அப்படித்தான் சொல்வாங்க!' என்று முணுமுணுத்தாள்.

'நீ தூங்கினியா..?'

'நானும்.. நானும்.. சரியாத் தூங்கலே..' என்றாள்.

'ஏன்..?' என்றான் இறக்கக் குரலில்.

'முதல் முதலா தியாகு கிட்டே பொய் சொன்னேன்' என்றாள்.

'போச்சுரா.. வேறு ஏதாவது சொல்லுவியாக்கும் பார்த்தேன்..' என்றான்.

அவள் தவிப்புடன் வேறு பக்கம் பார்த்தாள்.

'ஹேய்.. ரிலாக்ஸ்.. ஏன் இப்படி ரெஸ்ட்லெஸ்ஸா இருக்கே..! உன்னோட சம்மதம் இல்லாம.. முறையில்லாம எதுவும் நடந்துராது.. புரியுதா..?' என்றான்.

அதற்குப் பிறகுதான் தெளிவானாள்.

ஆட்கள் அங்கேயே ஒரு சின்ன டேபிள் கொண்டு வந்து வைத்து டிபன் பரிமாறினார்கள். தனிமை கொடுத்துப் போய் விட்டார்கள்.

'சாப்பிடு..' என்றான். பிறகு 'முதல்ல.. ஸ்வீட் சாப்பிடு..' என்றான். ஸ்பூனுடன் இருந்த தன் பிளேட்டை அவள் பக்கம் நகர்த்தினான்.

'சொல்லு பைரவி! என் பிரபோஸலுக்கு பதில் எஸ்ஸா.. நோவா?'

அவள் அவன் கண்களை நேராகப் பார்த்தாள்.

'எஸ்.' என்றாள்.

'தட்ஸ் குட்.. டேக் யுவர் ஷேர்' என்றான். அவள் ஸ்பூனில் கொஞ்சமாக எடுத்து வாயில் 'போட்டதற்குப் பிறகு தட்டைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டான்.

'பயப்படாதே! பைரவி.. அப்பப்ப ஏதோ கொஞ்சம் விளையாடுவேன். சீரியஸா எடுத்துக்க வேண்டியதில்லை.'

'எனக்கு உங்க மேலே கோபம்' என்றாள்.

'ஏன்?' என்றான். ரசனையுடன் பார்த்தான்.

'தியாகுகிட்டே பொய் சொல்ல வச்சுட்டீங்களே?' என்றாள்.

சிரித்தான்.

'இந்த விஷயமே இப்படித்தான்! சுத்தியிருக்கறவங்க எல்லாரு கிட்டயும் பொய் சொல்லலாம். ஆனா, நமக்குள்ளே பொய்கள் கூடாது. இப்ப நான் மட்டும் என்ன அம்மா அப்பாகிட்டே பைரவியை மீட் பண்ணப் போறேன்னா சொல்லிட்டு வந்திருக்கேன்?' என்று சிரித்தான்.

இயல்பாகப் பரிமாறினாள்! 'அந்த வடையை இங்க குடு' என்று எடுத்துக் கொண்டான். 'சட்னி ப்ளீஸ்!' என்று வாங்கிக் கொண்டான்.



உற்சாகமாகத் தன் தொழில்களைப் பற்றிச் சொன்னான். ஒரு மணி நேரம் ஓடியதே தெரியவில்லை. பிறகு,

'புறப்படலாமா?' என்று எழுந்தான்.

'ஏன்.. பைரவி.. அப்பா அம்மாகிட்டே பேசிடவா?' என்றான்.

'கொஞ்சம் டைம் குடுங்க.. நான் எங்க வீட்ல பேசிடறேன். அப்புறம்.. நான் இந்த எம்.காமை முடிச்சர்றேன்..' என்றாள்.

அவன் குறும்பாய்ச் சிரித்தான்.

'ஆமா.. முடிச்சுடு.. அப்புறம்.. கொஞ்சம் நாளைக்கு வேற பாடம் படிக்க வேண்டியிருக்கும்..' என்றான்.

அவள் சட்டென்று திருப்பிக் கொண்டு அவனுக்கு முன்பே நடந்தாள்.

அவன் சிரிப்பு அவளைத் தொடர்ந்தது.



## 14

ஒவ்வொரு மாதமும் சனி ஞாயிறுகளில் செமினாருக்குப் போயிருந்ததால் இப்படி நான்கைந்து நாட்களுக்கு ஒன்றாகப் போக வேண்டிய அவசியம் இருந்திருக்காது. இடையிலே கடந்த சில மாதங்களாக அவள் செமினாரைப் பற்றி நினைக்கவே முடியவில்லை. விட்டுப் போன நான்கைந்து நாள் வகுப்புக்களையும் முடிப்பதற்கு இது நல்ல வாய்ப்பு என்ற முறையில் மதுரை போக நினைத்தாள்.

போயும் சேர்ந்தாகி விட்டது.

மதுரையில் நண்பர் ஒருவரின் அலுவலகம் சார்ந்த கெஸ்ட் ஹவுஸில் தங்க ஏற்பாடு செய்தான் விஜயானந்த்.

'பைரவி! கார் அனுப்பட்டுமா?' என்றான்.

'வேண்டாம்!' என்றாள் அவசரமாக.

அவன் சரி என்று விட்டு விட்டான். அவ்வளவு இலகுவாக அவன் ஏற்றுக் கொண்டது அவளுக்கு ஆச்சரியம்..

தோழிகளிடம் பஸ் ரூட் கேட்டுக் கொண்டு வந்திருந்தாள். அன்றைக்கு ஏற்பட்ட அனுபவத்தின் காரணமாக டாக்ஸியில் தனியாகப் போவது ரிஸ்க் என்று நினைத்தாள்.

எட்டரை மணிக்கே பஸ் ஸ்டாப் வந்து விட்டாள். பஸ் ஸ்டாண்டில் இரண்டு மூன்று பெண்கள் செமினார் போவதற்காக நின்று கொண்டிருந்தார்கள். பயம் தெளிந்தது.

பஸ்ஸில் கூட்டம் நிறைய இருந்தது. எப்படியோ தொற்றிக் கொண்டாள். கோயமுத்தூர் நெருக்கடிகளில் போய் பழக்கம் என்பதால் அவளுக்கு ஒன்றும் வித்தியாசமாகத் தெரியவில்லை.

இரண்டு ஸ்டாப்புகள் போயிருக்கும். அவளுக்கு விஜயானந்த் நினைவு வந்தது.

'என்ன செய்து கொண்டிருக்கிறாரோ?' என்று எண்ணிக் கொண்டாள். முகத்தில் புன்னகை உறைந்தது. வற்புறுத்தி ஒரு செல்போன் கொடுத்திருந்தான்.

'ஹேய்! கொண்டு போ. நானும் எப்ப வேண்ணாலும் கூப்பிடலாம். நீயும் கான்டாக்ட் செய்வே. கொஞ்சம் நிம்மதியாயிருப்பேன்' என்றான்.

அவனுடைய திருப்திக்காக எடுத்துக் கொண்டு வந்தாள். ஆனால் அதைப் பற்றி தியாகுவுக்குக் கூடத் தெரிவிக்கவில்லை. இரண்டாவது பொய் என்று நினைத்துக் கொண்டாள்.



செல்போன் ஒலித்தது. கூட்டத்தில் நின்று ஒரு கையில் மேல் கம்பியைப் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள். கண்டிப்பாக விஜயானந்தாகத்தான் இருக்கும். வேறு யாருக்கும் அவளிடம் செல்போன் இருப்பதே தெரியாது என்று எண்ணிக் கொண்டே எடுத்தாள்.

'ஏங்க! இங்கே பஸ்ல ரொம்பக் கூட்டம். செமினார் நடக்கற இடத்துக்குப் போனவுடனே கூப்பிடட்டுமா?' என்றாள்.

'அதெல்லாம்.. இருக்கட்டும். கொஞ்சம் திரும்பிப் பாரு..' என்றான்.

திரும்பிப் பார்த்தாள்.

கண்கள் தெறித்து விழுகிறாற்போல் அவனைப் பார்த்தாள்.

கூட்டத்தில் லாவகமாகப் புகுந்து அவள் நிற்கிற மையப் பகுதி நோக்கி வந்து கொண்டிருந்தான் விஜயானந்த்.

அவள் திகைத்தாள்.

அவன் அருகில் வந்து நெருங்கி நின்றான்.

'நீங்க எங்கே.. இங்கே?' என்றாள் கிசுகிசுப்பாய்.

'சும்மா.. ஒரு த்ரில்லுக்காகத்தான். பாரு இப்படி நிக்கிறதுக்குத்தான்' எனறான்.

அவள் முன்னே பார்ப்பது போல் லேசாகத் திரும்பிக் கொண்டு நின்றாள். முகம் சிவந்து போய்க் கிடந்தது.

சற்றுத் தொலைவு போனதும் லேசாக நிமிர்ந்து பார்த்தாள். அவன் கிறக்கப் பார்வையுடன் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தவுடன் வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அவன் அவளுக்கு மட்டுமே கேட்கும்படிச் சிரித்தான்.

'இன்னும் எவ்வளவு பஸ் ஸ்டாப் இருக்குது' என்று அவள் வலத்தோளில் முகம் பதித்துக் குனிந்து தெருவைப் பார்த்தான்.

'மூணு பஸ் ஸ்டாப்!' என்றாள் முணுமுணுப்பாக.

'ம்..!' என்றான்.

முன்னாலிருந்து பின்னே தள்ளினார்கள். இன்னும் அவனிடம் நெருங்கி நிற்க வேண்டி வந்தது. கிட்டத்தட்ட அவன் மார்பில் ஒட்டிக் கொண்டு நின்றாற்போல் நின்றாள்.

'பாத்தியா' இப்படிப் பரிசெல்லாம் கிடைக்குதில்லே!' என்றான் சிரிப்புடன் மெல்லிய குரலில்.

ப்ளீஸ்.. ஆனந்த்!' என்றாள் தவிப்புடன்.

'இத பார்றா! இத்தனை பேருக்கு நடுவில் பேரைச் சொல்லிக் கூப்பிடறா!' என்று மறுபடியும் சிரித்தான்.

அவள் கண்கள் படபடத்தன.

'எப்பப் பாரு.. பயப்படறே! தனியா இருக்கும்போது தொட்டா.. அடிச்சுப் போடுவியோன்னு பயம்மா இருக்கு. இங்க அப்படி பயப்பட வேண்டியதில்லை பாரு!' என்று அவள் காதுகளுக்குக் கேட்கும்படி பேசிக் கொண்டு வந்தான். அவனது இடக்கை மெல்ல அவள் இடுப்பை வளைத்தபடி இருந்தது.

பத்தே நிமிடத்தில் அவள் இறங்க வேண்டிய இடம் வந்தது. இறங்கினார்கள்.

அந்தப் பல்கலைக் கழக நடைபாதையில் சற்று தூரம் நடந்தார்கள்.

'சே! ரொம்ப இன்டீசன்ட் நீங்க!' என்று முணுமுணுத்தாள் பைரவி.



'தேங்க்ஸ்.. தேங்க்ஸ்.. பார் தி காம்ப்ளிமென்ட்' என்று மறுபடியும் சிரித்தான். ஆனால் வெகு நேரம் இருக்கவில்லை.

'வசதியெல்லாம் நல்லா இருக்கா?' ஈவ்னிங் பாக்கறேன்' செமினார் முடிஞ்சவுடன் கால் குடு' என்று வந்து பிக்கப் பண்ணிக்கறேன்' என்று தலையசைக்க கார் ஒன்று வந்து சர்ரென்று நின்றது. கிளம்பிப் போய்விட்டான்.

என்ன இருந்தாலும் அவன் வந்துவிட்டான் என்ற போதே பைரவிற்கு எல்லையற்ற நிம்மதி ஏற்பட்டது. செமினாரில் எல்லோரிடமும் உற்சாகமாகப் பழகினாள். உலகமே ஒளிமயமாகத் தெரிந்தது.

★ ★ ★

**வ**குப்புக்கள் முடிந்ததும் பரபரப்பாய் இருந்தாள். வெளியில் வந்து காத்துக் கொண்டு நின்றாள்.

அவனே காரை ஓட்டிக் கொண்டு வந்தான்.

'ஹலோ! ஹவ் டிட் இட் கோ?' என்றான்.

'நல்லாப் போச்சு' என்றாள் முன் சீட்டில் அமர்ந்தவளள் திரும்பிப் பார்ததாள்.

'ஏங்க?' என்றாள்..

'ஏங்க?!' என்றான் காரை ஓட்டிக் கொண்டே.

'எவ்வளவு முக்கியமான வேலை எல்லாம் இருக்கு. அதையெல்லாம் விட்டுட்டு நீங்க பாட்டுக்கு இங்க வந்துட்டீங்க!' என்றாள்.

'எல்லாத்தைக் காட்டிலும் ஃபேமிலி முக்கியம். தெரிஞ்சுக்க..' என்றான்.

அவள் சட்டென்று மௌனமாகி விட்டாள்.

'என்ன சத்தத்தையே காணோம்?' என்று குறும்பாகச் சிரித்தான்.

'எனக்கு என்னமோ இதெல்லாம் கனவு போல இருக்கு..!' என்றாள்.

'அது சரி! உனக்கு நனவே கனவா இருக்கு. நான் கனவையே நனவா நெனைச்சுத்தான் நாளை ஓட்டிக்கிட்டிருக்கேன். ஹேய்.. நிஜமாத்தான் சொல்றேன். நீ சரின்னு சொல்லு நாளைக்கே நான் அப்பாகிட்டே பேசறேன்.''

ஏனோ தெரியவில்லை. பைரவி உடனே சரியென்று சொல்லத் தயங்கினாள்.

'பைரவி?' என்றான் கேள்விக்குறியாய் மறுபடியும்.

'இல்லங்க.. எனக்கு சித்திகிட்ட சொல்லணும். அதுக்கு முதல்ல தியாகுவைக் கன்வின்ஸ் செய்யணும். அதோட இந்த எக்ஸாமையும் முடிச்சர்றனே?' என்றாள்.

'ஓ.கே.! எல்லாத்தையும் ஒரு த்ரீ மன்த்ஸ்ல முடிச்சிடுவியா?' என்றான் விஜயானந்த்.

'ம்..!'

'அதுக்குள்ளே.. நானும் ரெடியாயிடறேன்' என்றான். பிறகு அவள் பக்கம் திரும்பி.

'பைரவி! என்ன இருந்தாலும் பஸ் டிரிப் ஒரு சுகம்தான்.' என்றான் உல்லாசமாகச் சிரித்தான்.

'ஆமா.. இடிச்சுகிட்டு நிக்கறதுக்குன்னே சென்னையிலிருந்து வந்தீங்களாக்கும்?' என்றாள்.

'பின்னே!' என்றான் சற்றும் வெட்கமில்லாமல். பிறகு, பைரவி..! உனக்கு நிறைய வாங்கித் தரணும். உன்னை எங்கெங்கயோ கூட்டிட்டுப் போகணும்னு நிறைய ஆசைகள் கண்டிப்பா இன்னைக்கு ஷாப்பிங் உண்டு' என்றான்.

துணிமணிகள் எடுத்துக் கொடுத்தான்.

இரவு!

கெஸ்ட் ஹவுஸில் வைத்து அவள் முகத்தைக் கண்களால் விழுங்கியபடி எதிரில் அமர்ந்து கொண்டிருந்தான். அவளும் தடுக்கவில்லை. கீழே பார்த்துக் கொண்டு அமர்ந்து



கொண்டாள். ஆனால் அதே சமயம் தனது ஆசைகளையெல்லாம் லட்சியங்களையெல்லாம் சொன்னான்.

இரவு நேரம் அவள் தனியாகத் தங்க அச்சப்படக்கூடும் என்பதால் அந்த கெஸ்ட் ஹவுஸில் சமையல்காரரின் மனைவியை அவளது அறையின் வாசலில் படுத்துக் கொள்ளச் செய்தான்.

அந்த கெஸ்ட் ஹவுஸில் பெரிய ஒரு பெட்ரூம். பக்கத்திலேயே ஒரு பெட்ரூம் இருந்தது. ஒரு சின்ன ஹால் கண்ணாடியினால் இரு அறைகளாகத் தடுக்கப்பட்டிருந்தது. அவ்வளவுதான் ஆனால் கட்டிட முறை அழகாக இருந்தது.

இரண்டு பெட்ரூம்களுக்கும் நடுவே ஒரு கதவு இருந்தது.

இரவில் அவள் அயர்ந்து உறங்குகிற நேரத்தில் அந்த இடைக் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு கதவு நிலவில் சாய்ந்து கொண்டு கைகளைக் கட்டிக் கொண்டு நின்று கொண்டிருந்தான். ஆனால் உள்ளே நுழையவில்லை.

உறக்கத்தில் அவளது நிர்மலமான முகத்தில் இழையோடிய புன்சிரிப்பைக் கண்களால் பருகிக் கொண்டான்.

'மூன்றே மாதம்தான்! அப்புறம்.. நீ அங்கே.. நான் இங்கேயென்பதெல்லாம்.. இல்லை பெண்ணே! என்று எண்ணிக் கொண்டான்.

காலம் அப்படியெல்லாம் விஷயங்களை நடத்தி விடப் போவதில்லை என்பது அப்போது அவனுக்குப் புரிந்திருக்கவில்லை.

★ ★ ★

'தம்பி! என்ன பெட் காபி கூட வேண்டாம்னுட்டியாம்..' என்று தேடிக் கொண்டு வந்தார் சௌந்தரவல்லி.

முகத்தில் புன்சிரிப்புடன் கட்டிலில் குப்புறப்படுத்துக் கொண்டிருந்த விஜயானந்த் எழுந்து அமர்ந்தான்.

'இன்னைக்கு என்னமோ காபி வேண்டாம் போல இருந்தது.' என்றான்.

சௌந்தரவல்லி மகனின் முகத்தைக் கூர்ந்து கவனித்தார்.

'தம்பி என்னப்பா என்னமோ சேன்ஞ் தெரியுது?' என்றார்.

'அப்படியெல்லாம்.. ஒண்ணும் இல்லையே!' என்றான்.

'அம்மா!' என்றான். அம்மாவின் தோளைக் கட்டிக் கொண்டான்.

'ரொம்ப நாளாக் கேட்டுக்கிட்டிருந்தியே ஒரு விஷயம்... கல்யாணம்?'

'ம்.. சொல்லு.. சொல்லு!' என்றார் உற்சாகமாக.

'அந்த விஷயத்துக்கு ஒரு முடிவு கட்டிரலாம்னு பாக்க றேன்..' என்றான்.

'தம்பி!' என்றார் கண்கள் அகல விரிய.

'ஆமாம்மா!' என்றான்.

'பொண்ணு பாத்து வச்சிருக்கியா?'

'அதையெல்லாம் இப்பக் கேக்காதீங்க.. நானே சொல் றேன்..' என்றான்.

ஒத்துக் கொண்டாயே அதுவே பெரிய விஷயம் என்று எண்ணிக் கொண்டார்.

அன்றிரவே கணவனிடம் சொன்னார்.

'நானும் கவனிச்சுகிட்டுத்தான் இருக்கேன்.. சௌந் தரம்.. இப்பல்லாம் பயல் முகத்தில ஒரு மினுமினுப்பு.. எப்பவும் ஒரு சிரிப்பு..' என்று சிரித்தார்.

'எனக்கும்..உனக்கும் கல்யாணம் நிச்சயமான சமயத்தில் நான் இப்படித்தான் அலைஞ்சுகிட்டிருந்தேன்..' என்று மறுபடியும் சிரித்தார்.

'ஐய! போதுமே!' என்று வெட்கப்பட்டார் சௌந்தரவல்லி.

'சௌந்தரம்.. நீ இந்த வயசுலயும் ஆள் அழகுதான்..' என்று மேலும் சிரித்தார்.



'இப்ப.. நம்ம அழகை ஆராயறதுதான் முக்கியமாக்கும்.. என்று அவர் கோபித்துக் கொள்ள அப்பா சிந்தனையுடன் சொன்னார்.

'சௌந்தரம்.. பயல் போன வாரம் மதுரை போயிட்டு வந்திருக்கான். ரெண்டு வாரத்துக்கு முன்னாடி பெங்களூர் போயிட்,டு வந்திருக்கான். எல்லாம் பிஸினஸ் டிரிப்தான். கூடவே வேற ஏதோ பிஸினஸ் வச்சுக்கறான் போலே.'

'அப்படியா சொல்றீங்க?'

'ஏங்க.. இந்தப் பொண்ணைத்தான் கல்யாணம் செய்வேன்னு வந்து நின்னா?'

'நின்னா..? செஞ்சுவைக்க வேண்டியதுதான். களவு மணம்னு நம்ம இலக்கியத்துலயே சொல்லியிருக்கு தெரியுமா?

'ஒரு வேளை பொண்ணு வசதியில்லாத பொண்ணா இருந்தா?' என்று கேள்வி எழுப்பினார் சௌந்தரவல்லி. 'இருந்தா என்ன? ஏழு குடும்பத்துக்கு வேண்டிய வசதி நம்மகிட்ட இருக்கு. பாரு சௌந்தரம்... அவன் சந் தோஷம்.. அதுதான் எனக்கு முக்கியம்... அதுமட்டுமில்லே. அவனும் அப்படிகிப்படி.. பொண்ணையெல்லாம் செலக்ட் செய்யறவனும் இல்லே. ஏன் நீயே சொந்தத்துல எத்தனை பொண்ணுங்களைக் கொண்டு வந்து நிறுத்தினே? அழகுக்காக மயங்கறவன் இல்லே!'

சௌந்தரவல்லி மௌனமாகத் தலையசைத்தார். 'ரொம்ப அழகா ஒரு பொண்ணைச் சொன்னயே... அதுக்கு என்ன சொன்னான் தெரியுமா! அழகை வச்சுகிட்டு என்ன செய்ய? அங்கே உத்தரப் பிரதேசம்.. காலி.. ன்னுட்டு கடகடன்னு சிரிக்கறான். அது மட்டுமில்ல.. அப்பா அதுக்கு மேக்கப்புக்கு செலவு பண்ணியே நம்ம சொத்துக் காலியாயிரும்னு கிண்டல் வேற. அவன் எதிர்பார்ப்பது வேற மாதிரி. அதனால அவனுக்கு மட்டும் மனசுக்குப் பிடிச்சதுன்னு வை.. யாரு தடுத்தாலும் சரி.. எது

தடுத்தாலும் சரி... நிக்க மாட்டேன் பண்ணி வச்சுருவேன்' என்றார்.

மறுநாள் அம்மா அதை மகனிடம் சொல்ல அவன் அம்மாவைக் கட்டிக் கொண்டு கன்னத்தில் அழுந்த முத்தம் வைத்தான்.

'அம்மா அப்படியே இதைக் கொண்டு போய் அப்பா கிட்டே ரிலே பண்ணிடு' என்று கேலி வேறு பேசினான்.

'அப்பனுக்கும்..மகனுக்கும் வேற பொழப்பில்லே!' என்றார் அம்மா முகம் சிவக்க.

அதே சமயம் அப்பா ரவிக்குமாரை அழைத்து விஷயங் களை ஆராய ஆரம்பித்து விட்டார். என்பது அவனுக்குப் புரியவில்லை.



## 15

வெள்ளிக்கிழமை காலை!

'ஜாகிங் போகிறேன்' என்று கிளம்பியிருந்தான். என்னப்பா.. ஜாகிங்கா?' என்று புன்னகைத்தார் அப்பா.

'ஆமாப்பா.'

'எந்த ஏரியா பக்கம் போறே? கொட்டிவாக்கம் கெஸ்ட் ஹவுஸ் வரைக்குமா? என்றார்.

'ஆமப்பா..' என்றான். நிற்காமல் போய்விட்டான்.

'எப்போதும் இப்படிக் கேள்விகள் எல்லாம் கேட்பவர் தான். ஆனால் இன்றைக்கு வித்தியாசம் என்னவென்றால் அவன் திரும்பி வரும்போது அவரும் போர்டிகோவில் தயாராக நியூஸ் பேப்பருடன் அமர்ந்திருந்தார்.

அவனுக்குப் புரிந்து விட்டது. அப்பா ஏதோ பேச வேண்டுமென்று நினைக்கிறார் என்ற காத்துக் கொண் டிருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டு .



'என்னப்பா?' என்று அருகில் அமர்ந்தான்.

'ஒன்னுமில்லப்பா.. சும்மாதான். நீ இப்பல்லாம் ஆளே கிடைக்க மாட்டேங்கற..' என்று சிரித்தார்.

'நோப்பா.. அப்படியெல்லாம் இல்லப்பா..!' என்றான் தயக்கத்துடன்.

அவர் நியூஸ் பேப்பரை மடித்து வைத்தார். பிறகு.

'ஏம்ப்பா.. இந்த வாரம் ஏதாவது புரோகிராமா?'

'அப்பா.. அந்தப் பூங்குடி கிராமத்துக்குப் போயிட்டு வர்லாம்னு..'

'நீ மட்டுமா?'

'அவன் அப்பாவை நேராகப் பார்த்தான். அப்பா எங்கே வருகிறார் என்பது புரிந்தது.

'பைரவியையும் கூட்டிட்டுப் போலாம்னு இருக் கேன்ப்பா...'

'ம்..!' என்றார்.

'பெங்களூருக்கும் வந்திருந்துதோ அந்தப் பொண்ணு?' என்றார்.

அவன் முகம் சிவந்தது. 'ஆமப்பா..' என்றான்.

'ஏதாவது ஐடியா இருக்கோ?'

அவன் சற்று மௌனம் சாதித்தான். பிறகு-

'ஆமப்பா..!' என்றான்.

'பொண்ணோட கேரக்டர்.. பேக் கிரவுண்ட் பத்தியெல் லாம் விசாரிச்சயா?'

'விசாரிச்சேன்ம்ப்பா அருமையான பொண்ணுப்பா..' என்றான்.

'ஓ.கே... ஓ.கே.. உனக்குப் புடிச்சிருந்தா.. சரி.. ஆனா.. ஒன்னு யோசிச்சுக்க. சில சமயங்கள்ல நம்ம வழக்கமாப்

பாக்கறவங்களையும், பழகறவங்களையும் விட வித்தியாசமா இருந்தா.. ஒரு அட்ராக்ஷன் வரும். இது வெறும் அட்ராக்ஷனா இல்ல அதுக்கும் மேலயா.. ன்னு முடிவு பண்ணிக்க..'

அவன் உறுதியாகத் தந்தையின் முகம் பார்த்தான்.

'அப்பா.. இட்ஸ் ரியல் திங்... பைரவியை உங்களுக்கும் ரொம்பப் பிடிக்கும்பா...' என்றான்.

'கேள்விப்பட்டவரைக்கும் பிடிக்கத்தான் செய்யறது. நேர்ல கூட்டிட்டு வா..' என்றார்.

'தாங்க்ஸ்ப்பா..' என்று உற்சாகமாகப் போகிற மகனைப் பாசத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

★ ★ ★

'இன்னைக்கு நீங்க ரொம்ப வம்பு பேசறீங்க...' என்று கோபித்தாள்.

பூங்குடி கிராமத்தை நோக்கிக் கார் போய்க் கொண்டிருந்தது.

'எல்லாம் அப்பா.. ஒப்புதல் கொடுத்த சந்தோஷம்தான்..' என்றான்.

அவள் கலவரமும் வெட்கமுமாகத் தன்னைப் பார்ப்பதைக் கண்ட விஜயானந்த் சிரித்தான்.

'ஹேய்! நான் நேத்து ஒரு இங்கிலீஷ் படம் பார்த்தேன். அதுல..' என்று ஏதோ சீனைக் கோடி காட்ட அவள் முகம் வெளுத்துப் போனது. அழுது விடுபவள் போலாகி விட்டாள்.

அவன் சட்டென்று காரை நிறுத்தினான்.

'இங்க பாரு... இப்படி நடுங்கிகிட்டே வர்றதா இருந்தா.. வி கான்சல் த டிரிப்..' என்று ரிவர்ஸில் வந்தான்.

காரை நிறுத்தி விட்டான்.

அந்தப் பக்கத்திலேயே ஒரு பக்க காட்டுப் பாதை போனது. அதன் முடிவில் முட்செடிகளுக்கு நடுவே கொஞ்சம் வெட்ட வெளி தெரிந்தது.



கோபமாக இறங்கிப் போய் அங்கே நின்றாள்.

அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவனும் இறங்கிப் போனான். மெதுவாக தயக்கப் பார்வையுடன் அவன் அருகில் நின்றாள்.

சற்றே உணர்ச்சி வசப்பட்டவனாக மேலும் கீழும் நடந்தவன் சட்டென்று பைரவியைத் தன்னருகே இழுத்தான். முகம் நோக்கிக் குனிந்தான்.

அவள் தடுக்க முயன்றாள். முடியவில்லை. பிறகும் கோபமாக நிமிர்ந்தாள்.

'இது.. இதுக்காகத்தானே.. இப்படி பயந்து நடுங்கறே?' என்றான்.

அவள் சட்டென்று திரும்பி காருக்குள் பின் சீட்டில் ஏறிக் கொண்டாள். இரண்டு கதவுகளையும் லாக் செய்துவிட்டாள்.

முன் சீட்டில் மேல் தலையைச் சாய்ந்து முகம் காட்டாமல் குனிந்து அமர்ந்தாள். கண்ணில் நிறைந்த நீரை அவனறியாத வண்ணம் துடைத்துக் கொண்டாள்.

பத்து நிமிடம் போயிருக்கும். ஆனால் எத்தனையோ யுகங்கள் போனாற்போல் இருந்தது.

முன் சீட்டில் டிரைவர் சீட்டில் அவன் வந்து அமர்வது தெரிந்தது. ஆனால் நிமிரவில்லை.

அவன் இடக்கையால் மெல்ல அவள் தலையைக் கோதிக் கொடுத்தான்.

'ஹேய்! பைரவி!' என்றான் கெஞ்சலாக. அவள் நிமிரவில்லை.

'டோன்ட்.. ஸ்ஃபட் பைரவி. அக்செப்ட் பண்ணிக்க. எதுக்காக இப்படி பயந்து நடுங்கறே?' என்றான் குழைந்த குரலில்.

அவள் மீண்டும் நிமிரவில்லை.

'இங்க பாரு.. இன்னைக்கு அப்பாகிட்டே பேசினேன். அப்பா பர்மிஷன் குடுத்துட்டார். இனிக் கல்யாணம் தான். அந்த சந்தோஷத்துல இருக்கேன்' என்றான்.

அவள் மெதுவாக நிமிர்ந்தாள். ஆனால் அவன் முகத்தைப் பார்க்கவில்லை. வெளியே பார்த்துக் கொண்டு சொன்னாள்.

'உங்களுக்கு என் பிரச்சினை புரியாதுங்க... பணக்காரப் பையன்னவுடனே ஒத்துகிட்டியாடின்னு எங்க சித்தி செத்தே போயிடுவாங்க.. தியாகு மானம், மானம்னு துடிச்சுப் போயிடுவான்.

'நாம.. நாம தொடாம.. இருக்க முடியாதா?' என்றாள்.

அவன் பெருமூச்சு விட்டான்.

'ஓ.கே.. ஓ.கே...! இவ்வளவுதானே! 'இறங்கி.. வா.. வந்த இடம்... நல்லா இருக்கும்' கொஞ்ச நேரம் உட்கார்ந்து பேசுவோம்' என்றான்.

இறங்கினார்கள்.

அவன் நிறையத் தின்பண்டங்கள் வாங்கி வந்திருந்தான். இந்த முறை பிளாஸ்கில் டீ கூட கொண்டு வந்திருந்தார்கள்.

அமர்ந்து தின்பண்டங்களைச் சாப்பிட்டார்கள்.

'ஹேய்.. என்னை நீ என்னை நீ புரிஞ்சுக்கவே மாட்டேங்கறே?' என்றான்.

'ஐயோ.. புரியுதுங்க.. ஆனா.. ஆனா..' என்று தயங்கினாள்.

அவள் தவிப்பும் சந்தேகமும் புரிந்து அவன் பேச்சை மாற்றி விட்டான். தலைக்கு இரு கைகளையும் அணை யாகக் கொடுத்து வானம் பார்த்துப் படுத்துக் கொண்டான்.

'பைரவி ஒரு பாட்டுப் பாடேன்' என்றான்.

அவன் கேட்டதற்காக அவள் பாடிய பாடல் கேட்டு அவன் திகைத்து எழுந்து அமர்ந்தான்.

'உன்னைத் தொட்ட காற்று
வந்து என்னைத் தொட்டது
அதுவே போதும் என்று



எந்தன் பெண்மை சொன்னது
தரலாம் பெறலாம் மணநாள் வரும்போது
தருவேன் பெறலாம் பக்கம்நீ வரும்போது..' என்று பாடி நிறுத்தினாள்.

'ஹேய்.. நீ பயங்கரமான ஆளு. மெசேஜ் குடுத்திட்டே... இல்லே!' என்று இடிஇடியென்று சிரித்தான். பிறகு சீரியஸான குரலில்.

'ஓ.கே.. நான் உன்னை டிஸ்டர்ப் செய்ய மாட்டேன். தட்ஸ் எ பிராமிஸ்' என்றான். பிறகு முற்றிலும் மாறிப் போனான்.

கலகலப்பாகப் பேசினான். கேலி செய்தான். ஆனால் தொடுவதற்கு மட்டும் முயற்சிக்கவில்லை. அவளுக்கே பாவமாகிப்போனது.

மறுநாள் மாலை!

மாரப்பன் குடிசைக்கு முன்னால் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும் போது.

'ஆனந்த்.. கோபமா?' என்றாள் மெல்லிய குரலில்.

'ஆமா.. ரொம்ப!' என்றான் அலட்டிக் கொள்ளாமல். அவள் பரிதாபமாகப் பார்த்தாள்.

'சரி.. சரி.. ஆளைப் பார்வையிலேயே உருக்காதே. வேற பேசு..!' என்றான் கடுப்பாக. மேலும் ஏதோ வாய்க்குள் முணுமுணுத்தான்.

'ஆனந்த்.. என்ன சொன்னீங்க?' என்றாள் மறுபடியும் பாவமாகப் பார்த்தபடி.

'ம்.. சொன்னேன்.. என்னன்னு தெரிஞ்சுக்கணுமா? கேட்டுக்க... கல்யாணத்துக்கு அப்புறம் வச்சுக்கறேன்.. கச்சேரியை' என்றான்.

அவள் சட்டென்று எழுந்து உள்ளே போய்விட்டாள். ஆனால், கொஞ்ச நேரத்திலேயே இயல்பாக ஏதும் நடக்காதது போல் அவன் வந்து பேசவும் அவளுக்கும் வேறு வழியிருக்கவில்லை.

இயல்பாகப் பேச ஆரம்பித்தாள்.

★ ★ ★

**அ**ந்த நாள் மாலை நேரம்!

இந்த முறையும் மாரப்பனுடன் ஒரு சுற்றுச் சுற்றி வந்தான்.

திரும்ப வரும்போது மாரப்பன் முகத்தில் ஏகப்பட்ட மகிழ்ச்சி.

உள்ளே போய் அம்மாச்சியிடம் எதையெதையோ குசுகுசுவென்று பகிர்ந்து கொண்டார்.

பைரவி மாவு ஆட்டிக் கொண்டிருந்தாள் நிமிர்ந்து அவன் முகம் பார்த்து.

'சொல்லிட்டீங்களா?' என்றாள் கிசுகிசுப்பான குரலில்.

'இல்லல்லே.. இது வேற விஷயம். அவங்க ஏரியா இம்ப்ரூவ்மென்ட்டுக்கு ஒரு ஐடியா குடுத்திருக்கேன். அதுதான் ஒரே சந்தோஷம்' என்றான்.

'ஓ!'

'என்னத்துக்கு மாவு?' என்றான்.

'உங்களுக்குப் பிடிச்ச பச்சைப்பயறு தோசை!' என்றாள்.

'அட்ரா.. சக்கை!' என்று மகிழ்ந்தான். உள்ளே போய் அந்தச் சின்ன முக்காலியை எடுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தான். சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தான். பிறகு திடீரென்று நினைவு வந்தவன் போல தங்கள் காருக்கு போய் தன் பேக்கில் இருந்த ஒரு ஆட்டோமேடிக் காமிராவை எடுத்து வந்தான்.

'பைரவி.. இதை மறந்தே போனேன் பாரு!' என்று சற்றுத் தொலைவில் செட் செய்து விட்டு வந்து அவளிடத்தில் நகைச்சுவையாகப் பேச அவள் சிரிக்க இருவரும் காமிரா இருந்த திசையை நோக்கிச் சிரிக்க அது அப்படியே பதிந்தது.



'ஹேய்.. பைரவி... நாலஞ்சு எடுத்துக்கறேன்' என்று எடுத்துக் கொண்டான். அதற்கும் மறுப்பு சொன்னால் வருத்தப்படுவானே என்று அவள் தடுக்கவில்லை. அன்றிரவு!

'கொஞ்ச நேரம் வெளியவே படுத்துக்கறேன்' என்று கயிற்றுக் கட்டிலில் அவன் சாய.

'வேண்டாம்.. தம்பி...! அன்னைக்கு மாதிரி நடுராத் திரியில குளிராயிடும் என்றார் மாரப்பன். 'அப்படீன்னா உள்ளே வந்தர்றேன்' என்றார்.

'பைரவி கொஞ்ச நேரம் பாடறது' என்றான் பாடினாள்.

அன்றைக்கெல்லாம் மனசு நிறைவாக உணர்ந்தாள் பைரவி. நாள் முழுக்க அவனோடு இருப்பதும், அவனுடைய தேவைகளைக் கவனிப்பதும் அவளுக்கு மிகவும் பிடித்தும் இருந்தது.

பிறந்தவுடனே அம்மாவை இழந்தாயிற்று சின்ன வயதிலேயே அப்பாவை இழந்தாயிற்று. அப்படிப்பட்ட தனக்கு விஜயானந்த் மாதிரி மாப்பிள்ளை அமைகிற அதிர்ஷ்டமெல்லாம் இல்லவே இல்லை என்ற அச்சம்.. ஆனால், வெளியிடவில்லை. அப்படியெல்லாம் பேசினால் விஜயானந்துக்குக் கடுமையான கோபம் வரும் என்று அவள் அனுபவத்தில் கண்ட பாடம்.

மெல்லிய அந்தச் சிமினி விளக்கின் ஒளியில் அவள் கண்களை மூடிக் கொண்டு தரையில் ஒரு பாயில் படுத்திருப்பதை அவன் தன் கட்டிலில் படுத்துக் கொண்டு ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

முதல் முதலாக ரயில் பயணத்தின் போது அவன் முகத்தை ஆழ்ந்து பார்த்துக் கொண்டு படுத்திருந்ததும்,

கெஸ்ட் ஹவுஸில் அவள் முகத்தைப் பார்த்து கொண்டு படுத்திருந்ததும் நினைவுக்கு வந்தது.

ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு வித அழகு என்று எண்ணிக் கொண்டான்.

ஏதோ உள்ளுணர்வு உந்த அவள் கண்களைத் திறந்து பார்த்தாள்.

விஜயானந்த் தன் முகத்தை உற்று நோக்கிக் கொண்டு படுத்திருப்பதைப் பார்த்தவுடன் முகம் சிவந்தது.

தலையணையில் முகம் புதைத்துக் கொண்டு குப்புறப் படுத்தபடி அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். கண்ணைச் சிமிட்டியபடி சத்தமின்றி சிரித்தான்.

அவள் தன் ஆள் காட்டி விரலை உயர்த்தி மிரட்டினாள்.

அதையும் அவன் ரசித்துச் சிரித்தான். அவள் கைகள் தலையணைக்குப் பக்கத்தில் கோலமிட நாணம் பொங்க அவன் முகத்தைப் பார்க்காமல் கண்களை மூடிக் கொண்டாள்.

முகத்தில் சிரிப்புடன் திரும்பிப் படுத்துக் கொண்ட விஜயானந்த் உறங்கிப் போனான்.

மறுநாள் காலை போகும் போது!

'பைரவி! நேத்து அந்த சிம்னி விளக்கு வெளிச்சத்தில் நீ ரொம்ப அழகா இருந்தே. சும்மா.. இனி ஒத்திப் போடறதுல ஒரு அர்த்தமும் இல்லே. என்ன பெரிய பரீட்சை! நம்ம வீட்டுக்கு வந்ததற்கு அப்புறம் எழுது' என்றான்.

'ம்..!'

'அப்ப சரி? இந்த வாரத்துல ஒரு நாளைக்கு நம்ம வீட்டுக்கு வரே! அப்புறம் அடுத்த நாள் ஞாயிறு உங்க ஊருக்கு போயிப் பேசி முடிச்சுட்டு வர்றே! புரியுதா?' என்றான்.

'சரி!' என்றாள்.

வெகு மகிழ்ச்சியாக வந்தார்கள். அதற்குப் பிறகு.. நேரப் போகிற பிரிவைப் பற்றி அறியாமல்.





# 16

'தம்பி, இன்னைக்குக் கொஞ்சம் சிக்கிரம் வர்றியாப்பா...' என்றார் சௌந்தரம்.

'ஏம்மா?' என்றான் விஜயானந்த்.

'நீ வாயேன்.. சொல்றேன்!' என்றார். மேற்கொண்டு பேசுமுன் வைத்து விட்டார்.

'என்னடா.... இது வம்பா இருக்கு!' என்று நினைத்துக் கொண்டு அன்றைக்கு நான்கு மணிக்கெல்லாம் வீட்டுக்குப் புறப்பட்டான்.

பங்களாவின் போர்ட்டிகோவிலேயே ஏதோ பலகாரீ வாடை அடித்தது.

'அம்மா! என்று செல்லப்பிள்ளையாகக் குரல் கொடுத்துக் கொண்டே ஹாலில் நுழையவும் அம்மா அவசர அவசரமாக வெளியே வந்தார்.

'வா... சீக்கிரம் போய் ஃப்ரெஷ் பண்ணிட்டு.. வா.. உனக்குப் பிடிச்ச ஐட்டம்ஸ் எல்லாம் ரெடியாயிருக்கு?' என்றார்.

'அம்மா.. இதுக்கா வரச்சொன்னே? எனக்கு எத்தனை முக்கியமான வேலை இருக்கு?'

'இன்னைக்கு இங்கேயும் விசேஷம்தான்டா..' என்றார் ஒருவிதமான சிரிப்புடன்.

'டியர்.. அம்மா.. சஸ்பென்ஸ்ல வைக்காதீங்க.. என்ன விசேஷம்?' என்று யோசித்தான்.'

'உங்க வெட்டிங் டே...?'

'ம்.. ஹீம்...'

'யாருக்காவது பார்த் டே?!'.

'ம்.. ஹூம்..'

'சீக்கிரம் போய் ஃப்ரெஷ் பண்ணிட்டு வாடா!' என்று சிரித்தார்.

'என்ன பெரிய சஸ்பென்ஸ்' என்று முணுமுணுத்துக் கொண்டே போனான்.

போய் வீட்டில் இருப்பது போல் லுங்கியும் டீ ஷர்ட்டுமாக.. இறங்கி வந்தான். நேராக சமையலறைக்குள் நுழைந்தான்.

'உன்னை யார் இங்கே வரச் சொன்னது?' என்று அம்மா அவசரமாக யாரையோ மறைக்க முயன்றார்.

'அம்மா.. இதெல்லாம் சரியில்லே!' என்று அவன் அம்மாவை நகர்த்த அந்தப் பக்கம் நின்றது.

பைரவி..!

பைரவியேதான்!

குறும்பு செய்து மாட்டிக் கொண்டவன் போல் விழித்தான்.

'அம்மா...!' என்று ஆச்சரியமாகப் பார்த்தான்.

'அம்மாவுக்கு எவ்வளவு தூரம் தெரியும்?' என்று சந்தேகம் வேறு எழுந்தது.

'அதெல்லாம் அப்பா சொல்லியிருப்பார்!' என்ற எண் ணமும் தோன்றியது.

'திருட்டுப் பயலே! எத்தனை நாளைக்குடா மறைப்பே..!' என்று அம்மா அவன் காதைப் பிடித்துத் திருக பைரவி 'களுக்' கென்று சிரித்தாள்.

'அம்மா.. நான் ஒண்ணும் மறைக்கலே! பைரவிதான் என்னமோ கொஞ்சம் டைம் வேணும்னு கேட்டாப்ல..!' என்றான். பிறகு கோபம் வந்தவன் போல் 'அது சரி.. நீ எப்படி என் ஸ்டாஃபை வீட்டுக்கே கூப்பிட்டு வச்சு.. வேலை வாங்குவே..!' என்றான்.



'அவ இன்னைக்கு ஆபீஸ்சுக்கு லீவு.. உன் மிரட்ட லெல்லாம் அங்கவச்சுக்கே..' என்றார் அம்மா.

'ஆமா.. எங்க போய் மிரட்டறது. மிரட்றதுக்கு முன்னா லேயே நடுங்க ஆரம்பிச்சர்றதாச்சு' என்றான் அவன் சலிப்பாக.

பைரவி அவசரமாக அடுப்படியில் திரும்பி எதையோ வாணலியில் இருந்து எடுத்தாள்.

'என்னதிது?' என்று எட்டிப் பார்த்தான் விஜயானந்த்.

'வாழைப்பூ வடை!' என்றார் அம்மா.

'ஹைய்யோ... சூப்பர்' என்றான் மகிழ்ச்சியாக.

'என்னடா.. என்னமோ மிரட்டறதைப் பத்திப் பேச்சு வந்துச்சே..' என்று வந்தார் அப்பா.

'பைரவி.. உங்க மாமனார் வந்தாச்சு..!' என்று அம்மா சிரித்தார்.

'இல்ல.. நம்ம ஆனந்த் மிரட்ட ஆரம்பிக்கறதுக்குள்ளேயே.. பைரவி நடுங்க ஆரம்பிச்சர்றாளாமே' என்றார் அம்மா.

'டேய்.. ஆனந்த்.. அதையெல்லாம் நம்பிடாதே.. அதெல்லாம்.. ஸ்டார்ட்டிங் டிரபிள்தான். அப்புறம் அவங்க எப்பப்ப மிரட்டப் போறாங்களோன்னு நாம பயந்து கிட்டுக் கிடக்கணும்' என்றார் அப்பா.

கடகடவென்று சிரித்தார்.

'பைரவி வெட்கத்துடன் புன்னகைக்க பாத்தியாம்மா.. மகன்கிட்டே பேசற பேச்சா.. இது?' என்றார் அம்மா.

'அம்மா.. இவரு இந்தச் சிரிப்பை எங்க இருந்து கத்துகிட்டிருக்காருன்னு இப்பத்தான் புரியுது!' என்று முணுமுணுத்தாள் பைரவி.

அப்பா... அதை ரசித்துப் சிரித்தார்.

'ஹேய்..! இரு உன்னை அப்புறம்.. பாத்துக்கறேன்...' என்றான் ஆனந்த் மெல்லிய குரலில் அவளருகில் நின்றபடி. பிறகு அம்மாவிடம் திரும்பி.

'அது சரி.. என்ன புதுவிதமான மெனுவா இருக்கு... வாழைப்பூ வடை?' என்றான் விஜயானந்த்.

'இல்ல.. தம்பி... உங்கப்பா சொன்னதைக் கேட்டதும் எனக்கு பைரவியைப் பாத்தே ஆகணும்போல இருந்தது. ரவிக்கு போன் போட்டு ஹாஃப் எ டே லீவு குடுத்து அனுப்பச் சொன்னேன் 'நீ சொன்னது நிஜம்தான்டா.. பயந்து போய் வந்தாப்ல..' என்று சிரித்தார்.

ஆனந்தின் பார்வை பைரவியின் மேல் படிந்து மீண்டது.

பயப்படாதம்மா.. என் மகன் உன் சமையலை இவ்வளவு தூரம் புகழ்றானே. அப்படி என் மகன் மனசுக்குப் பிடிச்ச பொண்ணு யாருன்னு பாக்கணும்னு நினைச்சேன்..' என்றார்.

'அப்புறம்?' என்றான் சுவாரசியமாக.'

'அப்புறம் என்ன? தடார்னு கால்ல விழப் பாத்தா.. நான் இவரையும் கூப்பிட்டு நிக்கச் சொன்னேன். ரெண்டு பேருகிட்டயும் ஆசீர்வாதம் வாங்கிகிட்டா..' என்றாள். வாஞ்சையாக அவளைப் பார்த்தார்.

அவள் கனகாரியமாக வாழைப்பூ வடையையும் அவள் செய்திருந்த புதுவகை இனிப்பையும் எடுத்துத் தட்டில் வைத்து பரிமாறினாள்.

'அப்புறம்.. ஏம்மா.. என் மகனுக்கு மட்டும்தான் வித விதமாப் பண்ணிப் போடுவியா.. எங்களுக்கும் கிடையா தான்னேன். சுத்தி முத்தியும் பார்த்தா.. வாழைப்பூ கொண்டு வந்து வச்சிருந்ததது.. அதை எடுத்து அம்மிணி வாழைப்பூ வடையும், இந்த சேமியா அல்வாவும் செஞ்சுட்டாப்பல,' என்று சிரித்தார்.

விஜயானந்த் அவளருகில் இயல்பாக நின்றபடி தன் தட்டை எடுத்துக் கொண்டான்.

அந்த சின்ன டைனிங் டேபிளில் அவனும் அமர்ந்து கொள்ள அவள் சூடாக வடைகளை எடுத்துப் பரிமாறினாள்.



அப்போதுதான் விஜயானந்த் சொன்னான். 'அம்மா.. எப்பவும் ஒரு சந்தேகம். நாம ரொம்பப் பெரிய இடமாம். அவங்க தகுதிக்கு மீறிய இடமாம்.. இது நடக்குமான்னே எனக்கு பயமாயிருக்குங்கறா.. நீ உறுதி குடுத்தா அம்மிணி தெம்பாயிடுவாப்ல..' என்றான்.

உறுதி வேறு இடத்தில் இருந்து வந்தது.

'பாரும்மா.. பைரவி.. பெரிய இடம் சின்ன இடம்ங்கற பேச்சுக்கே இடமில்லை. என் மகன் உனக்குப் பெரிய இடமாக் குடுத்திட்டான் இல்லே... அதுக்கு மேல என்ன இருக்கு...' என்றார்.

அவள் கண்கள் பனிக்க நிற்பதைப் பார்த்து சௌந்தரம் எழுந்து தன் தோளோடு சாய்த்துக் கொண்டார்.

'அசட்டுப் பெண்ணே! எங்களுக்குப் பரிமாறியிருக்கிற டிபனே போதும்... நீயும், தம்பியும் அவன் ரூமிலே போய்க் கொஞ்ச நேரம் பேசிட்டு வாங்க..' என்று அனுப்பி வைத்தார்.

உள்ளே நுழைந்தவுடன் அவன் சோபாவில் அமர்ந்து கொண்டான்.

'சாப்பிடு..! என்று உபசரித்தான்.

'வா.. வா.. ரூம்ஸ் பார்க்கலாம்..' என்று அழைத்துப் போனான்.

பங்களாவின் பக்கவாட்டில் இருந்தது அந்த ரூம்.

நடுவில் ஒரு கதவு. அதைச் சாத்திவிட்டால் அந்தப் பகுதியே தனியாக ஒரு குட்டி பங்களாவாக தோன்றுகிற மாதிரி இருந்தது.

'இது என் பெட்ரூம்.. அந்தப் பக்கம் ஸ்டடி. இந்தப் பக்கம் ஒரு சின்ன பெட்ரூம். இடையில கதவு வைக்கப் போறேன்..' என்று குறும்பாகச் சிரித்தான்.

அவள் வேறுபக்கம் பார்த்தாள்.

'ஹேய்! அதென்ன நான் ஒருத்தன் மலையாட்டம் இருக்கேன், என்னை விட்டுட்டு எங்கம்மா தோள் மேலே சாஞ்சுக்கறே..' என்றான் கோபம் போல்.

'நான் மாட்டேன்னா சொன்னேன். அதுக்கும் ஒரு நேரம் வரட்டும்' என்றாள் மெல்லிய குரலில் அவள்.

சற்று நேரம் மகிழ்வாகப் பேசிக் கழித்தார்கள். புறப்படும் போது மீண்டும் ஒரு முறை ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டாள்.

'பதினாறு பேறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க' என்று தன் அம்மா அவளை மனமார வாழ்த்துவதை நின்று பார்த்தான் ஆனந்த்.

குறும்புப் புன்னகையுடன், நிறைவான மனத்துடன் அவளை வழியனுப்பி வைத்தார்.

சௌந்தரம் உள்ளே போனவுடன் கணவரிடம் 'அப்பாடா.. ஒரு பெரிய கவலை தீர்ந்தது. உங்க மகனுக்கு மனசுக்கேத்த பொண்ணு கிடைச்சுட்டா' என்று மகிழ்வாகச் சொன்னார்.

கவலைவிட்டது என்று நினைத்தது போய் இனிமேல் வரும் நாட்களில் கவலை வாட்டியெடுத்து விடப் போகிறது என்று அவருக்கு அப்போது புரியவில்லை.

★ ★ ★

'ஐய்யோ.. ராக்கம்மா.. வர்றியா.. எப்ப வர்றே?' என்றான் விஜயானந்த் கலகலவெனச் சிரித்தபடி.

'எவ்வளவு அழகான பேரு.. ராகினின்னு.. அதை ஏன் இப்படிக் கொலை பண்றீங்க!' என்றாள் ராகினி.

'ஹேய்.. செல்லமாக் கூப்பிடறேன்!' என்றான் விஜயானந்த்.

'என்ன செல்லமாகக் கூப்பிடறது? ராக்கம்மா... செல்லம் மான்னா..' என்றாள்.

'அப்ப.. ராகஸ்ன்னு கூப்பிடட்டுமா?'

'ஐயோ.. இது அதை விடக் கொடுமையா இருக்கு..' என்றாள். ஆனால் சிரித்தாள்.



ராகினியும், விஜயானந்தும் இப்படித்தான் எப்போதும் மட்டம் தட்டிக் கொண்டேயிருப்பார்கள். ஆனால் ஒருவர் மீது ஒருவருக்கும் பிரியம் அதிகம்.

'ராக்ஸ்.. உன்கிட்டே நிறையப் பேசணும். ரொம்ப இன்ட்ரஸ்டிங்கான விஷயங்கள்ளலாம் இருக்கு..' என்றான் விஜயானந்த்.

'ஆமாங்கத்தான்.. என்கிட்டயும் நிறைய விஷயங்கள் இருக்கு!'

'சீக்கிரம் வந்து சேரு..' என்றான்.

ராகினி யோசனையுடன் அந்தப் புறம் போனை வைத்தாள்.

'என்ன இப்பல்லாம் விஜய் அத்தான் ரொம்ப ஹேப்பி யாய்ப் பேசறாரு' என்று எண்ணிக் கொண்டாள்.

'ஆமாம். அவளுக்கும் இந்த முறை இவர்களோடு கலந்து கொள்ள ஒரு முக்கியமான விஷயம் இருந்தது.'

★ ★ ★

அன்றிரவு!

'ஹேய்..! பைரவி உன்னை அம்மாவுக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு தெரியுமா?' என்றான்.

'அந்த விதத்துல நான் ரொம்ப அதிர்ஷ்டம் பண்ணியிருக் கேன்.. எனக்கும்.. உங்க அம்மாவை ரொம்பப் பிடிச்சது. எவ்வளவு அழகா இருக்காங்க லட்சுமி கரமா..' என்றாள்.

'ஹேய்! போற போக்கைப் பார்த்தா.. நம்மளை ஓரங்கட் டிட்டு வீட்டு ராஜாங்கத்தையே நீங்க ரெண்டு பேரும் எடுத்துக்குவீங்க போலருக்கு' என்றான்.

'ஐயய்யோ.. அப்படியெல்லாம் ... இல்லே!' என்றாள் அவசரமாக.

'ஹேய்.. சும்மா.. தமாஷுக்கு சொன்னேன்' அப்படி நீங்க ரெண்டு பேரும் சேர்ந்துகிட்டு ராஜாங்கம் நடத்தினா...

எனக்கும், அப்பாவுக்கும் சந்தோஷம்தான்' என்றான். பிறகு திடீரென்று நினைவு வந்தது போல்.

'ஹலோ! எங்க வீட்ல ராகினி வர்றா?' என்றான்.

'ராகினின்னா?'

'ஓ! உனக்கு நான் சொல்லலே இல்லே! எனக்கு அத்தை பொண்ணு. அப்பாவோட சிஸ்டர் பொண்ணு. இன்ஃபாக்ட் அவ எங்க வீட்லதான் வளர்ந்தா. பயோ டெக்னாலஜில ஹையர் ஸ்டடீஸ் பண்ணணும்னு அமெரிக்கா போயிருந்தா.. கொஞ்ச நாள் தங்கறதுக்கு வர்றா?'

'அத்தை பொண்ணுன்னா.. முறைப் பொண்ணுதானே?' என்றாள் பைரவி இறங்கிய குரலில்.

'அட்றா.. சக்கை! பொறாமை கூட வருதா? ஹேய்.. ராகினியை அந்த மாதிரி ஆங்கிள்ல நான் நினைச்சதே இல்லே. டோன்ட் பி சில்லி.'

'நம்ம மனசைக் குத்தகைக்கு ஒரு ஆள்கிட்ட கொடுத்தாச்சு.. தெரியுமா?' என்றான்.

'குத்தகைன்னா, எப்ப வேண்ணா திருப்பிக் கேப்பீங்களா?' என்றாள்.

'போச்சுரா.. இப்படி மடக்கிப் பேச வெல்லாம் வேற உனக்குத் தெரியுமா?'

'அதை விடுங்க.. பதிலைச் சொல்லுங்க...'

'இத பார்றா.. இப்பவே மிரட்டறா!' என்று மறுபடியும் சிரித்தான்.

'நான் ஒண்ணும் மிரட்டலே. என் சேஃபடியையும் பாத்துக்கணுமில்லே!' என்றாள் கொஞ்சலாக.

'ஹேய்! இப்ப சொல்றேன் கேட்டுக்க.. என் மனசுல அந்த மாதிரி இடம் உனக்கு மட்டும்தான் சரியா?' என்றான்.

அந்தப் பக்கம் மௌனம் நிலவியது.



'ஹேய்... என்ன ஆச்சு!'

'தேங்க்ஸ்.. ஆனந்த்' என்றாள் நெகிழ்ந்த குரலில்.

'ம்... சும்மா உணர்ச்சி வசப்பட்டா மட்டும் போதுமா? செயல்லயும் காட்டணுமில்லே...!' என்றான்.

'போன்ல இருந்துகிட்டு கேட்டா என்ன செய்ய?' என்றாள்.

'ஹேய்!' என்று அவன் உற்சாகமானான்.

'இப்ப.. இப்பக்.. கிளம்பி வரட்டா?' என்றான்.

'ஐயய்யோ.. அப்படி இப்படி வந்தராதீங்க.. மனக் கணக்கு போட்டு வச்சுக்குங்க.. எல்லாத்தையும் பின்னாடி வச்சிக்கலாம்..'

'பைரவி..! என்றான் கிறக்கமான குரலில்.

'ம்..!'

'இன்னைக்குத்தான்.. ஏதோ கொஞ்சம் இயல்பாய் பேசி யிருக்கே..!'

'அது.. அது.. அத்தை மாமா.. எல்லாரும் சம்மதம் குடுத்துட்டாங்க.. இல்லே!' என்றாள்.

'ஐயோடா..சாமி! அத்தை.. மாமா.. எனக்குக் கிறுக்கே பிடிச்சிடும் போலிருக்கு..' என்று பெருங்குரலெடுத்து சிரித்தான்.

'சும்மாயிருங்க.. ஆனந்த்..' என்றாள்.

'ஹேய்...என்னை மட்டும் முறை வச்சுக் கூப்பிட மாட்டேங்கறே...' என்றான் ஏக்கமாக.

'எங்க ஊர்ப் பக்கமெல்லாம்.. மாமான்னு கூப்பிடு வாங்க. கூப்பிடவா?'

'கூப்பிடு.. கூப்பிடு..' என்ற சிரித்தான்.

'சரிங்க.. மாமா!' என்றாள்.

அவன் மகிழ்ச்சியாய்ச் சிரித்தான். பிறகு 'ஹேய்.. நாளைக்கு வரும்போது நாம மதுரையில செலக்ட் செஞ்சமே.. அந்த கோல்டன் எல்லோ.. சாரி.. அதைக் கட்டிட்டு வரயா? கற்பனையில நினைக்கும்போதே அது உனக்கு ரொம்ப நல்லா.. சூட் ஆவுது..' என்றான்.

'சரி.. சரி.. போதும்... விலாவாரியா ஆரம்பிச்சுகாதிங்க...' என்றாள். பிறகு.

'சரி.. வைக்கட்டுமா?'

'அதுக்குள்ளயா?'

'பிஃப்டீன் மினிட்ஸ் ஆச்சு..?'

'அவ்வளவுதானே! இன்னும் கொஞ்ச நேரம் பேசு..' என்றான். பேசினார்கள். மகிழ்ச்சி சிரிப்புடன் போனை வைத்தாள்.



## 17

'ஹலோ! அம்மா! நான் கிளம்பறேன்' என்று குரல் கொடுத்து விட்டு விசிலடித்துக் கொண்டு, லேசாக ஆடிக் கொண்டு போகிற மகனை வழியனுப்பி விட்டு உள்ளே வந்தாள் சௌந்தரவல்லி.

ராஜலிங்கம் சோபாவில் அமர்ந்திருந்தார்.

'பயல் இப்பல்லாம் ரொம்ப குஷியா இருக்கான் இல்லே' என்றார்.

'ஆமாங்க.. ஏங்க.. நாம ரொம்ப டிலே பண்ண வேண்டாங்க. சீக்கிரமா கல்யாணத்துக்கு ஏற்பாடு செஞ்சர்லாம்' என்றாள்.

'ஆமா.. சௌந்தரம்.. நானும் அப்படித்தான் யோசிச் சேன். அதுக்கு முன்னாடி இந்த ராகினிப் பொண்ணு



வருதில்லே... அவகிட்டே கொஞ்சம் ஸ்ட்ரிக்டாப் பேசி ஒரு மாப்பிள்ளையைப் பார்த்து கல்யாணத்தை முடிச்சர வேண்டியதுதான். அது முடிஞ்சவுடனே இவன் கல்யாணம் வச்சர்லாம்' என்றார்.

'சரிங்க..!' என்றாள்.

ராகினியின் பேச்சு வந்தவுடன் நினைவு வந்தவர் போல் வேலைக்காரர்களை அழைத்தார்.

'யாராவது இரண்டு பேர் மத்தியானம் ஃப்ரீயாகிக் குங்க... ராகினி ரூமைக் கிளீன் பண்ணிறலாம்' என்றார்.

'சரிங்கம்மா..' என்றார்கள்.

★ ★ ★

'பைரவி மேடம்! என்று குமிழ்சிரிப்புடன் வந்தான் ரவிக்குமார்.

'என்னங்க.. சார்!' என்றாள் சீரியஸாக.

'மேடம்! எம்.டி.சார்! என்னவோ அக்கவுண்ட்ஸ் சரி பார்க்கணுமாம். அந்த ஃபர்னிச்சர் கணக்கு.. அதை எடுத் திட்டு வரச் சொன்னாரு!' என்றான் குபீரென்று சிரித்தான்.

'ரவி.. சார்! ப்ளீஸ்!' என்றாள்.

வெட்கத்தை மறைத்துக் கொண்டு போனாள். உள்ளே போனவுடன்.

'என்ன.. நீங்க! ஆபீஸ்ல வச்சு அடிக்கடி கூப்பிடறீங்க.. ரவி சார்... சிரிக்கறாரு!' என்றாள்.

'அவன் கிடக்கிறான்.. அவனுக்கு நம்ம அவஸ்தை எங்கே புரியப் போகுது..' என்றவன் உடனே சீரியஸ் மூடுக்கு மாறினான்.

'பைரவி! நிஜமாவே அக்கவுண்ட்ஸ் சம்பந்தமாத்தான்.. கூப்பிட்டேன்... இந்த டிரான்ஸாக்ஷன்ல பாரு.. இரண்டா யிரம் உதைக்குது..' என்றான். அவள் அருகில் போய் நின்று அக்கவுண்ட்ஸைப் புரட்டிப் பார்த்தாள்.

'சரியாய் இருக்கே!' என்றாள்.

'ஓ..! சரியா.. இருக்கா.. நீ சொன்னா.. சரி!' என்று அமர்த்தலாக சிரித்தான்.

அவளுக்குப் புரிந்தது.

அவளை அருகில் வரவழைப்பதற்காக அப்படி சொல்லியிருக்கிறான் என்று.

'ஏன்.. பைரவி.. உனக்கு என்னை அடிக்கடி பாக்கணும்னு தோணாதா?' என்றான்.

'தோணும் அதுக்காக.. நான் அடிக்கடி உள்ளே வர முடியுமா? அப்படி வந்தா.. எல்லாரும் உங்களையல்ல பேசுவாங்க..' என்றாள்.

'ஏன்.. உன்னைப் பேசமாட்டாங்களா?'

'பேசுவாங்க.. இவளைப் பாரு.. எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விடற ஆளும்பாங்க... ஆனா.. உங்களை எல்லோரும் ரொம்பத் தங்கமானவருன்னு தானே பேசிக்கறாங்க..' என்றாள்.

'பைரவி.. நான் ஒன்னும் நீ நினைக்கற அளவுக்கு நல்லவன்... இல்லே! அதுவும் இந்த விஷயத்துல.. ஆனா.. என்ன எனக்கு சில வசதிகள் இருக்கு.. இங்க.. பாரு..' என்று தன் இடப்புறத்தில் நிற்குமாறு சைகை காட்டினான்.

'பாத்தியா.. நான் என் சேரை லேசா ஒரு திருப்புத் திருப்பினால் போதும்.. அம்மிணி கண்ல படுவீங்க.. தினம் அம்மாவைத் தரிசனம் செய்துகிட்டுத்தான் இருக்கேன்' என்றான்.

அவள் மறுபடியும் டேபிளுக்கு எதிரில் வந்து நின்று கொண்டாள்.

'இதை எதுக்கு என்கிட்ட சொன்னீங்க? இனிமே என்னால ஃப்ரியா அங்க உட்கார முடியுமாக்கும்?!' என்றாள்.



'அதெல்லாம்.. உட்காரலாம்... நான் எதுக்கு சொன்னேன்னா... இன்னைக்கு எப்படி டிரீம்மா வந்திருக்கயோ.. அதே மாதிரி தினமும் வந்துரணும் என்ன?' என்றான்.

'சரி.. நான் என் சீட்டுக்குப் போறேன்' என்று நழுவிக் கொண்டு வந்துவிட்டாள்.

அவன் சிரிப்புடன் கூடிய ஒரு பார்வையால் அவளைத் தொடர்ந்தான்.

★ ★ ★

ஒவ்வொரு முறையும் ராகினி அமெரிக்காவிலிருந்து வருவதற்கு முன் சௌந்தரவல்லி அவளது அறையைத் தயார் செய்து வைப்பார்.

அதே போல் பழைய திரைச்சீலைகளை மாற்றிப் புதிய சீலைகள் மாட்டி பெட் ஸ்ப்ரெட்டை மாற்றி எல்லாவற்றையும் அருகில் நின்று மேற்பார்வை செய்தார்.

ராகினி உண்மையில் ராஜலிங்கத்தின் அக்கா மகள். வெகு நாட்களாக குழந்தையில்லாமல் இருந்து பிறந்தவள்.

ராஜலிங்கமும், சௌந்தரவல்லியும் அப்போது கோவையில் இருந்தார்கள். அவர்களுக்கு அப்போதே விஜயானந்த் ஏழு வயதில் இருந்தான். அப்போதுதான் ராகினி பிறந்தாள்.

கோவையில் ஒரு பெரிய பம்பு செட்டு தயாரிக்கும் நிறுவனம் நடத்தி வந்தார் ராஜலிங்கம். ஆனால், கம்பெனியில் வேலை செய்த ஒரு மேனேஜரை நம்பிப் பொறுப்பை விட்டதில் பெருத்த நஷ்டம்.

ஃபாக்டரியை விற்று விட்டு மிகக் கவலையுடன் இருந்தார். அப்போது எதேச்சையாக வந்த கமலாவும், திருமலைச் சாமியும் 'பேசாம நீங்க மெட்ராஸுக்கு வந்துருங்க..' என்று வற்புறுத்தி அழைத்தார்கள்.

சௌந்தரவல்லிதான் சொன்னார்.

'ஆமாங்க... நல்லாப் பொழச்சு வாழ்ந்த ஊர்ல தொழில்ல நஷ்டம் வந்ததுக்கப்புறம் இருக்கக் கூடாதுங்க..' என்று.

அப்போதைய மெட்ராஸ் போனார்கள்.

திருமலைச்சாமிக்கு அப்போது மகாபலிபுரம் ரோட்டில் கொட்டிவாக்கம் பாலவாக்கம் நீலாங்கரை பகுதியில் ஏக்கரா கணக்கில் நிலம் இருந்தது.

நீலாங்கரையில் ஒரு சிறிய பங்களா கட்டிக் கொடுத்தார். கோயமுத்தூரில் நஷ்டம் அடைந்த துறையை விட்டு வேறு தொழில் மெட்ராஸில் ஆரம்பித்தார்கள். தொழில் வெற்றிகரமாகியது.

ஏற்றுமதியில் கொடி கட்டிப் பறந்தார்கள். மைத்துனரிடம் வாங்கிய நிலத்துக்கு விலையைக் கொடுத்து விட்டார் என்றாலும் தங்கள் மானத்தைக் காப்பாற்றியவர்கள் என்று கமலாவின் மேல் சௌந்தரவல்லிக்கு எல்லையற்ற பிரியம்.

தன்னிடமிருக்கிற எந்தப் பொருளைப் பார்த்து 'அண்ணி, இது ரொம்ப நல்லாருக்கு' என்ற ஒரு வார்த்தை சொல்லி விட்டாலும் போதும்.

'வச்சுக்கங்கக்கா...' என்று கொடுத்து விடுவார்.

திடீரென்று கமலாவுக்கு ஏதோ நோய் தாக்கியது. இன்றைக்குப் போல் அன்றைக்கு நோய்களைக் கண்டு பிடிக்கற வசதிகள் இல்லை. அதனால் எவ்வளவு வேண்டு மானாலும் செலவு செய்ய அவர்கள் தயாராக இருந்தும் காப்பாற்ற முடியவில்லை.

திருமலைச்சாமி இப்போதும் இரண்டு தெருக்கள் தள்ளி ஒரு வீட்டில் இருந்தார். ராகினியை சௌந்தரம்தான் வளர்த்தார். விஜயானந்துக்கும், அவளுக்கும் ஒரு ஒட்டுதல் உண்டு.

ராகினிக்கும் சௌந்தரத்தின் அன்பு காரணமாகவே என்னவோ பெற்ற தாய் இல்லாத குறை அவ்வளவாகத் தெரியவில்லை. அவள் இருப்பதே அவர்கள் வீட்டில்தான். அப்பாவை அவ்வப்போது போய்ப் பார்த்துவிட்டு வருவாள்.



அதனால்தான் ராஜலிங்கம் அவளை ஒரு நல்ல இடத்தில் பிடித்து கொடுத்து விட்டு விஜயானந்த் திருமணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று நினைத்தார்.

சௌந்தரமும் அதை ஒத்துக் கொண்டார்.

'அம்மா எல்லா இடமும் சுத்தம் செஞ்சாச்சுங்கம்மா.. ராகினியம்மாவோட பீரோவும், டேபிளும்தான் பாக்கி. எப்பவும் நீங்கதானேம்மா.. அதைக் கிளின் பண்ணுவீங்க...' என்றார்கள்.

'ஆமா.. நானே.. பண்ணிக்கறேன்..' இன்னைக்கு நேரமில்லை அடுத்த வாரமாப் பாத்துக்கலாம்' என்றார்.

★ ★ ★

'அக்கா...!' என்றான் தியாகு பாசத்துடன்.

'தியாகு..!' எப்படிடா.. இருக்கே! சித்தி எப்படி இருக் காப்ல..' என்றாள்.

'அக்கா.. அம்மா.. உன்கிட்ட பேசணுமாம்' என்றான்.

'சித்தி..!' என்றாள்.

'என்னடி பொண்ணே? நல்லாயிருக்கியா?'

'சித்தி.. நல்லாயிருக்கேன்.. சித்தி.. 'நீங்க' எப்படியிருக்கீங்க..?'

'நல்லா இருக்கேன்..?'

'சித்தி.. நீங்க எதுக்கு இன்னும் வேலைக்குப் போறீங்க.. வேண்டாம்.. நிறுத்திருங்க...' என்றாள்.

'அது சரி.. போ.. நான் வீட்ல உட்கார்ந்துகிட்டு என்ன பண்ணப் போறேன்? ரெண்டு பேருக்கும் காலையிலயே டிபன் சாப்பாடு எல்லாத்தையும் ஆக்கிப் போடறேன். அப்புறம் பொழுது போகோணுமல்லோ.. வீட்ல இருந்தா.. ஊர் வம்புதான் பேசோணும்' என்றார்.

'என்னங்க.. சித்தி.. உங்களை நல்லா வச்சுக்கணும்னு தானே.. நான் வேலைக்கே வந்தேன்..'

அப்போதைய மெட்ராஸ் போனார்கள்.

திருமலைச்சாமிக்கு அப்போது மகாபலிபுரம் ரோட்டில் கொட்டிவாக்கம் பாலவாக்கம் நீலாங்கரை பகுதியில் ஏக்கரா கணக்கில் நிலம் இருந்தது.

நீலாங்கரையில் ஒரு சிறிய பங்களா கட்டிக் கொடுத்தார். கோயமுத்தூரில் நஷ்டம் அடைந்த துறையை விட்டு வேறு தொழில் மெட்ராஸில் ஆரம்பித்தார்கள். தொழில் வெற்றிகரமாகியது.

ஏற்றுமதியில் கொடி கட்டிப் பறந்தார்கள். மைத்துனரிடம் வாங்கிய நிலத்துக்கு விலையைக் கொடுத்து விட்டார் என்றாலும் தங்கள் மானத்தைக் காப்பாற்றியவர்கள் என்று கமலாவின் மேல் சௌந்தரவல்லிக்கு எல்லையற்ற பிரியம்.

தன்னிடமிருக்கிற எந்தப் பொருளைப் பார்த்து 'அண்ணி, இது ரொம்ப நல்லாருக்கு' என்ற ஒரு வார்த்தை சொல்லி விட்டாலும் போதும்.

'வச்சுக்கங்கக்கா...' என்று கொடுத்து விடுவார்.

திடீரென்று கமலாவுக்கு ஏதோ நோய் தாக்கியது. இன்றைக்குப் போல் அன்றைக்கு நோய்களைக் கண்டு பிடிக்கற வசதிகள் இல்லை. அதனால் எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்ய அவர்கள் தயாராக இருந்தும் காப்பாற்ற முடியவில்லை.

திருமலைச்சாமி இப்போதும் இரண்டு தெருக்கள் தள்ளி ஒரு வீட்டில் இருந்தார். ராகினியை சௌந்தரம்தான் வளர்த்தார். விஜயானந்துக்கும், அவளுக்கும் ஒரு ஒட்டுதல் உண்டு.

ராகினிக்கும் சௌந்தரத்தின் அன்பு காரணமாகவே என்னவோ பெற்ற தாய் இல்லாத குறை அவ்வளவாகத் தெரியவில்லை. அவள் இருப்பதே அவர்கள் வீட்டில்தான். அப்பாவை அவ்வப்போது போய்ப் பார்த்துவிட்டு வருவாள்.



அதனால்தான் ராஜலிங்கம் அவளை ஒரு நல்ல இடத்தில் பிடித்து கொடுத்து விட்டு விஜயானந்த் திருமணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று நினைத்தார்.

சௌந்தரமும் அதை ஒத்துக் கொண்டார்.

'அம்மா எல்லா இடமும் சுத்தம் செஞ்சாச்சுங்கம்மா.. ராகினியம்மாவோட பீரோவும், டேபிளும்தான் பாக்கி. எப்பவும் நீங்கதானேம்மா.. அதைக் கிளீன் பண்ணுவீங்க...' என்றார்கள்.

'ஆமா.. நானே.. பண்ணிக்கறேன்..' இன்னைக்கு நேரமில்லை அடுத்த வாரமாப் பாத்துக்கலாம்' என்றார்.

★ ★ ★

'அக்கா...!' என்றான் தியாகு பாசத்துடன்.

'தியாகு..!' எப்படிடா.. இருக்கே! சித்தி எப்படி இருக்காப்ல..' என்றாள்.

'அக்கா.. அம்மா.. உன்கிட்ட பேசணுமாம்' என்றான்.

'சித்தி..!' என்றாள்.

'என்னடி பொண்ணே? நல்லாயிருக்கியா?'

'சித்தி.. நல்லாயிருக்கேன்.. சித்தி.. 'நீங்க' எப்படியிருக்கீங்க..?'

'நல்லா இருக்கேன்..?'

'சித்தி.. நீங்க எதுக்கு இன்னும் வேலைக்குப் போறீங்க.. வேண்டாம்.. நிறுத்திருங்க...' என்றாள்.

'அது சரி.. போ.. நான் வீட்ல உட்கார்ந்துகிட்டு என்ன பண்ணப் போறேன்? ரெண்டு பேருக்கும் காலையிலயே டிபன் சாப்பாடு எல்லாத்தையும் ஆக்கிப் போடறேன். அப்புறம் பொழுது போகோணுமல்லோ.. வீட்ல இருந்தா.. ஊர் வம்புதான் பேசோணும்' என்றார்.

'என்னங்க.. சித்தி.. உங்களை நல்லா வச்சுக்கணும்னு தானே.. நான் வேலைக்கே வந்தேன்..'

'இங்க பாருடி.....! கொஞ்சம் பணம் சேத்து வச்சா.. உன் கல்யாணத்துக்கு ஆகும். தியாகு படிப்புக்கு ஆகும்..' என்றார்.

பைரவிக்கும் பேசுவதற்கு வழியிருக்கவில்லை. சித்தி மேலும் பேசினார்.

'அப்புறம்.. சென்னைக்குப் பக்கத்துல குன்றத்தூர்ன்னு ஒரு ஊரு இருக்கு தெரியுமா? அங்கதான் நம்ம சிவசுப் பிரமணியம் பெரியப்பா.. இருக்காரு. தியாகுகிட்ட சொல்லி உனக்கு அட்ரஸ௨ எழுதறேன். போய் ஒரு நடை பார்த்துட்டு வா. உன்மேலே ரொம்பப் பிரியம். உனக்கும் நம்ம மனுஷங்கன்னு யாராவது வேணுமில்லே..' என்றார்.

'சரிங்க சித்தி..!'

'சரி.. நேர நேரத்துக்கு சாப்பிடு. ஒருத்திக்கு என்ன சமைச்சு சாப்பிடறதுன்னு சிக்கனம் பாக்காதடி. நல்லா நொறுங்கத் திங்கற வயசு. உனக்கு செலவு ஆனது போக அனுப்பி வச்சாப் போதும். நல்ல கம்பெனியில வேலை செய்யறயாம். நல்லாதாத் துணிமணி வாங்கி உடுத்து..' என்றான் கறாராக.

'சரிங்க.. சித்தி...!' என்றாள்.

'என்றா.. டேய்..! எதுக்கெடுத்தாலும்.. சரி சரிங்கறா.. இந்த நீயே பேசு..' என்றாள் சித்தி.

ரிசீவரை வாங்கிக்கொண்ட தியாகு 'அக்கா.. இப்படி ஒரு சுனாமியை எதிர்பார்த்திருக்க மாட்டே இல்லே...!

'டேய்.. நான்தான்.. எப்பவும் சொல்றேன். இல்லே சித்திக்கு நிறையப் பாசம் இருக்குடா.. காட்டத் தெரியறது இல்லேன்னு..' என்றாள் பைரவி.

'சரிக்கா.. நீ அந்தக் குன்றத்தூர் போயிட்டு வந்துரு.. அம்மாவுக்கு என்னமோ. நீ அவங்களை ஒரு தடவை யாவது போய்ப் பார்க்கணும்னு.. ஆசையாம்..' என்றான்.



'சரிடா.. அப்புறம் இந்த பரீட்சையில எப்படி மார்க் வாங்கியிருக்கே?' என்றெல்லாம் சற்று நேரம் விசாரித்து விட்டு மகிழ்ச்சியாக போனை வைத்தாள்.

தினமும் இரவில் போன் செய்த விஜயானந்த் அன்றைக்குப் பேசும் போது 'பைரவி.. அநேகமா வர்ற சனி, ஞாயிறு நான் மும்பை போக வேண்டியிருக்கும் போல இருக்கு...' என்றான்.

'போயிட்டு.. வாங்க...!' என்றாள்.

'ஹேய்! ரெண்டு நாளைக்கு உன்னைப் பாக்காம இருக்கணுமே..' என்றான்.

'சரி.. நாளைக்கு சாயங்காலமா வேண்ணா கொஞ்ச நேரம் உங்க கொட்டிவாக்கம் கெஸ்ட் ஹவுஸ்ல பேசிக்கலாம். நாளன்னைக்கு வெள்ளிக்கிழமை காலையிலே நேரத்துல என்னை மாங்காட்டுக் கோயிலுக்குக் கூட்டிட்டுப் போறீங்களா?' என்றாள்.

'கோயிலுக்கா!' என்றான் சுரத்தேயில்லாமல்.

'ஏன்?'

'ஆமா.. கோயிலுக்குப் போகும்போது அதைப் பேசக் கூடாது.. இதைப் பேசக்கூடாதும்பே..' என்றான்.

'சரி.. போகும்போது.. நல்ல பிள்ளையா நடந்துக்குவீங்களாம். வரும்போது கொஞ்சம் ஃப்ரீயாப் பேசுவிங்களாம்!' என்றாள்.

'சரி..!'

'ஏங்க.. அத்தையைக் கூப்பிட்டுக்கலாமா?' என்றாள் ஆவலாக.

'ஹேய்.. அறிவில்லாமப் பேசாதே.. அம்மா கூட வந்தாங்கன்னா எப்படி ஃப்ரீயாப் பேசறது..' என்றான். பிறகு என்ன நினைத்தானோ.

'சரி.. உன் திருப்திக்காக அம்மாகிட்டே உன்னை இப்படி மாங்காட்டுக் கோயிலுக்குக் கூப்பிட்டுப் போறேன்னு சொல்லிட்டு வரேன்' என்றான்.

'ம்...!' என்றாள் சந்தோஷமாக.

மாங்காட்டில் மலர்ச்சியாக சாமி கும்பிட்டு விட்டுத் திரும்பியவளுக்குத் தெரியவில்லை மாங்காட்டு அம்மன் கூட தன்னைக் கைவிட்டு விடப் போகிறாள் என்று.



## 18

திடீரென்று பைரவிக்கு அந்த எண்ணம் தோன்றியது.

'இரண்டு நாளைக்கு அவரும் இருக்கப்போறதில்லே. இங்க உட்கார்ந்துகிட்டு என்ன பண்ணப்போறோம்! பேசாம குன்றத்தூர் போலாமே' என்று எண்ணினாள்.

போனாள்.

திரும்ப வரும்போது அவள் மனம் மிகவும் மகிழ்ச்சியடைந்திருந்தது.

சிவசுப்பிரமணியமும் அவரது மனைவி வள்ளியம்மையும் அவளிடத்தில் அவ்வளவு பிரியத்தைக் கொட்டினார்கள்.

'பரவாயில்லை. நமக்கும் இப்பத்தான் அதிர்ஷ்டக் காத்து வீசுது போல...' என்று எண்ணிக் கொண்டு தன் வருங்கால கணவனிடம் அவர்களைப் பற்றிப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று காத்திருந்தாள்.

திங்கட்கிழமை இரவு வழக்கம் போல் விஜயானந்த் பேசினான்.

அவனே உற்சாகமாகத் தன்னுடைய கடந்த இரண்டு நாள் அனுபவங்களை நகைச்சுவையாகச் சொல்லிக் கொண்டிருந்தானோ என்னவோ பைரவிக்குப் பேச வாய்ப்பே கிடைக்கவில்லை.

ஏதோ சொல்லி அவளை சீண்டிக் கொண்டிருந்தவன் சட்டென்று,



'ஹேய்! பைரவி...அம்மா வர்றாங்க.. அப்புறம் பேசறேன்..'ன்னு சிரித்துக் கொண்டே செல்லை ஆஃப் செய்தான்.

சிரித்துக் கொண்டே திரும்பியவன் அம்மாவின் வெளுத்துப் போன முகம் பார்த்து.

'என்னம்மா?' என்றான் திகைப்பாக.

அம்மா பேச ஆரம்பித்தார். கேட்க கேட்க அவன் கண்களில் கோபம் குடியேறியது. மறுப்புணர்வு முகத்தில் வெளிப்படையாத் தெரிந்தது.

* * *

விஜயானந்த் பெரும்பாலும் தன்னுடைய பீரோவைத் தானே சுத்தம் செய்து கொள்ளுவான்.

ராகினியும் ஊரில் இருந்தால் தன்னுடைய பீரோ மேஜை மேல் உள்ள பொருட்களை அவ்வப்போது சுத்தம் செய்து கொள்வாள்.

அவள் வந்து விட்டு போய் இப்போது ஏழெட்டு மாதங்களாகியிருந்தது.

'சரி.. நாம்தான் சுத்தம் செய்து வைப்போம்!' என்று சுத்தம் செய்ய ஆரம்பித்தார் சௌந்தரவல்லி.

அந்த ஸ்டீல் டேபிள் பக்க வாட்டில் ஒரு சின்ன அலமாரியைக் கொண்டிருந்தது. அதில் மேலே ஒரு இழுப்பறையும் கீழே இரண்டு அடுக்குகளாக சிறு அலமாரிகளும் இருந்தன.

பெரும்பாலும் புத்தகங்கள், பைல்கள் என்று வைத்திருந்தாள். சௌந்தரவல்லி அன்றைக்கு எடுத்து துடைத்து விட்டு அப்படியே அடுக்கி வைத்தார்.

துடைப்பதற்கு வசதியாக மேஜையின் மேலே எடுத்து பரப்பினார்.

ஒவ்வொரு புத்தகமாகத் துடைத்து எடுத்து உள்ளே அடுக்கினார். அப்போது ஒரு டைரி அவர் கை நழுவிக் கீழே விழுந்தது. விழுந்த டைரி திறந்து கிடந்தது.

சௌந்தரவல்லி சிறப்பாக எதுவும் சுவாரசியம் காட்டாமல் கையில் எடுத்தவர் மேலோட்டமாய்ப் பார்த்தவர் பார்வை நிலை குத்தி நின்றது.

'ஒவ்வொரு முறையும் இடைவெளி விட்டு விட்டு மறுபடியும் பார்க்கும்போது உங்கள் மெருகு கூடிக் கொண்டே போகிறது ஆனந்த்- ஆனால் நேரில் சொல்லத்தான் துணிவு வர மாட்டேன் என்கிறது' என்று எழுதி வைத்திருந்தாள்.

சௌந்தரவல்லி சற்றே திடுக்கிட்டுப் போனார்.

'ஆனந்த்'ன்னு எழுதியிருக்கிறாளே! சட்டென்று டைரியை மூடிவிட்டார்.

மகனேயானாலும் மகளேயானாலும் அவரவர்களுக்கென்று இருக்கிற அந்தரங்கத்தில் தலையிடக்கூடாதென்று கணவர் அடிக்கடி சொல்லுவார். என்ற எண்ணம் தோன்றியது. ஆனால் மறுபடியும் அச்சம் தோன்றியது.

ஆனந்த் வேறு ஒரு பெண்ணிடம் மனதைப் பறி கொடுத்திருக்கிற இந்த நிலையில் தானா இந்த டைரி கண்ணில் பட வேண்டும்.

அடுத்தவர் டைரியைப் படிப்பது நாகரீகமில்லை என்ற போதும் தனக்கு மிகவும் வேண்டிய இருவர் பற்றிய விஷயம் என்றால் படிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது என்பதை உணர்ந்தார்.

ஞாயிற்றுக்கிழமை!

இன்று பிற்பகல் கணவனிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

'ஏங்க.. ரொம்ப போரடிக்குதில்லே?' என்றார்.

'ஆமா..!' என்றார் அவரும்.

'விஜயானந்த் இல்லாம வீடே நல்லா இல்லை. பேசாம.. இந்த பைரவியையாவது கூப்பிட்டு ரெண்டு நாளைக்கு நம்ம கூட வச்சிருந்திருக்கலாம்' என்றார் சௌந்தரவல்லி.



'ஆஹா! பயங்கர முன்னேற்றமா இருக்கே! மகனுக்கு மேலே நீ ஆசைப்படறே' என்று சிரித்தார்.

'இல்லைங்க... நிஜம்மாவே அந்தப் பொண்ணு நல்ல பொண்ணு' என்றவர், 'சரி.. ராகினியின் ரூமையாவது கிளீன் பண்றேன்' என்ற வந்தவர்தான் இப்படி அதிர்ச்சிக்கு உள்ளாகி நிற்கிறார்.

மேலே படித்தார்.

'ஏற்கனவே பழகியவன்தான்.. என்ற போதும் இந்த உணர்வு வந்ததற்குப் பிறகு உலகமே வேறாய்த் தோன்றுகிறதே.. அது ஏன்?' என்று எழுதியிருந்தாள்.

ஏதோ கவிதைப் புத்தகத்திலிருந்து இரண்டு மூன்று கவிதைகளை வேறு குறித்து வைத்திருந்தாள்.

சௌந்தரவல்லிக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

கணவனிடம் பகிர்ந்து கொள்ளலாமா என்று யோசித்தார். அப்போது அன்றைக்குக் கணவர் சொல்ல வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

'என் மகனுக்கு ஒரு பொண்ணைப் பிடிச்சிருச்சு அப்பறமுன்னா யார் தடுத்தாலும் சரி... எது தடையா இருந்தாலும் சரி... பண்ணி வச்சுடுவேன்' என்றல்லவா சொன்னார்.

அவரிடம் சொல்லப் போய் அவர் 'நான் ராகினிகிட்டே பேசறேன்' என்று சொன்னால்?

ராகினி அவருக்குக் கண்டிப்பாகக் கட்டுப்படுவாள். ஆனால் அந்த ரணம்... அவள் உள்ளத்தை உருக்கி விடாதா?

ராகினி.. பாவம் தாயில்லாதவள்.... தங்களையே நம்பியிருக்கிறவள்... அவளுடைய விருப்பத்தைத் தாங்கள் நிறைவேற்றி வைக்காவிட்டால் யார் நிறைவேற்றுவார்கள்.

பைரவி? 'அவள் மட்டும் பாவமில்லையா? அவளிடம் கூடப் பேசிவிடலாம். ஆனால் விஜயானந்த்? ஒத்துக் கொள்வானா?'

இன்னொரு மனது கேட்டது. ராகினியின் அம்மா மட்டும் தங்களை மெட்ராஸுக்குக் கூட்டி வந்திரா விட்டால் இன்றைக்கு இவ்வளவு கௌரவமாக வாழ்ந் திருக்க முடியுமா? ஒருவன் வாழ்க்கையில் நன்றிக் கடனுக் காக என்னவும் செய்யலாமே! 'விட்டுக் கொடுக்கத்தான் வேண்டும். கொஞ்ச காலம் வருத்தம் இருக்கும். பிறகு குழந்தை கிழந்தை என்று ஆகி விட்டால். எல்லாம் சரியாகி விடும்...'

யோசித்தார்!

வெகுவாக யோசித்தார்!

மகனிடம் பேசினார்!

டைரியைக் கொடுத்தார். விவரங்கள் சொன்னார்.

★ ★ ★

**வி**ஜயானந்த் அப்படியொன்றும் உடனே வசப்பட்டு பதில் சொல்லி விடவில்லை. மாறாகப் பொறுமையாகப் பதில் சொன்னான்.

'அம்மா... ராகினிகிட்டே நான் பேசறேன்' என்றான்.

'வேண்டாம்ப்பா.. நீ மறுத்து சொல்லிட்டீன்னா குடும்பத்துல பெரிய பிரச்சினையாகும்' என்றார் சௌந்தரம் கவலையுடன்.

'பிரச்சினை வரும்... சங்கடங்கள் வரும், ஆனால் அப்புறம் நான் சொல்றதுல இருக்கற நியாயத்தை ராகினி புரிஞ்சுக்குவா' என்றான்.

'என்னப்பா... நியாயம் சொல்வே?'

'அம்மா.. ராகினியை நான் அந்த மாதிரியெல்லாம்... நினைச்சதில்லே...! அதுமட்டுமில்லாம... இப்பல்லாம் க்ளோஸ் ரிலேஷன்ஸ்... மேரேஜ் பண்ணக்கூடாதுங் கறாங்க... எல்லாத்தைக் காட்டிலும் ராகினி அமெரிக்காவில



படிச்சவ... ஷி.. வில் அண்டர்ஸ்டாண்ட்.. ஆனா... பைரவி அப்படியில்லம்மா.. உடைஞ்சு போயிடுவா.. அவ உடையறாளோ இல்லையோ.. அவளைத் தவிர அந்த இடத்திலே... வேற யாரையும் என்னால நினைச்சுக்கூடப் பாக்க முடியாதும்மா' என்றான் தீர்க்கமா.

'தம்பி... எனக்கு மட்டும் என்ன? பைரவியை ரொம் பத்தான் பிடிச்சிருக்கு.... ஆனா, ராகினி நம்மளையே நம்பி வளர்ந்தவ..'

'ஸோ வாட்? பைரவியும் தான் என்னையே நம்பி யிருக்கா? அம்மா ப்ளீஸ் சென்டிமென்ட்ல தாக்காதீங்க... இது நடக்காது?'

'நான் அப்பாகிட்டே பேசுவேன்' என்றார் அம்மா.

'பேசு... அப்பா உன்னை விட சென்சிபிள். புரிஞ்சுக்கு வார். பரிதாபத்துக்காகவோ.. வேற எந்த சென்டிமென் டுக்காகவோ.. ஒரு கல்யாணம் பண்ணிக்க முடியாது? எனக்கு ராகினியைப் பிடிக்கும்தான். பட் தட் இஸ் அஃபெக்ஷன். அது மேரேஜ் லைஃப்க்கு சரிவராது' என்றான் முடிவாக.

அம்மாவின் முகம் தொங்கிப் போயிற்று.

'ஐ ம் சாரிம்மா! பொறுப்பை என்கிட்டே விட்டுடு. நான் ராகினிகிட்டே பேசறேன்' என்றான் மகன்.

அம்மா இடத்தை விட்டு நகர்ந்தார். மேலும் சற்று நேரம் யோசித்தார். மகன் சொன்னது உண்மைதான். அவன் அப்பாவும் இதே மாதிரித்தான் பேசுவார். ஆனால், ஒரே ஒரு கேள்வி அவரை அலைக்கழித்தது.

'நமக்கும் அம்மா இருந்திருந்தால்... நமக்காகப் பேசியிருப்பார்களே?' என்ற ஏக்கம் ராகினிக்கு வந்தால்...!

தெளிவாக முடிவெடுத்தார்.

இந்த வழக்கில் நான் ராகினியின் பக்கம்தான். அவள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டியது தன் கடமை. அதற்கு என்ன விலை கொடுத்தாலும் சரி...!' என்று தீர்க்கமான முடிவெடுத்தார்.

மீண்டும் மகனின் அறை நோக்கிப் போனார். போனால் அங்கே மகன் பைரவியிடம் பேசிக் கொண்டிருந்தான்.

முழுமையும் கேட்டார்!

முகத்தில் விசித்திரப் புன்னகை மலர 'நீ அப்படி வர்றியா?' என்று எண்ணிக் கொண்டார்.

தன்னறைக்குப் போய் தனது அறையில் அமர்ந்து தெளிவாகத் திட்டம் போட்டுக் கொண்டார்.

★ ★ ★

**போ**ன் மணி ஒலித்தது!

பைரவி புரண்டு படுத்து எழுந்தாள்!

மீண்டும் விஜயானந்த்.

'பைரவி!' என்றான். வழக்கமான இடக்கோ, குறும்போ இருக்கவில்லை.

'சொல்லுங்க... ஆனந்த்!' என்றாள் புன்சிரிப்புடன்.

'பைரவி....! நாளன்னைக்கு வியாழக்கிழமை காலைல உனக்கும், எனக்கும் ரெஜிட்ரர் ஆபீஸ்ல கல்யாணம்... எட்டு மணிக்கு ரெடியாயிடு... நானா வந்து பிக்கப் பண்ணிக்கறேன்' என்றான்.

'ஆனந்த்!' என்றாள் திகைத்துப் போய்.

'என்ன.. நான் சொல்றது காதிலே விழுந்தா?'

'விழுந்தது.. ஆனா, இவ்வளவு அவசரமா?'

'நோ... கொஸ்டீன்ஸ்.. பைரவி. நான் ஒன்னும் உன்னைத் தப்பான ஒரு விஷயத்துக்குக் கூப்பிடலையே.. சட்டப்படி... உன்னை மனைவியாக்கிக்கறேன் அப்படீங் கறேன். உனக்கு என்ன கஷ்டம்?'



'அதுக்கில்லே.. பெரியவங்கள்ளாம்...!' என்று அவள் இழுக்க... அவன் வெட்டினான்.

'தட்ஸ் மை பிராப்ளம்... யு கெட் தட்?' என்றான் எரிச்சலாய்.

'சரிங்க!' என்றாள் பயந்து போய்.

'குட்நைட்!' என்று வைத்து விட்டான்.

என்ன இப்படியென்று திடீரென்று பைரவி பயத்திலே ஆழ்ந்து போனாள். மறுநாள் காலையில் ஏழு மணி இருக்கும். குளித்து முடித்து விட்டு வந்து சுவாமி படத்துக்கு முன்னால் நின்று திருவாசகம் பாடினாள்.

திரும்பினாள்!

திகைத்தாள்.

அப்படி ஒருவர் 'உள்ளே வரலாமா?' என்று கேட்டுக் கொண்டு நின்று கொண்டிருந்தார்.



19

**பை**ரவி திகைத்துப் போய் அமர்ந்திருந்தாள்.

இன்றைக்கு என்ன நாள் இப்படி நமக்கு விடிந்து விட்டது என்று நினைக்க, நினைக்க ஆறவேயில்லை.

ஏழு மணிக்கு பூஜையை முடித்து விட்டுத் திரும்பினாள். உள்ளே சௌந்தரவல்லி நின்றிருந்தார்.

'உள்ளே வரலாமா?' என்றார்.

'வாங்க.. வாங்க...' என்று உற்சாகமாக வரவேற்றாள்.

'அத்தை... டிபன் சாப்பிடுங்க.. என்று உபசரித்தாள்.

சௌந்தரவல்லியின் முகத்தில் ஏனோ வழக்கமில்லாத வழக்கமாக உற்சாகம் குறைந்த மாதிரி இருந்தது.

'என்னங்கத்தை.. ஒரு மாதிரி இருக்கீங்க? காபி போட்டுத் தரட்டுமா?' என்றாள்.

'சரி.. போட்டுக் குடு!' என்றார். அவளும் போட்டுக் கொடுத்தாள்.

'பைரவி.. நான் உன்கிட்டே முக்கியமான விஷயம் பேச வந்திருக்கேன்... அதையெல்லாம் பேசறதுக்கு முன்னால ஒரு விஷயம் தெளிவாச் சொல்லிடறேன். என் மகனுக்கு உன்னை எவ்வளவு பிடிச்சிருக்கோ.. அதைக் காட்டிலும் அதிகமாக உன்னை எனக்குப் பிடிச்சிருக்கு... ஆனாலும்.. நான் இந்த விஷயத்தைப் பேசியே ஆகணும்...' என்றார்.

பைரவிக்கு உள்ளுக்குள் கிலி மண்டியது. ஏதோ பெரிதாக வரப்போகிறது என்ற எண்ணம் மேலோங்கியது. ஆனாலும் பொறுமையாக அவரைப் பேச விட்டுக் கேட்டாள்.

சௌந்தரவல்லி தங்கள் தொழிலில் நலிந்து போனதை அந்த சமயத்தில் கமலக்கா அவர்களைச் சென்னைக்கு அழைத்ததை அதற்குப் பிறகு குடும்பம் நிமிர்ந்து நின்றதை எல்லாம் விவரமாகச் சொன்னார்.

பைரவிக்கு உள்ளூர ஒரே கேள்வி.

'எதற்காக இதையெல்லாம் தன்னிடம் சொல்கிறார்.' என்ற எண்ணம். ஆனால் மற்றதையும் அவரே சொல்லி விடட்டும் என்று காத்திருந்தாள்.

மெதுவாக விஷயத்துக்கு வந்தார்.

'பைரவி! ராகினியை நான்தான் வளர்த்தேன். நல்ல பொண்ணு. ஆனா, மனசுக்குள்ள இப்படியொரு எண்ணம் வச்சிருக்கிறான்னு தெரியலே' என்றவர் தன் கைப்பையைத் திறந்தார்.



டைரியை எடுத்து நீட்டினார்.

பைரவி படிக்க ஆரம்பித்தாள். படிக்கப் படிக்க அவள் முகம் இருண்டது.

சௌந்தரவல்லியைத் திகிலுடன் பார்த்தாள்.

'பைரவி.. நான் என்ன செய்யட்டும் சொல்லு..! நீ என் இடத்திலே இருந்தா.. என்ன செய்வே?' என்றார்.

'அவரு.. அவரு... கிட்டே பேசினீங்களா?' என்றாள்.

'பேசினேன்... நேத்துப் பேசினேன். அவன் சொல்றான். 'அம்மா.. நெருங்கிய சொந்தக்காரங்க கல்யாணம் பண்ணக் கூடாது. நான் ராகினிகிட்டே பேசறேன்கறான்' என்றார்.

'ஓ'

'இவன் பேசினா.. ராகினி என்ன சொல்வா? சரி.. அத்தானுக்குப் பிரியமில்லே போல இருக்குன்னு மனசுக்குள்ளேயே ஏமாத்தத்தை மறைச்சுக்குவா... ஒரு நேரம் இல்லாட்டியும் ஒரு நேரம்... நம்ம அம்மா இருந் திருந்தா நிலைமையே வேறயா இருந்திருக்குமில்லன்னு நினைச்சா...?!' என்றார் கண்கலங்கினார்.

பைரவியும் கண்கலங்கினாள்.

'பைரவி!' என்று அவர் கைகளைப் பிடித்துக் கொண்டு குலுங்கி அழுதார்.

பைரவியும் கூட அழுதாள்.

'பைரவி.. என் மகன் உன்மேலே எவ்வளவு பிரியம் வச்சிருக்கான்னு எனக்குத் தெரியும். அவன்கிட்டேயிருந்து உன்னைப் பிரிக்கறதுங்கறது எனக்கு மட்டும் பிரியமான விஷயமா? சொல்லு!' என்று மறுபடியும் அழுதார்.

பைரவி மௌனக் கண்ணீர் வடித்தபடி அமர்ந்திருந்தாள்.

'மறுபடியும் பேசிப் பார்க்கலாம்னு அவன் ரூமுக்குப் போறேன். உன்கிட்டப் பேசிகிட்டிருக்கான். ரெஜிஸ்டர்

மேரேஜ் பண்ணலாம் வாங்கறான். நான் சொன்னதுக்கு ஏறுக்கு மாறா நிக்கறான்' என்றார்.

அவரும் சற்று நேரம் அழுதார். பிறகு 'பைரவி.. எனக்கு என்ன பண்றதுன்னு தெரியலியே? அதுதான்.. உன்கிட்டயே ஆலோசனை கேக்கலாம்னு வந்தேன். நீ என்ன தீர்ப்பு சொன்னாலும்.. சரி..' என்றார்.

அவள் சற்று நேரம் வெடித்து அழுதாள். அழவிட்டார். பிறகு முகம் துடைத்து நிமிர்ந்தாள்.

'அத்தே! அவரை எப்படியாவது சம்மதிக்க வச்சாலும், கல்யாணத்துக்கு அப்புறம் கோபத்தையெல்லாம் ராகினிகிட்டே காட்டினாருன்னா...'

'அதான்... எனக்கும் என்ன பண்றதுன்னு.. புரியலே!'

பிறகு மறுபடியும் அழுதாள்.

'பைரவி! இதுவரைக்கும் அவன் கேட்ட எதையும் நான் மறுத்ததில்லே. நீயும் மோசமான பொண்ணில்லே. அருமையான பொண்ணு. இப்படி ஒரு அருமையான பொண்ணைக் கொண்டு வந்து நிறுத்தி எனக்குக் கல்யாணம் செஞ்சு வைன்னு கேக்கறப்போ.. அவனுக்கே துரோகம் செய்யற நிலைமையில் ஒரு தாய்... நான் எப்படிப்பட்ட தாய் பைரவி?!' என்று வேதனையாகப் பேசப் பேச பைரவி மனம் உருகினாள்.

'அத்தே...! மாமா மூலமா சொல்லுவமா?' என்றாள்.

'நீ.. வேற! அவரும் அவன் பக்கம்தான் பேசுவாரு..!' என்றார்.

'அத்தே...ராகினியும் தாயில்லாத பொண்ணு...நானும் தாயில்லாத பொண்ணுதான். ஆனா எனக்குக் கஷ்டங்களைத் தாங்கிப் பழக்கமிருக்கு. அவளுக்கு அதெல்லாம் பழக்கமிருக்காது. நான் விலகிக்கறங்கத்தே...' என்றாள்.



'ஐயோ.. என் தங்கமே! இப்படி வார்த்தையா உன் வாயிலிருந்து சொல்ல வைக்கிற நான் மனுஷியே இல்லை! பேய் ஜன்மம்...' என்று மறுபடியும் தழுதழுத்தார்...

பைரவி சுதாரித்துக் கொண்டாள்.

'தெரியுங்கத்தே... எனக்குத் தெரியும் அவரு என் வாழ்க்கையில வந்தப்பவே எனக்குத் தெரியும்... இப்படிப் பெரிய அதிர்ஷ்டமெல்லாம் எனக்கு வாய்க்காதுன்னு தெரியும்.. பரவால்லைங்கத்தே உங்களை மாதிரி நல்லவங்களோட மனசுல ஒரு ஓரத்துல இடம் என்னைக்கும் இருந்தா அதுவே போதும்...' என்றாள்.

பிறகு தன் திட்டத்தைச் சொன்னாள்.

'நீங்க இனி அவருகிட்டே எதுவும் பேச வேண்டாங்கத்தே. நானும் எதுவும் தெரியாத மாதிரி இருந்துக்கறேன். ஆனா, எனக்கு ஒரே ஒரு உதவி செய்யணும்' என்றாள்.

'சொல்லு கண்ணம்மா!' என்ற அத்தை எழுந்து அவளைத் தன் தோளோடு சேர்த்து அணைத்துக் கொண்டார். கதறி அழுதார்கள்.

தனக்கு வேண்டிய உதவியைச் சொன்னாள். 'கண்டிப்பா... செய்யறண்டா கண்ணம்மா...' என்று மறுபடியும் அழுதார்.

'இந்த ராட்சஸியை மன்னிப்பியாடா ராஜாத்தி...' என்று மறுபடியும் அழுதார். 'இதை மடிப்பிச்சையா நினைச்சு... எனக்குக் குடு தாயி...!' என்று மேலும் கதறினார்.

'ஐயோ... பெரிய பெரிய வார்த்தையா சொல்லாதீங்க... அத்தை எனக்கு வாய்த்தது அவ்வளவுதான்' என்று அழுதாள்.

இரண்டு பேரும் மாற்றி மாற்றி ஒருவருக்கொருவர் தேறுதல் சொல்லிக் கொண்டார்கள். ஒன்றரை மணி நேரம் ஓடியிருந்தது.

'பைரவி.. கோயிலுக்குப் போறேன்னு சொல்லிட்டு வந்திருக்கேன்' என்று புறப்பட்டார்.

'நானே மறுபடியும் உங்களைக் காண்டாக்ட் பண்றேங் கத்தை...' என்றாள்.

சௌந்தரவல்லி விடுவிடுவென்று மற்றவர்களைப் பார்க் காதவர் போல் காரில் போய் ஏறிக் கொண்டு சென்று விட்டார்.

பைரவியை நினைத்த போதும் அவருக்குள் துக்கம் பொங்கியது. சின்னஞ் சிறு மலரைப்போல் ஆதரவில்லாமல் நிற்கிற அந்தச் சிறு பெண்ணை நாம் பந்தாடுகிறோமோ என்ற கவலை அவரையும் பிடித்தது.

சோர்வாக வீட்டில் நடமாடிக் கொண்டிருந்தார்.

விஜயானந்த் அம்மா தன் மறுப்பால் சோர்ந்து போயிருக்கிறார் என்று எண்ணிக் கொண்டான். மேற்கொண்டு விசாரிக்கவில்லை.

சௌந்தரவல்லி அவன் எண்ணத்துக்கு மாறாக தான் செய்த செயலினாலோ என்னவோ எதிரே வரவும் துணிய வில்லை.

அவசரமாகப்போவது போல் அவனும் கிளம்பி அலுவல கத்துக்குப் போனான்.

★ ★ ★

எட்டரை மணிக்கு சௌந்தரவல்லி கிளம்பிப் போனபின் பைரவி பித்துப்பிடித்தாற்போல் அமர்ந்து கொண்டிருந்தாள்.

தன் உள்மனது ஏதோ எச்சரித்துக் கொண்டிருந்ததன் பொருள் இப்போதுதான் அவளுக்குப் புரிந்தது. ஆனால், உள்ளே ஒரு பெருமிதம் ஏற்பட்டிருந்தது.

தன் தாய் கெஞ்சிக் கேட்பதையும் உதறித் தள்ளி விட்டுத் தன்னைச் சட்டபூர்வமாக மனைவியாக்கிக்



கொள்ள விஜயானந்த் முடிவு செய்தது அவளுக்குப் பெருமையாக இருந்தது.

கண்டிப்பாக விஜயானந்த் அந்த முடிவிலிருந்து பின் வாங்க மாட்டான் என்று அவளுக்குத் தெரிந்தது. பின்னே இந்தப் பிரச்சினைக்கு என்னதான் முடிவு?

தான்தான் முடிவெடுக்க வேண்டும். முடிவெடுத்துக் கொண்டாள்.

செயல்படுத்த ஆரம்பித்தாள்.

விஜயானந்துக்கு போன் அடித்தாள். 'என்ன பைரவி!' என்றான்.

'இல்லே! நம்ம ரெண்டு பேரும் இன்னைக்கு ஆபீசுக்கு லேட்டாப் போலாமா?' என்றாள்.

'ஹேய்! வாட்ஸ் த மேட்டர்?'

'எனக்கு.. எனக்கு.. உங்களை இப்பவே பாக்கணும் போல இருக்கு.' என்றாள்.

'போச்சுரா... அம்மிணி.. என்ன விசேஷம்?' என்று உற்சாகமானான்.

'சும்மாதான்!'

'சரி... நம்ம கெஸ்ட் ஹவுஸ் வந்துரு. நான் அங்கே வந்தர்றேன்' என்றான் விஜயானந்த்.

'சரிங்க!' என்றாள்.

ஒரு ஆட்டோ பிடித்தாள். கெஸ்ட் ஹவுசுக்கு வந்து முன்னாலேயே இறங்கிக் கொண்டாள்.

நடந்து போனாள்.

அங்கே கெஸ்ட் ஹவுசில்.

விஜயானந்த் உள்ளே ஹாலில் ஸோபாவில் அமர்ந் திருந்தான்.

'ஹேய்! வா.. வா!' என்று உற்சாகமாக வரவேற்றான்.

அவன் எழுந்து நின்றான். தயங்காமல் அவன் முகத்தை ஆழ்ந்து பார்த்தாள். ஏதோ பாத்திரத்தில் அவசரமாகத் தண்ணீர் நிறைக்கிறவள் போல அவன் உருவத்தைக் கண்களில், மனதில் வாங்கிக் கொண்டாள்.

அவள் பார்வை பார்த்து அவன் திகைத்துப் போனான்.

அருகில் வந்தான். மெல்லத் தொட்டான். அவள் தடுக்கவில்லை. அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

விக்கி விக்கி அழுதாள்.

'ஹேய்..! என்ன ஆச்சு!' என்றான் குழைந்த குரலில்.

தன் கர்சீஃபை எடுத்து அவள் கண்களைத் துடைத்தான்.

'என்னடா ஆச்சு?' என்றான்.

'சந்தோஷம்.. சந்தோஷம்.. நேத்து நைட் போன் பண்ணி ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கலாம்னு சொன்னீங்களே அந்த சந்தோஷம்' என்றாள்.

பிறகு எச்சரிக்கையாகக் கேட்டாள் 'திடீர்னு.. அப்படி என்ன ஒரு முடிவு?' என்றாள்.

'ம்.. நீதான் கிட்டக்கயே வர விட மாட்டேங்கறே. 'உன்னைத் தொட்ட காற்று'ன்னு பாட்டு வேற சொல்றே...' 'அதான்...!' என்று நழுவலாக.. சிரித்தான்.

அவளுக்குப் புரிந்தது.

தன்னுடைய பிரச்சினையைச் சொல்லி அவளை வேதனைப் படுத்தாமல் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று நினைக்கிறான் என்பது.

அவளுக்கு எப்பேர்ப்பட்ட அதிர்ஷ்டத்தைத் தான் கை நழுவ விடுகிறோம் என்பது புரிந்தது... தன்னைச் சிறகுக்குள் வைத்துப் பாதுகாப்பது போல் அவன் பாதுகாப்பான்



என்பது தெரிந்தும் அப்படியொரு அதிர்ஷ்டத்தைத் தான் இழக்கப் போகிறோம் என்ற எண்ணமே தாங்கவில்லை

தன்னை மறந்தாள்.

தன் கைகளால் வளைத்து அவன் முகத்தை தன் பால் இழுத்தாள். பரிசுகளை அள்ளியிறைத்தாள்.

அவனும் தன்னிலை இழந்தான். தன் இடக்கையால் வளைத்து வலக்கையால் தோள் பற்றிக்கொண்டு பதில் களை வாரிக் கொடுத்தான்.

சற்றே எல்லை மீறுகிற கணத்தில் இருவருமே தங்களை மீட்டுக் கொண்டார்கள். வெட்கத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். சிரித்துக் கொண்டார்கள்.

'சரி.. இப்ப.. சொல்லுங்க.. அப்பப்ப இப்படிக் கொஞ்சம் கிடைச்சா... ரெஜிஸ்டர் மேரேஜை தள்ளிப் போடலாமா?' பெரியவங்க கிட்டே சம்மதம் வாங்கிகிட்டு...' என்று இழுத்தாள்.

'ஹேய்! என்னடா.. விஷயம்னு பார்த்தேன். குடுத்த லஞ்சமெல்லாம் இதுக்குத்தானா? நோ... மை டியர்.. கேர்ள்.. முடிவில் எந்த மாற்றமும் இல்லை. நாளைக்குக் காலையில எட்டு மணிக்குப் பண்ணிக்கறேன்' என்றான்.

'சரிங்க!' என்றாள்.

'புறப்படட்டுமா?' என்று புறப்பட்டாள்.

'ஆனந்த்..!' என்றாள்.

அவன் திரும்பி நின்றான்.

'பட்டன் கிட்டே!'ன்னு கை காட்டினாள். அவள் முடியொன்று சிக்கியிருந்தது. சிரித்துக் கொண்டே விடுவித்தான்.

'அப்ப எனக்கு மார்னிங் ஹாஃப் எ டே லீவு தர்றீங்களா?' என்றாள்.

'ஓ.. என்ன?' என்றான்.

'ஆஃப்டர் நூன் கூட சீக்கிரம் பர்மிஷன் வேணும்' என்றாள்.

'ஓ.கே!' என்றான்.

மறுபடியும் லேசாக அவள் நெற்றியில் இதழ் பதித்து விட்டு வெளியே போனான்.

அவளும் முகம் திருத்திக் கொண்டு கிளம்பினாள்.

வெளியேறிய போது கெஸ்ட் ஹவுஸ் வாட்ச்மேன் அவளுக்குப் பெரிய வணக்கம் போடுவதை அவள் கண்டு கொள்ளவில்லை.

தன் சிந்தனைகளில் ஆழ்ந்து போனாள். இப்போது தன் அபார்ட்மெண்டுக்கு நடந்து போனாள்.

போகும் போதே யோசித்தாள். சென்னை வெயில் தாக்கியது. அவள் அதையெல்லாம் உணரவில்லை.

தனது அபார்ட்மெண்ட்டில் அமர்ந்து நீண்டதொரு கடிதம் எழுதினாள்.

பகல் உணவு உண்டாள். தனது உடைமைகளை எல்லாம் எடுத்து பாக் செய்தாள்.

கண்ணுக்குக் குளிர்ச்சியாக அலங்கரித்துக் கொண்டு அலுவலகம் போனாள்.

மணி மூன்று மணி வாக்கில் அவனது அறைக்கு அனுமதி கேட்டுப் போனாள்.

'ஹேய்! எனக்குப் பிடிச்ச ரோஸ் நிறத்தில் டிரஸ். அந்தப் பக்கமே பார்வை பாயுது... ஒரு வேலையும் ஓட மாட்டேங்குது. என்ன இப்படி ஆளைக் கொல்றே?' என்றான் கிறக்கமான குரலில்.

அவள் புன்னகைத்தாள்.



அவன் மேஜையில் அந்தக் கவரை வைத்தாள்.

'ஹேய்! என்ன இது!' என்றான்.

'லெட்டர்.'

அவள் அவன் கை மேல் கை வைத்தாள்.

'ம்ஹூம்! இங்கே பிரிக்கக்கூடாது. வீட்ல இன்னைக்கு நைட் நீங்க மட்டும் தனியா இருக்கும் போதுதான்... பிரிக்கணும்.. தெரியுதா' என்றாள் கொஞ்சலாக.

அவன் மகிழ்ச்சியாக கலகலவென்று சிரித்தான்.

'என்னடா... அதிசயம் இது? மார்னிங் வேற எதிர்பாராத விஷயமெல்லாம் கிடைத்தது. இப்ப வேற.. லெட்டர். இப்பத்தான்.. மேடத்துக்கு.. கொஞ்சம் கொஞ்சம் மேட்டர் புரியுது?' என்று சிரித்தான்.

அவள் நெஞ்சுக்குள் ஏதோ வந்து அடைக்கிறாற் போல் இருந்தது.

அவன் மெல்லிய குரலில்.

'ஏன் பைரவி! இன்னைக்கு ஏதோ ஐயாவுக்கு அதிர்ஷ்ட நாள் போல இருக்கு!' என்றான்.

'இல்லை... ஆனந்த்.. இப்படி ஒரு நாள் வாழ்க்கையில வந்திருக்கவே வேண்டாம்.' என்று அவள் மனது ஓலமிட்டு அலறியது. ஆனால், கண்கள் அவன் சிரிப்பதை விழுங் கினாற் போல் பார்த்தது.

ஐந்து நிமிடங்களுக்கு மேல் பார்வைகள் கவ்வி நிற்க மௌனமானார்கள்.

'பைரவி! வேண்டாம்! அப்புறம் நான் என்ன செய் வேன்னு எனக்கே தெரியாது!' என்றான்.

அவள் வெட்கப் புன்னகையுடன் 'எனக்கு பர்மிஷன் வேணும்' என்றாள்.

'எதுக்கு?'

'நாளைக்காக கொஞ்சம் தயாராகணும்' என்றான்.

'ரைட் மேடம்! பர்மிஷன் கிராண்டட்' என்றான்.

பைரவி அவன் சற்றும் எதிர்பாராத விதமாக அவன் அருகில் வந்து அவன் கன்னத்தில் அழுத்தமாக இதழ் பதித்து விட்டு நிமிர்ந்து நடந்தாள்.

அவன் நம்ப முடியாதவனாக வெறித்துப் பார்த்தான். பின் கையிலிருந்த கவரைப் பார்த்தான். தன் பிரீஃப் கேஸுக்குள் மிகவும் அக்கறையாகப் பத்திரப்படுத்தினான். அது ஒரு வீரியமிக்க வெடிகுண்டு என்பதை அறியாமல்.

பைரவியோ கன்னங்களில் கண்ணீர் வழிவதைப் பற்றிக் கவலைப்படாமல் ஆட்டோவில் போய் கொண்டிருந்தாள்.



## 20

இரவு கவிந்தும் கவியாததுமான நேரம்!

செடிகளுக்குத் தண்ணீர் விட்டுக் கொண்டு நின்றிருந் தார் சிவசுப்பிரமணியன்.

பைரவி ஒரு தோளில் ஏர் பேக்கும், இன்னொரு கையில் சூட்கேஸுமாக நிற்பதைப் பார்த்தவர்.

'வாம்மா!' என்று அன்புடன் வரவேற்றார்.

'பெரியப்பா... நான் கொஞ்ச நாள் இங்கே தங்கிக்க லாமா?' என்றாள் தயக்கத்துடன்.

'தாராளமா... நாங்க ரெண்டு பேரும் இங்கே தனி யாத்தானே மொட்டு மொட்டுன்னு முழிச்சுக்கிட்டிருக் கோம்... நீ இருந்தா எங்களுக்கு சந்தோஷம்தான்' என்றார்.



உள்ளேயிருந்து அந்த வள்ளியம்மை அதைவிட மகிழ்ச்சி யானார்.

அழகிய வீடு!

ஓட்டு வீடென்றாலும் தொட்டிக் கட்டு வீடு. முன்னாலும், பின்னாலும் வேண்டுமட்டும் செடி கொடிகள்.

வீட்டை மறைத்துப் பெரிய காம்பவுண்ட். வீட்டிற்கு முன்னாலே கொஞ்சம் இடம் வரைக்கும் சிமெண்டு தளம்.

அதிலே அழகாகக் கோலமிட்டுச் செம்மண்ணால் காவி கட்டியிருந்தார் வள்ளியம்மை, ஏதோ பர்ணசாலையைப் போல் வீடு பார்ப்பதற்கு அழகாக இருந்தது. ஆனால் இது எதையும் ரசிக்கிற மனநிலையில் பைரவி இல்லை.

கையில் இரண்டாயிரம் ரூபாய் பணம்! கொஞ்சம் துணிமணிகள் மற்றபடி கொஞ்சம் புத்தகங்கள். இவை தவிர வேறு பெரிய உடைமைகள் எதுவும் அவளிடத்தில் இருக்கவில்லை.

ஒரு அறையை அவளுக்கென்று ஒதுக்கினார்கள். 'இங்க... பாரும்மா! நல்லா ஓய்வெடு.... அப்புறம் நாளைக்கு எல்லாம் சாவகாசமாய்ப் பேசலாம்' என்றார்கள்.

அவளுக்கும் தனிமை தேவையிருந்தது. அறையில் அடைந்து கொண்டாள்.

★ ★ ★

அலுவலகத்திலேயே ஏழு மணியாகி விட்டது. விஜயானந்த் நாற்காலியை ஒரு சுழற்றுச் சுழற்றி விட்டுப் பார்த்தான்.

அலுவலகமே காலியாகியிருந்தது.

ரவிக்குமார் மட்டும்தான் ஒரு வேலையாக வெளியே போயிருந்தான். அவன் வந்ததற்குப் பிறகு போகலாம் எண் ணிய விஜயானந்த். திடீரென்று அந்த முடிவைச் செய்தான்.

ரவிக்குமார் வருவதற்கு எப்படியும் அரைமணி நேரம் ஆகும். அதற்குள் பைரவியின் லெட்டரை எடுத்துப் படித்து விடலாமே என்று தோன்றியது.

எடுத்தான்.

எடுத்துப் படிக்க ஆரம்பித்தான்.

அன்புள்ள ஆனந்த் அவர்களுக்கு,

எத்தனையோ நாட்கள் உங்களுக்குக் கடிதம் எழுத வேண்டும் என்று நினைத்திருக்கிறேன். ஆனால், இப்படி எழுத நேரிடும் என்று நினைத்தது இல்லை. ஆனால் நேரிட்டுவிட்டது.

உனக்கும் எனக்கும் ரெஜிஸ்டர் மேரேஜ் என்று நீங்கள் அறிவித்த அந்தக் கணத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி என் உள்ளத்தில் ஏற்பட்டது. ஆனால், அந்த அவசர முடிவு ஏன் என்று அறிய நேரிட்ட போது வெகுவாகச் சிந்திக்க வேண்டியிருந்துவிட்டது.

உலகத்திலேயே மிக உயர்வான விஷயம் தாயின் அன்பு. அப்படி சுயநலமில்லாத அன்பைக் கொட்டி வளர்க்கிற தாயே நமக்கு விருப்பமில்லாத ஒன்றைச் செய்யச் சொல்கிறார் என்றால் அதற்கு ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டுமல்லவா?

இதைப் படிக்கும்போது விஜயானந்த் கண்கள் சுருங்கின. லேசான கோபம் தோன்றியது. அம்மா பைரவியை சந்தித்திருக்கிறார் என்று தோன்றியது. பல்லைக் கடித்துக் கொண்டான். மேற்கொண்டு படித்தான்.

'இருந்தது. ராகினியும் அருமையான பெண்ணாம். நீங்கள் மறுக்காமல் அத்தையின் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றால் நான் விலகுவதே சிறந்தது என்று தோன்றியது. அதனால் செல்கிறேன்.



பயப்படாதீர்கள். துன்பங்களும், சோதனைகளும் எனக்குப் பழக்கமானவை. வாழ்க்கையை சந்திப்பேன். எதுவும் செய்து கொள்ள மாட்டேன்.

'உன்னைத் தொட்ட காற்று வந்து என்னைத் தொட்டது' என்ற பாடலைத்தான் இப்போதும் நான் மேற்கோள் காட்டுகிறேன்.

சென்னையிலிருந்து வெகு அருகில் எங்காவதுதான் நான் இருப்பேன். நீங்கள் மென்மேலும் வெற்றிகள் பெறுவதை, சாதனைகள் செய்வதையெல்லாம் பத்திரிகைகளில் படித்துக் கொண்டு அதில் கிடைக்கிற மகிழ்ச்சியினால் என் வாழ்க்கைக்கு அர்த்தம் தேடிக் கொள்வேன். என் தம்பி தியாகுவின் மீது ஆணையாகச் சொல்கிறேன். என்னை நீங்களாக சந்திப்பதற்கு முயற்சி செய்யாதீர்கள்.

வாழ்க்கையில் இதுவரை வெற்றிகளைச் சந்தித்து வந்திருக்கிற உங்களுக்குத் தெரியும். காதல், அதிலும் இளவயதில் எழுகிற காதல் வாழ்க்கையின் ஒரு அத்தியாயம் மட்டுமே. வேறு வேறு விஷயங்கள் வாழ்க்கையில் உங்களைப் போன்றவர்களுக்கு இருக்கிறது என்று நீங்கள் நிரூபிக்க வேண்டும்.

என் மீது நீங்கள் வைத்த அன்பு உண்மையானதென்றால் நீங்கள் அத்தையைக் கோபித்துக் கொள்ளக் கூடாது. அவர்கள் நம்மைக் காட்டிலும் வேதனையில் இருக்கிறார்கள். புரிந்து கொள்ளுங்கள்.

மேலும்... ஒரு விஷயம். மறுபடியும் நீங்கள் என் மீது வைத்த அன்பு உண்மையென்றால் நீங்கள் ராகினியிடம் அன்பாக இருக்க வேண்டும். கண்ணதாசன் பாடல் ஒன்று கேட்டிருக்கிறீர்களா?

'என்னுடலில் ஆசையென்றால்

என்னை நீ மறந்து விடு.

என்னுயிரில் ஆசையென்றால்,

வந்தவளை வாழவிடு' என்பதுதான். நான் இப்போது சொல்ல விரும்புவது அந்தக் காலத்தில் எத்தனையோ பேருக்கு இரண்டு மனைவிகள் இருந்திருக்கிறார்கள் இல்லையா? அதுபோல் பைரவி என்று மனதுக்குப் பிடித்தவள் இருந்தாள். இப்போது இல்லை என்ற மனப்பான்மையோடு வாழ்க்கையை நீங்கள் சந்திக்க வேண்டும்.

எப்போதும் உங்கள் நினைவுடன் நானும் வாழ்வேன்.

அன்புடன்

பைரவி.

வலக்கையால் தலையை அழுந்தக் கோதிக் கொண்டான்.

தாங்க முடியாத துக்கம் அவன் நெஞ்சில் பொங்கியது. விட்டத்தைப் பார்த்தபடி நாற்காலியை சுழற்றியபடி அடுத்த அரைமணி நேரமும் அமர்ந்திருந்தான்.

ரவிக்குமார் வந்து அவன் தோற்றத்தைப் பார்த்து அச்சப்பட்டான்.

'ரவி.. நீ உடனே நம்ம அபார்ட்மெண்ட்டிற்குப் போயி பைரவி இருக்காளான்னு பாத்துட்டு வா...' என்றான்.

டிரைவரிடம் தன் காரை கொட்டிவாக்கம் கெஸ்ட் ஹவுஸுக்கு விடச் சொன்னான்.

'ரவி... இந்த விஸ்கி பிராண்டி ஏதோ ஒரு இழவை வாங்கிட்டு வா' என்றான் போனில்.

ரவி பயந்து போனான். பாட்டிலைக் கொண்டு வந்து கெஸ்ட் ஹவுஸில் வைக்க சற்று நேரம் வெறித்துப் பார்த்த பின்பு.

'வேண்டாம்.. எடுத்துட்டுப் போ' என்றான் மறுபடியும் 'இல்லல்ல... வச்சுட்டுப் போ' என்றான்.



ரவிக்குமார் வைத்து விட்டு நகர்ந்தான்.

'ரவி.. ஸீ டு தட்... நோ படி டிஸ்டர்ப்ஸ்.. மீ..' என்றான்.

அவன் நகர்ந்தான்.

நகர்ந்தவன் சும்மாயிருக்கவில்லை.

★ ★ ★

'ஹலோ!' என்றது குரல்.

'யாரு?' என்றார் சௌந்தரவல்லி.

'அம்மா... ஐயா... இருக்காங்களா, ஐயாகிட்டே பேசணும்' என்றான் ரவிக்குமார். பதட்டமாக.

சௌந்தரவல்லி உள்ளூரக் கவலையுடன் கணவரை அழைத்து போனைக் கையில் கொடுத்தார்.

'சொல்லு..!' என்றார்.

'ஐயா.. இந்த நாலு வருஷத்துல.. எம்.டி. சார் இவ்வளவு அப்செட்டாகி நான் பாத்ததில்லே. கெஸ்ட் ஹவுஸில ரொம்ப மூடு அவுட்டாகி இருக்காரு. விஸ்கியை வாங்கிட்டு வா.. பிராந்தியை வாங்கிட்டு.. வான்னு ஒரே ஆர்ப்பாட்டம். ஐயா நீங்க உடனே வந்து பாருங்கய்யா..' என்றான்.

'என்ன பிரச்சினைன்னு எதுவும் தெரியுமா? என்றார்.

'ஐயா.. பைரவி மேடம் சம்பந்தமா ஏதோ போல இருக்கு..' என்றான் தயக்கமாக.

'சரி.. நான் இப்ப கெஸ்ட் ஹவுஸ் வரேன்' என்று கிளம்பினார்.

சௌந்தரவல்லிக்கு உள்ளூரக் குலை நடுக்கம் ஏற்பட்டது. மேற்கொண்டு எதுவும் கேட்க வேண்டாம் என்று அச்சத்தோடு நின்று கொண்டார்.

ராஜலிங்கம் காரை எடுத்துக் கொண்டு கெஸ்ட் ஹவுஸ் பறந்தார்.

உள்ளே போனால் விஜயானந்த் கட்டிலில் குப்புறப் படுத்துக் கொண்டிருந்தான். கொஞ்சமே கொஞ்சம் மது அருந்தியிருந்தான் போலும்.

நிலை கொள்ளாத ஒரு தவிப்பு. நெஞ்சு கொள்ளாத ஒரு சோகம் அவனிடத்தில் தெரிந்தது.

அறைவாசலில் அப்பா நிற்பதைப் பார்த்தவுடன் கொஞ்சம் திகைத்தான். ஆனால், அப்பா அவனை நெருங்கி.

'என்னடா தம்பி? என்ன பிரச்சினை?' என்று கேட்க அவர் இடுப்பைக் கட்டிக் கொண்டு விக்கி விக்கி அழ ஆரம்பித்தான்.

'இதுவரைக்கும் நான் கேட்டதெல்லாம் வாங்கிக் குடுத் துட்டு.. என் வாழ்க்கைக்குன்னு நான் கேட்ட விஷயத்தைப் பறிச்சுட்டீங்களே?' என்றான் குமுறலாக....

'பிரச்சனை என்ன சொல்லு!' என்றார் மறுபடியும்.

'அப்பா... என் பைரவி.. என்னை விட்டுட்டுப் போயிட்டா..!' என்று மறுபடியும் அழுதான்.

அப்பா அவனைச் சற்று நேரம் அழவிட்டார். அவன் அழுது ஓயும் வரை மௌனமாக முதுகைத் தடவிக் கொடுத்தார்.

மெல்ல அடங்கினான். எழுந்து வாஷ்பேசினில் முகம் கழுவிக் கொண்டு கட்டிலில் அமர்ந்தான். அப்பாவும் எதிரில் சோபாவில் அமர்ந்தார்.

'என்ன நடந்துச்சுன்னு சொல்லுப்பா..' என்றார்.

சொன்னான். தழுதழுத்த குரலில் சொன்னான். சொன் னது மட்டுமல்லாமல் பைரவியின் கடிதத்தையும் காண்பித்தான்.

அப்பா முகவாய்க் கட்டையை நீவிக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தார்.



'தம்பி.. எங்கயோ என்னமோ இடர்ற மாதிரி தெரியுது. ராகினிக்கு இப்படியொரு எண்ணம் இருக்கற மாதிரித் தெரியலே. இருந்திருந்தா.. கோடி காட்டியிருப்பாளேப்பா' என்றார்.

அவன் முகத்தை அழுத்தத் துடைத்துக் கொண்டான். பிறகு அப்பாவைப் பார்த்தான்.

'அப்பா.. டைரியை நானே படிச்சேன். ஆனந்த்... ஆனந்த்ன்னு எழுதியிருக்கா...' என்றான்.

'ஓ..!' என்றார். பிறகு சற்றே கோபம் தொனிக்கும் குரலில்.

'சௌந்தரம் என்கிட்டே ஏன் இதைப் பத்திப் பேசவில்லை.' என்றார்.

'அப்பா.. ஆளாளுக்குத் தியாகம் செய்யறாங்க.' 'அம்மா.. மகனைத் தியாகம் செஞ்சுட்டாங்க... பைரவி... என்னைத் தியாகம் செஞ்சுட்டா..' நான் என் சந் தோஷத்தைத் தியாகம் செய்ய வேண்டியதுதான்' என்றான்.

'சரி.. சரி.. டென்ஷனாகாதே! நீ கவலைப்படாதே. நான் அந்த பைரவியை எங்க இருந்தாலும் கொண்டு வந்து சேர்க்கிறேன். ராகினிகிட்டே பேசறேன்.' என்றார்.

'ப்சு' என்று உச்சுக் கொட்டினான்.

'பைரவி... வரமாட்டாப்பா..!' என்றான்.

'புரிய வக்கலாம்ப்பா..'

'நடக்காதுப்பா.. அவ லெட்டர்ல பாத்தீங்களா?' 'தம்பி தியாகு மேல ஆணையான்னு' எழுதியிருக்கா. உங்களுக்குத் தெரியாதுப்பா.. ஷி இஸ் எ ஸ்ட்ராங் பர்ஸனாலிட்டி. நானும் போய் சந்திக்க மாட்டேன்!' என்றான்.

அப்பா பரிதாபமாகப் பார்த்தார். 'நான் என்ன செய்யட்டும்ப்பா?' என்றார்.

'ஒண்ணும் செய்ய வேண்டாம். விடுங்க.. என் துக்கத்தை நானே சுமந்துக்கறேன்' என்றான்.

'சரிப்பா...! நீங்க போங்க...' என்று அனுப்பி வைத்தான்.

அவர் போய்ப் பதினைந்து இருபது நிமிடங்களுக்குள் மறுபடியும் வீட்டுக்கு போன் செய்தான். வேலைக்காரப் பெண்.

'பெரியம்மா.. இப்பத்தான் கோயிலுக்குப் போயிருக் காங்க..' என்றாள்.

சற்றே ஆசுவாசப் பெருமூச்சு விட்டான். மறுபடியும் 'நினைவு பின்னோக்கி ஓடியது. காலையில் அவளாக அணுகித் தொட்டதுமே நான் புரிஞ்சுகிட்டிருக்கணும்' என்று நொந்து கொண்டான்.

தன் கைகளுக்குள் சிக்கிக் கொண்டு வெட்கத் தவிப் புடன் நின்ற அவள் உருவமே கண்ணுக்குள் வந்து வந்து போனது. இனி ஒரு போதும் அவள் தன்னருகில் அப்படி நிற்கப் போவதில்லை என்று எண்ணியபோது கோபம் வேறு பொங்கியது.

'என்ன லொள்ளு இருந்தா... ராகினி கிட்ட பிரியமாய் இருக்கணும்; அம்மாகிட்டே கோபிச்சுக்கக் கூடாது. சந்திக்கவே முயற்சி செய்யக் கூடாது என்று நிபந்தனைகள் வேறு போட்டிருப்பாள்.'

'மடக்கழுதை!' என்று திட்டிக் கொண்டே தலையணையை எடுத்து வீசினான்.

உள்ளே நுழைந்த ரவிக்குமார் சட்டென்று தலை யணையைத் தாங்கிக் கொண்டான்.

கோபம் குறையாமல் அவனைப் பார்த்தான். 'நீ எதுக்கு இப்ப வந்தே?' என்றான்.

ரவிக்குமார் அதைக் கண்டு கொள்ளவில்லை.



'சார்... அப்பா... ரொம்பக் கோபமாப் போறங்க...!' என்றான்.

அப்போதுதான் விஜயானந்துக்கு அந்த எண்ணம் தோன்றியது. 'அப்பா ஏதாவது வீட்டில் போய் அம்மாவிடம் ரகளை செய்தால்...' என்ற அச்சம்.

'சரி.. காரை எடு' என்றான்.

ரவிக்குமார் போய்க் காரை எடுத்தான். போகும்போது.

'என்ன சார் பிரச்சினை?' என்றான்.

'சொல்றேன். ஒரு வாரம் கழிச்சுச் சொல்றேன்' என்றான்.

இருவருமே அமைதியாகி விட்டார்கள்.

கார் வீட்டை நெருங்க நெருங்க விஜயானந்த்க்கு வேறொரு விதமான தவிப்பு.

உள்ளே வீட்டில் என்ன விவகாரம் நடக்கப் போகிறதோ என்று.

அவன் பயந்தாற் போலவே ஆனது.

அம்மாவின் அறையில் அப்பா கோபமாக அம்மாவை அறைவதைப் பார்த்துக் கொண்டு திகைத்து நின்றான்.

அறை வாங்கிக் கொண்டும் நேர்பார்வையாகப் பார்த்துக் கொண்டு நின்றார் அம்மா.

வெறுத்துப் போய்த் திரும்பிய அப்பா மகனைப் பார்த்துத் திகைத்து நின்றார்.

'அப்பா... பிளீஸ்! இதெல்லாம்.. வேண்டாம்ப்பா...' என்றான்.

கசப்பாக புன்னகைத்து விட்டு தன் அறைக்குப் போய் விட்டான்.



## 21

'**சா**ப்பிடறது. துணிமணி வாங்கறதுக்கெல்லாம் என்கிட்ட யோசனை கேப்பியே.. இப்படி என் மகன் வாழ்க்கையைக் கெடுத்துப் போட்டியே.. அதுக்கு முன்னாடி ஏன் என்கிட்டே யோசனை கேட்கலை' என்று கோபத்தோடு கேட்டார் ராஜலிங்கம்.

கெஸ்ட் ஹவுஸில் மகனை விட்டு விட்டு வந்தவுடனே சௌந்தரத்தைத் தேடினார்.

சௌந்தரம் அவர் கோபத்துடன் வருவார் என்பதை அறிந்தோ என்னவோ பக்கத்திலேயிருக்கிற கோயிலுக்குப் போய்விட்டு அரை மணி நேரம் கழித்துத்தான் வந்தார்.

அரைமணி நேரத்தில் கோபம் வடிந்து விடும் என்று நினைத்தற்கு மாறாகக் கோபம் பெருகியிருந்தது.

சௌந்தரத்தின் கையைப் பிடித்து தரதரவென்று இழுத்துக் கொண்டு போய் அவரது அறையில் வைத்து இந்தக் கேள்வியைக் கேட்டார்.

'உங்க மகனோட வாழ்க்கையை விட தாயில்லாத ராகினிப் பொண்ணோட வாழ்க்கை நமக்கு முக்கியம்னு எனக்குப் பட்டுது' என்றார் விறைப்பாக.

'சௌந்தரம்.. முட்டாள் தனமாய் பேசாதே!' என்றார் எரிச்சலாக.

'முட்டாள்தனமா இருக்கலாம். நன்றி கெட்டத் தனமா இருக்கக்கூடாது....' என்றார் சௌந்தரமும் சமமான எரிச்சலுடன்.



அப்போதுதான் அந்த அறை விழுந்தது.

மகனின் கசப்பான புன்னகையைப் பார்த்து மனம் நொந்து போய் சௌந்தரத்தின் அறையில் இருந்த சோபாவில் அமர்ந்தார்.

'சௌந்தரம்.. பாத்தியா.. பையன் நொறுங்கிப் போயிட்டான்.. நீ என்கிட்டே இதைப் பத்திப் பேசியிருக் கலாம்...'

'பேசினா நீங்க என்ன சொல்வீங்களோ யாருக்குத் தெரியும். அன்னைக்கே என் மகனுக்கு மட்டும் ஒரு பொண்ணை பிடிச்சுப் போச்சுன்னா.. யாரு தடுத்தாலும் கல்யாணம் பண்ணி வெச்சுடுவேன்னு சொன்னீங்க..' என்றார்.

'சௌந்தரம்.. நீ யென்ன சொல்றே.. இப்ப? நன்றிக் கடனுக்காக ராகினிக்கும், இவனுக்கும் கல்யாணம் பண்ணி வைக்கலாம்கிறே.. இல்லையா? நன்றிக் கடனுக் காகவெல்லாம் கல்யாணம் பண்ணக்கூடாது... அது சரிவராது...' என்றார் சற்றே கோபம் தணிந்தவராக.

'ஏன்? எத்தனையோ குழந்தைங்க.. அப்பா.. அம்மா.. பண்ணி வக்கிற பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிற தில்லையா?'

'பண்ணிக்கறாங்க.. அது குறிப்பிட்ட யார் மேலயும் நாட்டம் இல்லேங்கறப்ப... சரி.. ஆனா.. விஜய் அப்படி யில்லே. ராகினிக்கும் இது தெரிய வந்தா.. சங்கடம்தான் ஆகும். ரொம்ப அவமானமாத்தான் ஃபீல் பண்ணுவா..!'

'எல்லாம் சரியாய்ப் போயிடும். கொஞ்ச நாள் கஷ்டமா இருக்கும். அப்புறம் ஒரு குழந்தை பிறந்தா மனசு மாறிடும்' என்றார் சௌந்தரம்.

ராஜலிங்கம் நீண்ட பெருமூச்சுவிட்டார். பிறகு சொன்னார்.

'சௌந்தரம்.. நீ எங்கயோ தப்புப் பண்றேன்னு தோணுது. இந்த மாதிரி எல்லாம் கொஞ்சமாவது எண்ணம் இருந்திருந்தாக் கூட ராகினி என்கிட்டே சொல்லி யிருப்பா..'

'அப்படியெல்லாம்.. எந்தப் பொண்ணும் வந்து எனக்கு உங்க மகனைக் கல்யாணம் பண்ணி வைங்கன்னு கேட்க மாட்டாங்க...' என்றார் சௌந்தரம்.

'சரி.. உன்கிட்டே இனி பேசிப் பிரயோசனமில்லே..' என்றார்.

'பாருங்கத்தான்! நான் சொல்றதைக் கேட்டுக்குங்க.. இந்த முடிவை மாத்தணுன்னு நீங்க முயற்சி செஞ்சீங் கன்னா.. நான் உயிரோட இருக்க மாட்டேன்...' என்றார் சௌந்தரம்.

மறுபடியும் ராஜலிங்கம் ஒரு பெருமூச்சு விட்டார். பிறகு சொன்னார்.

'என் வாழ்க்கையில ரெண்டு தரம் தப்புப் பண்ணிட் டேன். முதலாவது உன் பேச்சைக் கேட்டுட்டு கமலாக்கா கூப்பிட்டான்னு சென்னைக்கு வந்தேன் பாரு அது. இரண் டாவது நன்றிக்கடன்கற பேர்ல என் மகனோட வாழ்க் கையை நீ பலி குடுக்கறதை ஒரு கையாலாகத் தனத்தோட வேடிக்கை பாக்கறேன் பாரு... இது..!' என்றார் எழுந்தார்.

மனைவியை ஆழ்ந்து பார்த்தார்.

'ஒருவேளை.. ராகினி என்னோட அக்கா மகள்ங் கறதுக்காக இந்த தியாகம் செய்யறதா நீ நினைச்சு கிட்டீன்னா.. அதைவிடப் பெரிய முட்டாள்தனம் வேற எதுவும் இல்லே...' என்றார். வெளியே நடந்தார்.

சௌந்தரம் மனம் தளராமல் எது வந்தாலும் சரி என்ற தோரணையிலேயே சோபாவில் அமர்ந்தார்.

★ ★ ★



தன்னுடைய வயதுக்கு அப்பா அப்படி சோபாவில் சுருண்டு பார்த்திராத விஜயானந்த் மனம் உருகிப் போனான்.

அப்பாவின் அருகில் போய் அமர்ந்தான். அப்பா அவனைத் திரும்பிப் பார்த்தார்.

'தம்பி! இது எதுவும் எனக்குத் தெரியாது' என்றார்.

'பரவால்லே! விடுங்கப்பா..' என்றான். கஷ்டப்பட்டுப் புன்னகைத்தான்.

'அப்பா.. ஐ வில் மானேஜ். ஐ வில் கம் அவுட் ஆஃப் இட்' என்றான்.

அவர் மௌனமாக அமர்ந்திருந்தார்.

'அப்பா.. அம்மாகிட்டே கோபம் காட்டாதீங்க. ரெண்டு பேரும் பாராமுகமா இருந்தா.. அம்மா நொறுங்கிப் போயிடுவாங்க..' என்றான்.

எழுந்து போய் விட்டான்.

★ ★ ★

என்னதான் உற்சாகமாய் இருப்பது போல் காட்டிக் கொண்டாலும் நெஞ்சு கொள்ளா சோகம் நிறைந்திருந்தது.

அவனைச் சந்தித்திருக்கவே வேண்டாம்... என்றே எண் ணியது மனது. இந்த ஆறு மாத கால சென்னை வாழ்க்கை தன் மனத்தில் ஆறாத ரணத்தை ஏற்படுத்தி விட்டதை இனி வாழ்நாளுக்கும் மாற்ற முடியாது. மறக்க முடியாது.

இனி வேறு ஒருவருக்கும் மனைவியாக நினைக்க முடி யாத அளவுக்கு அவன் தன் உள்ளத்தில் நிறைந்து போனதை அறிந்து ஒரு பக்கம் மகிழ்ச்சியாக இருந்தது. ஒரு பக்கம் வேதனையாக இருந்தது.

பெரியப்பாவிடம்... 'பெரியப்பா.... எனக்கு அந்தக் கம்பெனியும் சூழ்நிலையும் பிடிக்கலே... வேற ஏதாவது வேலை தேடிக்கற வரைக்கும்... நான் இங்க இருக்க லாமா...?' என்றாள்.

'இருக்கலாண்டா.. ராஜா!' என்றார்.

அங்கே தங்கியிருப்பது அவளுக்கு ஒரு வகையில் நன்றாக இருந்தது.

பைரவியின் அப்பா கண்ணப்பன் பற்றி பெரியப்பா நிறையப் பேசினார்.

'நான் வாய்ப்பாட்டுப் பாடுவேன். அவன் மிருதங்கம் வாசிப்பான்... நாங்க இருபது வயசு வாக்கில இருக்கும் போது நிறையக் கச்சேரிக்குப் போவோம். எங்கயும் கறாரா பணம் கேட்க மாட்டான். நான்தான் வாங்கிக் குடுப்பேன். கேட்டா... கலைக்கு சன்மானம் அவங்களாத் தரணும். நாமளாக் கேட்டா அது விலையாயிடும்பான்' என்றார்.

அப்பாவைப் பற்றி அவளுக்குப் பெருமையாக இருந்தது.

'கல்யாணமானதுக்கப்புறம் கொஞ்ச நாள் சந்தோஷமா இருந்தான். உங்கம்மா அவனுக்கேத்த பொண்ணு. நல்ல சங்கீத ரசனை. ஆனா, ரொம்ப நாள் அவனோட வாழக் குடுத்து வைக்கலை. அவ போனப்ப உன்னை நான் வளர்த்துக்கறேன்னு கேட்டேன். அதுக்குள்ள ரெண்டாம் கல்யாணம் ஆச்சு. அப்ப சொன்னான் 'அண்ணா லட்சுமி மாதிரி மென்மையான பொண்ணில்லே.. காமாட்சி அன்பை மென்மையாகக் காட்டத் தெரியாது. ஆனா, இப்பக் குழந்தையை அவகிட்டே இருந்து பிரிச்சா.. அவ சங்கடப் படுவாளே'ன்னுட்டான்... பேசாம என்கிட்டே குடுத்துருந்தா.. அருமையாக வளத்திருப்போம்..' என்றார் சிவசுப் பிரமணியம்.

சிவசுப்பிரமணியத்துக்கும், வள்ளியம்மைக்கும் குழந்தைகள் இருக்கவில்லை. அதனால்தான் துணிவாக அங்கே வந்தாள் பைரவி.

அவர்கள் வெளியே போனால் அவளைத் தனிமை உணர்வு பிடித்துக் கொண்டது. அந்த கிராமத்தில்



அவர்களை எல்லாரும் வீட்டு விசேஷங்களுக்கு அழைத்தார்கள்.

இப்போதும் அப்படித்தான் போயிருந்தார்கள். தனிமை கிடைத்தவுடனே விஜயானந்தின் நினைவு அவளை ஆக்கிரமித்தது.

மனம் வெதும்பி அழுதாள்.

எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம். தன் கைக்கெட்டியது வாயக் கெட்டாமல் போய்விட்டதே. யாரிடம் சொல்லி அழுவது?

இத்தனைக்கிடையிலும் ஒரு ஆறுதல் 'நல்லவேளை.. தியாகுவிடம் இதையெல்லாம் சொல்லவில்லை.. தெரிந்திருந்தால் அவனுடைய ரியாக்ஷன் எப்படியிருக்குமோ' என்று எண்ணிக் கொண்டாள்.

இறைவன் வேறு ஒரு விதமாக அவளுக்கு ஆறுதல் அளித்தார்.

வந்து இண்டு மூன்று நாட்களிலேயே கடவுள் படத்தின் முன்பு

'குற்றம் புரிதல் எனக்கியல்பு
குணமாக் கொள்ளல் உனக்கியல்பு
சிற்றம்பலவா இனிச் சிறியேன்
செப்பு முகமன் யாதுளது
தெற்றென்றடியேன் சிந்தைதனைத்
தெளிவித்தச்சந் துயர் தீர்த்தே
இற்றைப் பொழுதே அருட்சோதி
யீக தருணமிதுவாமே..' என்று மனமுருகிப் பாடிக் கொண்டிருந்தாள்.

பின்னாலே நின்று ரசித்துக் கேட்ட சிவசுப்பிரமணியம் அவள் திரும்பியவுடனே அன்புடன் அவள் தலையைத் தடவிக் கொடுத்தார்.

'இங்கயே எங்களோட கொஞ்ச நாள் இருந்துக்கறியா? சங்கீதம் கத்துத் தரேன்' என்றார்.

அவள் உற்சாகமானாள்.

'சரிங்க.. பெரியப்பா...!' என்றாள்.

மறுநாளே ஆரம்பித்து விட்டார்!

காலையில் எழுந்து கோலம் போடுவது செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவது பெரியவர்களுக்காக அளவான காரம், புளி பயன்படுத்தி சுவையாக சமைத்துக் கொடுப்பது என்று எல்லாமும் நன்றாகத்தான் இருந்தது.

சிறுவயதில் இழந்த அப்பாவின் அன்பு முழுமையாக இப்போது கிடைத்தது. இந்த வாரம் சென்னையில் இருந்து பேசுவது போலவே தியாகுவிடம் பேசி விட்டாள்.

சௌந்தரவல்லியிடம் அவள் கேட்ட உதவி ஒன்றே ஒன்றுதான். ஒரு வருடம் வரை அவள் வீட்டுக்குத் தான் அனுப்புவது போலவே மாதம் ஐந்தாயிரம் ரூபாய் அனுப்பிவிட வேண்டும். அதுவும் கடனாகத்தான். அதனால் வீட்டுக்குத் தன்னைப் பற்றிய பெரிய கவலை எதுவும் இருக்காது என்று நிம்மதியானாள்.

என்ன சுறுசுறுப்பாக இருந்தாலும் நாள் முழுதும் வேலை வைத்துக் கொண்டாலும் ஏதோ ஒரு பக்கம் காலியாக இருப்பதாகவே உணர்ந்தாள். வெறுமை உணர்வு அவளைத் தின்றது.

சென்னையை விட்டு வந்து ஒரு வாரமாகி விட்டது.

விஜய் எப்படிக் கஷ்டப் படுகிறாரோ என்று மனது கிடந்து தவித்தது.

சட்டியிலே வைத்துத் துவரம் பருப்புக்கடைந்து, தேங்காய்ச் சட்னி அரைத்துக் கொடுத்தால் சிவசுப்பிரமணியம் மிகவும் பிரியமாகச் சாப்பிடுவார்.



தேங்காய்ச் சட்டினியை அம்மியில் வைத்து அரைக்கும் போது அவளுக்குப் பூங்குடி கிராமத்து ஞாபகம் வந்தது.

அந்தக் கிராமத்துச் சூழ்நிலையில் அவன் இயல்பாக இருந்தது. குழந்தைகளோடு ஒன்றாக பட்டம் விட்டது எல்லாம் அவளுக்கு நினைவு வந்து போயின.

மனம் பாரமாகி விட்டது.

அப்போது பதினோரு மணியிருக்கும்.

'பைரவி.. டேய்... இங்க.. வா!' என்று அழைத்தார் சிவசுப்பிரமணியம். போனாள்.

'அம்மா.. இந்தப் பேப்பர்ல ஒரு விளம்பரம் பாத்தியா .. வித்தியாசமா இல்லே!' என்று நீட்டினார்.

படித்தாள்.

கைகள் நடுங்கின. உதடுகள் துடித்தன. கட்டம் கட்டி வெளியிடப்பட்டிருந்தது.

உன் வேண்டுகோள்கள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப் பட்டன. நானாகச் சந்திக்க முயற்சிக்க மாட்டேன். ஆனால், என்ன? உன் தம்பியின் மீது பொறாமையாயிருக்கிறது. வாழ்க்கையின் மீது வெறுப்பாக இருக்கிறது. ஆனாலும் வாழ்வேன்.

என்று மொட்டையாக விளம்பரம்.

எடுத்துக் கொண்டு தன்னறைக்கு ஓடினாள்.

தரையில் மண்டியிட்டு அமர்ந்து படித்தாள். புரிந்தது. தனக்காகவே கொடுக்கப்பட்ட விளம்பரம்.

வெடித்து அழுதாள்.

வள்ளியம்மையின் அன்பான இரு கைகள் அவளை அணைத்துக் கொண்டன.

சிவசுப்பிரமணியம் வந்து அவளருகில் சம்பனமிட்டு அமர்ந்தார். தலையைத் தடவிக் கொடுத்தார்.

'அழுதுரு.. மனசுல இருக்கிற சங்கடமெல்லாம் அழுது தீர்த்துடு..' என்றார்.

வெகுநேரம் அழுதாள்.

அவர்கள் இருவரும் பேசவேயில்லை. அழ விட்டார்கள். பிறகு சிவசுப்பிரமணியம் சொன்னார்...

'சரி.. இப்ப சொல்லு! இந்தத் தங்க மனசுக்குள்ள அப்படியென்ன சோகம்ன்னு சொல்லு...' என்றார்.

அவள் அவரை அச்சத்துடன் பார்த்தாள்.



## 22

நாட்கள் ஓடிவிட்டன.

பைரவியின் பிரிவுக்குப் பிறகு ஒரு மாதம் ஓடிவிட்டது.

விஜயானந்த் பத்திரிகையில் விளம்பரம் கொடுத்ததற்குப் பிறகு ஒரு கடிதம் கிடைத்தது. கவரைத் திறந்து பார்த்தான்.

'விளம்பரம் பார்த்தேன். உடம்பை நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள்' என்று இருந்தது.

வழக்கம்போல் கசப்பான புன்னகையுடன் மடித்து பத்திரப்படுத்திக் கொண்டான்.

வீட்டிலிருந்து நேரத்தில் கிளம்பி விடுவான். இரவும் நேரம் கழித்துத்தான் வருவான். அம்மாவிடம் பேச்சு மிகக் குறைவாகவே இருந்தது.

ஒருநாள் கணவனிடம் சௌந்தரம் வருத்தத்துடன் சொன்னார்.

'என்னை முழுசா வெறுத்துட்டான் போல இருக்கு.'



'பொறுமையாயிரு. நீ செஞ்சிருக்கிற வேலை அப்படி. அவனா இருக்கக் கொண்டு உன்கிட்டே முகம் குடுத்துப் பேசறான்' என்றார்.

'பரவால்லைங்க.. நா தாங்கிப்பேன். ராகினி மட்டும் அம்மா இருந்திருந்தா நமக்கு எப்படியாவது நடத்திக் குடுத்திருப்பாங்க இல்லேன்னு நினைக்கிற நிலைமை வராம இருந்தாச் சரி.' என்றார்.

ராஜலிங்கத்துக்குக் கூட மனம் நெகிழ்ந்து போனது.

மணி ஒன்பதாகியும் இன்னமும் விஜயானந்த் வரவில்லை. இருவரும் காத்துக் கொண்டு இருந்தார்கள்.

கார் ஹாலில் சத்தம் கேட்டது.

இருவரும் உற்சாகமானார்கள்.

பிரீஃப் கேஸை எடுத்துக் கொண்டு உள்ளே வந்தான் இருவரையும் பார்த்துப் பொதுவாகப் புன்னகைத்தான்.

'என்னப்பா.. தூங்கப் போகலையா?'

'இல்லப்பா.. உன்கிட்ட இருந்து ஒண்ணும் தகவல் வர்லை. அதான் வெயிட் பண்ணிகிட்டிருக்கோம்.'

'அப்பா.. நான்தான் சொன்னேனே. ரெண்டு முக்கியமான புது பிராஜக்ட் பிளான் பண்ணிகிட்டிருக்கேன். அதுக்காகக் கொஞ்சம் நேரம் செலவு செய்ய வேண்டியிருக்கு...' என்றான்.

அப்பாவும், அம்மாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

'உடம்பையும் பாத்துக்கப்பா..!' என்றார்.

'பாத்துக்கறேன்ப்பா.. பாருங்க இப்பக் கூட பசிச்சுது. சாப்பிட்டுட்டுத்தான் வந்தேன்' என்றான்.

ஷூவைக் கழட்டி ஹாலில் வைத்து விட்டு அறைக்குப் போய்விட்டான்.

அதே நேரம்!

போன் ஒலித்தது!

எடுத்தான். அந்தப்புறம் ராகினி.

'ஹலோ! அத்தான்!' என்றாள்.

'சொல்லு.. ராகினி!' என்றான்.

இந்தப் பிரச்சினைக்குப் பிறகு ராகினி ஒன்றிரண்டு முறை பேசினாள். அவனும் எதையும் காட்டிக் கொள்ள வில்லை. வழக்கம் போல் உற்சாகமாக இல்லாவிட்டாலும் சாதாரணமாகப் பேசினான். ஆனால் அந்த வித்யா சத்தையே ராகினி உணர்ந்து விட்டாள் போலும்.

அந்த வீட்டில் அவர்கள் வைத்திருந்தது லேட்டஸ்ட் போன் செட். அதனால் அவன் பேசுவது நன்றாகக் கேட்டது.

'அத்தான்! என்ன உங்களைப் பிடிக்கவே முடிய மாட் டேங்குது. அதான் இந்த நேரம் கூப்பிட்டேன்.'

அவன் அம்மாவையும், அப்பாவையும் திரும்பிப் பார்க் காமல் பேசினான்.

'ஒண்ணும் இல்ல ராகினி! ரெண்டு புது பிராஜக்ட் போயிட்டிருக்கு. அதுக்கு நேரம் குடுக்கவே சரியாயிருக்கு.. அப்புறம்.. உன்னோட பி.எச்.டி என்ன ஆச்சு?' என்றான்.

'அத்தான்... ஃபைனலைஸ் செஞ்சாச்சு. அங்க வந்ததுக்கு அப்புறம். ஒரு புரொஃபசர்கிட்டே குடுத்து ஒரு தடவை ஒபினியன் வாங்கிக்கிட்டதுக்கப்புறம்.. சப்மிட் பண்ணிட வேண்டியதுதான். ஒரே மாசத்துல முடிஞ்சுரும் ' என்றாள்.

'அப்புறம்.. என்ன பிளான்?' என்றான் தலையைக் கோதிக் கொண்டே.

அம்மாவும், அப்பாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். அவள் தொடர்ந்தாள்.

'என்ன பிளான் அத்தான்!' ஏன் கேக்கறீங்க!



'இல்லே..! பெரியவங்க இங்கே என்னென்னவோ பிளான் போடறாங்க... நீ எதுவுமே சொல்லக் காணோமே?' என்றான்.

'அத்தான்! நம்ம வாழ்க்கையை நம்மதான் தீர்மானிக் கணும்' பெரியவங்க எதுக்குக் கவலைப் படறாங்க' என்றாள்.

'அப்படிப் போடு! அப்ப என்ன நீயே முடிவு பண்ணிட்டியா?'

'அதெல்லாம் அவ்வளவு சீக்கிரம் சொல்லிடுவேனா? பொறுங்க.. நான் சென்னை வரும்போது எல்லாம் சொல்றேன்' என்றாள்.

'என்னத்தையோ.. சொல்லு, எல்லாத்துக்கும் நானும் தயார்தான்..' என்றான். மேலும் சற்று நேரம் பேசிக்கொண் டிருந்தார்கள்.

பிறகு அம்மாவிடமும், அப்பாவிடமும் பேசினாள்.

வைத்து விட்டாள்.

விஜயானந்துக்கு 'அப்பாடா! ஒரு மாதம் கவலையில் லாமல் இருக்கலாம்.' என்ற எண்ணம்தான் தோன்றியது.

சட்டென்று எழுந்து தன் அறைக்குள் போய் விட்டான்.

★ ★ ★

அந்த மாதத்தில்!

தியாகு அக்காவிடம் கேட்டான்.

'அக்கா! நீ அந்த ஆபீஸ்ல வேலைக்குப் போறதில்லே.. போல இருக்கு..' என்று.

'ஏன் அப்படிச் சொல்றே!'

'உன் வீட்டுக்கு போன் அடிச்சா கால் போறதே இல்லே. ஆபீஸுக்கு போன் பண்ணி கலாக்காகிட்ட கேட்டேன். நீ ரிசைன் பண்ணிட்டுப் போயிட்டதாச் சொன்னாப்பல' என்றான்.

'சித்தி.. சித்தி.. கிட்டே சொல்லிட்டியா?'

'இல்லே! இன்னும் அம்மாகிட்டே சொல்லலே. என்ன விஷயம்னு தெரிஞ்சுக்காம அம்மாவைப் பயப்படுத்தக் கூடாதில்லே' என்றான்.

'நல்ல வேளை!' என்று ஆசுவாசப் பெருமூச்சுவிட்டாள்.

'அந்த ஆபீஸ் சரிவர்லே. வெளியே வந்துட்டேன். இப்பக் குன்றத்தூர்ல இருக்கேன். பெரியப்பா வீட்ல அவர்களுக்கு நான் இங்கே இருக்கறது ரொம்பப் பிடிச்சிருக்கு. பெரியப்பா இங்கயே பக்கத்துல எங்கேயாவது வேலை வாங்கிக்கலாம்னு சொல்லியிருக்கார்!' என்றாள்.

'சரிக்கா!' என்றான். பிறகு அன்பு நிறைந்த குரலில்.

'அக்கா! வேற எதுவும் பிரச்சினை இல்லையே?'

'இல்லப்பா! என்று ஒரேயடியாக அடித்தாள். தியாகு சமாதானமாகி விட்டான். ஆனால் அன்றைக்கு அவளுக்கும் பழைய நினைவுகள் எல்லாம் கிளர்ந்தெழுந்து விட்டன.

மனதை சோகம் அழுத்தியது. அந்த சின்னப் பூஜையறையில் போய் அமர்ந்து சற்று நேரம் தியானம் செய்தாள். பிறகு மனம் உருகிப் பாட ஆரம்பித்தாள். அன்றைக்கு இப்படித்தான் நெஞ்சு கொள்ளா சோகத்துடன் விளம்பரத்தைப் பார்த்து அழுதவுடன் பெரியப்பாவும், பெரியம்மாவும் அவளிடம் இருந்து அவள் சோகத்துக்கான காரணத்தைக் கறந்தார்கள்.

அப்போது பெரியப்பா சொன்னார்.

'தப்பில்லம்மா.. உன் நிலைமையில இருக்கற எந்த நல்ல பொண்ணும் இப்படித்தான் செய்வா. நீ கரெக்டாத்தான் நடந்திருக்கே!' என்றார்.

விஜயானந்தைப் பற்றி அவள் பெருமையுடன் விவரிப்பதை அன்புடன் கேட்டுக் கொண்டார். பிறகு சொன்னார்.



'அம்மா! இந்த விளம்பரத்தைப் பார்த்தாலே தெரியுது. அந்தப் புள்ளை எவ்வளவு அருமையான பையன்னு. அவனால உன்னை மறக்க முடியாது தங்கம்.. என்ன செய்யலாம்.. வாழ்க்கை சில நேரங்கள்லே இப்படித்தான் சோதனைகள் குடுத்துடுது' என்றார்.

அவர்களிடம் தன் சோகத்தை மனம் விட்டுப் பேசிய பின் அவள் மனம் சற்றே தெளிவானது. இப்படி மனம் விட்டு சித்தியிடம் பேசியிருக்க முடியாது. நல்ல வேளையாக இப்படி மனம் விட்டுப் பேசுவதற்கு இப்படி ஒரு வளர்ப்புப் பெற்றோர்கள் கிடைத்தார்களே என்று சந்தோஷப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான் என்று நினைத்துக் கொண்டாள்.

மறுநாள்தான் பெரியப்பா சொன்னார்.

'அம்மா.. பைரவி.. இந்த சோகத்தை ஜெயிக்கறதுக்கு உனக்குக் கடவுள் ஒரு அருமையான வழி குடுத்துட்டாரு... சங்கீதத்துல மனசைச் செலுத்தும்மா..' என்றார்.

வீட்டுப் பணிகள் போக மற்ற நேரமெல்லாம் அவள் பாட்டு, சங்கீதம் என்றே கழித்தாள்.

'அம்மா.. பைரவி.. தமிழில நிறையக் கீர்த்தனைகள் இருக்கு. மாயூரம் வேதநாயகம் பிள்ளைன்னு ஒருத்தர் அருமையாக தமிழ்க் கீர்த்தனை பாடியிருக்காரு. அருணாசலக் கவிராயர்ன்னு ஒரு புலவர் 'இராம நாடகம்' ன்ற பேர்ல இராமயணத்தையே பாடியிருக்காரு. அதுல இருந்த நல்ல கீர்த்தனைகளைப் பொறுக்கி உனக்குக் கத்துதரேன்' என்றார்.

'சரிங்க.. பெரியப்பா...!' என்றாள்.

ஆர்வத்துடன் கற்றுக் கொள்ள ஆரம்பித்தாள். ஒரு புறம் சரளி வரிசை, ஜண்டை என்று ஆரம்பித்து முறையாகப்

போய்க் கொண்டிருந்தாலும், மற்றொரு புறத்தில் நேரடியாகக் கீர்த்தனைகளும் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார். அவளும் மனம் முழுவதையும் அதில் செலுத்தினாள்.

இது தவிர நேரம், கிடைக்கும் போது பெரியப்பாவின் இலக்கியப் புத்தகங்களைக் கலைத்துப் பார்த்து தேவாரம், திருவாசகம் முதலியவற்றைப் படிக்க ஆரம்பித்தாள்.

தனக்குப் பிடித்த பாடல்களை தானாகத் தேர்ந்தெடுத்து அவளும், பெரியப்பாவுமாக மெட்டுப் போட்டுப் பாடினார்கள்.

'இது ரொம்ப நல்லாருக்கேம்மா....' என்று பாராட்டினார்.

இன்னொன்றும் சொன்னார். 'அம்மா உன் மனசு சங்கடமெல்லாம் தீரணும்னா கடவுளை ஆழமாப் பிரார்த்தனை செய். அப்படிச் செய்யும் போது எனக்கு இதைக் குடு... அதைக் குடுன்னு கேட்காம... எனக்கு எது நல்லதோ அதைச் செய்ன்னு மட்டும் கேளு. கடவுள்கிட்டே ஏதோ நேரடியாப் பேசற மாதிரிக் கேளு...'என்றார்.

'சரிங்க.. பெரியப்பா..' என்றாள்.

தன் சித்தியிடம் கிடைக்காத அனுசரணை வள்ளியம்மையிடம் கிடைத்தது.

அவளுடைய நீளத் தலைமுடிக்கு எண்ணெய் தேய்த்து படியத் தலைவாரி விடுவது அவருக்குப் பிடித்தமான விஷயம். பார்த்துப் பார்த்துக் கவனித்துக் கொண்டார்.

கடவுள் ஒன்றைப் பறித்தால் மற்றொன்றைக் கொடுக்கிறார் போலும்.

பெரியப்பா மற்றொரு நாள் சொன்னார்.

'அம்மா.. இனி என்ன ஆகப் போகிறது?' என்றெல்லாம் யோசிக்காமல் இன்னைய கடமையைச் சந்தோஷமாச் செய்ம்மா.. எல்லாம் நல்லதாவே முடியும்' என்று.



விஜயானந்தையே பிரிந்ததுக்குப் பிறகு இனிமேல் என்ன நல்லது தனக்கு வந்து விடப் போகிறது' என்றெண்ணிக் கொண்டாள்.

'வருவார் அழைத்து வாடி.

வடலூரார் வடதிசைக்கே' என்று வள்ளலார் பாடலை அவள் உருகிப் பாடக் கேட்ட பெரியப்பாவும், பெரியம்மாவும் கண்களில் நீர் தளும்பக் கேட்டார்கள். பெரியப்பா அவள் தலையில் ஆசீர்வதிப்பது போல் கைவைத்து சொன்னார்.

'குழந்தே! சங்கீதம் உன் இரத்தத்துல ஊறியிருக்கு. முழுசா சங்கீதம் கத்துகிட்டேன்னா ரொம்ப நல்லா வருவே. ஒருவேளை உன் சேவை சங்கீதத்துக்குத் தேவையா இருக்கறதுனாலயோ என்னவோ கடவுள் உன் வாழ்க்கையில திருவிளையாடல் பண்ணிட்டார் போல இருக்கு 'முழுசா மனசை சங்கீதத்துல செலுத்து...' என்றார்.

செலுத்தினாள்.

* * *

ஒரு வாரம் போயிருக்கும்.

'பைரவி!' என்று உற்சாகமாக வந்தார் பெரியப்பா.

'அம்மா... உனக்கு ஒரு வேலை பார்த்திருக்கேன்' என்றார்.

'எங்கே?' என்றாள் உற்சாகமாக.

'இங்கே பக்கத்துல ஒரு ஆசிரமம் இருக்கு. ஆங்கே கணக்கு வழக்கு பாத்துட்டுக் குழந்தைங்களுக்கு நல்ல பாட்டுக்களையும் சொல்லித் தரணும். ரெண்டுக்கும் சேர்த்து ஒரு மூவாயிரம் சம்பளம் தர்றேன்னிருக்காங்க' என்றார்.

அவள் மகிழ்ச்சியடைந்தாள்.

பெரியப்பாவுக்கு சென்னை திருவல்லிக்கேணி அருகில் வீடுகள் இருந்தன. வாடகை நிறைய வந்தது. பதினைந்து இருபதாயிரம் இருக்கும் என்று கேள்விப்பட்டிருந்தாள்.

நகர வாழ்க்கை பிடிக்காமல் இங்கே வந்து தங்கியிருக்கிறார் என்றும் புரிந்தது. அதனால்தான் அங்கே தங்கியிருப்பது அவர்களுக்கொன்றும் பாரமில்லையென்றாலும் ஊருக்குப் பணம் அனுப்புவதற்கு என்ன செய்வது என்ற யோசனையில் இருந்தாள்.

பெரியப்பா எதையும் பெரிதாகக் கவனிக்காதவர் போல் இருந்தாலும் அவளுடைய கவலைகளைத் துல்லியமாக உணர்ந்து கொள்கிறார் என்று அவளுக்கு புரிந்தது.

மனதார நன்றி சொன்னாள்.

'குழந்தே! நன்றியெல்லாம் சொல்லக் கூடாது. இங்கே ஊர்ல எல்லார்கிட்டயும் உன்னைப் பத்தி என்ன சொல்லியிருக்கேன் தெரியுமா? என்னோட வளர்ப்பு மகள்ன்னு. அப்பாவுக்குக் குழந்தைகள் நன்றி சொல்வார்களோ?' என்றார்.

அவர்கள் தன்னை உண்மையாகவே மகளாக நினைக்கிறார்கள் என்பதும் புரிந்தது. ஒரு நாள் மாலை 'தலையை வலிக்கிற மாதிரி இருக்கு... பெரியம்மா' என்று சொல்லிவிட்டு உள்ளே போய் உடை மாற்றிக் கொண்டு வருகையில் பெரியம்மா சூடான காபியைக் கையில் வைத்துக் கொண்டு நின்றார்.

குடித்து விட்டு அந்த மரக்கட்டிலில் இருந்த படுக்கையில் படுத்தாள்.

சற்று நேரம் உறங்கிவிட்டாள். விழித்துப் பார்த்தால் பெரியம்மா அவள் கால்களை அமுக்கி விட்டுக் கொண்டிருந்தார்.

பெரியப்பா எதிரில் சேரில் அமர்ந்திருந்தார்.

'பெரியம்மா' என்று பதறிக் கொண்டு எழுந்தாள்.

'தூங்குடா.. ராஜாத்தி! எத்தனையோ மனசுக் கஷ்டத்தை சுமந்துகிட்டு கொஞ்சமும் முகம் சுளிக்காம



நீ இத்தனை நாளா எங்களுக்குப் பணிவிடை செய்யலியா? நான் உன் அம்மான்னு நினைச்சா இப்படிப் பதறுவியாடா' என்று மென்மையாய்ச் சொல்லவும் மீண்டும் படுத்துக் கொண்டாள்.

சுகமாக இருந்தது.

பல நாட்களுக்குப் பிறகு அன்று நிம்மதியாகக் கண் அயர்ந்தாள்.

அவள் நன்றாகத் தூங்கிய பின்தான் பெரியவர்கள் இருவரும் எழுந்து அறையை விட்டுப் போனார்கள்.



## 23

ஒரு சின்ன கோட்டுக்குப் பக்கத்தில் ஒரு பெரிய கோட்டைப் போட்டா முதல்ல போட்ட கோடு சின்னதாகப் போயிடுமாம். அந்த மாதிரி இந்த ஆசிரமத்துக் குழந்தைகளைப் பார்த்தவுடனே நா ஏதோ ராஜ குமாரி மாதிரி ஃபீல் பண்ண ஆரம்பிச்சுட்டேன்' என்றாள் பைரவி சற்றே உற்சாகமாகவும் கூட.

ஆதரவற்ற குழந்தைகள். உடல் ஊனமுற்ற குழந்தைகள் என்று அந்த ஆசிரமத்தில் நூற்றைம்பது பேருக்கு மேல் இருந்தார்கள். மனமே உருகி விட்டது பைரவிக்கு.

"இறைவா... இப்படி ஏன் படைக்கிறாய்! துன்பப்பட விடுகிறாய்' என்று உருகிப் போனாள். இந்தக் குழந்தைகளைப் பார்த்த உடனே சித்தியின் நிழல் தனக்கு எவ்வளவு உயர்வான விஷயம். அன்பாகப் பேசத் தெரியாவிட்டாலும் ஒரு நாளும் தன் வயிறு வாட விட்டதில்லை என்பதும், அவசியப்பட்டால் குச்சி வைத்துக் குத்தாத

குறையாகச் சாப்பாட்டைத் தன் வயிற்றுக்குள் திணித்து விடுவாள் என்பதும் நினைவு வர தானும் ஒன்றும் குறை வான வாழ்வு வாழவில்லை' என்று நினைக்க ஆரம்பித்தாள்.

பெரியப்பாவிடமும் சொன்னாள். 'ஆமாம்மா! காலுக்குச் செருப்பில்லையேன்று கவலைப்பட்டேன். காலே இல்லாதவனைப் பார்க்கும் வரை என்று ஒரு பழமொழி உண்டு' என்றார்.

காலை நேரம் முழுவதும் அந்த ஆசிரமத்துக் கணக்கு, வழக்குகளைப் பார்ப்பாள். பிற்பகலில் வீட்டுக்கு வந்து உணவருந்தி விட்டுப் போனால் மறுபடியும் மூன்று மணி வரை அலுவலகப் பணி. நான்கு மணி முதல் ஐந்து மணி வரை தினமும் முப்பது குழந்தைகளாப் பிரித்துக் கொண்டு பாடல்கள் சொல்லிக் கொடுப்பாள். அப்போதுதான் பெரியப்பா சொன்னார்.

'ம்மா... நம்மளோட பதினெண் கீழ்கணக்கு நூல்கள்ல நிறைய நீதி, ஒழுக்கம் சம்பந்தப்பட்ட பாடல்கள் இருக்கின்றன. அதெல்லாம் சொல்லிக் குடும்மா..." என்றார்.

ஆத்திசூடியில் ஆரம்பித்தாள். அவள் வாழ்க்கைக்கு ஒரு பொருள் வந்தாற்போல் உணர்ந்தாள். குழந்தை களுக்கு எதைச் சொல்லிக் கொடுக்கலாம் என்று தேடிப் பிடிக்க ஆரம்பித்தாள்.

மாலை வீட்டுக்கு வந்ததும் மூவரின் துணி மணிகளையும் துவைத்து உலரப் போட்டு விட்டு அடுத்த பணிக்குப் போவாள்.

பெரும்பாலும் அவள் வருகிற நேரம், பெரியம்மா அவளுக்கு சூடாக ஏதாவது டிபன் செய்து வைத்திருப்பார்.

வாழ்க்கை லகுவாக ஓட ஆரம்பித்து விட்டது என்று எண்ணிக் கொண்டாள்.

ஆசிரமத்தில் வைத்து நேரம் கிடைத்தால் பத்திரிகைகள் படிப்பாள்.



அன்றைக்கு இளந்தொழிலதிபர் விஜயானந்த் அவர்கள் துவக்கி வைத்த ஏதோ ஒரு நிகழ்ச்சி பற்றி செய்தியில் வந்திருந்தது.

ஆர்வமாகப் பார்த்தாள்.

முதல் முதலில் ரயிலில் தன்னோடு வந்ததிலிருந்து நிகழ்வுகள் படையெடுத்துக் கொண்டு மனதில் ஓடின.

அன்றிரவு சற்று நேரம் உறக்கம் வரவில்லை. உறங்கிய பின்னும் ஒரு கனவு.

சினிமாக்களில் பார்க்கிற மாதிரி அவள் ஸ்லோமோஷனில் ஓட அவன் துரத்திக் கொண்டு வருகிற மாதிரி கனவு.

திடுக்கிட்டுப் போய் விழித்தாள்.

ஒருவேளை அவன் நினைவுகள் தன்னைத் துரத்து கின்றன என்பதை விளக்குகிற கனவோ என்று எண்ணிக் கொண்டாள்.

மறு நாள் காலை!

ஆறு மணிக்கு எழுந்து வெளியே வாசல் தெளிக்க வந்தால் அங்கே தியாகு நின்று கொண்டிருந்தான்.

'அக்கா, கண்டு பிடிக்கறதுக்குள்ளே பெரும்பாடாப் போச்சு' என்று சிரித்தபடி.

'தியாகு, எப்படிடா... வந்தே?' என்று ஓடிப் போய் அணைத்துக் கொண்டாள்.

★ ★ ★

மெது மெதுவாக அமைதியானான் விஜயானந்த். உழைப்பை அதிகப்படுத்திக் கொண்டான்.

இடையிலே தோன்றிய அந்த மினுமினுப்பு எப்போதும் குறும் பாக நினைத்துக் கொண்டிருப்பது எல்லாம் மாறிப் போனது.

தொடர்ந்து கவனித்த ராஜலிங்கம் கவலையுடன் மனைவி யிடம் பகிர்ந்து கொண்டார்.

'சௌந்தரம், வெற்றியடைகிற எல்லார்கிட்டயும் ஒரு ஸ்பார்க் இருக்கும். விஜய் இனிமே நிறைய ஜெயிப்பான். ஒரு வெறியோட உழைப்பான். ஆனா, அந்த வெற்றி களோட முழு சந்தோஷத்தையும் அனுபவிப்பானாங்கறது சந்தேகம்தான்' என்றார்.

சௌந்தரம் அவரை வேதனையுடன் பார்த்தார்.

'எனக்கு மட்டும் இது புரியவில்லையா என்ன? ஆனா நாம வேற என்ன செய்ய முடியும்?'

'சௌந்தரம்... எனக்கு தோணுது. ராகினிகிட்ட விஷ யத்தைச் சொல்லிடலாம்னு ஏன்னா. நிர்ப்பந்தத்தால நடந்த கல்யாணம்னு அவளுக்கும் கொஞ்சம் க்ளூ கிடைச்சாலும் வருத்தம்தான் மிஞ்சும்' என்றார்.

'ஐயோ! அது மட்டும் வேண்டாங்க. ஆம்பளைங்க எப் படியோ சமாளிப்பாங்க. ஆனா பொண்ணுங்க நொறுங் கிடுவாங்க' என்றார் சௌந்தரம்.

'ஏன். அந்த நியாயம் பைரவிக்குப் பொருந்தாதா? அவ ளுக்கு யாரும் இல்லேங்கறதுனால அவளை சென்டி மென்ட்ல அடிச்சுட்டே... இல்லே!' என்றார் காட்டமாக.

சௌந்தரவல்லி கையாலாகாத் தனத்துடன் கணவரைப் பார்த்தார்.

''ப்ளீஸ்! நீங்க வேற கொல்லாதீங்க. தினமும் கண்ணை மூடினா அந்தப் பொண்ணு கண்கலங்கி நின்னதே எனக்குக் கண்ணுக்குள்ள வருது. நீங்க வேற வார்த்தையாலயே சித்திரவதை பண்றீங்க' என்று அழவும்தான் ராஜலிங்கம் அந்த மாதிரிப் பேச்சை நிறுத்தினார்.

★ ★ ★

அன்று பிற்பகல் மூன்று மணியிருக்கும்!

விஜயானந்த் ஏதோ ஒரு ஃபைலில் மூழ்கியிருந்தான்.

ராகினி தொடர்பு கொண்டாள்.



'அத்தான்! அடுத்த வாரம் சென்னை வர்றேன்!'

'குட், யு ஆர் ஆல்வேஸ் வெல்கம்' என்றான்.

'அத்தான். நானும் ரெண்டு மூணு தடவையாக் கேக் கணும்னு நினைக்கிறேன். உங்க வாய்ஸ்ல வழக்கமான சார்ம் மிஸ்ஸிங்.' என்றாள்.

'அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல நீ விஷயத்துக்கு வா...' என்றான்.

'அப்புறம்... அத்தான்!' என்றாள் இறங்கிய குரலில்.

'சொல்லு... கண்ணம்மா!' என்றான்.

'அத்தான்! அத்தை ரொம்ப நாளாக் கேட்டுட்டிருந் தாங்களே... எப்ப செட்டிலாகப் போறேன்னு... இந்தத் தடவை அதுக்கு ஒரு ஏற்பாடு செஞ்சர்லாம்னு பாக்க றேன்...!' என்றாள்.

வருவித்துக் கொண்ட உற்சாகத்துடன் 'ஓஹ்ஹோ... அப்படியா... விஷயம்? சொல்லு... சொல்லு... மாப்பிள்ளை பாத்துட்டியா? இல்லே அரேன்ஜ்ட் மேரேஜா' என்றான்.

'ம்ஹூம்... அது சஸ்பென்ஸ் ஆனா, எப்படி வச்சுகிட் டாலும். உங்களோட ஒத்துழைப்பு வேணும்...' என்று கலகலவென சிரித்தாள்.

'வருகிறது வெடிகுண்டு' என்று நினைத்துக் கொண்டான்.

'என்னோட ஒத்துழைப்பா? வாட் டு யு மீன்?'

'ம்ஹூம்... இப்ப சொல்ல மாட்டேன்...

நேர்ல சொல்றேன்' என்றாள்.

'நீ என்ன சொல்லப் போறேன்னு எனக்குத் தெரியும்?' என்றான் தன்னை மறந்தவனாய்.

அந்தப் பக்கம் அவள் திகைத்தாள். 'எப்படித் தெரியும்?' என்று கேட்டாள்.

சட்டென்று சுதாரித்துக் கொண்டான்.

'உன்னோட டைரியை நாங்க குடும்பமே திருட்டுத் தனமாப் படிச்சுப் பாத்தும்னா சொல்ல முடியும்?' என்று எண்ணிக் கொண்டான்.

'என்ன சொல்வே? மாப்பிள்ளை உனக்குப் பிடிச்ச வனா இருக்கணும்னு கண்டிஷன் போடுவே... அவ்வளவு தானே?' என்றான் விலாங்கு மீனாய்.

'தட்ஸ் தி பாயிண்ட்' என்றாள் கலகலவென சிரித்தாள்.

ஒரு பக்கம் அவனுக்குக் கோபம் வந்தது. இன்னொரு பக்கம் இப்போதைக்கு அவள் ஒருத்தியாவது சந்தோஷமாய் சிரிக்கட்டும் என்று எண்ணிக் கொண்டான்.

இன்னொரு பக்கம் கோபமும் வந்தது. 'தியாகம் என்ற பெயரில் எதை வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஆனால் வாழ்க்கையை கொடுக்கச் சொல்கிறார்களே இது எந்த விதத்தில் நியாயம்' என்று அவனுக்குப் புரியவில்லை.

அன்றிரவு!

அப்பா சாப்பிடுகிற நேரத்துக்கு அவனும் டைனிங் டேபிளில் வந்து அமர்ந்தான்.

அம்மாவும், அப்பாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

'ராகினி பேசினா...' என்றான்.

'ம்...!' என்றார் அப்பா சாப்பிட்டுக் கொண்டே.

'லைஃப்ல செட்டிலாயிரலாம்னு முடிவு பண்ணீட் டாளாம்? யார் மாப்பிள்ளை. பாத்து வச்சிருக்கியா? அரேன்ஜ்ட் மேரேஜான்னு கேட்டேன். சஸ்பென்ஸாம். அடுத்த வாரம் வர்றாளாம்' என்றான்.

'ம்...! ...' என்றார் அப்பா. அம்மா எதுவும் பேசவில்லை.

'ஆனா... இன்னொன்னு சொன்னா. எதுவானாலும் நான் ஒத்துழைக்கணுமாம். அப்பத்தான் நடக்குமாம்' என்றாள்.



ஏதோ அந்த ஊரில் இது நடந்தது இந்த ஊரில் அது நடந்தது என்று செய்தி வாசிக்கிறவனைப் போல் வறண்ட குரலில் அவன் சொல்வதைக் கேட்ட அப்பாவுக்கு வயிற்றில் பீதி கிளம்பியது.

'தம்பி இது என்னவோ பிராப்ளத்துலதான் முடியும்னு எனக்குத் தோணுது. நான் வேண்ணா ராகினிகிட்டப் பேசவா?' என்றார்.

'வேண்டாம்ப்பா... ஐ வில் மானேஜ் ராகினியைப் பொறுத்தவரை எப்படி வேண்ணா இருக்கட்டும். என்னைப் பொறுத்தவரை இது அரேன்ஜட் மேரேஜ்ன்னு வச்சுக்கறேன்' என்றான்.

அப்பாவைப் பார்த்து வாஞ்சையாய்ப் புன்னகைத்தான். ஆனால், அம்மாவின் பக்கம் திருப்பிப் பார்க்கவேயில்லை.

சௌந்தரவல்லி முகம் வாடி நின்றார்.

★ ★ ★

ஆசிரமத்தில் ஒவ்வொரு செய்தியாகக் கேட்கக் கேட்க பைரவிக்கு ஆச்சரியமாக இருந்தது.

பெரியப்பா இந்த ஆசிரமத்துக்குப் பெரிய உதவிகள் செய்கிறவராம். நிறைய நன்கொடைகள் வசூலித்துக் கொடுப்பாராம். ஆனால் அதையெல்லாம் பெரியப்பா அவளிடம் பெருமையாகச் சொல்லிக் கொண்டதே யில்லை 'பணியுமாம் என்றும் பெருமை' என்று எண்ணிக் கொண்டாள்.

அதைப் பற்றியெல்லாம் தியாகுவிடம் சொன்னாள்... தங்கள் தெருவிலே இருந்த லாரி டிரைவர் ஒருவர் சென்னை வந்தாராம். அதிலே தொற்றிக் கொண்டு வந் தானாம். ஞாயிற்றுக் கிழமை மாலை புறப்பட வேண்டு மாம்.

சனிக்கிழமை முழுவதும் பேசினார்கள். சனிக்கிழமை பெரும்பாலும் முற்பகல் வீட்டுக்கு வந்து விடுவாள். பிற்பகல் குழந்தைக்கு விளையாட்டுப் பயிற்சி நடக்கும்.

'தியாகு... நீயும் ஆசிரமத்துக்கு வந்து பாரு.' என்று அழைத்துப் போனாள்.

ஆசிரமத்தைப் பார்த்து அவனும்தான் நெகிழ்ந்து போனான். பைரவி அவனிடம்.

'ஏன், தியாகு... இந்தக் குழந்தைகளையெல்லாம் பார்க்கும் போது நாம எவ்வளவோ தேவலை இல்லே' என்றாள்.

'ஆமாக்கா...' என்றவன் தன் பங்குக்குக் குழந்தை களுக்கு சற்று நேரம் விளையாட்டுக் காட்டி விட்டு வந்தான்.

திரும்ப வரும்போது அக்காவின் முகத்தைத் திரும்பத் திரும்பப் பார்த்த தியாகு கேட்டான்.

'அக்கா நீ ஆபீஸ் பிடிக்கலேன்னெல்லாம் இடம் மாத்தி வர்ற ஆள் இல்லே! என்ன நடந்ததுன்னு உண்மையைச் சொல்லு' என்றான்.

உண்மையாகவே பைரவி திகைத்துப் போனாள்.

நின்று அவனைப் பார்த்தாள்.

'ஆமாக்கா... உன்னை எனக்குத் தெரியாதா? நானும் ஒண்ணும் சின்னக் குழந்தையில்லை' என்றான்.

பைரவி நின்றாள். யோசித்தாள். பிறகு சொன்னாள்.

'தம்பி! இப்ப நீ எவ்வளவு தூரம் புரிஞ்சுக்குவேன்னு தெரியலே. ஆனாலும் நம்ம வீட்டிற்கு ஆண்மகன்கிற முறையில நீ கேக்கறப்ப சொல்ல வேண்டிய கடமை. எனக்கிருக்கு. அந்தக் கம்பெனி எம்.டி. விஜயானந்த்



சாருக்கு என்னை ரொம்பப் பிடிச்சிருச்சு... கல்யாணம் பண்ணிக்கறேன்கற அளவுக்கு. நானும் சரின்னு சொல் லிடலாம்னுதான் இருந்தேன். ஆனா, அவரோட அத்தை பொண்ணுக்கும் அவர் மேலே விருப்பம் இருக்கற மாதிரித் தெரியுதுன்னு அவரோட மதர் வந்து என்கிட்டே ரிக்வஸ்ட் பண்ணிட்டாங்க. அதனால நான் ஒரேயடியாக ஒதுங்கிட் டேன்' என்றாள்.

எவ்வளவு முயன்றும் அவள் குரலில் வருத்தம் தொனிப் பதை அவன் புரிந்து கொண்டான் போலும்.

'ஓஹோ!' அது சரி... நீ ஒதுங்கியதும் நல்லதுதான்' என்றான்.

அதற்குமேல் அதைப் பற்றி விவாதிக்கவில்லை.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை புறப்பட்டுவிட்டான். புறப் படும்போது தனியாக அவளிடம்.

'அக்கா போனதை நினைச்சு வருத்தப்படாதே சந்தோஷமா இரு பணக்காரங்க' சகவாசம் என்னைக்கிருந்தாலும் ஆபத்துதான்! நமக்கு ஒண்ணும் கடவுள் குறை வைக்க மாட்டாரு. அப்புறம். அடுத்த மாசம் கண்டிப்பா கோய முத்தூருக்கு ஒரு நடை வா.. என்ன?' என்று பெரிய மனிதத் தனமாக ஆணையிட்டு விட்டுப் போனாள்.

பைரவிக்கு சிரிப்பாகவும் வந்தது. அதே சமயம் பெருமையாகவும் இருந்தது.



## 24

'ஹலோ அத்தை... மாமா!' என்று ராகினி வழக்கம் போல் ஆரவாரமாக காரில் இருந்து இறங்கிய போது

அத்தை, மாமா, விஜயானந்த் எல்லாரும் போர்ட்டிகோவுக்கே வந்து வரவேற்றார்கள்.

வழக்கம் போல் கிண்டல் பேசாமல் அமர்த்தலாகவே வரவேற்றான் விஜயானந்த்.

'அத்தான்... மும்பைல ப்ரொஃபசர் சொன்னேனே... சூப்பர்... பயங்கரமான நாலெட்ஜ்'ன்னு சற்று நேரம் பேசினாள்.

'அத்தான் குளோனிங் பெரிய ரெவல்யூஷன் தெரியுமா? ஆனா அத்தனைக்கும் ஆபத்து தெரியுமா?' என்றாள்.

'அது சரி... எப்படியோ முயற்சி பண்ணி என்னை மாதிரியே ஒரு குளோன் கண்டு பிடிக்க முடியுமா?' என்றான் விஜயானந்த்.

'அது சட்டப்படி குற்றம். ஆனாலும், உங்க கேள்வி சுவாரசியமா இருக்கு. எதுக்குக் கேட்கறீங்க?' என்றாள் கேள்விக்குறியாக.

'இல்லே! இந்த மாதிரி நீ அறு அறுன்னு அறுத்துத் தள்றப்ப எனக்கு பதிலா உட்கார வச்சுட்டு நான் எஸ்கேப் ஆயிடலாம் இல்லே!' என்றான் சிரிக்காமல்.

அவள் உடனே 'மாமா! பாருங்க... மாமா!' என்று புகார் சொல்ல அவர் 'எனக்கே கூட சில நேரம் அப்படித் தோணுது... ராகினி' என்றார்.

ராகினி பேச்சற்றவளாய் அத்தையைப் பார்க்க அவர் உதவிக்கு வந்தார்.

'அவங்க கிடக்கறாங்க... நீ வா... ராகினி... ரெஸ்ட் எடு' என்றார்.

அவள் கோபமாக எழுந்து போனாள்.

'ஹேய்! ராகினி... சும்மா சொன்னேன். டோன்ட் டேக் இட் சீரியஸ்' என்று சொல்லி விட்டு எழுந்து போனான் விஜயானந்த்.



'ஒண்ணும் வேண்டாம். நீங்க ஒண்ணும் என்கிட்டே பேச வேண்டாம்' என்று அவள் மேலும் முறுக்கிக் கொண்டாள்.

'நான் சொல்ல வேண்டியதைச் சொல்லியாச்சு. அப்புறம் உன் இஷ்டம்' என்று சொல்லிவிட்டு அறைக்குப் போய்விட்டான்.

'கொழுப்பு! கொழுப்பு! கொஞ்சம் கூட மாறவே இல்லே!' என்று அத்தையிடம் பொரிந்தாள். ஆனால் அடுத்த நாள் பிற்பகலில் அலுவலகத்திற்கு வந்தாள்.

'அத்தான்... உங்ககிட்டே பேசணும்' என்றாள்.

'பேசு!' என்றான் ஒற்றை வார்த்தையில்.

பேசினாள். விவரமாகச் சொன்னாள். பிறகு

'ஆமா! அத்தான் நீங்களே பக்கத்துல இருந்தாத்தான் எனக்கு தைரியம் வரும். எப்படியும் அத்தை. மாமாகிட்டே பேசித்தான். ஆகணும்' என்றாள்.

அவன் அவளை வெறித்துப் பார்த்தான். என்னைக்குப் பேசப் போறே!' என்றான்.

'நாளைக்கு!' என்றாள் ராகினி.

'ஓ.... கே...! நீ சொல்ற டைமுக்கு நான் வர்றேன்...' என்றான்.

அன்றிரவு விட்டத்தை வெறித்துப் பார்த்தபடி வெகு நேரம் படுத்திருந்தான். உள்ளே ஏதேதோ எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தன. இப்படியெல்லாமா ஒருத்தர் வாழ்க்கையில் விதி விளையாடும்' என்ற கோபம் வேறு ஒரு பக்கம் எழுந்தது.

* * *

மறுநாள் அவன் விரைவாகவே அலுவலகம் புறப்பட்டுப் போய்விட்டான்.

பிற்பகல் உணவுக்குச் செல்லவில்லை. மாறாக அப்பாவுக்கு போன் செய்து 'அப்பா... ராகினி இன்னைக்குத் தன்னோட மேரேஜ் விஷயமா உங்ககிட்டே பேசுவா போல இருக்கு...' என்றான்.

'ஓ....!'

'ஆமாப்பா! நேத்தைக்கு என்கிட்டே பேசினாப்பல அப்படி மேரேஜ் பத்தி பேசும்போது நானும் பக்கத்துல இருக்கணுமாம். நீங்களும். அம்மாவும் தயாராய் இருங்க...' என்றான்.

அந்த நேரமும் வந்தது!

மூன்று மணி வாக்கில் அவன் அலுவலகத்தில் இருந்து வந்து விட்டான்.

தூய்மை செய்து கொண்டு வேறு உடை மாற்றிக் கொண்டு தயாராய் வந்தான்.

நான்கு மணி வாக்கில் ராகினி வந்தாள். ராஜலிங்கத்தின் எதிரில் வெட்கத்துடன் அமர்ந்தாள்.

'மாமா! அத்தான் சொல்லிருப்பார்ன்னு நினைக்கறேன்' என்றாள் தயக்கத்துடன்.

'ம்... சொன்னான். நீ மேரேஜ் பண்ணிக்கலாம்னு முடிவு பண்ணிட்டேன்னு சொன்னான்' என்றார்.

'ஆமாம்.... மாமா! இதுல பிரச்சினை என்னன்னா நீங்கதான் அப்பாகிட்டே சொல்லி சம்மதிக்க வைக்கணும்' என்றாள் மறுபடியும் தயக்கத்துடன்.

'அதெல்லாம்... விஜய்யும், சௌந்தரமும் பாத்துக்கு வாங்க... நீ ஏம்மா கவலைப்படறே!' என்றார்.

'தேங்க்ஸ்... மாமா...! எங்கே ஆனந்தை உங்களுக்குப் பிடிக்காமப் போயிடுமோன்னு எனக்கு பயம்!' என்றாள்.



'என்னம்மா... சொல்றே... நீ... ஆனந்தை எப்படி எங்களுக்குப் பிடிக்காம போயிடும்...'

'இல்ல மாமா! அவங்க வசதியானவங்கதான். ஆனா... நான் பெரியவங்களைக் கேட்காம முடிவு செய்துட்டேன்னு நீங்க நினைக்கக் கூடாதில்லே.'

'அவங்க வசதியானவங்களா?' அப்பாவுக்கு சற்றே திகைப்பு. மகளைத் திரும்பிப் பார்த்தார். அவன் கல்லைப் போல் முகத்தை வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

அப்பா மறுபடியும் மருமகளைப் பார்த்தார். 'என்னம்மா... சொல்றே?'

'ஆமா... மாமா... ஆனந்த் என்னோட காலேஜ்ல படிச்சவர். நான் யு.எஸ்.ல பி.எச்.டி. பண்ணினப்போ அவரும் பண்ணினார். இப்ப வந்துகிட்டிருக்கார்...' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே அந்த இளைஞன் வந்தான்.

ராஜலிங்கமும், சௌந்தரமும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

சௌந்தரவல்லியின் முகம் வெளிறிப் போனது.

அப்பா மகனைப் பார்த்தார். அவன் கண்களில் குறும்பு மின்னப் பார்த்து விட்டு விருந்தாளியை வரவேற்கத் தயாரானான்.

'அத்தான்! இவர் சிவானந்த். என்னோட காலேஜ்ல படிச்சார்... என் சீனியர் ஃபிரம் வெரிகுட் ஃபேமிலி' என்றெல்லாம் அடுக்க,

'ஹல்லோ... ஹல்லோ... கொஞ்சம் மூச்சு... விடு... சாரை இன்ட்ரொட்டியூஸ் பண்ணிட்டே இல்லே. ஒதுங்கு... நாங்க பார்த்துக்கறோம்' என்று கலகலவென்று மகன் சிரிப்பதை ராஜலிங்கம் மகிழ்ச்சியாகப் பார்த்து

விட்டுத் திரும்பி மனைவியைப் பார்த்த பார்வையில் கனல் தெறித்தது.

★ ★ ★

**'எ**னக்கென்னங்க தெரியும்? நான் இப்படி நினைக் கலையே?' என்றார் சௌந்தரவல்லி முணு முணுப்பாக.

'இதுக்குத்தான் அடுத்தவங்க டைரியைப் படிக்கக் கூடாதுங்கறது. இப்பப் பாரு திருடனுக்குத் தேள் கொட் டின மாதிரி முழுச்சுகிட்டு நிக்க வேண்டியிருக்கு. வந்து வாங்கு வாங்குன்னு வாங்கப்போறான்... பாரு' என்றார்.

சௌந்தரவல்லி மிகவும் வருத்தத்துடன் நின்றார். ராஜலிங்கத்துக்கு மேலும் ஆறவில்லை.

'அதுக்குள்ளே தியாக பிம்பம் மாதிரிப் போய் அந்தப் பொண்ணுகிட்டே பேசி. அதைத் துரத்தி விட்டுட்டே... அவசர கோலம் அள்ளித் தெளின்னு எடுத்தேன், கவிழ்த் தேன்னு எல்லாத்தையும் செஞ்சுட்டு வந்து நிக்கறே' என்று தன் கோபத்தையெல்லாம் கொட்டித் தீர்த்தார்.

சௌந்தரவல்லி பாவமாக எல்லாத் திட்டையும் வாங்கிக் கொண்டார். கடைசியாச் சொன்னார்.

'எப்படியோங்க... பிரச்சினை தீர்ந்தது இல்லே. விஜய் கிட்டே பேசிட்டு என்ன செய்யறதுன்னு பார்க்கலாம்' என்றார்.

அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக விஜயானந்த் ஒன்றும் துள்ளிக் குதிக்கவில்லை. மாறாக அழுத்தமாக அம்மாவைப் பார்த்தான்.

'இப்ப என்ன செய்யச் சொல்றீங்க! பைரவியைத் தேடிகிட்டுப் போகச் சொல்றீங்களா? ஐ காண்ட். அவளை என்னன்னு நினைச்சீங்க. இன்னைக்குப் போன்னு துரத் திட்டு... நாளைக்கு வான்னு கூப்பிட்டா வந்துடுவாளா?' என்றான்.



இரண்டு எட்டு எடுத்து வைத்தவன் திரும்பிக் கேட்டான்.

'அப்படியே வந்தாலும்... இந்த ரெண்டு மாசத்துல நான் பட்ட வேதனை மாறிடுமா?' என்றான். போய்விட்டான்.

இப்போதும் சௌந்தரவல்லிதான் பதைத்தார். ராஜ லிங்கம் அமைதியாக இருந்தார். சௌந்தரவல்லி அவரைத் திரும்பிப் பார்க்க அவர் சொன்னார்.

'சௌந்தரம்... இப்பவும் நீ அவசரம்தான் படறே... விடு..! கொஞ்சம் மூச்சு விடறதுக்கு டைம் குடு... அப்புறம் பாக்கலாம்' என்று எழுந்து போனார்.

சிவானந்தை டிராப் செய்து விடுகிறேன் என்று போயிருந்தாள் ராகினி.

ராகினியின் அப்பாவைப் பார்க்கிறேன் என்று போயிருந் தான் விஜயானந்த்!

திரும்ப வந்தவுடன் புயல் வெடிக்கும் என்று எதிர் பார்த்ததற்கு மாறாக அவன் அமைதியாகத் தன் அறைக்குப் போய் விட்டான்.

★ ★ ★

நினைவுகள் படையெடுத்தன!

எதிர் பெர்த்தில் நிர்மலமான முகத்தோடு உறங்கியது! மதுரையில் வைத்து ரௌடிகளை அடிக்கிறேன்... என்று குச்சியுடன் தயாராய் நின்றது!

எல்லாவற்றைக் காட்டிலும் பூங்குடி கிராமத்தில் வைத்துத் தன் தேவைகளைக் கவனித்துக் கொண்டது.

ஒரு நாள் அம்மாச்சி அவன் தலைக்கு எண்ணெய் வைத்துக் குளித்து விட்டு வரும்போது அவனது துணிமணி களைத் துவைத்துக் காயப்போட்டுக் கொண்டிருந்தாள்.

தோளில் ஒரு பேண்டும் ஷர்ட்டும் பிழிந்து முறுக்கப் பட்டுத் தொங்கிக் கொண்டிருக்க, பனியன் ஒன்றைக் காயப் போட்டுக் கொண்டிருந்தாள்.

அவனைப் பார்த்து இயல்பாகச் சிரித்தாள்.

'ஐயய்யோ... என்ன இது?' என்று அவன் ஒரு வித அசௌகரியத்துடன் தடுக்க..

'சார்! இங்கயெல்லாம் உங்க அதிகாரம் ஒண்ணும் செல்லாது. பெண்களாட்சிதான்' என்று அழகாகச் சிரித்தது நினைவுக்கு வந்தது.

நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

மதுரையில் டவுன்பஸ்ஸில் தான் நெருக்கமாக நின்ற விதத்தில் அவள் வெட்கத்தில் தவித்துப் போய் நின்றது என்று எல்லா நினைவுகளும் அவனை அலைக்கழித்தது.

'ஏழைப் பெண்!' என்றுதானே அவளைப் பிரித்து விட்டார்கள் என்று கோபம் பொங்கியது.

உடனே ஓடிப்போய் அவளை தன் வீட்டிற்குள் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. ஆனால் எங்கேயன்று போய்த் தேடுவது.

கடைசியாக!

கெஸ்ட் ஹவுஸில் வைத்துப் பரிசுகளால் தன்னைத் திணறடித்ததும் நினைவுக்கு வர இன்னும் ஏக்கம் பொங்கியது. ஆனால்அதே அளவுக்குக் கோபமும் பொங்கியது.

பிரிந்து போகுமுன் 'ஒரு வார்த்தை! ஒரே வார்த்தை!' தன்னிடம் இதைப் பற்றிப் பேசியிருந்தால் ஏதாவது ஒரு வழி கண்டு பிடித்திருக்கலாம். செய்யாமல் போய் விட்டாள்.

எல்லாவற்றைக் காட்டிலும் அவளது கடிதத்தில் இருந்த ஒரு வரி அவனை வெகுவாகத் தாக்கியிருந்தது. அதனாலேயோ என்னவோ ராகினியின் ஆனந்த் சிவானந்த் என்று தெரிந்தபோதும் கூட ஒரு பக்கம் மகிழ்ச்சியாக இருந்த போதும் மறுப்பக்கம் வருத்தமாக இருந்தது.



'சரி இதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். முதலில் ராகினியின் திருமணத்தை நன்றாக நடத்தி விடுவோம் பிறகு பார்க்கலாம் என்று முடிவெடுத்துக் கொண்டான்.

★ ★ ★

'ஹேய்...! ராகினி உங்க அத்தானே சூப்பர் பர்ஸானலிட்டியா இருக்காரு. முறை மாப்பிள்ளை வேற. அப்புறம் எப்படி எனக்கு அதிர்ஷ்டம் அடிச்சது?' என்று சிரித்தான் சிவானந்த்.

'சும்மாயிருங்க... அத்தான் காதில் விழுந்துரப்போகுது' என்று அடங்கினாள் ராகினி. என்ற போதும் சற்றுப் பின்னாலே வந்து கொண்டிருந்த விஜயானந்தின் காதில் அது விழுந்தது.

ஆர்வமாகப் பதிலுக்காகக் காதைத் தீட்டிக் கொண்டான்.

'ஆனந்த்! உங்களுக்குத் தெரியாதா! க்ளோஸ் ரிலேடிவ்ஸ் கல்யாணம் பண்ணிக்கக் கூடாது. அப்புறம்... நாங்க ஒரே வீட்டில வளர்ந்தோமா? அதனால ஒரு பிரதர், சிஸ்டர் ஃபீலிங்தான்' என்றாள்.

'அப்பாடா!' என்று பெருமூச்சு விட்டான்.

இன்றைக்கு அந்தப் பெரிய ஸ்டார் ஹோட்டலில் அவர்கள் இருவருக்கும் விஜயானந்த் விருந்தளிப்பதாக ஏற்பாடு.

டேபிளில் அமர்ந்தவுடன் அவன் கேட்டான்.

'அப்புறம்... எங்க ராகினி... என்ன சொல்றா?' என்றான் புன்சிரிப்புடன்.

வாஞ்சையாய் ராகினியைப் பார்த்து சிரித்தான்.

'ஓ! ஷி இஸ் எ ஃபைன் கேர்ள். வெல் மேனர்ட்... ரொம்ப ஹார்ட் வொர்க்கிங்... நல்ல பண்பாடு...' என்று சிவானந்த் அடுக்க.

'ஐய்யோ! ராக்ஸ்... உன்னைப் பத்தியா சிவா சொல்றாரு! எனக்கென்னமோ சந்தேகமா இருக்கு...' என்று கேலி செய்து சிரித்தான்.

வெகு நாட்களுக்குப் பிறகு அவன் தன்னை 'ராக்ஸ்' என்று அழைப்பதை அவள் மனதில் குறித்துக் கொண்டாள்.

'அத்தான்! அதெல்லாம் இருக்கட்டும்... உங்க மேரேஜ் எப்ப... சொல்லுங்க... பொண் பார்க்கலாமா?' என்றாள்.

சட்டென்று அவன் கண்களில் இருந்த மின்னல் மறைந்தாற் போல் ராகினிக்குத் தோன்றியது.

'ராகினி! எனக்கு மேரேஜ்ல இன்ட்ரஸ்ட் இல்லே! நான் இப்படியே பெரிய இன்டஸ்ட்ரியலிஸ்ட்டா... வரப் போறேன்' என்றான்.

'ஓஹ்! ஸ்டாப் ஜோக்கிங் அத்தான்!' என்று சிரித்தாள் ராகினி.

அவன் அதற்குள் சிவானந்திடம் ஏதோ எட்டுப் பேச்சை மாற்றிவிட்டான்.

ராகினிக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. ஆனால், அதே சமயத்தில் ராகினியின் திருமண ஏற்பாடுகளை அவன் உற்சாகமாகத் திட்டமிடுவது கண்டு அந்த எண்ணம் மாறிப் போனது.

'ராகினி! அம்மாவும், அப்பாவும் உன்னோட கல்யாணத்தை கிராண்டாப் பண்ணனும்னு நினைக்கறாங்க... கவலையே படாதீங்க. அதை என்கிட்டே விட்டுங்க... நான் பார்த்துக்கறேன்னு சொல்லிட்டேன்' என்றான்.

அவர்கள் இருவரும் மகிழ்ச்சியானார்கள்.

'அப்புறம்... உங்க இம்மிடியட் பிளான் என்ன?' என்று கேட்டான்.



'ஆனந்த் ரெண்டு நாள்ல அமெரிக்கா போறார் திரும்ப நெக்ஸ்ட்மன்த் வந்தா ஒரு மூணு மாசம் இங்கயே தங்கி மேரேஜை முடிச்சுரலாம்னு ஒரு திட்டம்... என்றாள் ராகினி.

'ஓ...கே! டன்!' என்றான்.

சொன்னது போலவே ஒவ்வொரு சின்ன விஷயத்திலும் கவனம் செலுத்தி அன்பான ஒரு சகோதரனைப் போல ராகினியின் திருமணத்தை வெகு விமரிசையாக நடத்தினான்.

அவர்களைத் தேன் நிலவுக்கு வழியனுப்பிவிட்டு விச்ராந்தியாகக் காரில் வந்து கொண்டிருந்த போதுதான் ரவிக்குமார் அந்தக் கேள்வியை அவனிடம் கேட்டான். அந்தக் கேள்வி உண்மையாகவே விஜயானந்தைத் தாக்கியது.



## 25

'ஹேய்! ராகினி... என்ன அப்பப்ப எங்கயோ போயிர்றே?' என்றான் சிவானந்த்.

'சும்மா... கொஞ்சம் யோசனைதான்...''

'என்ன யோசனை? இப்ப என்னோட யோசனையெல்லாம் என்னைப் பத்திதான் இருக்கணும். உன்னோட யோசனை என்னைப் பத்தித்தான் இருக்கணும்' என்றான்.

'இல்லே! என்னால அத்தானோட வாழ்க்கையில் ஒரு குழப்பம் ஆயிடுச்சு.'

'என்ன குழப்பம்?'

கல்யாணம் நிச்சயமானதற்குப் பிறகு ஒருநாள் அவளுடைய அறைக்கு வந்தார் மாமா.

'ராகினி! நீ உன்னோட டைரியை பத்திரமா... உன் பொறுப்பில வைக்க வேணாமா?' என்றார் கேலி போல.

'ஏன்... மாமா?' என்றாள்.

'இல்லே! உன்னோட டைரியை அத்தை எதிர்பாராமப் படிக்க நேர்ந்து அதனால நம்ம வீட்ல பெரிய குழப்பமே ஆயிடுச்சு... தெரியுமா?' என்றவர் விரிவாகச் சொன்னார்.

ராகினியின் விருப்பத்துக்குத்தான் முன்னுரிமை என்று சௌந்தரவல்லி பிடிவாதம் பிடித்ததையும் விஜயானந்த் ஒத்துக் கொண்டதையும், அவன் வாழ்விலிருந்து பைரவி விலகிப் போனதையும் விவரமாகச் சொன்னார்.

ராகினி வெகுவாக வருத்தப்பட்டாள்.

கூடவே வளர்ந்துட்டு அத்தானை நான் எப்படி அப்படி நினைக்க முடியும் என்று மாய்ந்து போனாள்.

'எல்லாக் குழப்பமும் நீ ஆனந்த்ன்னு எழுதியதாலதான்' என்றார் மாமா.

'ஐயோ... மாமா! என்னோட டைரி அத்தை கைல இடைக்கும்னு நான் கண்டனா... அவங்க படிப்பாங்கன்னு எனக்கு எப்படித் தெரியும்?' என்றாள்.

அந்தக் கேள்வியின் நியாயம் புரிந்த அப்பா அமைதி யாக அமர்ந்து விட்டார்.

'சரி! இப்ப என்ன! அத்தான் பைரவிகிட்டே மறுபடியும் பேச வேண்டியதுதானே?' என்றாள்.

'தெரியவில்லை... ராகினி என்ன கோபமோ... தெரி யலை... சந்திக்க மாட்டானாம். ஆனா, உள்ளுக்குள்ளே உருகிப் போறான். அதான் உனக்குக் கல்யாணம் முடிச் சுட்டு அவனுக்கு வேற ஒரு பொண்ணாவது பார்த்து...' என்ற முடிக்குமுன்னே குறுக்கிட்டாள் ராகினி.



'வேண்டாம்... மாமா.. அந்தத் தப்பை மட்டும் செய் யாதீங்க. அத்தானைக் கேட்காம எதுவும் செய்யாதீங்க. அதுதான்... அன்னைக்கு கல்யாணம் செய்ற ஐடியாவே இல்லைன்னு என்கிட்ட சொன்னாரா' என்றாள் யோசனை யுடன் பிறகு.

'யோசிப்போம்... மாமா! ஏதாவது செய்வோம்' என்றாள்.

அதை இன்றைக்குக் கணவனிடம் சொன்னாள்.

'என்ன செய்யணும் சொல்லு! செய்வோம்' என்றான் சிவானந்த்.

சற்று நேரம் ஆலோசித்தார்கள். திட்டம் போட்டுக் கொண் டார்கள். பிறகுதான் ராகினிக்கு மனதில் நிம்மதி யேற்பட்டது.

★ ★ ★

**வை**யத்து வாழ்வீர்கள்!

'..................'

என்ற திருப்பாவையைப் பாடி முடித்தாள் பைரவி.

கோயிலுக்கு வந்தவர்கள் எல்லாம் லயித்துப் போய்க் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அதற்குப் பிறகு திருவெம் பாவைப் பாடல் ஒன்றும் பாடினாள்.

பிறகு கோவில் பிரகாரம் சுற்றி விட்டு வந்தார்கள். வரும் வழியில் சிவசுப்பிரமணியம்.

'அம்மா... இன்னைக்குப் பாடினியே அந்த பாட்டில் ஆண்டாள் ரெண்டு' முக்கியமான வரி சொல்லியிருக் காப்பல தெரியுமா?

'செய்யாதன செய்வோம்
    தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிரச்சினையும் ஆந்தனையும்
    கைகாட்டி 'அப்படீன்னிருக்காங்க.

செய்யக் கூடாத செயல்களை செய்யக் கூடாதாம்
முக்கியமான விஷயம் என்னன்னா தீக்குறனை
செய்றோதோம். அப்படீன்னா அடுத்தவங்களைப் பற்றி
புறம் பேச மாட்டோம் அப்படீங்கறாங்க' என்றார்.

பைரவி கூட ஒத்துக் கொண்டாள்.

'ஆமா... பெரியப்பா... நம்ம ஊர்ல அடுத்தவங்களைப்
பற்றி வம்பு பேசறது கொஞ்சம் அதிகம்தான்' என்றாள்.

பெரியப்பாவுடன் காலை நேரங்களில் மாலை நேரங்
களில் நடந்து கொண்டே அந்த கிராமத்துச் சாலைகளில்
பல விஷயங்களையும் பேசிக் கொள்வது அவளுக்கு
மிகவும் சுகமாக இருந்தது. தன்னை முழுமையாக உழைப்
பில் ஈடுபடுத்திக் கொண்டாள் என்றாலும் விஜயானந்தின்
மீதான எண்ணம் உள்ளுக்குள் ஓடிக்கொண்டேதான்
இருந்தது.

பெரியப்பா மெதுவான குரலில் சொன்னார்.

'அம்மா... வி.ஜே. இன்டஸ்ட்ரீட்ல ஏதோ ஃபேமிலி
மேரேஜ்னு நான் பேப்பர்லே பாத்தேன்...' என்றார்.

அவள் முகம் வாடியது. அவளும் அந்த செய்தியைப்
பார்த்தாள். ஆனால் போட்டோவைப் பார்ப்பதற்கு மனம்
ஒப்பாமல் அந்தப் பக்கத்தையே திருப்பி விட்டாள்.

'பெரியப்பா... தப்பா நினைக்காதீங்க. நாம வேற
பேசலாம்' என்றாள்.

பெரியப்பாவும் பேச்சை மாற்றி விட்டார். ஆனால்
அந்தப் பத்திரிகையை முழுமையாகப் பார்த்திருந்தால்
மனம் எவ்வளவு நிம்மதியடைந்திருக்கும் என்று அவளுக்கு
அன்றைக்குப் புரியவில்லை.

★ ★ ★



**எ**ன்றைக்கு பைரவி பிரிந்து போனாளோ அப்போதி லிருந்தே அவனுக்கு உறக்கம் என்பதே ஆழ்ந்த உறக்கமாக இல்லை.

இன்றைக்கு ரவிக்குமார் கேட்ட கேள்வி வேறு அவனை உலுக்கிவிட்டது.

'சார்! நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதிங்க... பைரவி மேடம் உங்களை மாதிரிப் பெரிய இடத்தோட தொடர்பு இல்லாம இருந்திருந்தாங்கன்னா இன்னைக்கு நிம்மதியா இருந்திருப்பாங்க இல்லே!' என்றான்.

விஜயானந்த் அவனை வெறித்துப் பார்த்தான்.

'சார்! ஆக்சுவலா... பைரவி மேடத்தை நான் பொண் கேட்கறதா... இருந்தேன். ஆனா... உங்களுக்கு அவங்க மேலே லைக்கிங் விழுற மாதிரித் தெரிந்தவுடனேதான் ஒதுங்கிட்டேன். ஒருவேளை நான் முதல்லயே பொண்ணு கேட்டிருந்தா... அட்லீஸ்ட் அவங்க இப்ப நிம்மதியா வாவது இருந்திருப்பாங்க. இப்படி வனவாசம் எல்லாம் போயிருக்க வேண்டியிருக்காதில்லே...' என்றான் வேதனை யோடு.

'ரவி... ப்ளீஸ்! நானே ரொம்ப வேதனையில் இருக் கேன். லெட் அஸ் நாட் டிஸ்கஸ் திஸ்!' என்றான் விஜயானந்த் கண்டிப்பான குரலில்.

'ஐ ம் சாரி... சார்!' என்றான்.

அடங்கி விட்டான். ஆனாலும் கேட்டுவிட்டோம் என்ற திருப்தி அவனுக்கு ஏற்பட்டு விட்டது.

'கேட்கப்பட்டுவிட்டோம் என்ற வருத்தம் விஜயானந்தைத் தாக்கியது.

கேட்டதற்குப் பிறகு ரவிக்குமார் பயந்து விட்டான். இறங்கும்போது 'சார் கோபமா சார்!' என்றான்.

'இல்லல்லே நீ கரெக்டாத்தான் கேட்டே!' என்று இறங்கிப் போய்விட்டான்.

'இனிமேலும் சும்மா இருக்கக் கூடாது' என்ற முடி வெடுத்தான். செயலில் இறங்கினான்.

★ ★ ★

ஒரு வாரம் போயிருக்கும்!

எல்லா முன்னணிப் பத்திரிகைகளிலும் அந்த செய்தி விளம்பரமாக வந்தது.

'ஆனந்த பைரவி ரெஸிடென்ஷியல் ஸ்கூல்' என்ற பள்ளி பூங்குடி கிராமத்துப் பகுதியில் துவங்கப்பட உள்ளது. அதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெறு கிறது என்று.

செய்தித்தாளைப் பார்த்த பைரவி சற்று நேரம் அதையே பார்த்துக் கொண்டிருந்தாள். அன்றைக்கு பெரியப்பா செய்தித்தாளை வைத்து விட்டுப் போனவுடனே எடுத்து பத்திரப் படுத்தினாள்.

அந்த செய்திப் பகுதியை மட்டும் வெட்டி ஒரு ஃபைலில் போட்டு வைத்துக் கொண்டாள்.

★ ★ ★

அன்றைக்கு என்னமோ ஆசிரமம் அல்லோலகல் லோலப் பட்டுக் கொண்டு இருந்தது.

பைரவி எதையும் கண்டு கொள்ளவில்லை. அவள் பாட்டுக்குக் கணக்கு வழக்கில் ஆழ்ந்தாள்.

மெதுவாக அந்த ஆசிரமத்தில் உதவியாளராக செயல் பட்டுக் கொண்டிருந்த அந்தப் பெரியவரிடத்தில் கேட்டாள்.

'யாரோ... ராகினியாம்! கல்யாணமாகி மூணு மாசமாச் சாம்... நம்ம ஆசிரமத்தைப் பார்க்க ஹஸ்பெண்டோட வர்றாங்களாம்' என்றார்.



'யாரு! வி.ஜே. இன்டஸ்ரிக்காரங்கன்னாங்களே... அவங்களா?' என்றாள் தெரியாதவள் போல்.

'ஆமா... அவங்களேதான்!' என்றார் உதவியாளர்.

அவள் இரத்த மெல்லாம் உறைந்து விட்டாற்போல் தளர்ந்து போனாள். ஆசிரமத் தலைவரிடம் போய்,

'சார்! நான் நாளைக்கு... எனக்கு லீவு வேணும்' என்றாள்.

'அதெல்லாம் முடியவே... முடியாது..! நாளைக்கு வர்றவங்க இம்ப்ரெஸ் ஆனாங்கன்னா நமக்கு ஒருவேளை பெரிய நன்கொடை கிடைக்கும்... எல்லாருக்கும் நிறைய வேலையிருக்கும்... என்னம்மா... நீங்க...' என்றார்.

பேசாமல் வந்து விட்டாள்.

அன்றிரவு!

பெரியப்பாவிடம் கலங்கிய குரலில் சொன்னாள்.

'பெரியப்பா! நாளைக்கு ராகினியும், அவரும் ஆசிரமத் துக்கு வர்றாங்க போல இருக்கு!' என்றாள்.

'அப்படியா! நீ அந்தப் பொண்ணை நேரில் பாத் திருக்கியா?'

'இல்ல... பெரியப்பா! ஆனா, சௌந்தரம் அத்தை போட்டோவில் காட்டினாங்க. அதுல பாத்திருக்கேன்' என்றாள். மேலும் தொடர்ந்து 'நான் லீவு கேட்டேன். குடுக்க மாட்டேங்கறாங்க' என்றாள்.

'ஏண்டா... ராஜாத்தி...! எத்தனை நாளைக்கு இப்படி ஓடுவே?' என்றார்.

அவள் திகைத்தாள்.

'என்னைக்காவது ஒரு நாள், ஏதாவது ஒரு இடத்துல சந்திக்க வேண்டி வரத்தானே செய்யும்... எதிர்

'இல்லல்லே நீ கரெக்டாத்தான் கேட்டே!' என்று இறங்கிப் போய்விட்டான்.

'இனிமேலும் சும்மா இருக்கக் கூடாது' என்ற முடி வெடுத்தான். செயலில் இறங்கினான்.

★ ★ ★

**ஒ**ரு வாரம் போயிருக்கும்!

எல்லா முன்னணிப் பத்திரிகைகளிலும் அந்த செய்தி விளம்பரமாக வந்தது.

'ஆனந்த பைரவி ரெஸிடென்ஷியல் ஸ்கூல்' என்ற பள்ளி பூங்குடி கிராமத்துப் பகுதியில் துவங்கப்பட உள்ளது. அதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெறு கிறது என்று.

செய்தித்தாளைப் பார்த்த பைரவி சற்று நேரம் அதையே பார்த்துக் கொண்டிருந்தாள். அன்றைக்கு பெரியப்பா செய்தித்தாளை வைத்து விட்டுப் போனவுடனே எடுத்து பத்திரப் படுத்தினாள்.

அந்த செய்திப் பகுதியை மட்டும் வெட்டி ஒரு ஃபைலில் போட்டு வைத்துக் கொண்டாள்.

★ ★ ★

**அ**ன்றைக்கு என்னமோ ஆசிரமம் அல்லோலகல் லோலப் பட்டுக் கொண்டு இருந்தது.

பைரவி எதையும் கண்டு கொள்ளவில்லை. அவள் பாட்டுக்குக் கணக்கு வழக்கில் ஆழ்ந்தாள்.

மெதுவாக அந்த ஆசிரமத்தில் உதவியாளராக செயல் பட்டுக் கொண்டிருந்த அந்தப் பெரியவரிடத்தில் கேட்டாள்.

'யாரோ... ராகினியாம்! கல்யாணமாகி மூணு மாசமாச் சாம்... நம்ம ஆசிரமத்தைப் பார்க்க ஹஸ்பெண்டோட வர்றாங்களாம்' என்றார்.



'யாரு! வி.ஜே. இன்டஸ்ரிக்காரங்கன்னாங்களே... அவங்களா?' என்றாள் தெரியாதவள் போல்.

'ஆமா... அவங்களேதான்!' என்றார் உதவியாளர்.

அவள் இரத்த மெல்லாம் உறைந்து விட்டாற்போல் தளர்ந்து போனாள். ஆசிரமத் தலைவரிடம் போய்,

'சார்! நான் நாளைக்கு... எனக்கு லீவு வேணும்' என்றாள்.

'அதெல்லாம் முடியவே... முடியாது..! நாளைக்கு வர்றவங்க இம்ப்ரெஸ் ஆனாங்கன்னா நமக்கு ஒருவேளை பெரிய நன்கொடை கிடைக்கும்... எல்லாருக்கும் நிறைய வேலையிருக்கும்... என்னம்மா... நீங்க...' என்றார்.

பேசாமல் வந்து விட்டாள்.

அன்றிரவு!

பெரியப்பாவிடம் கலங்கிய குரலில் சொன்னாள்.

'பெரியப்பா! நாளைக்கு ராகினியும், அவரும் ஆசிரமத் துக்கு வர்றாங்க போல இருக்கு!' என்றாள்.

'அப்படியா! நீ அந்தப் பொண்ணை நேரில் பாத் திருக்கியா?'

'இல்ல... பெரியப்பா! ஆனா, சௌந்தரம் அத்தை போட்டோவில் காட்டினாங்க. அதுல பாத்திருக்கேன்' என்றாள். மேலும் தொடர்ந்து 'நான் லீவு கேட்டேன். குடுக்க மாட்டேங்கறாங்க' என்றாள்.

'ஏன்டா... ராஜாத்தி...! எத்தனை நாளைக்கு இப்படி ஓடுவே?' என்றார்.

அவள் திகைத்தாள்.

'என்னைக்காவது ஒரு நாள், ஏதாவது ஒரு இடத்துல சந்திக்க வேண்டி வரத்தானே செய்யும்... எதிர்

கொள்ளத்தானே வெணும்.. வருத்தத்தைக் காட்டிக்காம பேசத்தான் வேணும்' என்றார்.

அவள் அமைதியாக உள்வாங்கிக் கொண்டாள்.

'என்னம்மா... நீ? உன்னை ரொம்பப் பக்குவமான பொண்ணு. வாழ்க்கையைத் தைரியமா சந்திக்கற பொண்ணுன்னு நான் நெனச்சுகிட்டிருந்தேன்' என்றார்.

அந்த வார்த்தைகளே அவளுக்குள் மலையைப் போல தெம்பூட்டின.

தயாரானாள். மனதாரத் தயாரானாள்.

அந்த நேரமும் வந்தது!

ராகினியின் கார் வந்து நின்றபோது ஆசிரம நிர்வாகி வாசலிலேயே நின்று வரவேற்றார்.

பெரியப்பாவைக் கூட அன்று அழைத்திருந்தார்கள். அவரும் கூட நின்று வரவேற்றார்.

அந்தச் சந்திப்பை எவ்வளவு முடியுமோ அவ்வளவு தள்ளிப் போட விழைந்தவளாக சற்று உள்ளே தள்ளி நின்று கொண்டாள் பைரவி.

ராகினி இறங்கினாள்! பின்னாலேயே அவள் கணவரும் இறங்கினார்.

மெது மெதுவாகக் கண்களை அவள் மேல் செலுத்திய பைரவி திகைத்துப் போனாள். அது... அது... ஆனந்த் அல்ல! அப்படியானால்... அப்படியானால்... என்று திகைத்து நிற்கையிலேயே ராகினி ஆசிரம நிர்வாகியிடம்.

'இவர் என் ஹஸ்பெண்ட் மிஸ்டர். சிவானந்த்' என்று அறிமுகப்படுத்தினாள்.

எல்லாரும் வணக்கம் சொன்னார்கள்.



பைரவி குழப்பத்தோடேயே கூட்டத்தோடு நடந்தாள்.

ராகினியும். அவள் கணவரும் சற்று அதிக நேரமே அங்கே செலவழித்தார்கள்.

பைரவியையும் அறிமுகப் படுத்தினார்கள். 'மிஸ். பைரவி' நீங்க எங்க வி.ஜே. இன்டஸ்ரீஸ்ல வேலை செஞ்சீங்களா?' என்றாள்.

'ம்... ஆமாங்க!' என்றாள்.

சிவானந்தும். ராகினியும் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டார்கள்.

'உங்களைப் பத்தித்தான் அத்தான் ரொம்பப் பெருமையாய்ப் பேசிட்டிருப்பாங்க' என்றாள் ராகினி.

'ஓ! எம்.டி. சார்... நல்லாருக்காரா? ரவிக்குமார் நல்லாயிருக்காரா? மீனா மேடம்' என்று அவள் அடுக்கவும்.

'ம்... ம்... செவ்ரு... காம்பவுண்டு... எல்லாம் நல்லாருக்காப்ல... நீங்க... நல்லாயிருக்கீங்களா? என்னோட மிஸ்டர் ஆனந்த் இவர்தான். இவரை உங்களுக்குப் பிடிச்சுதா' என்று பலநாள் பழகியவள் போல் ராகினி பேச ஆரம்பித்தாள்.

பைரவியின் மனமும் லேசாகிப் போனாற்போல் ஆகிவிட்டது.

ஆசிரமத்துக் குழந்தைகளைக் கூட வைத்துக் கொண்டு பாடல்கள் பாடிக் காட்டினாள்.

'இறைவனிடம் கையேந்துங்கள் - அவன்
இல்லையென்று சொல்லுவதில்லை
பொறுமையுடன் கேட்டுப் பாருங்கள் - அவன்
பொக்கிஷத்தை மூடுவதில்லை'

என்ற பாடலைக் கடைசியாகப் பாடினாள்.

ராகினிக்கே அவளை மிகவும் பிடித்துவிட்டது.

அவள் அவர்களுக்காக ஏதோ எடுக்க அந்தப் பக்கம் நின்று கொண்டிருக்கையில் அவள் நிற்பதை அறியாதவர்கள் போல் ராகினியிடம் சிவானந்தும் பேசிக் கொண்டார்கள்.

'ஏன்... ராகினி... இந்த பைரவியைத்தான் உங்கத்தான் உருகி உருகி லைக் பண்ணினதா..? ஷி இஸ் ஈ ஃபைன் லேடி' என்றார்.

'ஆமா! இப்பவும்... அத்தான் டேபிள் டிராயர் முழுக்க இவங்க போட்டோதான். ஆனா இவங்கதான் ஏதோ லெட்டர்ல சுருக்குன்னு எழுதிட்டாங்க போல இருக்கு. அத்தான் ஸ்டெப் எடுக்க மாட்டேங்கறார்... என்ன ஆகுமோ தெரியலை' என்றாள்.

இந்த ஆனந்த் வேறு என்பதை அறிந்திருந்த பைரவி இறக்கை கட்டிக்கொண்டு பறந்தவள் போல் இருந்தவள் புஸ்ஸென்று காற்றுப் போன பலூன் போல ஆகி விட்டாள்.

ஒரு பக்கம் ஆனந்த் என்பது வேறு ஒருவர் எனத் தெரிந்தது மகிழ்ச்சி என்றால். விஜயானந்த் கோபமாக இருப்பது தெரிந்ததும் திகைப்பாக இருந்தது.

ராகினி புறப்படும் போது ஒரு 'பன்ச்' அடித்து விட்டுப் போனாள்.

'மேடம், ஞாபகம் வச்சுக்குங்க இறைவனிடம் கையேந் துங்கள் அவன் இல்லையென்று சொல்லுவதில்லை.'

அன்றைக்குப் படுக்கையில் அமர்ந்து கொண்டு 'ஆனந்த் பைரவி ரெஸிடென்ஷியல் ஸ்கூல்' பற்றிய விளம்பரத்தை ஏதோ விஜயானந்த்தைக் கொஞ்சுவது போல் கொஞ்சித் தீர்த்தாள்.

துணிச்சலாக ஒரு கடிதம் எழுதினாள்.



'விளம்பரம் பார்த்தேன். வாழ்த்துக்கள்!' என்ற ஒரே வரியில்.

ஏதோ ஒரு விதத்தில் பதில் வரும் என்று காத்திருந்தான். பதில் வந்தது ஆனால் வேறு ஒரு இடத்தில் இருந்து.



## 26

**கா**லை - ஐந்து மணிக்கே அவளும், பெரியப்பா, பெரியம்மாவுடன் கூட கோயிலுக்குப் போய்விடுவாள்.

அன்றைக்கு அவள் கடிதம் போட்டு நான்கைந்து நாட் களாகி இருக்கும்.

கோவிலில் திருப்பாவையிலிருந்து ஒரு பாட்டும். திருவெம்பாவிலிருந்து ஒரு பாட்டும் மனமுருகிப் பாடினாள்.

போன வாரத்தில் ஒரு நாள் 'பெரியப்பா, திருப்பாவை திருவெம்பாவையும் நல்ல கணவன் வேணுங்கறதுக்காகப் பெண்கள் பாடறது. நான்தான் கல்யாணமே வேண் டாங்கறேன். என்னைப் போய் கோவில்ல பாடச் சொல் றாங்களே!' என்றாள்.

பெரியப்பா கனவுடன் புன்னகைத்தார். பிறகு சொன் னார்.

'அம்மா! உண்மையான பிரார்த்தனை எது தெரியுமா? எனக்கு அது வேணும், இது வேணும்னு கேக்கறதில்லே... ஏதோ நாலு தோத்திரங்களைச் சொல்லிட்டு வர்ற தில்லே. பேசணும். கடவுள்கிட்டே பேசணும். நம்ம மனசு சங்கடங்களையெல்லாம் ஒரு தோழர்கிட்டே பேசற

மாதிரி பேசணும். கடைசியா எனக்கு எது நல்லதோ அதைச் செய்ன்னு அவன் கையிலே விட்டரணும்; அதைக் காட்டிலும் பெரிய பிரார்த்தனை இல்லே!' என்றார்.

அவளும் 'இப்போதெல்லாம் எனக்கு எது நல்லதோ அதைச் செய்' என்றுதான் வேண்டிக் கொள்வாள்.

பாடி முடித்துவிட்டு மறுபடியும் ஒரு முறை பிரகாரம் சுற்றுவாள்.

பெரிய கோயில் சிவபெருமானும், அம்மனும் அங்கே அழகாக இருந்தார்கள். பக்கவாட்டில் ஒரு சின்னக் கோயிலில் திருமால் இருந்தார். இன்றைக்கும் ஒரு ரவுண்டு தனியாகச் சுற்றினாள்.

பெரியம்மா தனக்குத் தெரிந்த பெண்மணிகளோடு சற்றுப் பேசுவார். பெரியப்பா கோயில் முக்கியஸ்தர் களோடு சற்று நேரம் அளவாளாவிய பின்னரே கிளம்புவார்.

அவளும் மெதுவாக அதற்குள் மூன்று முறை சுற்றி வந்து விடுவாள். அன்றைக்கு அப்படி வரும்போது...!

திடீரென்று பிரேக் போட்டால்போல் நின்றாள். எதிரே... யார்! விஜயானந்தா? ஆமாம் அவரேதான்!

அவள் கால்கள் பின்னிக் கொண்டாற்போல் உணர்ந் தாள். அதற்குள் அவன் பார்த்துவிட்டான். கோயில் அய்யரிடம் நின்று பேசிக் கொண்டிருந்தான். அய்யரும் அவளைப் பார்த்தவர்.

'வா... வா... குழந்தே! இப்பத்தான்... சார் ரொம்ப நன்னாப் பாடினாங்களே அது யாருன்னு விசாரிச்சுட் டிருந்தார். இந்தப் பொண்ணுதான் பைரவின்னு பேரு... சிவசுப்பிரமணியம் அய்யாவோட வளர்ப்பு மகள்' என்று அறிமுகப்படுத்தினார்.



அவன் புதிதாகப் பார்ப்பது போல் பார்த்தான். தெரிந்தது மாதிரியே காட்டிக் கொள்ளவில்லை. கைகூப்பி வணக்கம் வேறு சொன்னான்.

வெகு மகிழ்ச்சியாக அவன் முகத்தைப் பார்த்தவள் அவன் முகத்தை இறுக வைத்துக் கொண்டு வணக்கம் சொன்ன விதம் பார்த்துத் திகைத்துப் போனாள். அவளும் திரும்ப வணக்கம் சொன்னாள்.

'ரொம்ப நல்லாப் பாடினீங்க... மிஸ். பைரவி!' என்று லேசாகத் தலையசைத்து விட்டு வேறு முக்கியமான விஷயம் பேசுவதற்கு இருந்தாற்போல் அய்யரிடம் திரும்பிப் பேச ஆரம்பித்தான்.

இதைவிட நாலு அடி அடித்திருக்கலாம் போல்இருந்தது. யாரோ கழுத்தைப் பிடித்துத் தள்ளினாற் போல் நடந்தாள்.

கொஞ்ச தூரம் சென்று மெதுவாகத் திரும்பிப் பார்த் தாள். அவன் முதுகைக் காட்டிக் கொண்டு அய்யரிடம் பேசிக் கொண்டு நின்றான்.

அன்றைக்கெல்லாம் துக்கம் அவளைக் கொத்தி யெடுத்தது. தனிமையில் ஓவென்று அழ வேண்டும்போல் இருந்தது. அந்த உணர்வுடனேயே ஆசிரமத்திலிருந்து பிற்பகல் உணவுக்கு வந்தாள்.

உடை மாற்றுகிறேன் பேர்வழி என்று அறையைச் சாத்திக் கொண்டு சற்று நேரம் அழுது தீர்த்தாள். பிறகு முகம் துடைத்துக் கொண்டு வெளியே வந்து பார்த்தாள்.

நல்ல வேளையாக பெரியப்பா ஹாலில் இருந்த கட்டிலிலும் பெரியம்மா உள்ளே அறையிலும் கண்ண யர்ந்திருந்தனர்.

சாப்பிடப் பிடிக்கவில்லை. சாப்பிடவில்லை என்றால் பெரியம்மா வருத்தப் படுவாரேயென்று கொஞ்சமாக தயிர்சாதம் சாப்பிட்டாள்.

வெளியே வந்த போதுதான் கவனித்தாள். ஹாலில் மேஜை மேல் அவள் பெயருக்கு ஒரு கடிதம் இருந்தது. எடுத்தாள்.

ஆவலாகப் பிரித்தாள்!

தியாகுவின் கடிதம்! வியப்பாகப் பிரித்தாள்.

★ ★ ★

**கோ**வையின் அந்த ஒண்டுக்குடித்தனங்கள் நிறைந்த குடிசைப் பகுதியில் அந்தக் கார் சர்ரென்று வந்து நின்றது.

குழந்தைகள் மொலு மொலுவென்று சூழ்ந்து கொண்டார்கள்.

விஜயானந்த் காரிலிருந்து இறங்கினான். குழந்தைகளைப் பார்த்து சிரித்தான்.

'எல்லாரும் கார் மேல கையை வைக்காம இருந்திங்கன்னா சாக்லேட் வாங்கித் தருவேன்' என்றான்.

குழந்தைகள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். சுற்று முற்றும் பார்த்தான். பக்கத்தில் ஒரு பெட்டிக்கடை தெரிந்தது.

டிரைவரிடம் சொல்ல அவன் குழந்தைகள் பட்டாளத்தைக் கூட்டிக் கொண்டு போய் சாக்லேட் வாங்கித் தர அங்கு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த இரண்டு பெரியவர்களை அழைத்து இங்கே 'தியாகராஜன் வீடு எது?' என்று கேட்டான்.

'டேய்... தியாகு அண்ணாவைக் கேக்கறாங்கடா...!' என்று இரண்டு மூன்று குழந்தைகள் ஓடிப் போய் அவனை அழைத்து வந்தார்கள்.

பதினேழு வயதில் வெட வெடவென்று கொஞ்சம் பைரவியின் ஜாடையில் கூட அந்த இளைஞன் வந்தான்.



''பைரவி...மேடம் தம்பியா நீங்க?' என்றான்.

'ஆமா!' என்று அவன் விழித்தான்.

'உள்ளே வர்லாமா?' என்று விஜயானந்த் கேட்கவும் அவன் ஒருவிதமான பதட்டத்துடன் அந்த ஒண்டுக் குடித்தன வரிசையில் உள்ள நடவையில் அழைத்துப் போனான்.

ஐந்தாறு வீடுகள் தள்ளிக் கடைசி வீடாக இருந்தது அவர்கள் வீடு. ஓட்டு வீடு இரண்டே அறைகள் இருந்தது.

முன்னாலே இருந்த அறையே பாதி தடுக்கப்பட்டு சமையலறையாக இருந்தது. உள்ளே ஒரு அறை. அவ்வளவே.

தியாகராஜன் ஆவலுடன் எட்டிப் பார்த்த குழந்தைகளை விரட்டி விட்டு உள்ளே போய் விஜயானந்த்தை அமர வைத்தான்.

'நீங்கதான்... தியாகராஜனா!' என்றான் மறுபடியும்.

'ஆமாங்க... சார்!' என்றவன் 'நீங்க!' என்றான் தயக்கத்துடன்.

'நான்... விஜயானந்த்!' என்றான்.

தியாகு இதை எதிர்பார்க்கவில்லை. சற்றே திகைத்துப் போனான். நல்ல வேளையாக அம்மா இல்லை என்று எண்ணிக் கொண்டான். அதனால் அவசரமாக,

'சார்... இந்தப் பிரச்சினை எதுவும் அம்மாவுக்குத் தெரியாது.' என்றான்.

'ஓ... கே..! ஓ.கே! பைரவி உங்ககிட்டே என்ன சொன்னாப்ல!'

'சார்! நீங்க என்னை வா போன்னே பேசலாம்.' என்றான். 'இந்த மாதிரி உங்களுக்கு அக்கா மேல இன்ட்ரஸ்ட் இருந்தாகவும் உங்க அத்தை மகள் ஒருத்தி இருந்த

தாகவும்... அதனால அக்கா விலகிப் போறதாகவும் சொன்னாங்க!'

'ஓ! உங்க அக்காவுக்கு என்னைப் பிடிக்காமத்தான் ஒத்துகிட்டாங்களாமா?' என்றான்.

அவன் விழித்தான். 'அது தெரியலை சார்!' என்றான்.

விஜயானந்த் நிதானித்துக் கொண்டான். 'பாருப்பா! நான் எந்தப் பிரச்சினையும் பேச வர்லே! இந்த லெட்டரைப் பாரு!' என்று அவன் கையில் கொடுத்தான்.

தியாகு படித்துப் பார்த்தான்.

விஜயானந்த் ஆழப் பார்த்தான்.

'தம்பி! நான் எதுக்காக இங்கே வந்தேன் தெரியுமா? உன்னைப் பார்க்க. 'என் தம்பி மீது ஆணையாக'ன்னு எழுதியிருக்காளே உங்க அக்கா... அப்படி பைரவியோட அபரிமிதமான அன்புக்குப் பாத்திரமான தம்பியைப் பார்க்கணும்னு எனக்கு ரொம்ப ஆசையா... இருந்தது. அதனாலே வந்தேன்' என்றான்.

தியாகுவுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. பிறகு மெதுவான குரலில் சொன்னான்.

'அக்காகிட்டே இதுக்குத்தான் ஆரம்பத்தில் இருந்தே நான் சொல்லிகிட்டு இருந்தேன். பெரிய பணக்காரக் குடும்பங்களில் இருந்து விலகி இருன்னு...' என்றான் வருத்தத்தோடு.

'யாரு தியாகு! உங்க அக்கா விலகித்தான் இருந்தாப்பல. நான்தான் போய்ப் பழகினேன்' என்று தாங்கள் சந்தித்த நிகழ்ச்சிகளை எல்வாம் சுவையாகச் சொன்னான்.

விஜயானந்த் பேசப் பேச தியாகு கலகலப்பாகி விட்டான். கடைசியாக அவன்.



'இத்தனை தூரம் என்கூடப் பழகிவிட்டு விலகிப் போறப்ப மட்டும் என்கிட்டே சொல்லாமல் போயிட்டா. ஆனால், ஆர்டர்மேல ஆர்டர்... பாரு' என்றான் சிரித்தான்.

தியாகுவும் புன்னகைத்தான். 'இப்பக் கூட எங்க இருக்கான்னு எனக்குத் தெரியும். நான் போய் சந்திக்க முயற்சி செய்யலை. ஏன் தெரியுமா? 'என் தம்பி தியாகு மேல ஆணையா என்னை சந்திக்க முயற்சி பண்ணாதீங்கன்னு' சொல்லி என் கையைக் கட்டிப் போட்டுட்டா பாத்தியா' என்றான் மறுபடியும்.

'இப்ப என்ன செய்யட்டும் சொல்லு!' என்றான்.

'எனக்கே ஒண்ணும் புரியல சார்!' என்றான் தியாகு.

'ஒரு வேளை நான் ராகினியைக் கல்யாணம் பண்ணியிருந்தாலும் அது உங்கக்காவோட ஆர்டருக்காகத்தான் இருந்திருக்கும். அப்படி அவ மேல நான் பிரியம் வச்சிருக்கேன். அதை உன்கிட்ட சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன். கடைசியில ராகினி லைக் பண்ணின ஆனந்த் வேற.' என்றான். மௌனத்தில் ஆழ்ந்தான்.

வயதுக்கு மீறிய பக்குவம் இருந்ததாலோ என்னவோ தியாகுவுக்கு அவன் வேதனை புரிந்தது.

'எனக்குப் புரியது... மாமா!' என்றான்.

அவன் உபயோகித்த அந்த ஒரு வார்த்தையில் விஜயானந்தின் முகம் மலர்ந்தது.

'தாங்க்ஸ்! உனக்குப் புரிஞ்சாச்சா! என் நிலைமை பாத்தியா... உன்னை மாதிரி ஒரு சின்னப் பையன் கிட்டே என்னைப் பத்தி விளக்கம் சொல்லிகிட்டு இருக்க வேண்டியிருக்கு...' என்று சிரித்தான்.

'நான் சின்னப் பையனா இருக்கலாம். ஆனால் உங்களுக்கு ரொம்ப அவசியமான பைரவியோட பிரதர். ஞாபகம் வச்சுக்கங்க,' என்றான் தியாகராஜன்.

கணத்தில் நண்பர்களாகிவிட்டார்கள்.

'சரி, உங்க போன் நம்பர் குடுங்க... நான் உங்களைக் கான்டாக்ட் பண்றேன்' என்று வாங்கிக் கொண்டான்.

அதே நேரம் காமாட்சி அங்கே வந்தார்.

'அம்மா... இவரு பைரவியக்கா வேலை செய்ற ஆபீஸ் முதலாளி. அக்கா ரொம்ப நல்லா வேலை செய்றாளாம் ரொம்ப சந்தோஷமாப் பாராட்டறார்' என்றான்.

அவன் கோடி காட்டிய விதம் புரிந்து கொண்ட விஜயானந்தும் அதே பாணியில் பேசினான்.

பைரவியின் சிறு வயது போட்டோக்களைக் காட்டி னார்கள். ஒன்றிரண்டைத் தியாகுவிடம் ரகசியமாகக் கேட்டு வாங்கிக் கொண்டான்.

புறப்படும்போது கார் வரை வந்து வழியனுப்பிய தியாகு 'நான் உங்ககிட்டே இன்னும் ரெண்டு மூணு நாள்லே பேசறேன்' என்று உறுதியளித்து வழியனுப் பினான்.

★ ★ ★

அத்தனை விவரங்களையும் தியாகு எழுதியிருக்க வில்லை. மாறாக சுருக்கமாக எழுதியிருந்தான்.

'அன்புள்ள அக்கா

விஜயானந்த் மாமா இங்கு நம் வீட்டிற்கு வந்திருந்தார். நடந்தது என்ன என்று சுருக்கமாகச் சொன்னார். என்னை நேரில் வந்து பார்ப்பதற்கு ஆசைப்பட்ட காரணத்தைச் சொன்னார். 'என் தம்பி மேல் ஆணையாக' என்று பைரவி



எழுதியிருக்கணும்ன்னா உன் மேல அன்பு எவ்வளவு இருக்கணும். அப்படிப்பட்ட தம்பியைப் பார்க்கணும்னு வந்தேன்' அப்படீன்னு சொன்னார். 'அக்கா அவர் மிகவும் நல்லவர் என்று உறுதியாகத் தெரிகிறது. எப்படியாவது உன் வாழ்க்கையைச் சீரமைத்துக் கொள்ள முடியுமா?ன்னு பார்' என்று எழுதியிருந்தான்.

பைரவிக்கு புரியவேயில்லை.

'அப்படித் தேடிப் போய் தம்பியைப் பார்த்தவன் எதற் காகத் தன்னை இன்று காலையில் பார்த்து விட்டுத் தெரியாதவன் போல் நடந்து கொள்ள வேண்டும்?

இப்போது அவளுக்கு நன்றாகப் புரிந்தது!

தான் அவனை நன்றாகக் காயப் படுத்திவிட்டோம் என்பது புரிந்தது. வேறு ஏதோ ஆளந்தை நினைத்துக் கொண்டிருந்த ராகினிக்காக தன் அன்புக்குரியவனை இழந்து விட்டோமே என்ற வேதனை அவளைப் பிடுங்கியது.

'பெரிய தவறு செய்து விட்டோம்' என்ற அச்சத்தில் ஆழ்ந்து போனாள். அடுத்த இரண்டு நாட்களில் இன் னொரு திருப்பம் நேரும் வரை!



## 27

அன்றைய ஞாயிற்றுக் கிழமை!

இப்போதெல்லாம் ஞாயிற்றுக் கிழமைகளில் எங்கேயும் போவதற்குப் பிடிப்பதில்லை.

அறையிலேயே படுத்துக் கொள்வான். மெதுவாக எட்டு மணிக்கு எழுந்திருப்பான். சோம்பலாகக் காரியங்கள் செய்து கொண்டிருப்பான்.

மற்ற நாட்களில் கடுமையாக உழைப்பதனாலோ என்னவோ உடம்பு ஓய்வுக்கு அலைபாயும். முழுமையாக ஓய்வு கொடுப்பான்.

ரேடியோ போட்டுக் கேட்டான். தொலைக்காட்சி வேலையைக் கெடுத்து விடுகிறது என்று அவன் எண்ணம். ஆனால், முக்கியமான ஏதாவது நிகழ்ச்சிகள் பார்க்க வேண்டுமென்றால் குறிப்பிட்ட நேரம் மட்டும் போடு வான்.

அவனது விங்கிலேயே ஹாலிலேயே தொலைக்காட்சிப் பெட்டி இருந்தது. முன்பெல்லாம் கண்ணதாசன் பாட்டுக் களை அதிலும் டி.எம்.எஸ். சுசிலா, விஸ்வநாதன் இசையில் பாடியதை கேட்பது அவனுக்குப் பிடிக்கும். ஆனால் இப்போதெல்லாம் கோபமாக வந்தது.

இன்றைக்கு ஏதோ கோயில்களைப் பற்றிய நிகழ்ச்சிகள் ஒலி பரப்பு செய்தார்கள். திடீரென்று அவன் காதுகள் கூர்மையாகின.

திருப்பாவைப் பாடல் ஒலித்தது. பைரவியின் குரல்! குன்றத்தூருக்கு அருகிலுள்ள சிவன் கோயில் பற்றி விவரித்தார்கள்.

பைரவியிடம் பேட்டி கண்டார்கள்.

'நீங்கள் சமீபத்தில்தான் இந்த ஊருக்கு வந்ததாகவும், ஆசிரமத்திலும் கோயிலிலும் உங்கள் சேவையைப் பற்றி எல்லாரும் பாராட்டுகிறார்கள். கர்நாடக சங்கீதம் கற்றவரா நீங்கள்!

'இல்லை. இப்போதுதான் கற்றுக் கொண்டிருக்கிறேன். நன்றாகக் கற்றுக் கொண்டு சங்கீதத்துக்கு என்னை



அர்ப்பணித்துக் கொள்ள வேண்டுமென்று ஒரு ஆசை இருக்கிறது. கடவுள் சித்தம் எப்படியோ...' என்றாள்.

கோவிலைப் பற்றி சொன்னாள். ஆசிரமம் பற்றி சொன்னாள்.

கோயிலைப் பற்றிய ஒரு மணி நேர நிகழ்ச்சியிலும் அவளது பாடல்களை இடையிடையே ஒலி பரப்பி னார்கள்.

பெருமிதத்தோடு கேட்டுக் கொண்டிருந்தான். 'எங்கே போனாலும் முத்திரையைப் பதித்து விடுகிறாள்' என்று எண்ணிக் கொண்ட போது, பெருமையாக இருந்தது.

அவன் வீட்டின் பெரிய ஹாலுக்கு வந்த போது அப்பாவும், அம்மாவும் அதே நிகழ்ச்சியைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். கிட்டத்தட்ட நிறைவுற்றிருந்தது.

அப்பா அவனிடம் திரும்பி 'ஏம்ப்பா... விஜய். இது நம்ம பைரவிதானே?' என்றார்.

அவன் திரும்பிப் பார்க்கவில்லை. ஆனால் பதில் சொன்னான்.

'அது பைரவிதான். ஆனா இப்பவும் அவ நம்ம பைரவியா... என்ன?' என்று.

அலட்டிக் கொள்ளாமல் 'ஜிம்முக்குப்போறேன்' என்று போய்விட்டான். அப்பாவும், அம்மாவும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

★ ★ ★

புதன் கிழமை மாலை!

அப்பாவிடமிருந்து போன்!

'தம்பி... கொஞ்சம் கொட்டிவாக்கம் கெஸ்ட் ஹவுசுக்கு வர்றியா?'

'ஏம்ப்பா...?' என்றான் தயக்கத்துடன்.

'வாயேன்! உன்கிட்ட ஒரு முக்கிய விஷயம் பேசணும்!' என்றார்.

'எப்ப வரணும்?'

'வர்யேன்... ஒரு ஏழு மணிக்கு!'

'சரி!' என்றான் வைத்து விட்டான்.

கொட்டிவாக்கம் கெஸ்ட் ஹவுஸ்க்குப் போவதையே இப்போதெல்லாம் தவிர்த்தான். போனாலே கடைசி கடைசியாக பைரவி தானே அவனை நெருங்கியது நினைவு வந்து விடுகிறது. மனம் பாரமாகி விடுகிறது.

இன்றைக்கும் மனசில்லாமல் போனான்.

காரை நிறுத்தி விட்டு உள்ளே நுழைந்தான்.

அந்த கெஸ்ட் ஹவுஸில் இரண்டு அறைகள் உண்டு. ஒரு பெரிய ஹால் ஒன்று உண்டு.

எப்போதும் இடது புற அறையில்தான் அவன் பைரவியிடம் பேசுவது. இன்றைக்கும் வழக்கம் போல் அவன் கால்கள் அனிச்சைச் செயல் போல் அந்த அறைக்கு இழுத்துச் சென்றன.

கதவருகில் சென்றவன். ஒரு நிமிடம் திகைத்தான்.

உள்ளே பைரவி நின்று கொண்டிருந்தாள்.

'சே... பிரமை! எங்கு பார்த்தாலும் அவள் நிற்கிற மாதிரியே தோன்றுகிற அளவுக்கு பைத்தியம் பிடிச்சாச்சா... என்ன?' என்று எண்ணிக் கொண்டே அடுத்த அறைக்குப் போனான்.

'சே! என்ன இப்படித் தன்னை எதுக்கும் உதவாதவனாக ஆக்கிவிட்டாள். அவள் சம்பந்தமான விஷயங்களையே யோசித்துக் கொண்டு... அவள் சம்பந்தமானவர்களைத்



தேடிப் போய்ப் பார்த்துக் கொண்டு..!' என்று யோசித்துக் கொண்டே சோபாவில் அமர்ந்தான்.

சென்ற முறை மதுரையில் கெஸ்ட் ஹவுஸில் வைத்துத் தன் எண்ணத்தைத் தெரிவித்த போது அவள் இடது கை விரலால் வலது கை விரல்களை மீண்டும் மீண்டும் எண்ணிக் கொண்டு வெட்கத்துடன் நின்று கொண்டிருந்த விதம்...!

தான் அடிக்குரலில் சிரித்துக் கொண்டு,

'ஹேய்! எத்தனை தரம் எண்ணினாலும் அஞ்சு விரல்தான். குட்டியா போடும்' என்று கேலி செய்ததும் நினைவு வர வருத்தத்துடன் தலையைக் கோதிக் கொண்டான்.

அதே சமயம்!

அறை வாசலில் நிழலாடியது!

'அப்பாதான் வருகிறார் போலும்' என்று எண்ணிக் கொண்டே எழுந்தவன் மறுபடியும் திகைத்தான்.

பைரவி நின்று கொண்டிருந்தாள்!

அவன் வெறித்துப் பார்த்தான்!

'இப்ப... எதுக்கு வந்தே?' என்றான் மெல்லிய குரலில்.

அவள் நெருங்கினாள். அவன் மார்பில் சாய்ந்தாள்.

'இதுக்குத்தான் வந்தேன்!' என்றாள்.

அவன் இரும்பு போன்ற குரலில்,

'வேண்டாம்... பைரவி! மறுபடியும் கண்ணாமூச்சி காட்டினே... கொலையே விழும்!' என்றான்.

அவள் அஞ்சவில்லை. நிமிர்ந்து பார்த்தாள்.

'அதைச் செய்ங்க... உங்களைப் பிரிஞ்சிருக்கிற வேதனைக்கு அது எவ்வளவோ தேவலை!' என்றாள்.

அவன் கோபமாகத் திரும்பிக் கொண்டான். விலகி நின்றான்.

அவள் ஒரு முடிவோடுதான் வந்திருந்தாள் போலும். அவனை நெருங்கினாள்.

அதே சமயம்! செல்போன் ஒலித்தது. எடுத்தான். அப்பா!

'தம்பி! நீயாத்தானே பைரவியைச் சந்திக்கக் கூடா துன்னு நிபந்தனை. இப்ப பைரவியே உன்னைச் சந்திக்கிற மாதிரி ஏற்பாடு பண்ணியிருக்கு...' என்றார், சிரித்தார்.

அம்மா வேறு லைனில் வந்தார்.

'தம்பி! நான் செஞ்ச தப்புக்கு நானே பிராயச் சித்தம் செஞ்சுட்டேன். நானே போய்க் கூட்டிட்டு வந்துட்டேன். இனிக் காம்பன்ஸேட் செஞ்சுக்கறது உன் சாமர்த்தியம்' என்றார்.

அவன் ஏதும் பேசுமுன் அவர்கள் ஆஃப் செய்து விட் டார்கள்.

அவனை நெருங்கி வந்த பைரவி கூட அவன் போனில் பேசுகிறானேயென்று நின்றாள்.

அவன் போனை வழக்கம்போல் சட்டைப் பையில் போடாமல் மேஜை மேல் வைத்து விட்டு அவளை ஆழமாகப் பார்த்தான்.

'ஆனந்த்! நீங்க என்னவோ நீங்க மட்டும் பிரிவால கஷ்டப்பட்ட மாதிரி நினைச்சுகிட்டிருக்கீங்க. நானும் தான் கஷ்டப்பட்டேன்' என்றாள்.

அவன் முகத்தைத் தன் முகம் நோக்கி இழுத்தாள். பரிசு மழை பொழிந்தாள்.

சட்டென்று அவளைத் தள்ளிவிட்டான். கோபமாகச் சொன்னான்.



'ஆமா... இப்படி வலிய வந்து எல்லாத்தையும் வாரி யிறைப்பே. அப்புறம் ராகினி, மோகினின்னு யாருக்காவது தாரை வார்த்துட்டு சொல்லாமக் கொள்ளாமப் போவே. நீ யாரைக் காட்டினாலும் நான் கல்யாணம் பண் ணிக்கணும். நீ விருப்பட்டாப்போலவே... என்ன நினைச்சே நீ?' என்றான்.

அவள் மௌனமாக வாங்கிக் கொண்டாள்.

'ஏதாவது பேசுடி! பேசாம நின்னுகிட்டு என்னைக் கொல்றே!' என்றான், மறுபடியும்.

அந்த உரிமைக் கோபத்தில் பின்னே இருக்கிற உணர்வு களைப் புரிந்து கொண்டவளாய் அவள் மௌனமாக நின்றாள். ஒரு நிமிடம் கழிந்த பிறகு கேட்டாள்.

'என் இடத்துல இருந்தா... நீங்க என்ன செஞ்சிருப் பீங்க?' என்றாள்.

மேலும் கடுப்பானான். 'போட்டுத் தாக்கிட்டாடா!' என்று விறைப்பாகவே நின்றான். ஆனால், அத்தனை கோபத்தையும் நொடிப் பொழுதில் சமாளிக்க பைர விக்குத் தெரிந்திருந்தது.

சமாளித்தாள்.

சட்டெனத் தன் கவசம் உடைந்தாற் போல் வெளி வந்தான்.

'ஹேய்! பைரவி!' என்று கரைந்த விதத்தில் அவளும் இழைத்து கொடுத்தாள்.

சற்று நேரம் உலகம் மறந்தார்கள். பிறகு மெதுவாகத் தங்களைக் மீட்டுக் கொண்டார்கள்.

அவன் கிறக்கப் பார்வையை எதிர்கொள்ள முடியாமல் அவன் சட்டை பட்டனைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

'ஹேய்! விரல் நுனில சாட்டையை வச்சுகிட்டு குரங்காட்டி மாதிரி என்னை உன் இஷ்டத்துக்கு ஆட வச்சே! இப்ப மட்டும் என்ன வெட்கம்! எதுக்கெடுத்தாலும் என் மேல வச்ச பிரியம் உண்மையானதா என்று ஒரு இஃப் கிளாஸ் வேற போட்டே! இப்ப நிரூபிக்கட்டுமா? என் பிரியத்தை?' என்றான் வேகமாக.

'ம்ஹூம்...!' என்ற குறுக்காகத் தலையாட்டினாள்.

'இத பார்றா! மறுபடியும் ஆரம்பிச்சுட்டா!' என்று அவன் கோபமாக. 'அத்தையும் மாமாவும் நல்ல நாள் பார்க்கப் போயிருக்காங்க. அநேகமாக மாசியில கல் யாணம் இருக்கும் போல இருக்கு. அதுக்கப்புறம் நீங்க என்ன வேண்ணா நிரூபிக்கலாம்' என்றாள்.

அவன் சிரித்தான்.

அவளை மெல்ல அருகில் இழுத்தான். மெல்ல நெற்றி யில் இதழ் பதித்தான் 'சரி... வா... வெளியில கார்ட னுக்குப் போயிரலாம். இங்க என் மேலேயே எனக்கு நம்பிக்கை வரமாட்டேங்குது.. அப்புறம் நிலைமை எக்கச் சக்கமாகி...' என்று குறும்பாகச் சிரித்தான்.

அவளும் தொடர்ந்தாள்.

பைரவி! ஒரு நிமிஷம் கூட உன்னை மறக்க முடியல தெரியுமா? இப்படி ஒரு நிலைமையில ராகினியை மட்டும் கல்யாணம் செஞ்சிருந்தா.. சே! அது ரெண்டு பேருக்கும் நரக வேதனையாத்தான் இருந்திருக்கும்...

அவளும் வேதனையுடன் அவளைப் பார்த்தாள்

'ஆனா அத்தை வந்து கேட்கும் போதுதான் என்ன செய்யட்டும். சொல்லுங்க?'

'ஆமா அந்த டைரி அம்மா கண்ல படணுமா? அதுல ராகினி வேற ஆனந்த் ஆனந்த்ன்னு எழுதித் தொலை



யணுமா? எல்லாம் தலையெழுத்து...!' என்று நொந்து கொண்டான்.

மீண்டும் தன்னருகில் இழுத்துக் கொண்டான். 'ஐயோ! என்ன இது விடுங்க! இப்படி வெளியல வச்சு' என்று அவள் தவிக்க 'அதெல்லாம் வாட்ச்மேனை வெளியே அனுப்பி யாச்சு... இங்க யாரும் வர மாட்டாங்க' என்றான்.

சுற்று முற்றும் பார்த்தாள் 'சிட் அவுட்டில் இருந்த அந்த நீள மரசேரை எடுத்து வந்து பக்கவாட்டில் இருந்த மலர்த்தோட்டப் பகுதியில் போட்டான்.

'சரி உட்கார்' என்று அருகில் அமர்த்திக் கொண்டான். இடது கை அவள் தோள்மேல் அழுந்தப் படிந்திருக்க அமர்ந்திருந்தான்.

எல்லையற்ற நிம்மதி அவன் முகத்தில் தெரிந்தது. அதைப் பார்த்த அவள் முகமும் மலர்ந்தது.

'நிஜம்மா... நிஜம்மா' இன்னைக்குத்தான் என்னமோ உயிர் வாழுறதுலயே ஒரு அர்த்தம் இருக்குங்கற மாதிரித் தோணுது' என்றான்.

அவள் அவனை அன்புடன் பார்த்தாள்.

'நான் மட்டும் என்ன? ஏதோ சாப்பிட்டேன். வேலை செஞ்சேன் ஏதோ நடமாடிட்டிருந்தேன்... பாட்டும் சங்கீதமும் தான் என்னை உயிரோட வச்சிருந்திருக்கும்னு நினைக்கிறேன்.'

'வேண்டாம். பட்ட கஷ்டங்களையெல்லாம் இனி நாம பேச வேண்டாம். ஏன் நாம நினைக்கவும் வேண்டாம். கண்ணம்மா' என்றான். சற்று நேரம் கொஞ்சி மகிழ்ந்தான்.

'இனி இனிமே என்ன செய்றதுன்னு மட்டும் யோசிக்க லாம்' என்றான். ஆனாலும் 'அது சரி... அம்மாவும்

அப்பாவுமே உன்னைக் கூப்பிடறதுக்கு வந்தாங்களா என்ன?' என்றான்.

அந்தக் காட்சி அவளுக்கு நினைவுக்கு வந்தது.

விஜயானந்த் கோவிலில் சந்தித்தும் தன்னிடம் ஒரு ஃபார்மாலிட்டிக்காகக் கூடப் பேசாமல் போனது அவளுக்கு வருத்தமாக இருந்தது. அந்த வருத்தத்தைக் காட்டிக் கொள்ளாமலே நடமாடிக் கொண்டிருந்தாள். ஆனால் அப்படித் தன்னிடம் பேச விரும்பாதவன் எதற்காகத் தன் தம்பியைப் போய்ப் பார்க்க வேண்டும். அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. தியாகுவும் விவரமாக எழுதவில்லை. தியாகுவுக்கு வேறு அவனைப் பிடித்து விட்டது. புதன் கிழமை பிற்பகல் உணவுக்கு வந்தாள்.

குடையைக் கையில் பிடித்துக் கொண்டு நடந்து வந்தவளுக்கு அங்கே ஒரு கார் நிற்பதைப் பார்த்து ஆச்சரியம்.

அருகில் போனவுடன் தெரிந்துவிட்டது. விஜயானந்தன் வீட்டுக் கார்!

குழப்பத்துடன் உள்ளே போனாள்!

சௌந்தரவல்லி ஆவலோடு எழுந்து வந்தார்.

'நல்லாயிருக்கியா. ராஜாத்தி' என்றார்.

'நல்லாயிருக்கேங்கத்தை வாங்க மாமா' என்று ராஜலிங்கத்தையும் வரவேற்றாள்.

சற்று நேர அளவளாவலுக்குப் பிறகு சௌந்தரவல்லி சொன்னார்.

'நான் செஞ்ச தப்பை நானே திருத்திடலாம்னு வந்தேன். இப்பவே என்னோட புறப்படு' என்றார்கள்.

அவள் பெரியப்பாவைப் பார்த்தாள்.

'புறப்படும்மா... நாங்க நாளைக்கு வந்து உன்னைப் பார்க்கிறோம்.



மேற்கொண்டு ஏற்பாடுகளைப் பத்தி அங்க வச்சுப் பேசிக்கலாம்' என்றார்கள்.

அவளும் புறப்பட்டாள்.

தங்கள் வீட்டிற்கு அழைத்து வந்து சற்று நேரம் அவளிடம் பேசினார்கள். அப்போது ராஜலிங்கம் சொன்னார்.

'அம்மா! முன்னைக் காட்டிலும் கடுமையா உழைக்கறான். சிரிக்கிறான்... பேசறான்... எல்லாந்தான் நடத்தறான். ஆனா... அவன் சிரிப்பில உயிரே இருக்கறதில்லை. ஒரு விதமான ஆழ்ந்த அமைதி... எனக்கென்னவோ பயமாயிருக்கம்மா... உன்னாலதான் மறுபடியும் அவனைப் பழையபடி ஆக்க முடியும்னு எனக்குத் தோணுது' என்றார்.

அவள் மௌனமாகத் தலையாட்டினாள். அதை இப்போது சொல்லி முடித்ததும் மறுபடியும் அவனுக்கு உற்சாகம் கிளம்பியது. அதைத் தனக்கே உரிய விதத்தில் வெளிப்படுத்தவும் செய்தான்.

அவள் 'ப்ளீஸ்! ப்ளீஸ்!' என்று கெஞ்சவும்தான் விடுவித்தான்.

'ஊர் ஊரா என்னை அலையவிட்டே இல்லே! அதுக்குத் தண்டனை!' என்று சிரித்தான்.

'இப்படியொரு தண்டனை என் வாழ்வில் கிடைக்குமான்னு தானே ஏங்கிப் போய்க் கிடந்தேன்' என்று அவள் சொல்லவில்லை. பார்வையால் வெளிப்படுத்தினாள்.

அதற்கும் பரிசு கிடைத்தது. அதே நேரம் அவன் பெற்றோரின் கார் காம்பவுண்டின் உள்ளே தலையைக் காட்டியது.

★ ★ ★



# 28

திருமணம் வெகு விமரிசையாக நடந்து கொண்டிருந்தது.

அய்யர் அட்சதையை விஜயானந்த் கையில் கொடுத்து அவள் கையில் கொடுக்கச் சொன்னார். அவன் சற்று அதிக நேரம் வரைக்கும் கையை எடுக்காமல் அழுத்திக் கொடுத்தான்.

'அத்தான், போதும்... பைரவி பயப்படப் போறாங்க' என்று பிறர் அறியாமல் ராகினி முணுமுணுக்க, சிவானந்த் இடையில் நுழைந்தது.

''ஹேய் உனக்குக் கொஞ்சமாவது இங்கிதம் இருக்கா? எதுக்கு இதையெல்லாம் கவனிக்கறே?' என்று சிரித்தான்.

'அதானே?' என்று விஜயானந்தும் சற்றும் வெட்கமில்லாமல் சிரித்தான்.

பைரவியின் முகம் சிவந்து போனது.

'ஹேய்! அவளுக்கும் கொஞ்சம் ஃப்ரீயாப் பேசிக்கட்டும். நீ இந்தப் பக்கம் வா...' என்று நகர்த்தினான் சிவானந்த்.

'என்னங்க... இப்படி டீஸ் பண்றாங்க... நீங்களும் அவங்களோடு சேர்ந்துகிட்டு என்று அவன் முகம் பார்த்து முணுமுணுத்தாள்.

'நீ அப்படி வெட்கப்படும்போது பார்க்க ரொம்ப அழகா இழக்கு. அதான் மறுபடியும், மறுபடியும் டீஸ் பண்ணனும் போல இருக்கு...' என்றான்.



'மாப்பிள்ளையும், பொண்ணும் சித்த இங்க கவனிக்கறேளா? சித்த நாழி! ஒண்ணு ரெண்டு ஃபார்மாலிட்டீஸ் இருக்கு. அது வரைக்கும்மட்டுமாவது நாங்க சொன்னதை கேட்டுக்கோங்கோ' என்று ஐயர் ஜோக்கடித்தார்.

எல்லாரும் சிரித்தார்கள். சிரித்து ஓய்ந்த பிறகு விஜயானந்த் குறும்பாகச் சிரித்தபடி அவளைப் பார்த்துச் சொன்னான். ஆனால் சத்தமாக 'பைரவி! ஐயருக்கு நினைப்பைப் பாத்தியா! கொஞ்ச நேரம்தான் இவர் சொல்வதைக் கேட்போம். அதுக்கு அப்புறமுமா என்னென்ன எப்படின்னு இவரை சொல்ல விட்டுக் கேட்டுட்டு இருப்போம்?' என்றான் அதே பாணியில்.

மணவறையில் வெடிச்சிரிப்புக் கிளம்பியது. எல்லாரும் குலுங்கிச் சிரித்தார்கள்.

'சும்மா இருங்க!' என்றாள் பைரவி.

'பாருங்க ஐயரே! இவ வேற சும்மாயிருக்கச் சொல்றா?' என்றார் ஐயரிடம் புகார்போல, ஆனால் சிரிக்காமல்.

ஐயரும் சிரித்தார்.

'அம்மா... இந்த ஆம்படையானை நீ எப்படித்தான் சமாளிக்கப் போறயோ?' என்றார்.

'இவளா? இவளைப்பத்தி உங்களுக்குத் தெரியாது?' என்றான் மறுபடியும்.

பைரவியின் செய்வதறியாமல் திடுக்கிட்டுப் போய்ப் பார்க்க மறுபடியும் சிரித்தான்.

'பாத்தீங்களா! இப்படித்தான் பாப்பா! அப்புறம்... என்ன வேண்ணா செய்ய ரெடியாயிடுவேன். குட்டிக் கரணம் போடச் சொன்னாக் கூடப் போடுவேன்' என்று சிரித்தவன் இடது கையால் தன் தோளோடு இறுக்கிக் கொண்டான்.

ஐயரைப் பார்த்து சிரித்தான். அவரும் சிரித்தார்.

'எல்லாரும் சொன்னா... ரொம்பா நல்ல பொண்ணாமே! பாவம் படுத்தாதீங்கோ' என்றவர்.

'ஓ... கே... ரெடியா? என்றபடி மந்திரத்தை ஆரம்பித்து மாங்கல்யத்தை எடுத்தார்.

மங்கலநாண் கட்டி முடித்தான். ஒரே ஒருகணம் அவள் கண்களை ஆழமாகப் பார்த்தான். பின் புன்னகைத்தான்.

★ ★ ★

'என்னத்தான்... உலக மகா சஸ்பென்ஸா வச்சிருக்கீங்களாம். ஹனிமூன் எங்கேன்னு சொல்ல மாட்டீங்களா?' என்று ராகினி விதவிதமாகக் கேட்டுப் பார்த்தாள்.

'அதான் சஸ்பென்ஸ்ன்னு நீயே சொல்லிட்டயே...! என்றான். ஆனால், அழுத்தமாகவே இருந்தான்.

உறவினர்கள் பெரும்பாலும் கிளம்பி விட்டார்கள்.

'அப்பா... ஒரு வாரம் எனக்கு லீவ் வேணும்' என்று அப்பாவிடம் சிரித்தான்.

'போய்ட்டு வாப்பா!' என்று அவரும் புன்னகைத்தார்.

'ரவிக்குமாரிடம் நான் செல்போன்ல காண்டாக்ட் பண்றேன்' என்றான். காரில் புறப்பட்டார்கள்!

இதுவரையிலும் தனிமை கிடைக்கும்போது லேசாகச் சீண்டுவானே தவிர தொட முயற்சிக்கவில்லை.

தியாகுவும் அவனும் மட்டும் ஏதோ ரகசியத்தைப் பங்கிட்டுக் கொள்பவர்கள் போல் அவ்வப்போது சிரித்துக் கொள்வார்களே தவிர ரகசியத்தை நன்றாகவே பாதுகாத்தார்கள்.

கார் புறப்பட்டது.

டிரைவர் ஒருவரை அழைத்துக் கொண்டார்கள்.



விஜயானந்த் பின் சீட்டில் அமர்ந்து கொள்ள அவள் அவனிடம் கேட்டாள்.

'எங்கே போறோம்?' என்று.

'எதுக்குப் போறாம்ன்னு கேளு... சொல்றேன். நீ கேட்ட கேள்விக்கு விடை இன்னும் கொஞ்ச நேரத்தில் தெரிஞ்சுடும்' என்றான்.

டிரைவர் இருக்கும்போது, அவளுக்கு மேற்கொண்டு பேச வழியிருக்கவில்லை.

'இப்போதைக்கு நல்ல விஷயம் என்ன தெரியுமா? இப்படி என் மேலே சாஞ்சுகிட்டு கொஞ்சம் ஓய்வு எடுக்கிறதுதான்' என்றான்.

தோளில் சாய்த்துக் கொண்டாள்.

அவளுக்கு நினைவுகள் பின்னோக்கி ஓடின.

கெஸ்ட் ஹவுஸில் அவன் திருமணத்திற்கு அனுமதி கேட்டானே அதற்குப் பிறகு விஷயங்கள் வேகமாக நடந்தன.

அவள் அவனிடம் தயக்கத்துடன் சொன்னாள். 'உங்களைப்பத்தின எதுவுமே சித்திக்குத் தெரியாது!' என்றாள்.

அவன் அவள் கன்னத்தில் ஒரு தட்டுத்தட்டி விட்டுச் சிரித்தான்.

'கவலைப்படாதே கண்மணி! என்னைப் பத்தின எல்லா விஷயத்தையும் நம்ம மைத்துனர் அதான் உன் தம்பி தியாகு உங்க சித்திகிட்டே பேசி முடிச்சாச்சு. ரெண்டு நாள்லே அம்மாவும், அப்பாவும் கோயமுத்தூர் போறாங்க...' என்றான்.

அவள் ஆச்சரியமானாள்.

அவள் மேலும் தயக்கத்துடன்' நான்... நான் இங்க உங்க வீட்ல தங்க முடியாது... அது நல்லாயிருக்காது..' என்றாள்.

'ஆமா...! அதனாலே கொஞ்ச நாளைக்கு நீ கோய முத்தூர்லதான் இருந்தாகணும். அப்புறம் கல்யாணத்துக்குப் பத்து நாள்ங்கறப்ப எல்லாருமா... இங்க வந்தர்லாம்' என்றான்.

அவளும் சரியென்று கோயமுத்தூருக்குப் போனாள்.

தனது செல்போன்களில் ஒன்றை அவளுக்கென்று கொடுத்து விட்டான்.

அவன் முகம் சிவந்து போகிற மாதிரி ஏதாவது மெசேஜ் அனுப்புவான்.

அவள் கோயமுத்தூர் போன பத்து நாளில் ஒரு நாள். ஒரு வேனில் வந்து இறங்கினார்கள். இடையில் ஒரு சின்ன ஏற்பாடு செய்தார்கள்.

அவர்கள் குடியிருந்த பகுதியிலேயே அடுத்த தெருவில் தனி வீடு ஒன்று வாங்கி அதில் குடியேறச் செய்தார்கள். அந்த வீட்டில் சுற்றிலும் இடம் இருந்தது. நான்கு அறைகள் இருந்தன.

பைரவி சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் சித்தியும், தியாகுவும் எதிர்பார்த்தமாதிரி வரவேற்றார்கள். பிறகுதான் தெரிந்தது. அன்றைக்கு நிச்சயதார்த்தமாம்.

அவளை மணையில் அமரச் செய்து நலங்கு வைத் தார்கள். விஜயானந்த் சார்பில் பரிசம் போட்டார்கள். சற்றுப் பின் தள்ளி தன் முகத்தில் வெளிச்சம் விழாத வண்ணம் அமர்ந்து கொண்டு ஆழ்ந்து பார்த்துக் கொண் டிருந்தான்.

ராகினிதான் கலாட்டா செய்து கொண்டிருந்தாள். பைரவியின் கன்னங்களில் வேண்டுமென்றே சந்தனம் தீட்டினாள். எல்லாரும் சிரித்தார்கள்.



தியாகுதான் சொன்னானாம். 'நல்ல முறையில் அக் காவைக் கல்யாணம் பண்ணிக் குடுக்கணும்னு அம்மா வுக்கு ஆசை.' என்று விஜயானந்த் வீட்டில் ஏற்றுக் கொண் டார்கள். உறவுக்காரர்கள் ஒரு நூறு பேரை நிச்சயத்துக்கே அழைத்திருந்தார் காமாட்சி. தியாகுவும் தனது பள்ளி நண்பர்களுடன் ஏற்பாடுகளில் ஜமாய்த்தான்.

தோழி என்ற முறையில் கலாவும் சென்னையிலிருந்து வந்திருந்தாள். ரவிக்குமார் குடும்பத்தாரும் வந்திருந் தார்கள். பெரியப்பாவும், பெரியம்மாவும் கூட வந்திருந் தார்கள்.

உறவுக்காரர்கள் எல்லாரும் சென்ற பின் இரண்டு குடும்பமும் மட்டும் அமர்ந்து சற்று நேரம் பேசினார்கள். அப்போது மட்டும் பைரவியை அழைத்து தன்னருகில் அமர்த்திக் கொண்டான்.

காமாட்சியம்மா அப்போது ஒரு காரியம் செய்தார். உள்ளே போய் பீரோவிலிருந்து பணம் எடுத்துக் கொண்டு வந்து தட்டில் வைத்து ராஜலிங்கத்திடம் நீட்டினார்.

'ஐயா! இதுல ஐம்பதாயிரம் பணம் வச்சிருக்கேன். என் பொண்ணுக்கு இவ்வளவு பெரிய இடம் வருன்னு நினைக்கலே. அதனால எங்க சக்திக்கு ஏற்ப ஒரு நடுத்தரக் குடும்பத்துக்கு கல்யாணத்துக்குன்னு பணம் சேர்த்தேன். எப்படியும் ஏழெட்டு மாசத்துல இன்னும் கொஞ்சம் சேர்த்திருப்பேன். நகை ஒரு இருபது பவுன் சேர்த்திருக் கேன்' என்று சொல்லி நகைகளைக் காட்டினார்.

பைரவி நெகிழ்ந்து போய் அமர்ந்திருந்தாள். சௌந்தர வல்லி சட்டென்று காமாட்சியின் கையைப் பிடித்துக் கொண்டார்.

'அம்மா! நீங்க என் பையனுக்கு உங்க பொண்ணைக் கொடுத்தா அதுவே போதும். ஆனா... மறுத்தா...

உங்களுக்கு சங்கடமாகுமே.. அதுக்காக வாங்கிக்கறோம்... கவலைப்படாதீங்க. கல்யாணம் இனி... எங்க பொறுப்பு' என்றார்.

'ம் அதெப்படி அப்படி விடறது? நாங்களும் எங்க பொண்ணாத்தானே அவளை நினைக்கிறோம். அதனால மாப்பிள்ளையோட டிரஸ். மோதிரம் இதெல்லாம்... எங்க செலவு' என்றார் சிவசுப்பிரமணியம்.

எல்லாரும் ஒத்துக் கொண்டார்கள். புறப்படுகிற நேரத்தில் சிவசுப்பிரமணியம்தான் திரும்பி.

'என்னம்மா... மாப்பிள்ளைக்கு... உன்கிட்டே பேசணுமோ... என்னவோ... கொஞ்சம் நேரம் வேண்ணா அந்த ரூம்ல போய் பேசிட்டு வாங்க...' என்றார்.

அவள் தயக்கத்துடன் அவனைப் பார்க்க. 'வா... வா..' என்று அவசரமாக எழுந்து அழைத்துப் போனான்.

சட்டென்று அருகில் இழுத்தான்.

'ஹேய்! இன்னைக்குக் கொள்ளை அழகா இருக்கே... தெரியுமா? அப்படியே அள்ளிகிட்டுப் போயிடலாமான்னு இருக்கு...' என்றான்.

அவள் மௌனமாக அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

ஒரு நிமிடம் ஆசையாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு.

'பாரு! தியாகுகிட்டே பேசி எல்லாம் ஃபிக்ஸ் பண்ணிட்டேன்.

கல்யாணத்துக்குப் பத்து நாள் முன்னாடியே குன்றத்தூர் வந்துரு. அங்க அங்க... நாம மீட் பண்ணிக்கலாம்' என்றான்.

அவள் புன்னகைத்தாள். 'தேவைன்னா... தியாகு மாதிரி சின்னப் பையனைக் கூட கூட்டு சேத்துக்குவீங்க!' என்றாள்.



'என்ன செய்யறது? தொட்டுப் பாரு!' என்று அவள் கையை இழுத்து தனது இடப்பக்கத்து மார்பில் வைத்து அழுத்தினான்.

'பாரு... இந்த இதயம்... அம்மிணியைப் பாக்க லேன்னா... வாடிப் போகுதே' என்றபடி லேசாகக் கன்னத்தில் இழைந்தான்.

அவள் சட்டென்று விலகிக் கொண்டாள்.

'இரு... அப்புறம் பார்த்துக்கறேன்' என்று கண்களாலேயே மிரட்டினான்.

கிளம்பினார்கள்.

வாசல் வரை வந்து வழியனுப்பிய சிவசுப்பிரமணியம் ஒரு பெருமூச்சுடன் சொன்னார்.

'ஒரு விதத்திலே... இந்தக் கல்யாணத்துல எனக்கு ரொம்ப சந்தோஷம். ஒரு விதத்துல எனக்கு ரொம்ப ஏமாற்றம்' என்றார்.

'ஏன்' என்பது போல் பார்த்தான்.

'பைரவிக்கு நல்ல சங்கீத ஞானம்... அவளோட அப்பாவுக்கு அவளுக்கு சங்கீதம் கத்துக் கொடுக்கணும்னு ஆசை... நானாவது கத்துக் கொடுக்கலாம்னு நினைச்சேன். நடக்காமப்போச்சு... ஆனா அவளுக்கு மனசுக்குப் பிடிச்ச மாப்பிள்ளை நீங்க கிடைச்சதே ரொம்பப் பெரிய விஷயம். தம்பி! ஒண்ணு சொல்றேன். உங்களைப் பிரிஞ்சுட்டு எங்கப் பொண்ணு பட்ட வேதனை இருக்கே... அதைச் சொல்ல முடியாது. இப்படிப் பிரியம் வச்சிருக்கிற ஆளை மறந்துட்டு எப்படி வாழப் போகுதோன்னு நினைச்சேன். பரவாயில்லை. அந்த நிலைமை வர்லை... தெய்வம்னு ஒண்ணு இருக்குன்னு எனக்கு நம்பிக்கை இப்ப நிறையவே ஆயிடுச்சு' என்றார்.

'ஓ!' என்றவன் 'கொஞ்சம் இருங்க மாமா!' என்று உள்ளே போனான்.

'பைரவி! உன்கிட்டே தனியா ஒரு விஷயம் சொல்லணும்' என்று நின்றான்.

அவளும் வியப்புடன் அந்தத் தனியறைக்குத் தொடர்ந்தாள். சட்டென்று தன் கட்டுப்பாட்டையெல்லாம் இழந்தவன் போல் தன் கையணைப்பில் கொண்டு வந்தான். பரிசு மழை பொழிந்தான்.

சட்டென விடுவித்து விட்டு 'அப்படியொரு நியூஸ்... உங்க பெரியப்பா... சொன்னாரு' என்று கிறக்காமகப் பார்த்து விட்டுப் போனான்.

சட்டென்று கார் குலுங்கி நின்றாற் போல் நின்றது.

அவள் தோளின் மேல் கையைப் போட்டுக் கொண்டு கண்மூடி அமர்ந்திருந்த அவனும் விழித்தான்.

'ஐயா!' இங்கயே இறங்கிக்கட்டுங்களா...' என்றார் டிரைவர்.

'ஆமா' என்றான்.

பைரவி விழிக்க பைரவி... 'இங்கே இருந்து வி.ஆர். லெஃப்ட் டு அவர் செல்வ்ஸ். முன்னாடி... வா!' என்றான், இறங்கினான்.

டிரைவருக்குக் கொஞ்சம் பணம் கொடுத்துவிட்டு காரை எடுத்தான்.

அவள் சுற்று முற்றும் பார்த்தாள். ஓரளவுக்குப் புரிந்தது. அவனைப் பார்த்து முகமலர்ச்சியுடன் சிரித்தாள்.

'தெரிஞ்சிருச்சு...!' என்றாள்.

'என்ன தெரிஞ்சுது?'

'எங்க போறோம்னு தெரிஞ்சுது!' என்றாள்.



'எஸ். நம்ம ஹனிமூன் ஸ்பாட் அதுதான். நமக்குப் பிடிச்ச... சிம்லா... கொடைக்கானல், ஊட்டி... காஷ்மீர்... ஸ்விட்சர்லாந்து எல்லாம் அதுதான்...' என்றான்.

அவள் மௌனமாக ஏற்றுக் கொண்டாள். எதிர்பார்ப்பும், அச்சமும் ஒரு சேர அவளுக்குள் நிறைந்தன.



## 29

**பா**தையின் உள்ளே போகப் போக அவளுக்கு ஆச்சரியங்கள் காத்திருந்தன.

அவர்கள் கார் முதன் முறையாக நின்று போன இடத்துக்கு முன்பாகவே ஒரு போர்டு இருந்தது.

'இந்தப் பாதையும் இடமும் தனியாருக்குச் சொந்தமானது' என்று.

அவள் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

அவன் 'எஸ்... டார்லிங்!' என்று சிரித்தான்.

நூறு அடி தூரம் போனதும் இடது புறமும், வலது புறமும் வேலைகள் நடந்து கொண்டிருந்தன.

அஸ்திவாரம் தோண்டிக் கொண்டிருந்தார்கள்.

'ஆனந்த பைரவி ரெஸிடென்ஷியல் ஸ்கூல்!' வேலைகள் நடக்குது' என்றான்.

அவள் நெகிழ்ந்து போனாள்.

அந்த ஏரியாவைத் தாண்டி உள்ளே கார்போகப் போகச் சொன்னான்.

'மொத்தமா நூறு ஏக்கராவையும் வளைச்சுப் போட்டுட்டேன்' என்றான்.

அவள் ஆச்சரியமானாள்.

அப்போது கார் நின்றது. அவள் கேள்விக் குறியாய்ப் பார்க்க.

'இடம் தெரியுதா?' என்றான்.

அவளுக்குப் புரிந்தது. முதல் முதலாக அவளைத் தொட்ட இடம். இடது புறம் கால் தடம்போய் பூச் செடிகளுக்கு நடுவே வட்டமாக இருந்த வெட்ட வெளி.

'இறங்கு!' என்றான்.

இறங்கினாள். உள்ளே அந்த வட்ட வடிவ வெற்றிடத்திற்குப் போனார்கள்.

குறும்பாய் சிரித்துக் கொண்டே தன்னருகில் இழுத்தான்.

'இங்க வச்சுத்தானே' தொடாதீங்கன்னு சொன்னே! இங்கயே உன்னைத் தொடணும்னு ரொம்ப நாளாத் திட்டம்!' என்றான்.

அவள் தடுக்கவில்லை.

கலகலச் சிரிப்புடன் நிமிர்கிற கணவனை அன்புடன் பார்த்தாள்.

அவள் காதருகில் முணுமுணுத்தான்.

'ஹேய்! அந்த உன்னைத் தொட்ட காற்று... அந்தக் காத்துகிட்ட சொல்லு. அது இனிமே உன்னையும் தொடலாம். என்னையும் தொடலாம். ஆனா, இடையில மட்டும் நுழையக் கூடாதுன்னு சொல்லிடு...' என்றான்.

அவள் வாய்ப் பேச்சற்று அவன் மார்பில் சாய்ந்த வண்ணமே நின்றாள்.



சற்று நேரம் அங்கே செலவழித்தார்கள். பூங்குடி கிராமத்துக்குப் போனார்கள் அங்கே இன்னும் அதிசயங்கள் காத்திருந்தன.

வீடுகள் எல்லாம் ஓட்டு வீடுகளாக மாறியிருந்தன.

அம்மாச்சி வீடு தாண்டி ஒரு கெஸ்ட் ஹவுஸ் எழுந்து நின்றது.

அம்மாச்சியும், அப்பாச்சியும் அவர்களை ஆரத்தி எடுத்து வரவேற்றார்கள்.

'முதலாளி!' என்று அப்பாச்சி ஏதோ சொல்ல அவன் கையை உயர்த்தினான்.

'முதலாளியெல்லாம் மத்தவங்களுக்குத்தான்... உங்களுக்கு நான் தம்பிதான்' என்றான்.

'இல்லிங்க தம்பி!' என்று தயங்கினார்.

'அதெல்லாம்... நான் சொன்னா சொன்னதுதான்' என்றான்.

'கல்யாணம் ரொம்ப ஜோரா நடந்தது தம்பி. இவ்வளவு பெரிய குடும்பம்னு நீங்க காட்டிக்கவே இல்லை!' என்றார் அம்மாச்சி.

அவன் லேசான புன்னகையுடன் அந்தப்புகழ்ச்சியைப் புறந்தள்ளி விட்டான்.

கெஸ்ட் ஹவுஸைப் பார்த்தவுடன் பைரவி மேலும் திகைத்தாள்.

மதுரையில் வைத்துத் தங்கள் காதலை வெளியிட்ட நாளில் தங்கினார்களே அதே போல கெஸ்ட் ஹவுஸ்.

'பைரவி, இனிமே நம்ம கன்சர்ன்ஸ் இருக்கற எல்லா ஊர்லயும் நமக்காக ஒரு கெஸ்ட் ஹவுஸ். இதே பிளான்ல...' என்றான்.

'மதுரை மாடல்தானே?' என்றாள் கிசுகிசுப்பாக.

'ஆமா... முதன் முதலா தேவியாரோட தங்கின அந்த நினைவுக்காக...' என்றான்.

பெற்றோர்களின் வற்புறுத்தலுக்காக முதலிரவை ஊரில் வைத்துக் கொண்டாலும் ஹனிமூன் இங்கேதான் வைத்துக் கொள்ள வேண்டும் என்று திட்டமாய் சொன்னான்.

தனக்குக் கொடுக்கிற முக்கியத்துவம் பார்த்து மிரண்டுதான் போனாள்.

இரவு உணவு அம்மாச்சி கொண்டு வந்து பரிமாறி விட்டுப் போனார்.

தனிமை கிடைத்ததும் கையை உயர்த்தி சோம்பல் முறித்து விட்டுச் சிரித்தவன் அருகில் அமரச் செய்து கொண்டான்.

'பைரவி! நிறைய உன்கிட்டே பேசணும்... சொல்லணும்!' என்றான்.

நெருங்கி அமர்ந்தான்.

'ஞாபகம் இருக்கா! மதுரையில கார்ல பெட்ரோல் தீர்ந்து போயிடிச்சு வண்டி நின்னுதுல்லே... ரெண்டு மூணு பேர் வந்து வம்பிழுக்க வந்தாங்க இல்லே!' என்றான்.

'ஆமா!' என்றாள்.

'அதெல்லாம். என்னோட செட் அப்!' என்றான்.

'வாட்!' என்று விலகி ஆச்சரியமாய் பார்த்தாள்.

'ஆமா!' என்று புன்னகைத்தான்.

'முதல் நாள் ட்ரெயின்ல உன் முகம் பாத்துட்டுப் படுத்திருந்தேன். அப்பவே நீ என் கம்பெனிக்குத்தான் இன்டர்வ்யூ வர்றேன்னு எனக்குத் தெரியும். ஆனா தூக்கத்திலே உன் முகத்துல ஒரு இன்னொசன்ஸ் தெரிந்தது. ஆனா, உன்கிட்டே நல்ல பொட்டேன்ஷியல். இருக்கற மாதிரியும் தெரிஞ்சுது. அதுதான் மதுரை பி.ஏ. கிட்டே சொல்லி ஒரு நாடகம் பண்ணினேன்' என்றான்.



அவள் வெறித்துப் பார்த்தபடி அமர்ந்து கொண்டிருந்தாள்.

'ஆனா, குச்சியை எடுத்துக்கிட்டு அடிக்கத் தயாரா நின்னியே. மறக்கவே முடியாது' என்று வெடிச்சிரிப்புச் சிரித்தான்.

'சரி.. போதும்... கிண்டல்!' என்று சிணுங்கினாள்.

'அப்புறம் சென்னையில இயற்கையாவே மழை பெஞ்சு பிராப்ளமாப் போச்சு. அதிலயும்... நீ நல்லா சமாளிச்சே... ஆனா அங்க நீ புறப்பட்டவுடனே... எனக்கு டெல்லியிலிருந்து என் ஃபிரண்ட் தகவல் குடுத்துட்டான். அந்தத் தலைவரை சுட்டுட்டாங்கன்னு, எனக்கு இருப்பு கொள்ளவேயில்லை தெரியுமா? ஒரு டிராவல் ஏஜென்சியைப் புடிச்சு ஒரு வழியா எதிர் பொர்த்தைப் பிடிச்சேன்' என்றான்.

'ஓ! எதுக்கு!'

'நடுவில் வச்சு எங்கயாவது மாட்டினாக் கூட... உன்னைப் ப்ரொடெக்ட் பண்ணனும். நான் கூட இருக்கணும்னு... ஓடி வந்தேன்' என்றான்.

'அப்ப... பூங்குடி கிராமத்துக்கு கார்... நின்னது அதுவும்... டிராமாவா?' என்றாள்.

'சேச்சே! அது நிஜமா... நடந்தது. அதனாலதானே இந்தத் தேவதையோட ரெண்டு நாள்... செலவழிக்க முடிஞ்சுது. அப்ப... ஆனா... எனக்கே என்னை முழுசாய்ப் புரியலை...' என்றான்.

'ஆமா! சென்னை போனதுக்குப் பிறகு என்கிட்டே ஒரு மாசம் பேசவேயில்லையே? ஒரு வேளை நான் பத்தாயிரம் பணம் சும்மா வாங்கிக்கலேன்னு உங்களுக்குக் கோபம்னு நினைச்சேன்' என்றாள்.

'முதல்லே கோபம்தான்! ஆனா, மறுபடியும் யோசிச்சுப் பார்த்தப்ப... அது எவ்வளவு நல்ல மாதிரியான குணம்னு புரிஞ்சுது. அந்த ஒரு மாசமும் நானே என்னை அனலைஸ் பண்ணிகிட்டேன். கொஞ்சம் கொஞ்சமா என்னயே நான் புரிஞ்சுகிட்டேன்... உனக்குத் தெரியாது. தினமும் அந்தக் கண்ணாடித் தடுப்பு வழியா ஒரு அரை மணி நேரமாவது உன்னைப் பார்த்துகிட்டு உட்கார்ந்துட்டுத்தான் போவேன்! ஆனா! ஒரு விஷயம் எனக்கு ரொம்பப் பிடிச்சுது' என்றான்.

'என்ன?' என்பது போல் பார்த்தாள்.

'என்னைத் தெரியும்!' என்பதை ஒரு அட்வான்டேஜாவே நீ எடுத்துக்கலை. யாரிடமும் பெருமை பேசிக்கலை. எப்பவும், நீ வம்பு பேசி நான் பார்த்தத்தில்லை. எல்லாமும் மொத்தமாய் சேர்த்து என்னை ரொம்ப அட்ராக்ட் பண்ணிடுச்சு' என்று சொன்னபடி ஆவேசமாக அருகில் இழுத்தான்.

அவள் பணிந்து கொடுத்தாள். பிறகு மெதுவாகச் சொன்னாள்.

'நான் அப்ப என்ன நினைச்சேன்னா, எதேச்சையா ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சியை வச்சுகிட்டு... உங்களை எம்பாரஸ் பண்ணக் கூடாதுன்னு நினைச்சேன்' என்றாள்.

'அது கரெக்ட்தான்... ஆனா, அந்த ராமகிருஷ்ணர் மடத்தில் அந்தக் குமிழ் விளக்கு வெளிச்சத்தில் நீ நடந்து வந்தப்ப... எனக்குத் தெரிஞ்சு போச்சு... உன்கிட்ட இருந்து



நான் தப்பவே முடியாதுன்னு... அப்புறம்தான் உன்னோட அபார்ட்மென்டுக்கே வந்தேன்' என்றான்.

அவள் வெட்கத்துடன் அவன் மார்பை நீவி விட்டுக் கொண்டே கேட்டுக் கொண்டிருந்தாள்.

'அப்புறம்... நீ செமினாருக்கு மதுரை போனவுடனே... எனக்கு இருப்புக் கொள்ளவே இல்லை. அதான் ஓடி வந்தேன். ஆனா... நீ என்னடான்னா... சட்டுன்னு இன்னொரு பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டான்னுட்டு கிளம்பிட்டே!' என்றான் கோபமாக.

அவளுக்குத் தெரியும். அவனுக்குள் ஒரு கோபம் கனன்று கொண்டிருந்தது என்று. அந்த விஷயம் பேச்சுக்குள் வந்ததும் அவள் லேசான கலக்கத்துடன் பார்த்தாள்.

'ஹேய்! அந்தக் கோபத்துக்கு நீ பதில் சொல்லித்தான் ஆகணும்!' என்றான்.

'என்ன தண்டனை வேண்ணாலும் குடுங்க...! வாங்கிக்கறேன்... தாங்கிக்கறேன்' என்றாள் மெல்லிய குரலில்.

அவன் வலது கையால் சோபாவில் ஒரு குத்துக் குத்தினான். தன் கையாலாகத்தனத்தைக் குறிப்பதுபோல்.

'ஆனா! எனக்குத் தெரியும். உன்கிட்டே என் கோபத்தை அப்படியெல்லாம் முரட்டுத் தனமாக் காட்ட முடியாது. என்னால அது முடியாதுன்னு... எனக்கே என் மேல கோபம் கூட வருது...'' என்றான்.

அவள் செய்வதறியாது அவனைப் பார்த்தாள்.

அவன் சட்டென்று சிரித்தான்.

'ஹேய்! பயப்படாதே!' என்று தன்னிடம் இறுகச் சேர்த்துக் கொண்டான்.

இப்போது அவன் பேசினான்.

'ராகினியோட ஆனந்த் வேறன்னு தெரிஞ்சதுக்கப் புறம் எப்படியாவது உங்களோட தொடர்பு கொள்ள ணும்னு ரொம்ப ஆசைப்பட்டேன்! ஆனந்த பைரவின்னு ஸ்கூல் பத்தி விளம்பரம் பாத்து ரொம்ப ஆசையா லெட்டர் போட்டேன். ஆனா... நீங்க பதிலே போடலை...!'

அவன் சுசப்பாகப் புன்னகைத்தான்.

'நீதான்... உன் தம்பி மேல் ஆணை வச்சுட்டியே. நான் அதை மீறியிருப்பேன். ஆனா, உன் தம்பிக்கு எதேச்சையா ஏதாவது நடந்துட்டா கூட உடனே ஆணையை மீறியது னாலதான் நினைச்சு நீ மாஞ்சு போயிடுவியே. அதனால தான்' என்றான்.

அவள் நெகிழ்ந்து போய்ப் பரிசுகள் கொடுத்தாள். பிறகு செல்லமான கோபத்துடன் கேட்டாள்.

'கோயில்ல பார்த்துட்டுப் பேசாம போனீங்களே? அப்ப எவ்வளவு வேதனைப் பட்டேன் தெரியுமா?' என்றாள்.

'தெரியும். தெரியணும்னுதான்... வந்தேன். நான் எவ்வளவு வேதனைப் பட்டிருப்பேன்...' என்றான் மறுபடி.

'பைரவி... ஒரு விஷயம் சொல்லட்டுமா? எனக்கு என் வாழ்க்கை உன்னோடதான்னு திடமான நம்பிக்கை இருந் துச்சு. ஆனா, உனக்குத்தான் உள்ளூர ஒரு சந்தேகம். இது ரொம்ப மீறின இடம்... நமக்கு ஒத்து வருமா அப்ப டீன்னு... அந்த சந்தேகம்தான் இத்தனை தூரம் நம்மளை ஆட்டிப் படைச்சுப் போட்டுடுன்னு எனக்கு ஒரு எண்ணம்.

'ஆமா! நம்ம எண்ணங்களுக்கு ஒரு சக்தியிருக்குன்னு நான் படிச்சிருக்கேன். ஆனா, இப்பவும் இது கண வோன்னு ஒரு எண்ணம்தான்' என்றாள்.



'ஏய்... கொன்னே போடுவேன். இனி இதுக்கு மேலே... என்ன பேச்சு... வா கனவில்லேன்னு நிரூபிச்சிடுவோம்' என்றான்.

சட்டென்று இரு கைகளாலும் தூக்கிக் கொண்டு தங்கள் அறைக்குப் போனான்.

அவள் என்ன இது! என்று சிரிக்கச் சிரிக்க அவள் வாயடைத்துத் தன் அன்பையெல்லாம் நிரூபித்தான்.



## 30

'இவ்வளவு நேரமா தூங்கறது?' என்று செல்லமாகக் கோபித்தாள்.

'நீ ஹேய்! விஷயம் தெரிஞ்சும் நீ இந்தக் கேள்வி கேக்கலாமா?' என்று சிரித்தான்.

'சரி... குளிச்சுட்டு வாங்க!' என்றாள்.

குளித்து விட்டு வந்தான். அவள் அதற்குள்ளாக அந்த கெஸ்ட் ஹவுஸில் ஒரு அலமாரியில் ஒரு சின்ன பூஜை அறை அமைத்து விட்டதை ரசித்துப் பார்த்தான்.

சின்னதாக இரண்டு பாடல்கள் பாடி ஒரு பூஜை முடித்து விட்டு வந்தாள்.

அது வரை நல்ல பிள்ளையாக நின்றவன் மெல்ல பின்னால் சென்று அணைத்துக் கொண்டான்.

'தேங்க்ஸ்! தேங்க்ஸ்! ஃபார் ஆல் தட் யு ஹேவ் கிவன்' என்றான்.

அவள் அவன் முகம் பார்க்காமல் மிகவும் பிஸியாக ஏதோ செய்வதைப் பார்த்துச் சிரித்தான்.

'ஹேய்! போதும்! இப்படிக் கொஞ்சம் பாரு... நேத்து நீ...!' என்று ஏதோ சொல்ல ஆரம்பிக்கவும் அவள் அவன் வாயைப் பொத்தினாள்.

'ம்ஹூம்... அதெல்லாம் இப்பப் பேசக் கூடாது!' என்றாள்.

'சரி! அதை விடு! இன்னைக்கு நான் ரொம்ப ஹாப்பி யாய் இருக்கேன். உனக்கு ஏதாவது செய்யணும். என்ன வேணும் கேளு!' என்றான்.

'எனக்கு என்ன வேணும்! நீங்க கிடைச்ச இந்த அதிர்ஷ்ட்டத்தை விட வேற என்ன வேணும்?'

'பொய் சொல்றே!' என்றான்.

விழித்தாள்.

'நிஜமாத்தான்... உனக்கு என்ன வேணும்னு உனக்கே புரியலை... ஆனா, நான் உனக்கு ஒரு பரிசு குடுக்கப் போறேன்... ஆனா... இப்ப இல்லே!' என்றான்.

அவன் அவள் கன்னத்தைத் தடவிக் கொடுத்தான்.

'நான்தான்... சொன்னேனே! நீங்க எனக்கு கிடைச் சதே... போதும்...' என்றாள்.

'சரி... புறப்படு!' என்றான்.

'எங்கே?'

'நம்ம ஆனந்த பைரவி ஸ்கூலுக்குப் போவோம்' என்றான். அழைத்துப் போனான்.

'இந்தப் புறம் ஹாஸ்டல் அந்தப் புறம் பள்ளிக் கூடம். நீ ஒரு நாள் சொன்னயே. இந்த ஊரு இளவட்டங் களெல்லாம் வெளியூருக்கு வேலைக்குப் போயிர்றாங்க. பெண்கள்ளாம் தனியா இருக்காங்கன்னு. என்ன செய்ய



லாம்னு ஒரு சர்வே செய்தேன். இங்க பெருசா எந்தத் தொழிலையும் ஆரம்பிக்க முடியற மாதிரி சூழ்நிலை இல்லை.

அதான் ஒரு ரெஸிடென்ஷியல் ஸ்கூல் ஆரம்பிச்சா... வேலை குடுக்கலாம். படிப்பும் குடுக்கலாம்னு தோணுச்சு... ஏற்பாடு செஞ்சேன்!' என்றான்.

அவள் மனம் நெகிழ்ந்து போனாள்.

'தாங்க்ஸ் அத்தான்!' என்றாள்.

அன்றிரவு கெஸ்ட் ஹவுஸில் மொட்டை மாடியில் மனைவியைக் கைப்பிடியில் வைத்துக் கொண்டு சாய்ந்து அமர்ந்திருந்தான்.

'அன்னைக்கு மாதிரி நடு ராத்திரில குளிர்வந்தா இனிமே பயப்பட வேண்டாமில்லே!' என்று சீண்டினான்.

இப்போதெல்லாம் அவன் சீண்டல்களை அவள் அமைதி யுடன் எதிர் கொண்டாள்.

'ஹேய்! முதல் முதல்ல உன்கிட்டே எனக்குப் பிடிச்சதே உன்னோட அறிவான பேச்சுத்தான் எப்பவும் அப்படியே இரு' என்றான்.

'அது... அது... இன்னும் கொஞ்ச நாளாகும்!' என்றாள்

'ஏன்?' என்றான் விசித்திரப் பார்வையுடன்.

'அப்ப... நிலைமை வேற இப்ப... உங்க பார்வை பேச்சு எல்லாத்துக்கும் அர்த்தம் வேறயாச்சே?' என்றாள்.

'ஹேய்! இதெல்லாம் வாழ்க்கையோட அம்சங்கள் தான். வெட்கப்படத் தேவையில்லே. என்னவோ உனக்குப் பெரிய அதிர்ஷ்டம் கிடைச்ச மாதிரியே நடந்தேன்னா... எனக்கு போராடிச்சுடும். நீ ஃப்ரீயா என்கூட சண்டை

போடலாம். உரிமை யெடுத்துக்கலாம்... புரியுதா?' என்றான் முகத்தைக் கையிலேந்தியபடி.

'அதான்... கொஞ்சம் டைமாகும்' என்றாள்.

மெது மெதுவாக இயல்புக்கு வந்தாள்.

வாழ்க்கை வேகம் பிடித்தது.

★ ★ ★

திருமணம் முடிந்து இரண்டு மாதங்கள் ஓடியிருந்தது.

அன்றைக்கு விடுமுறை!

பைரவியிடம் காலை நேரத்திலேயே வம்பு செய்து கொண்டிருந்தான்.

'ஆனந்த்! வேற வேலையே இல்லையா!' என்று கோபிக்க.

'இங்க பாரு! பிஸினஸ், பிஸினஸ்ன்னு அலைஞ்சுட்டு வறேன்... நீயே என்னைக் கவனிக்கலேன்னா..?!' என்றான் பாவம் போல்.

அவள் உடனே அவனை அணைத்துக் கொண்டாள்.

'சரி... சரி...!' என்று தேற்றினாள்.

தங்கள் நடிப்பைத் தாங்களே ரசித்துச் சிரித்தார்கள்.

'ஹேய்! இன்னைக்கு உனக்கு ஒரு பரிசு உண்டு...' என்றான்.

அவள் வழக்கம்போல் புன்னகைத்தாள்.

'போதும்... என்கிட்டே வேணும்கற அளவுக்கு நகை, துணி மணி எல்லாம் இருக்கு!' என்றாள்.



'இது அதெல்லாம்... இல்லே! பதினோரு மணிக்கு ரெடியா இரு!' என்றான்.

அவளும் ஆர்வமாகக் காத்திருந்தாள்.

அவன் கொடுத்த பரிசைப் பாத்து உள்ளமும் உயிரும் நெகிழ்ந்து போனாள்.

போன வாரத்தில் ஒருநாள்,

'ஹேய்! உன்கிட்டே நானும் கேட்டுக் கிட்டேயிருக் கேன். உனக்குப் பிடிச்ச விஷயம் சொல்லுன்னு... சொல்ல மாட்டேங்கறே!' என்றான்.

'நான் தான் சொன்னேனே! நான் இப்ப நிறைய மகிழ்ச்சியா இருக்கேன்னு!' என்றாள்.

'இந்த ஃபர்ஸ்ட் சாய்ஸ், செகண்ட் அப்படி இப் படின்னு எதுவும் இல்லையா?'

'சரி...' என்று விரல் விட்டு எண்ணினாள். பர்ஸ்ட் சாய்ஸ் உங்களைக் குறையில்லாமல் வச்சுக்கறது. செகண்ட் சாய்ஸ் உங்களை சந்தோஷமா வச்சுக்கறது. தர்ட் சாய்ஸ் ரெண்டு பேரும் சந்தோஷமா இருக்கறது' என்றாள்.

அவன் சிரித்தான்.

அதோடு விட்டு விட்டான். அதை இன்றைக்கு நினைத்துக் கொண்டாள்.

பதினோரு மணிக்கு அந்த சஸ்பென்ஸ் உடைந்தது.

சிவசுப்பிரமணியம் காரில் வந்து இறங்கினார்.

'இதுதான்... அந்த சஸ்பென்ஸா?' என்றாள் அவனிடம் கிசுகிசுப்பாக.

'இரு... இன்னும் இருக்கு!' என்றான்.

'அம்மா! உங்க கல்யாணத்தப்ப மாப்பிள்ளை கிட்டே சொன்னேன். மாப்பிள்ளை அவளுக்குப் பிடிச்ச இடத்துல கல்யாணம் நடக்கறது சந்தோஷம்தான். ஆனா, நல்ல பாடகியா வருவான்னு நினைச்சேன். அதுல கொஞ்சம் ஏமாத்தம்தான்னு. அதை மனசுல வச்சுட்டே இருந் திருப்பார் போல இருக்கு. உனக்கு நானே சங்கீதம் சொல்லித் தரணுமாம்' என்றார்.

அவள் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

'அத்தை! மாமா!' என்று இழுத்தாள்.

'எங்களுக்கும் சந்தோஷம்தான்' என்றார்கள் கோரஸாக.

அன்றைக்கே வகுப்பை ஆரம்பித்தார்கள்.

தங்கள் தனிமையின் போது அன்றிரவில் அவன் கையணைப்பில்

'ஏங்க...! சங்கீதம் சுத்துட்டு..!'

'கச்சேரி... செய்யலாம்!' என்றான்.

'அதுக்கெல்லாம் நேரமிருக்குமா?' என்றாள்.

'ஹேய்! மனசுக்கு நிறைவான விஷயங்கள்... நல்ல விஷயங்கள் கிடைக்கணும்னா அதுக்குத் தகுந்த மாதிரித் திட்டம் போட்டுக்க வேண்டியதுதான். உன்கூட அம்மாவோ, அப்பாவோ.. மாமாவோ யாரோ ஒருத்தர் துணைக்கு வரப் போறாங்க... உனக்கு வரவேற்பிருந்தா...

உடனே இன்னொன்றும் ஞாபகம் வந்தது.

சென்ற முறை கோயமுத்தூரில் அம்மா வீட்டுக்குப் போனபோது.

'அத்தை... என்ன டிபன்!' என்ற மாமியாரின் அருகில் போய் சப்பணமிட்டு அமர்ந்து கொண்டிருந்தான்.

அவள் கீழே அமர்ந்து பூரிக்கு மாவு தேய்த்துக் கொண் டிருந்தாள்.

''பூரி கிழங்கு!' என்றார் காமாட்சி.

'அத்தே! ஐடியா சொல்லட்டா. நீங்க பிஸ்கட் கம்பெனிக்கு இனிமே போக வேண்டாம்னு சொல்லியாச்சு. வீட்ல இருந்து கிட்டே இந்த கருவேப்பிலைப் பொடி, பருப்புப் பொடின்னு நிறைய இருக்கே... அதெல் லாம்... செய்யுங்களேன். நானே எங்க கம்பெனி கான் டீன்ல விக்கிற மாதிரி ஏற்பாடு செய்யறேன். எங்க கிட்டயே மூவாயிரம் தொழிலாளிகள் இருக்காங்க...' என்றான்.

ஐடியா அருமையாக வேலை செய்தது. இரண்டு மூன்று ஆட்களை வேலைக்கு நியமிக்கிற அளவுக்கு வருவாய் இருந்தது.

- ஒவ்வொருவருடைய திறமையையும் கண்டறிந்து அதை ஊக்குவிக்கிற அவன் பண்பை இன்று முழுமையாக அறிந்து கொண்டாள்.

தன் அன்பையும், காதலையும் அன்றைக்கு முழுமை யாக வெளிப்படுத்தினாள்.

'ஹேய்...! நம்பவே முடியலை!' என்று அவன் மாய்ந்து மாய்ந்து மெச்சிக் கொண்ட போது அவளுக்கு கிளுகிளு வென்று சிரித்தாள்.

★ ★ ★

அன்றைக்கு ஒரு சபாவில் பைரவியின் கச்சேரி.

விஜயானந்த் தனது இரண்டு வயது பெண்குழந்தை சௌந்தர்யாவைக் கையிலேந்திக்கொண்டு வருவதை இரண்டு மூன்று பத்திரிகைகள் செய்தியாக வெளியிட் டிருந்தன.

'மனைவியின் திறமையை ஊக்குவிக்கும் இளம் தொழிலதிபர்' என்று அவனைப் பேட்டி கண்டார்கள். அவளையும் பேட்டி கண்டார்கள்.

'என் புகழெல்லாம் என் கணவருக்கே அர்ப்பணம்' என்றாள்.

கச்சேரி கேட்க பைரவியின் மாமானார் மாமியார். சிவசுப்பிரமணியம், சௌந்தரவல்லி எல்லாரும்தான் வந் திருந்தார்கள்.

குழந்தை சற்றே சிணுங்கவும் தியாகு கொஞ்ச நேரம் வெளியே எடுத்துக் கொண்டு போய் வேடிக்கை காட்டி உறங்க வைத்துக் கொண்டு வந்தான்.

மடியில் மாற்றி மாற்றி வைத்துக் கொண்டு கச்சேரி கேட்டார்கள்.



தன் குடும்பத்தின் ஆதரவை மனதில் நிறைத்துக் கொண்டு அவளும் மனம் நிறைந்து தனது கானமழையால் அரங் கத்தை மகிழச் செய்து கொண்டிருந்தாள்.

இசையின் இனிமை எல்லாப் பக்கங்களிலும் பரவி நெஞ்சங்களை நிறைத்தது. பெருமையில் ஜொலிக்கற அவன் முகத்தைப் பார்த்து சிவசுப்பிரமணியம் கூட இறைவன் இந்தக் குழந்தைகளுக்கு எல்லா நலத்தையும் தர வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்.

★ ★ ★

'பைரவி, ஆனந்த் ரெண்டு பேரும் இங்கே வாங்க ளேன்' என்று சௌந்தரவல்லி குரல் கொடுக்கவும் இரண்டு பேரும் ஓடி வந்தார்கள்.

குழந்தைகள் சௌந்தர்யா என்று பெயர் வைத்தாலும் மாமியார் பெயர் என்பதால் 'சங்கீதா' என்று அழைத் தார்கள்.

'இங்க... பாரு! அவளை!' என்' மாமியார் காட்ட இருவரும் பார்த்தார்கள்.

சோபாவில் மேல் அமர்ந்து கொண்டு கச்சேரி செய் வதைப்போல் நடித்தாள் சங்கீதா.

எல்லாரும் மகிழ்ச்சியாகச் சிரித்தார்கள்.

அவள் நடித்து முடித்து விட்டு வெட்கத்துடன் முகத்தை மறைத்துக் கொண்டு அப்பாவைப் பார்த்து சிரித்தாள். அவன் மெய்ம்மறந்து நின்றான்.

'இரு... இரு! வேடிக்கையைப் பாரு!' என்றார் ராஜலிங்கம்.

'ஏண்டா... தங்கம்! அப்பா ஆபீஸ்ல எப்படி வேலை பாப்பாரு' என்றவுடன் சேரில் தொற்றிக் கொண்டு அமர்ந்தாள்.

ஏதோ ஒரு பைலைப் பார்ப்பது போல் நடித்துக் காட்டினாள்.

'நடிக்கிறியா... நீ... நண்டுப் பொண்ணே!' என்று அவன் அள்ளிக் கொண்டு அறைக்குள் போனான்.

அவளும் சிரித்துக் கொண்டே பின் தொடர்ந்தாள்.

'அப்பா! ஆனந்த் பைரவின்னா... என்ன?' என்றாள் குழந்தை.

'ஆனந்த் பைரவின்னா... ராகம்...' என்றாள் பைரவி.

'ஆ... ஆ...!' என்று குழந்தை இழுக்க மறுபடியும் சிரித் தார்கள்.

அவன் குழந்தையை அழுந்த முத்தமிட்டுக் கொண் டிருப்பதை அவள் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அவன் கை அவளையும் வளைத்தது.

இருவரும் ஒருவரையொருவர் பார்த்து மகிழ்ச்சியாய் சிரித்தார்கள்.

குழந்தையின் மழலைச் சிரிப்பும் சேர்ந்து கொண்டது.

அந்த இனிய ஒலி வீட்டில் நிறைந்து வெளியில் பரவிக் காற்றில் கலந்து உள்ளங்களின் உணர்வில் உயிரில் கலந்து கனிந்தது.